## விளம்பரம்.

இந்த க்ரந்தம் வேண்டுமெவர்கள், சென்னை முத்தியாலுபேட்டை பவழக்காரவீதி ௧௦௯-வது கதவிலக்கமுள்ள வீட்டிலாவது, பெத்துநாய்க்கன்பேட்டை சைனாபஜார்ரோட் ௧௦௦-வது கதவிலக்கமுள்ள வீட்டிலாவது, ப - மா. ஸ்ரீநிவாஸராகவாசார்யரிடத்தில் விலை ரூபா-௧௨, தபாற்கூலி அணா ௧௨-செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீரஸ்து.

# விஷயஸூசிகை.

2976


| ஸர்க்கம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| ௧ | ஹநுமான் மஹேந்திரகிரியினின்று ஆகாயத்திற்கிளம்பி மத்தியிலுண்டான இடையூறுகளை ஒழித் திலங்கையைக்கண்டது | ௬ |
| ௨ | ஹநுமான் சிறிது மாயாஸமின்றி இலங்கையில் போவதற்குபயோகமாக தேகத்தைச்சுருக்கினது ... ... | ௭௦ |
| ௩ | இலங்கிணியை ஜெயித்து அவளால் இலங்கையின் வரலாறறிந்து இலங்கையில் பிரவேசிக்க உத்திரவுபெற்றது | ௮௯ |
| ௪ | ஹநுமான் வழிகெட்டவழியாக இடதுகாலை முந்திவைத்து இலங்கையில் நுழைந்தது ... ... ... | ௧௦௫ |
| ௫ | ஹநுமான் சந்திரோதயத்தால் களித்து இராவணாந்தப்புரத்தில் நுழைந்து ஸீதையைத் தேடியது ... ... | ௧௧௬ |
| ௬ | ஹநுமான் இராவணனாலியற்றப்பட்ட அந்தர்நகரத்தைக்கண்டது ... ... ... ... ... ... | ௧௨௪ |
| ௭ | ஹநுமான் அந்தப்புரத்திலுள்ள புஷ்பகத்தை ஸூக்ஷ்மமாகக்கண்டது ... ... ... ... ... | ௧௩௬ |
| ௮ | பிறகு புஷ்பகவிமானத்தை நன்றாய்க்கண்டது ... ... ... ... ... ... ... | ௧௪௧ |
| ௯ | ஹநுமான் புஷ்பகத்தின்மீதேறி அனேகம் ஸ்திரீகளோடு படுத்துறங்கும் இராவணனைக்கண்டது ... .. | ௧௪௪ |
| ௧௦ | பானமயக்கத்தால் வாத்தியவிசேஷங்களை யணைத்துறங்கும் ஸ்திரீகளையும் மண்டோதரியையும் கண்டது ... | ௧௬௮ |
| ௧௧ | ஹநுமான் ஸ்ரீராகவனை யகன்ற ஸீதை யிப்படி படுத்திராளென்று நிச்சயித்தது... ... ... ... | ௧௮௩ |
| ௧௨ | ஸீதையைக்காணாமையால் தான்செய்தவையெல்லாம் வியர்த்தமாயிற்றென்று துக்கித்து அசோகவனமேக தேவதாபிரார்த்தனைசெய்தது | ௧௯௬ |
| ௧௩ | ஹநுமான் அசோகவனத்தின் மதிள்மீதேறி அங்குண்டான வாச்சரியங்களைக் கண்டது ... ... ... | ௨௦௩ |
| ௧௪ | அசோகமரத்தின் நடுவில் அனேக ராக்ஷஸிகளால் சூழப்பட்டிருக்கும் ஸீதையைக்கண்டது ... ... | ௨௨௩ |
| ௧௫ | அங்கியற்றப்பட்டிருக்கும் சிற்பகர்மத்தைக் கண்ணுற்றது ... ... ... ... ... | ௨௩௬ |
| ௧௬ | ஸீதையின் துயரத்தைக்கண்டு ஹநுமான் துக்கித்தது ... ... ... ... ... | ௨௫௨ |
| ௧௭ | ஏகாக்ஷிமுதலான வரக்கிணிகளைக்கண்டு ஹநுமான் சிம்சுபாவிருக்ஷத்தில் அடங்கிருந்தது... ... ... | ௨௬௨ |
| ௧௮ | அத்தராத்திரியில் ஸீதையினிடம் வந்த இராவணனைக்கண்டது ... ... ... ... ... | ௨௭௦ |
| ௧௯ | இராவணன் ஸீதையைக்குறித்து தன்னிஷ்டத்தைச்சொல்ல ஆரம்பித்தது ... ... ... | ௨௭௯ |
| ௨௦ | இராவணன் தனக்கு வச்சியமாகும்படி ஸீதையை வேண்டினது ... ... ... ... ... | ௨௮௬ |
| ௨௧ | ஸீதை இராவணனை தன்னை ஸ்ரீராகவனிடத்தில் சேர்த்து வாழென்று ஹிதம் சொன்னது ... ... | ௨௯௯ |
| ௨௨ | இராவணன் ஸீதையை இரண்டுமாதத்திற்குள் என்னை யடையாவிடி லுன்னை பக்ஷித்துவிடுவேனென்றது ... | ௩௨௧ |
| ௨௩ | ஸீதையை இராக்ஷஸிகள் இராவணனை யடையும்படி சொன்னது ... ... ... ... ... | ௩௩௬ |
| ௨௪ | இராக்ஷஸிகள் ஸீதையை மிரட்டி யதட்டியது ... ... ... ... ... ... | ௩௪௨ |
| ௨௫ | ஸீதை மானுஷஸ்திரீயான யான் அரக்கனை யணுகேனென்றது ... ... ... ... ... | ௩௫௬ |
| ௨௬ | ஸீதை ஸ்ரீராகவன் தன்னை யடையாமலிருப்பதற்கு அனேககாரணங்களை யூகித்தது ... ... ... | ௩௬௨ |
| ௨௭ | திருஜடை ஸீதைக்கு தான்கண்ட கனவைச்சொன்னது... ... ... ... ... ... | ௩௭௭ |
| ௨௮ | ஸீதை யரக்கிணிகளால் மிரட்டப்பட்டு துக்கித்து உயிரைவிட யெத்தனிக்கையில் சுபசகுனம் கண்டது ... | ௩௯௪ |
| ௨௯ | ஸீதை தம் தேஹத்திலுண்டான சுபசூசகத்தால் மங்களச்செய்தியைக் கேட்கப்போகிறோமென்று களித்தது ... | ௪௦௧ |
| ௩௦ | ஹநுமானிப்பொழுது இராமகதையைச் சொல்லவேண்டுமென்று நிச்சயித்தது... ... ... ... | ௪௦௪ |
| ௩௧ | ஸ்ரீராகவனை ஹநுமான் தோத்திரம் செய்தது ... ... ... ... ... ... ... | ௪௧௫ |
| ௩௨ | ஸீதை ஹநுமானைக்கண்டது ... ... ... ... ... ... ... ... | ௪௨௨ |
| ௩௩ | ஹநுமான் அசோகமரத்தினின்று கீழிறங்கி ஸீதையினிடம் வந்தது... ... ... ... ... | ௪௨௭ |
| ௩௪ | ஹநுமான் ஸ்ரீராமலக்ஷ்மணனுடைய க்ஷேமத்தைச் சொன்னது ... ... ... ... ... | ௪௩௭ |
| ௩௫ | ஹநுமான் ஸ்ரீராகவன் திருமேனியை வர்ணித்தது ... ... ... ... ... | ௪௪௮ |
| ௩௬ | ஹநுமான் கணையாழியைக் கொடுத்தது ... ... ... ... ... ... ... | ௪௭௫ |
| ௩௭ | ஸீதை ஹநுமானோடு இராவணன் கெடுவிட்டதைச் சொன்னது ... ... ... ... ... | ௪௯௨ |
| ௩௮ | ஸீதை காகாஸுரவிருத்தாந்தத்தைச் சொன்னது ... ... ... ... ... ... | ௫௧௩ |
| ௩௯ | ஸீதை ஹநுமானை வானரரெப்படி இங்குவருவாரென்று கேட்டது... ... ... ... ... | ௫௪௨ |
| ௪௦ | ஸீதை தமக்கோர் காலவிசேஷத்தில் ஸ்ரீராகவன் திலகமிட்டதை யருளியது... ... ... ... | ௫௫௮ |
| ௪௧ | ஹநுமான் அசோகவனத்தை முறித்தது ... ... ... ... ... ... ... | ௫௬௬ |
| ௪௨ | இராக்ஷஸிகள் அசோகவனத்தினழிவை இராவணனுக்கறிவித்தது... ... ... ... ... | ௫௭௨ |
| ௪௩ | ஹநுமான் எண்ணாயிரங் கிங்கரரை யொழித்தது ... ... ... ... ... ... | ௫௮௩ |
| ௪௪ | ஹநுமான் பிரஹஸ்தபுத்திரன் ஜம்புமாலி இவர்களைக்கொன்றது ... ... ... ... ... | ௫௮௯ |
| ௪௫ | மந்திரிபுத்திரரெழுவரையும் கொன்றது ... ... ... ... ... ... ... | ௫௯௪ |
| ௪௬ | பஞ்சஸேனாதிபதியின் வதம் ... ... ... ... ... ... ... ... | ௫௯௮ |
| ௪௭ | அக்ஷகுமாரவதம் ... ... ... ... ... ... ... ... | ௬௦௭ |
| ௪௮ | ஹநுமான் பிரும்ஹாஸ்திரத்தால் கட்டுண்டது ... ... ... ... ... ... | ௬௧௯ |
| ௪௯ | ஹநுமானிராவணனைப்பார்த்தது ... ... ... ... ... ... ... | ௬௩௯ |

| ஸர்க்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| ௫௦ | ஹநுமான் தம்மை இராமதூதனென்று இராவணனுக்குத் தெரியப்படுத்தினது | ௬௧௪ |
| ௫௧ | இராவணனுக்கு ஹநுமான் ஹிதோபதேசம் செய்தது | ௬௪௯ |
| ௫௨ | இராவணன் ஹநுமானுடைய வாலில் தீயிடக் கட்டளையிட்டது | ௬௫௧ |
| ௫௩ | ஸீதை ஹநுமானை வருந்தாதிருக்கும்படி அக்கினிபகவானை வேண்டினது | ௬௬௭ |
| ௫௪ | ஹநுமான் இலங்கையைக் கொளுத்தினது | ௬௭௮ |
| ௫௫ | ஸீதை வெந்தெரிந்துவிட்டனளோவென்று ஹநுமான் துக்கித்தது | ௬௯௧ |
| ௫௬ | ஹநுமானால் அரிஷ்டமலை பீடிக்கப்பட்டு பூமிக்கு ஸமமாய்விட்டது... | ௬௯௪ |
| ௫௭ | வானரர் ஹநுமானைக்கண்டது | ௭௦௬ |
| ௫௮ | ஹநுமான் தான்போய் வந்தவைகளை வானரரோடு சொன்னது | ௭௧௮ |
| ௫௯ | வானரர் இலங்கையேக வெத்தினித்தது | ௭௫௪ |
| ௬௦ | ஜாம்பவான் வானரரைத் தடுத்தது | ௭௬௨ |
| ௬௧ | வானரர் மதுவனமழித்தது | ௭௬௪ |
| ௬௨ | வானரர் மதுபானத்தால் கொழுத்து ததிமுகனை மிரட்டியது | ௭௬௯ |
| ௬௩ | ததிமுகன் ஸுக்கிரீவனிடம் மதுவனமழிந்ததைத் தெரிவித்தது | ௭௭௮ |
| ௬௪ | ததிமுகன் அங்கதனிடம் வருகிறது | ௭௮௪ |
| ௬௫ | ஹநுமான் ஸ்ரீராகவனிடத்தில் சூடாமணியைக் கொடுத்தது | ௭௯௩ |
| ௬௬ | ஹநுமான் கொடுத்த சூடாமணியைப்பார்த்து ஸ்ரீராகவன் ஸுக்கிரீவனோடு சொல்லி துக்கித்தது | ௭௯௯ |
| ௬௭ | ஸீதையின் வரலாற்றை ஹநுமான் ஸ்ரீராகவனோடு செம்மையாகச்சொன்னது | ௮௦௩ |
| ௬௮ | ஹநுமான் ஸீதையருளின அடையாளங்களை ஸ்ரீராகவனோடு சொல்லி உம்முடைய ஸம்பந்தமான என் வார்த்தையால் ஸீதை களித்தாளென்றது | ௮௧௫ |


விஷயஸூசிகை ஸம்பூர்ணம்.

## விஜ்ஞாபநா.

ஒருபாஷையிலும் ஜ்ஞானமின்றி கேவலம் அல்பஜ்ஞனை யான் ஏதோ ஒரு குதூஹலவிசேஷத்தால் இம்மஹாகிரந்தத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தனன். இதில் வாக்கியப்பிழைகளும் அர்த்தபேதங்களும் பலவாயிருக்கும். அவைகளில் மனதைச்செலுத்தாது; ஏதேனு மொருகுணமிருக்கி னதை யே பாராட்டி ஆதரிக்கவேண்டுமென்று தத்வதர்சிகளான மஹத் ஸந்நிதியில் மிகவும் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீயை நம:

# விஜ்ஞாபநம்.

சேதநனுய்வது தத்வஜ்ஞாநத்தாலே, அதுதான் சாஸ்திரஜ்ஞாநத்தால் பிறக்கவேண்டும். "ஸர்வஞ்ச ஸாஸ்த்ரம் ஜ்ஞாநம் நிஸ்ஸம்ஸயம் ஸ்வேதி ஸர்வாதிஸாராண்ணாம் ஜ்ஞாநதக்ஷம் ஸம்யக்" என்கிறபடியே, சாஸ்திரமொன்றாயிருந்தால் நிஸ்ஸம்சயமான ஜ்ஞாநமுண்டாகும். அப்படியன்றிக்கே, சாஸ்திரம்பஹு வாயிருப்பதால், அவ்வழியாலேஜ்ஞாநம்பிறந்து அதனால் உஜ்ஜீவிக்கை யரிதாயிருக்கும். ஆகையால், தாஹமெடுத்தவன் குளத்தைவெட்டி தாஹத்தைத் தணித்துக்கொள்ளப் பார்ப்பதுபோல் மிககஷ்டஸாத்தியமான சாஸ்திராப்யாஸமன்றிக்கே, "கலௌ ஸங்கீர்த்ய கேஸவம்" என்கிறபடியே இக்கலிகாலத்தில் பகவத்குணாநுபவ மாத்திரத்தாலேயே எளிதில் புருஷார்த்தமடையலாமென்பது ஸித்தம். அப்படி அநுபவிக்கத்தக்கபகவத்குணங்கள் தானநேகங்கள். அவைகளை விளங்கச்செய்யும்பிரபந்தங்களுள், பரமபுருஷன் சக்ரவர்த்தித்திருமகனாய்வந்தவதரித்து ஆச்ரிதஸம்ரக்ஷணம்செய்து அவ்வழியாலே தமது திவ்யாத்ம குணங்களையெல்லாம் பிரகாசிப்பித்தருளினதைச்சொல்லுகிறதும், அவ்வேற்றத்தால் "ஏகைகமக்ஷரம் ப்ரோக்தம் மஹாபாதகநாஸநம்" என்றும், "ஸ்ருண்வந் ராமாயணம் ... வாசம் ... " என்றும்சொல்லுகிறப்படியே, அநிஷ்டத்தையொழித்து அதிசீக்கிரத்தில்இஷ்டத்தையளிக்கத்தக்கமஹத்துவமுடையதுமான ஸ்ரீராமாயணமேமுக்யமாம். அதில் ஓரோரக்ஷரத்தைச் சொன்னமாத்திரத்தாலும் அந்தகதையின் நாதத்தை கேட்டமாத்திரத்தாலும் ஈடேறக்கூடுமாயினும் அப்படிப்பட்ட அந்தமஹாக்கிரந்தத்தை அர்த்தத்துடனநுஸந்திக்கவேண்டுமென்கிற ருசியுள்ளாருக்குள், பெரும்பான்மையோருக்கு அக்கிரந்தமெழுதப்பட்டிருக்கும் வடமொழியிற்பயிர்ச்சியின்மையாலது உபயோகப்படுகிறதில்லை. ஆகையால், அறியவேண்டுமர்த்தமெல்லாவற்றையுமுட்கொண்டு ஸகலசாஸ்திரங்களுக்குள்ளும் பரமோத்க்ருஷ்டமாய் விளங்குமிக்கிரந்தத்தின் கருத்தை விளக்க அநேக யோக்கியதை வேண்டியிருந்தபோதிலும்,ஊமையன் வாக்யார்த்தம் சொல்லுவதுபோல், கேவலமல்பஜ்ஞான யான் அதைத்தெரிந்தவரையில் மொழிபெயர்க்க முயன்றேன். மேலும் "ஹ்ருத்யம் ... ஸாரம் ... ஷிணாக்ஷ்யா: ... ப்ரஸந்நா ... விஷ்டே" என்கிறபடியே, ஸ்ரீராமனுடைய திவ்யகுணங்கள் புணர்க்கப்பட்டு ஸ்ரீவால்மீகிபகவானால் செய்தருளப்பட்டதான இதை, எவனாதரவோடு படிக்கிறானோ, எவனர்த்தமறிகிறானோ, எவனர்த்தம்கேட்க விரும்புகிறானோ, எவனதை யெழுதுகிறானோ, இவர்களுக்கெல்லாம் புருஷார்த்தம் ஸித்திக்கிறது, என்கிற வசனத்தைப் பெரியோரிடத்தினின்று கேள்வியுற்று புருஷார்த்தமடைவதற்குபயோகங்களான அநேகோபாயங்களில் எழுதுவதையு மோருபாயமாகச் சொல்லியிருக்கிறபடியால், ஸ்ரீராகவன் கதையையெழுதி க்ருதார்த்தனாகலாமென்றாசைகொண்டனன். ஆனால் ஆஜ்ஞாதஜ்ஞாபநம்செய்து கீர்த்தியடையலாமென்கிற அபிலாஷையோடு இக்காரியத்தை யுபக்ரமிக்கவில்லை. ஆகையால் "த்ருஷ்டம் ஸுதவசநம் ... த்ருஷ்டம் ... ஸுதவசநம் | த்ருஷ்டாந்த ... த்ருஷ்ட ... ஸுதவ சநம்" என்கிறபடியே, உலகத்திலேதுபோக்யமெனக்கேட்ட ராஜாவுக்குக் குழந்தையின் மழலைச்சொல்லே மிகபோக்கியமென்று வித்துவான் பதிலுரைத்தவாறு,கேவலம் பாலனான என்வாக்கிலேதேனுமொருகொற்றையிருந்தாலும், அதில் கண்ணோட்டம் செய்யாது, ஸுதவசனத்திலீடுபடும் பிதாவைப்போலிதை யங்கீகரிக்கவேண்டும். அல்லது, "யதா ஹம்ஸ: ... க்ஷீரமிவாம்புமிஸ்ரம்" என்கிறபடியே, நீரோடுகலந்த பாலைப்பிரித்துப்பருகுமன்னம்போல் ஸ்ரீராமகதையாகையால் நீர்க்குணங்களைத்தள்ளி இதில் குணாம்சத்தை யங்கீகரித்து அநுக்ரஹிக்க மஹத்ஸந்நிதியில் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ ராமசந்த்ர பரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ராமாயண மஹிமை.

ஸ்ருதி—க. "வாசாவிரூப நித்யயா" என்றும், உ. "அநாதிநிதநா ஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா । ஆதௌ வேதமயீ திவ்யா யத: ஸர்வா: ப்ரவ்ருத்தய:" என்றும், ங. "யதா ஹஸ்தமுத்ய்ருத்ய இதிஹாஸிகா: பௌராணிகாச்ச வக்தார: । ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யமுத்த்ருத்ய புஜமுச்யதே ॥ வேதசாஸ்த்ராத் பரம் நாஸ்தி" என்றும் சொல்லுகிறபடியே, ச்ருதி ஸ்மிருதீதிஹாஸபுராணங்களால் அபௌருஷேயமென்றும், நித்தியமென்றும், நிர்தோஷமென்றும் கொண்டாடப்பட்டு, இவைமுதலான வேற்றத்தால், "ஸ்வதோ வேதா: ப்ரமாணம்" என்கிறபடியே பிரமாணாந்தராபேக்ஷயன்றிக்கே ஸ்வத:ப்ரமாணமாயிருக்கிற வேதம், கர்மகாண்டமென்றும், பிரும்ஹகாண்டமென்றும் பாகத்வயமுடையது. பூருவபாகமான கர்மகாண்டம் பகவதாராதந ரூபங்களான கர்மங்களைச்சொல்லுகிறது. உத்தரபாகமான பிரும்ஹகாண்டம் ஆராத்தியமான பிரும்ஹத்தின் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. "ப்ராயேண பூர்வபாகார்த்தபூரணம் தர்மசாஸ்த்ரத: । இதிஹாஸபுராணாப்யாம் வேதார்த்தமுபப்ரும்ஹயேத்" என்கிறபடியே, இவைகளினர்த்தநிர்ணயம் மஹாமதிகளான மஹரிஷிகளுக்கொழிய அல்லாதார்க்குச் செய்யப்போகாமையாலே, கர்மகாண்டத்தினர்த்தத்தை ஸ்மிருதிகளைக்கொண்டும், பிரும்ஹகாண்டத்தினர்த்தத்தை இதிஹாஸபுராணங்களைக்கொண்டும் பண்ணவேண்டுமென்பதாயிற்று.

அவற்றுள் ஸ்மிருதிகளாவன—"வாஸிஷ்டஞ்சைவ ஹாரீதம் வ்யாஸம் பாராசரம் ததா । பாரத்வாஜம் காச்யபீயம் ஸ்ம்ருதிஷட்கஞ்ச ஸாத்விகம்" "மாநவம் யாஜ்ஞவல்க்யஞ்ச ஆத்ரேயம் தாக்ஷமேவ ச । காத்யாயநம் வைஷ்ணவஞ்ச ஸ்ம்ருதிஷட்கஞ்ச ராஜஸம்" என்கிறபடியே, மநுவத்ரிவிஷ்ணுஹாரீதயாஜ்ஞவல்கியாதிகளாலே சொல்லப்பட்ட தர்மசாஸ்திரங்கள்.

இதிஹாஸங்களாவன:—"இதிஹாஸ: புராவ்ருத்தம்" என்கிறபடியே, முன்புண்டான விருத்தாந்தங்களைச்சொல்லுமவைகளான ஸ்ரீராமாயணமஹாபாரதாதிகள்.

புராணங்களாவன:—"ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச வம்சோ மந்வந்தராணி ச । வம்சாநுசரிதஞ்சைவ புராணம் பஞ்சலக்ஷணம்" என்கிறபடியே ஸர்காதி ஐந்துலக்ஷணங்களோடுகூடின பிராம்ஹபாத்ம வைஷ்ணவாதிகள்.

ஸ்மிருதீதிஹாஸபுராணங்களுக்குள் இதிஹாஸம் பிரபலம், எங்ஙனேயென்னில்;—பரிக்ரஹாதிசயம், மத்தியஸ்த்ததை, கர்துராப்ததமத்வமுதலிய வேற்றங்களிதற்குண்டாகையாலே.

அவற்றுள் பரிக்ரஹாதிசயமாவது:—ச. "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே । வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா" என்றும், ரு. "மதிமந்தாநமாவித்ய யேநாஸௌ ஸ்ருதிஸாகராத் । ஜகத்திதாய ஜநிதோ மஹாபாரதசந்த்ரமா:" என்றும் சொல்லுகிறபடியே, வேதத்தாலும் மூன்றுமுள்ள ரிஷிகளாலும் பரிக்கிரஹிக்கப்படுகை.

---

க. வாராய் அழகுள்ளவனே! நித்தியமான வாக்காலே ஈச்வரனையறியலாம்.

உ. யாதொருவேதத்திலே ஸகலஜகத்தினுடைய பிறப்பு அறியலாயிருக்கும், அப்படிப்பட்டவேதஸ்வரூபிணியும் பிரத்தியக்ஷாதி ப்ரமாணாந்திகளால் தள்ளப்போகாமையாலே உத்பத்தி விநாசரஹிதையுமான இந்த வாக்கானது "ஸம்ஹவாத்ரோத்பாதயா" என்கிறபடியே, தன்னிச்சையாய் வந்த பிறப்பேயொழிய கர்மடியாகவந்த பிறப்பில்லாமையாலே, "ஸ்வயம்பூ"என்கிற பெயருடையஸர்வேச்வரனாலே உண்டாக்கப்பட்டது.

ங. புஜங்களை உயரத்தூக்கி ஐதிஹாஸிகரும் பௌராணிகரும் ஒருவர் சொன்னதோடொருவர் சொல்லுவது பேதப்படாமல் இருதிறத்தாரும், ஏககண்டமாய் இதற்கு மேற்பட்டதொரு சாஸ்திரமில்லை. இது மெய்யே மெய்யே மெய்யே என்று மூன்றுதரம் சொன்னார்கள்.

ச. வேதத்தினாலறியத்தக்க பரமபுருஷன் சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்தவாறே வேதமும் அவனுடைய குணசேஷ்டிதங்களைப் பிரதிபாதிக்கைக்காக ஸாக்ஷாத் ராமாயணரூபேண வந்தவதரித்தது.

ரு. ஸ்ரீவேதவ்யாஸபகவானாலே வேதமாகிற ஸமுத்திரத்தினின்று ஜ்ஞானமாகிற மத்தையிட்டுக்கடைந்து ஸமஸ்தருடையவு மாநமோஜ்ஜீவநார்த்தமாய் சந்திரனைப்போலே ஸுகரமாக இந்த மஹாபாரதமுண்டாக்கப்பட்டது.

மத்தியஸ்ததையாவது:—“ஸங்கீர்ணாஸ்தாமஸாஶ்சைவ ராஜஸாஸ்ஸாத்த்விகாஸ்ததா । கல்பாஶ்சதுர்விதா: ப்ரோக்தா: ப்ரஹ்மணோ திவஸாஸ்து தே” என்கிறபடியே, சதுர்முகன் ஸங்கீர்ண ராஜஸ தாமஸ ஸாத்விககுணங்களோடுகூடி கல்பங்களென்று பெயருடைய தன்னுடைய தினங்களில், “யஸ்மிந் கல்பே து யத்ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா । தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே” என்கிறபடியே, எந்த கல்பங்களில் எந்த குணங்களோடுகூடி எந்தபுராணம் செய்கின்றனரோ, அந்தந்த புராணங்களில் அந்தந்த தேவதையின் மாஹாத்மியம் சொல்லப்படுகிறது. எங்ஙனேயென்னில்:—“அக்நேஶ்ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே । ராஜஸேஷு ச மாஹாத்ம்யமதிகம் ப்ரஹ்மணோ விது: ॥ ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாம் ச நிகத்யதே ॥ ஸாத்த்விகேஷு ச கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே:” என்கிறபடியே தாமஸகல்பங்களில் சிவபிரானுடைய மஹாத்மியமும், ராஜஸகல்பங்களில் தம்முடைய மாஹாத்மியமும், ஸங்கீர்ணகல்பங்களில் ஸரஸ்வத்யாதிகளுடைய மாஹாத்மியமும், ஸாத்விககல்பங்களில் விஷ்ணுவின் மாஹாத்மியமும் சொல்லப்படுகிறது. இப்படி, ஸர்வபுராணங்களுக்கும் பிரவர்தகனை பிரும்ஹாவானவர் அந்தந்த குணத்திற்குத்தக்கபடி அந்தந்ததேவதையின் மாஹாத்மியத்தை அதிகப்படுத்திச் சொல்லுகிறபடியால் பக்ஷபாதிகளாயிருக்கும். அப்படியன்றிக்கே, லௌகிகவைதிக ஸகலார்த்தங்களையும் நிர்ணயிப்பதில் முக்கியங்களாய் ஒருவிஷயத்திலும் பக்ஷபாதமின்றிக்கேயிருக்கை.

கர்த்ராப்ததமத்வமாவது:—பிரபந்தகர்தாவானவன் நடந்தவைகளை உள்ளபடியே சொல்லுகை.

ஆக விவற்றால் புராணங்களில் இதிஹாஸம் சிலாக்கியமென்றதாயிற்று. அந்த பிராபல்யத்தாலேயிறே, ஶ்ருதி—“இதிஹாஸபுராணம் பஞ்சமம்” என்றும், “இதிஹாஸபுராணாப்யாம்” என்றும் சொல்லுகிற ச்ருதிஸ்ம்ருதிகளில் இதிஹாஸபுராணங்களை சேரச்சொல்லுகிறவிடத்தில் புராணத்திற்குமுந்தி இதிஹாஸத்தைச் சொல்லுகிறது.

அப்படிப்பட்ட இதிஹாஸங்களுக்குள் ஸ்ரீராமாயணம் பிரபலம். எங்ஙனேயென்னில், ஸ்ரீமஹாபாரதாதிகள் இதிஹாஸங்களாயிருந்தபோதிலும், ஶ்ருதி—“தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:” என்கிறபடியே, ஸமஸ்த தபஸ்ஸைக்காட்டிலும் சிரேஷ்டமும் சேதநோஜ்ஜீவநஹேதுவும் சரமோபாயமுமான சரணாகதியை விசேஷமாகச் சொல்லாமையாலும், ஸ்ரீராமாயணம் அதையே முக்கியமாகக்கொண்டு, சரணமடைபவனுடைய லக்ஷணத்தையும், சரணாகதியின் ஸ்வரூபத்தையும், அதன்பலத்தையும், சரண்ணியனுடைய ஸௌசீல்யாதிகுணவிசேஷங்களையும், ஆதியோடந்தமாக உள்ளபடி பரக்கச்சொல்லுகிறபடியாலும் இக்கிரந்தம் பிரபலமாயிற்று. இவ்வதிசயததாலேயே இதை தீர்க்க சரணாகதி சாஸ்திரமென்றும் இதிஹாஸ சிரேஷ்டமென்றும் கொண்டாடுவது.

மேலுமிதற்கு வக்த்ருவைலக்ஷண்யம், விஷயவைலக்ஷண்யம், பிரபந்தவைலக்ஷண்யம்; பரிக்ரஹபூயஸ்த்வமாகிற இவற்றாலே மிக மேன்மையுண்டு.

அவற்றுள், “வால்மீகயே மஹர்ஷயே ஸந்திதேஶாஸநம் தத: । ப்ரஹ்மணாஸநுஜ்ஞாதஸ்ஸோ வை வாவிஶ்சாஸநே” என்கிறபடியே, ஸர்வலோகபிதாமஹனை பிரும்ஹாவாலே ஸத்கரிக்கப்பட்டு “குரு ராமகதாம் புண்யாம் ஶ்லோகபத்தாம் மநோரமாம்” என்கிறபடியே, ஸ்ரீராகவனுடைய புண்ணியசரிதத்தைச் செய்யென்று அவராலே நியமிக்கவும்பெற்ற ஸ்ரீவால்மீகிபகவானாலே செய்யப்பட்டதாகையால் வக்த்ருவைலக்ஷண்ணியம்.

விஷயவைலக்ஷண்ணியமாவது:—ஶ்ருதி—க. “யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி, யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி । தத்விஜிஜ்ஞாஸஸ்வ । தத்ப்ரஹ்ம” என்றும், ஶ்ருதி—உ. “தமேதம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாநாஶகேந” என்றும், ௩. “ஶங்கசக்ரகதாபாணி: பீதவாஸா ஜநார்த்தந:” என்றும் சொல்லுகிறபடியே, ஜகத்பதியான புருஷோத்தமனுடைய திவ்யசரிதமாயிருக்கை.

---

க. எவனாலிந்த பூதங்களுண்டாக்கப்படுகின்றனவோ, உண்டான பூதங்களெவனால் இரக்ஷிக்கப்படுகின்றனவோ, அவை எவனிடத்தில் பிரவேசித்து லயிக்கின்றனவோ அவனை அறி, அவன்தான்பிரும்ஹம்.

உ. ஸர்வோத்தமமான அந்த பரப்ரும்ஹத்தை, அந்தணர்கள் வேதாநுவசநத்தாலும், ஒருபலத்திலும் விருப்பமுறாத யஜ்ஞத்தாலும், தாநத்தாலும், தவத்தாலும் அறிய இச்சிக்கிறார்கள்.

௩. சங்கசக்ராதி திவ்வியாயுதங்களையுடைய பீதகவாடைப்பிரானார்.

பிரபந்தவைலக்ஷண்ணியமாவது:—“ந தே வாக் அந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி” என்கிறபடியே இதில் சொன்ன வர்த்தங்களெல்லாம் மெய்யாகக்கடவனவென்று பிரும்ஹாநுக்ரஹமுடையதாலும், “இயம், ராஜ்ய-ராஜாவாகிரா ஹம்ஸஹாஸிநீ” என்கிறபடியே, ஸர்வாங்கஸுந்தரியான என்ஸீதை மிக மாதுரியவாக்குடையாள். அவளது வார்த்தைகளை நீ சொல்லக் கேட்கும்பொழுதே அதி மநோஹரமாயிருக்கிறது. இன்னமதையே சொல்லென்று ஸீதையின் வார்த்தையிலோ ரேகதேசத்திலேயே மண்டிக்கிடக்கும் ஸ்ரீராகவனுக்கு அவள் சரிதத்தையே சொன்னால் கேட்கவேண்டுமோ. ஆகையால் “ஸீதாயாச் சரிதம் மஹத்” என்கிறபடியே, ஸீதையின் சரிதத்தையே அதிகமாயுடையதாய், பரமபுருஷனும் திருச்செவிசாற்றும்படியான மஹிமையுடையதாயிருப்பதால் ஸத்பிரபந்தமாயிருக்கை.

பரிக்ரஹபூயஸ்த்வமாவது;—எங்கும் நிறைந்து அநேகராலே அங்கீகரிக்கப்படுகை. எங்ஙனேயென்னில்:—“யாவத் ஸ்தாஸ்யந்தி கிரய: ஸரிதச்ச மஹீதலே | தாவத் ராமாயணகதா லோகேஷு ப்ரசரிஷ்யதி” என்கிறபடியே எதுவரையில் பூமியில் நதிகளும் மலைகளுமிருக்கின்றனவோ, அதுவரையி லிந்த ராமகதை எழுலகங்களிலும் பிரஸித்தமாயிருக்கும். என்கையாலே ஸர்வலோகபரிக்கிரஹம்.

அன்றிக்கே, “தத்ர ராமாயணம் தேவி வேத ஏவ ந ஸம்சய:” என்கிறபடியே பரமசிவன் பார்வதியைநோக்கி, ஹே தேவி! இந்த ஸ்ரீராமாயணம் வேதமேயல்லது வேறில்லையென்றருளி “ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மநோரமே | ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வராநநே” என்கிறபடியே நமக்கபிமதையான பத்நியிடத்தில் ஆந்தரமாய் இதை அநுஸந்திப்பார்க் கொருகுறைவும் வாராதென்று பரமசிவனால் கொண்டாடப்பட்டது.

அன்றிக்கே, “பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி” என்கிறபடியே குரூரௌஷதத்தைக்கண்டு பயப்படுவாரைப்போலே, சேதநன் துரவகாஹமான வேதசாஸ்திரத்தைப்பார்த்து பயப்படுகிறான். அப்படியின்றி ஸுலபமாயறியும்படி * காவ்யரூபமாயிருக்கிறது.

* காவ்யத்திற்குமாத்திரம் ஸுகரூபத்துவமாவது:—“யத்வேதாத் ப்ரபுஸம்மிதாதபிகதம் சப்தப்ரதாநாச்சிரம் யச்சார்த்தப்ரவணாத் புராணவசநாதிஷ்டம் ஸுஹ்ருத்ஸம்மிதாத் | காந்தாஸம்மிதயா யயா ஸரஸதாமாபாத்ய காவ்யச்ரியா கர்த்தவ்யே குதுகீ புதோ விரசிதஸ்தஸ்யை ஸ்ப்ருஹாம் குர்மஹே” என்கிறபடியே, சப்தத்தையே பிரதானமாயுடைய வேதம் பிரபுபோல், ௧. “இதம் குரு” என்றும், ௨. “இதம் மாகுரு” என்றும்விதிக்கிறது. ஆகையால் ராஜாஜ்ஞையைச் செய்யாவிடில் என்னதிங்கு நேரிடுமோவென்கிற பயத்தால் செய்யும்படியாயிருக்குமல்லது, ஸரஸமாயாதரவோடு செய்யும்படியிராது. அர்த்தத்தையே பிரதானமாயுடைய புராணம் ஸுஹ்ருத்துபோல், “அதிதிர்யஸ்ய பக்நாசோ க்ருஹாத் ப்ரதிநிவர்த்ததே | ஸ தஸ்மை துஷ்க்ருதம் தத்வா புண்யமாதாய கச்சதி” என்கிறபடியே, அதிதியானவன் எவனுடைய வீட்டிற்குவந்து தன்னிஷ்டம் நிறைவேறாமற்போகிறானோ அவன்பாபத்தை அங்கே கொடுத்து புண்ணியத்தைக் கிரஹித்துக்கொண்டு போகிறான். ஆகையாலே, அதிதியாகவருமவனை ஆராதிக்கவேண்டுமென்று செய்வதில் க்ஷேமத்தையும் செய்யாதொழிவதில் நாசத்தையும் சொல்லிப்போருகிறது. இஷ்டமிருந்ததாகில் செய்யலாம். இல்லாதபோது நிர்பந்தமில்லை. இப்படி வேதம்போ லதிகஷ்டமாயும், புராணம்போல் காரியாம்சத்தில் ஸந்தேஹமுமன்றிக்கே வியங்க்யத்தையே பிரதானமாயுடைய காவ்யம் ச்ருங்காரசேஷ்டைகளால் தனது நாயகனை அதிசீக்கிரத்தில்வசப்படுத்தி இன்பத்தையளித்து ஹிதோபதேசத்தால் தன்னிஷ்டத்தை அவனைக்கொண்டே ஸரஸமாய்ச் செய்வித்துக்கொள்ளும் பிரியநாயகிபோல், அர்த்தஸ்வாரஸ்யாதிகளால் ருசியுண்டாக்கி அதனாலாதரவோடிழியும்படியாயிருக்கை.

வியங்கியமாவது;—சப்தார்த்தமொன்றிருக்க தாத்பரியமொன்றாயிருப்பது. அதாவது “கச்ச கச்சஸி சேத் காந்த பந்தாந: ஸந்து தே சிவா: | மமாபி ஜந்ம தத்ரைவ பூயாத்யத்ர கதோ பவாந்” என்கிறபடியே, ஓர் பிரியநாயகன் பிரியநாயகியைப் பார்த்துச்சொல்லுகிறான். ஹே ப்ரியே! யான் தேசாந்தரம் சென்று ஸ்வல்பகாலத்தில் வந்துவிடுகிறேனென்ன, அதற்கு ப்ரியைசொல்லுகிறாள். நல்லதுபோய்வாரும், போகுமளவில் மார்க்கத்திலுமக்கு மங்களமுண்டாகுக, எங்கு நீரேகுகிறீரோ அங்கு எனதுபிறப்புமுண்டாகும் என்றாள். இது சப்தார்த்தம். ஹேநாத! யானும்மைவிட்டொருக்ஷணமும் அகன்று ஸகிக்கவறியேன். அப்படி யென்னை யகன்றுபோவீராகில் உடனே யென்னுயிரொழிந்துவிடும். ஒழிந்தாலும் மனதும்மைவிடாது மறுபிறப்பில் உம்மையே அடையும்படியாயிருக்கும். இது வ்யங்கார்த்தம். ஸத்காவ்யத்திற்கு வியங்கியமே பிரதானமோவெனில் “சப்தார்த்தௌ மூர்த்திராக்யாதௌ ஜீவிதம் வ்யங்க்யவைபவம் | ஹாராதிவதலங்காராஸ்தத்ர ஸ்யுருபமாதய:” என்கிறபடியே, காவ்யத்திற்கு சரீரம் சப்தார்த்தமென்றும், பிராணன் வ்யங்க்யார்த்தமென்றும், ஆபரணாதிகள் அலங்காராதிகளென்றும் சொல்லுகிற காவ்யலக்ஷணத்தில் வ்யங்க்யத்தை ப்ராணஸ்தானமாகச் சொல்லுகையாலே காவ்யத்திற்கு வ்யங்கியமே ப்ரதானமென்கை.

௧. இதைச்செய். ௨. இதைச்செய்யாதே.

அன்றிக்கே, பிரணவார்த்தப்ரகாசகமாய் மந்திரார்த்தத்தை விவரிக்கிறபடியால், ஸகலசாஸ்திரங்களுக்கு மிது சிரோரத்நமாயிருக்கும்.

அன்றிக்கே, "[illegible]" என்கிறபடியே, "தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்களை" உடையனாய், ஸுபுத்திரரையடைந்து, மிருஷ்டாந்நபோக்தாவாய், மஹாபோகயுக்தனாய், ஸமஸ்த ஸாம்ராஜ்ஜியாபிஷேகத்துடன், ஒருநாயகமாயோட உலகுடனாண்டுவருமேன்மையுடைய மஹாராஜபரியந்தமான இவ்வுலகவாழ்க்கையையும், கநகதண்டம் கையிலேந்தி சத்ரசாமர வ்யஜநாதிகளையுடைய பரிவாரங்களால் சூழப்பட்டு அரம்பை ஊர்வசி முதலான அங்கநாசநம் ஸேவிக்க ஐராவதாரூடனாய் மஹாவைபவத்துடன் வீதி நான்குமுலாவி, திவ்வியாஸநத்தின்மீது வீற்றிருந்து தேவாதிதேவனாய் விளங்கும் தேவேந்திரன்முதல் பிரம்ஹபரியந்தமானபரலோகைச்வரியத்தையும், "[illegible]" என்கிறபடியே, ஸம்ஸாரமாகிற வலையிலகப்பட்டு இரக்கைகளறந்த பறவைபோல் நெடுநாள் மிகப்பரிதபித்து,இத்தேகமொழிந்தால் போதுமென்று துவரிக்கிற கேவலனுக்குபயோகமாயுள்ள ஆத்மாநுபவமாத்திரமான கைவல்லியமென்கிற ஸ்தாநத்தையும், க "[illegible]" என்றும், உ. ஸ்ருதி—"[illegible]" என்றும், ங "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே, தெளிவிசும்பு திருநாடான வைகுந்தப்பெருநகரையும், அங்கு தர்மாதிபீடத்தில் பேற்நமலத்தில் தெளிவுற்ற சிந்தையரான அநேகம் ஸ்திரீகள் கநகமயமான தண்டத்தையுடைய சாமரங்களை வீச, ஸ்ரீபூமிநீளைகளுடன்கூடி சங்கசக்ராதி திவ்வியாயுதங்களையுடையனாய், ஜாஜ்வல்யமான கிரீடமகுட சூடாவதம்ஸ மகரகுண்டலக்ரைவேயக ஹாரகேயூரகடக ஸ்ரீவத்ஸகௌஸ்துபமுக்தாதாமோதர பந்தபீதாம்பர காஞ்சிகுண நூபுரம்முதலான அநேகாபரணங்களாலலங்கரிக்கப்பட்டு அபரிமிதோதாரகுணஸாகரனாய் விளங்கும் பகவானையும், மாநுஷாநந்தம்துடங்கி பிரம்ஹாநந்தபரியந்தமுள்ள ஆநந்தத்தைப் பலவாறாகச்சொல்லி பரமபுருஷனுடைய ஆநந்தத்தைச்சொல்ல வெத்தினித்த வேதம், ஸ்ருதி "[illegible]" என்கிறபடியே, வாய்கொண்டுரைப்பதற்கரிதாய் மநதால் ஸ்மரிப்பதற்கு மஸாத்தியமாய், அவ்வெத்தினத்தினின்றுதிரும்பி, ஸ்ருதி—"[illegible]" என்கிறபடியே, ஸர்வலோகநாயகனான ஸர்வேச்வரனே ஆநந்தமயன் என்று சொல்லுகிற அப்படிப்பட்ட அந்த நிரதிசயாநந்தத்தையும் கொடுப்பதில் மிகத் திறமையுடைய மந்திரராஜமான திருவஷ்டாக்ஷரம்போல் இதுவும் அந்தந்த அதிகாரிகளுக்குத்தக்கபடி அவரவரபேக்ஷிதங்களையெல்லாம் கொடுக்கும். காவ்வியத்தில் ஆதிகாவ்வியமாய், இதிஹாஸத்தில் சிரேஷ்டமாய், தர்மார்த்த காமமோக்ஷமென்கிற சதுர்விதபுருஷார்த்தங்களையு மளிக்கவல்லதாய், இப்படி ஸகலசாஸ்திரங்களுக்கும் மேலாய்ஸர்வாபீஷ்ட பலப்ரதமுமான இந்த ஸ்ரீராமாயணமே "[illegible]" என்கிறபடியே, அஸாரால் பஸாரஸார ஸாரதாங்களைக்காட்டிலும் இதுவே ஸாரதமம். ஆகையால், ஸமஸ்தராலுமிந்த ஸ்ரீராமாயண மநுஸந்திக்கத்தக்கது.

இந்த ஸ்ரீவால்மீகிராமாயணத்திற்கு அநேக மகிமைகளிருக்க, அவைகளை யிங்கு சொல்லாதொழிந்தது கிரந்தவிஸ்தாரபயத்தாலே.

---

க. மஹாத்மாவான விஷ்ணுவின் ஸ்தாநம் ஸூரியாக்கினி இவர்களுடைய காந்தியை யதிக்கிரமித்து தேவதாநவர்கள் கண்ணெடுத்துப்பார்ப்பதற்கு மசக்கியமாய், அவ்வளவு தேஜஸ்ஸுடன் ஸ்வயமேவ விளங்குகிறது.

உ. அங்கு சந்திரநக்ஷத்திரம் மின்னல் அக்கினி இவைகளையுடைய காந்தி பயன்படாது, அதினுடைய காந்தியால் இவைகள் பிரகாசிக்கின்றன.

ங. பரமாத்மாவினுடைய வைகுண்டமென்கிற லோகம் மிக சிரேஷ்டமானது, எக்காலத்திலுமுள்ளது.

ஹரி꞉ ஓம்.

ஶ்ரீஸீதாலக்ஷ்மணபரதஶத்ருக்நஹநூமத்ஸமேத

ஶ்ரீராமசந்த்ர பரப்ரஹ்மணே நம꞉.

# ஸ்ரீவால்மீகிராமாயணம்.

[ஸ்ரீராமாயணபாராயண ஆரம்பத்தில், முதலில் அவரவர்களுடைய ஆசாரியன் தொடங்கி பரமாசாரியனான ஸ்ரீமந்நாராயணன்வரையிலுள்ள ஆசாரியபரம்பரைகளின் சுலோகங்களைக் கிரமமாக அநுஸந்தித்து, பின்பு இதனடியிலிருக்கும் தியாநசுலோகங்களை யநுஸந்தித்துப் பாராயணம் செய்வது பெரியோர்களின் ஸம்பிரதாயம்.]

ஸ்ரீவால்மீகித்தியாநம்.

௧. கூஜந்தம் ராமராமேதி மதுரம் மதுராக்ஷரம்।
ஆருஹ்ய கவிதாஶாகாம் வந்தே வால்மீகிகோகிலம்॥

౧. కూజంతం రామ రామేతి మధురం మధురాక్షరమ్ । ఆరుహ్య కవితాశాఖాం వందే వాల్మీకికోకిలమ్ ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| கவிதாஶாகாம் | கவனமாகிற கிளையை | மதுரம் | அழகாக |
| ஆருஹ்ய | ஏறி | கூஜந்தம் | கூவுகிற |
| ராமராமேதி | இராமராமாவென்கிற | வால்மீகிகோகிலம் | வால்மீகியாகிற குயிலை |
| மதுராக்ஷரம் | இனிதான வக்ஷரத்தை | வந்தே | தண்டனிடுகிறேன். |

தா-ம்.—கவித்துவமென்கிற கிளைமேலேறி மதுரமான வெழுத்துகளுள்ள, ராம! ராமா! வென்கிற செவிக் கினியசெஞ்சொல்லை மதுரமாகக் கூவிக்கொண்டிருக்கிற வால்மீகி முனிவராகிய குயிலுக்கு நான் தண்டன்ஸமர்ப்பிக்கிறேன்.

௨. வால்மீகேர்முநிஸிம்ஹஸ்ய கவிதாவநசாரிண꞉।
ஶ்ருண்வந்ராமகதாநாதம் கோ ந யாதி பராம் கதிம்॥

౨. వాల్మీకేర్మునిసింహస్య కవితావనచారిణః । శృణ్వన్రామకథానాదం కో న యాతి పరాం గతిమ్ ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| கவிதாவநசாரிண꞉ | கவனமாகிற காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறவரும் | ஶ்ருண்வந் | கேளாநின்றுகொண்டிருக்கிற |
| முநிஸிம்ஹஸ்ய * | முனிசிரேஷ்டருமான | க꞉ | எவன்தான் |
| வால்மீகே꞉ | வால்மீகியினுடைய | பராம்கதிம் | உத்தமபதவியை |
| ராமகதாநாதம் ¶ | ஸ்ரீராமகதையின் சப்தத்தை | ந யாதி | அடைகிறானில்லை. |

தா-ம்—கவித்துவமென்கிற வநத்தில் ஸஞ்சரிக்கிற வால்மீகியாகிற முனி ஸிம்ஹம் முழங்குகிற எளிவரு மியல்வினனான ஸ்ரீராகவனுடைய கதையின் திவ்வியநாதத்தைக்கேட்கின்ற எவன்தான் மேலான கதியை யடைகிறதில்லை. (என்றால் அடைகிறானென்றர்த்தம்.)

---

* பூர்வத்தில் வால்மீகியை குயிலுக்குபமானமிட்டு இப்பொழுது ஸிம்ஹத்திற்குபமானமிட்டது வெகுரம்யமாயும் மிககம்பீரமாயுமிருக்கிறதென்றர்த்தம். அல்லது "தயரதர்க்குமகன் தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்றவன் திருவடிகளையே பற்றியிருக்கிறஸ்ரீராமபக்தருக்குக் கர்ணாமிருதமா யிருக்கிறதென்றும் அவனுக்கு விரோதியாய் அல்லது அவன்பக்தருக்கு சத்துருவாயிருப்போருக்குக் கர்ணகடோரமாய் ஸிம்ஹத்தின் முழக்கம்போ லதிபயஙகரமா யிருக்கிறதென்றுங்கருத்து.

¶ "ராமகதாநாதம்" என்கிற விடத்தில் இராமகதை யென்னாதே இராமகதையின் நாதமாத்திரம் கேட்டால் போதுமென்றது அத்தியாதரவோடு ஸ்ரீராமகதையைக் கேட்காவிட்டாலும் "ஏகைகமக்ஷரம் ப்ரோக்தம் மஹாபாதகநாஶநம்" என்கிறபடியே, அப்புண்ணிய சரித்திரத்தினேகாக்ஷரத்தைக் கேட்டாலும் போதுமென்றபடி, அல்லது அத்துவனிமாத்திரம் செவிபட்டாலும் அதினாலேயே யீடேறலாமென்றுகருத்து.

௫. 𑌯𑌃 𑌪𑌿𑌬𑌨𑍍 𑌸𑌤𑌤𑌂 𑌰𑌾𑌮𑌚𑌰𑌿𑌤𑌾𑌮𑍃𑌤𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 ।
𑌅𑌤𑍃𑌪𑍍𑌤𑌸𑍍𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌮𑌕𑌲𑍍𑌮𑌷𑌮𑍍 ॥

3. యఃపిబన్సతతంరామచరితామృతసాగరమ్।అతృప్తస్తంమునింవందేప్రాచేతసమకల్మషమ్॥

| பதம். | உரை. | பதம். | உரை. [படிப்பட்ட) |
|---|---|---|---|
| 𑌯𑌃 | எவர் | 𑌅𑌤𑍃𑌪𑍍𑌤𑌃 | திருப்தியடையவில்லையோ (அப் |
| 𑌰𑌾𑌮𑌚𑌰𑌿𑌤𑌾𑌮𑍃𑌤𑌸𑌾𑌗𑌰𑌮𑍍 | - ஸ்ரீராகவனுடைய கதையாகிற வமுதக்கடலை | 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌮𑍍 | வருணனுக்குப்புத்திரரும் |
| | | 𑌅𑌕𑌲𑍍𑌮𑌷𑌮𑍍 | பரிசுத்தருமான |
| 𑌸𑌤𑌤𑌮𑍍 | ஸார்வகாலம் | 𑌤𑌮𑍍-𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 | அந்த-வால்மீகியை |
| 𑌪𑌿𑌬𑌨𑍍 | பானம்பண்ணிக்கொண்டிருந்தும் | 𑌵𑌨𑍍𑌦𑍇 | வணங்குகிறேன். |

தா-ம்.—எவர் ஸ்ரீராமசரித்திரமாகிற வமுதக்கடலில்மூழ்கி யெப்பொழுதும் அவ்வமுதைப் பானஞ்செய்துகொண்டிருந்தும் திருப்தியடைகிறதில்லையோ, அப்படிப்பட்ட பரிசுத்தரும் வருணபுத்திரருமான அந்த வால்மீகிமகரிஷியை ஸ்தோத்திரம் செய்கிறேன்.

## ஹநுமத்தியாநம்.

௧. 𑌅𑌂𑌜𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌨𑌂 𑌵𑍀𑌰𑌂 𑌜𑌾𑌨𑌕𑍀𑌶𑍋𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌕𑌪𑍀𑌶𑌮𑌕𑍍𑌷𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌲𑌂𑌕𑌾𑌭𑌯𑌂𑌕𑌰𑌮𑍍 ॥

౧. అంజనానందనంవీరంజానకీశోకనాశనమ్।కపీశమక్షహంతారంవందేలంకాభయంకరమ్॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| 𑌅𑌂𑌜𑌨𑌾𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 | அஞ்ஜனைக்குப் புத்திரரும் | 𑌲𑌂𑌕𑌾𑌭𑌯𑌂𑌕𑌰𑌮𑍍 | இலங்கைக்குப் பயத்தை உண்டு பண்ணினவரும் |
| 𑌵𑍀𑌰𑌮𑍍 | பராக்கிரமசாலியும[ழித்தவரும் | | [னை) |
| 𑌜𑌾𑌨𑌕𑍀𑌶𑍋𑌕𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 | -பிராட்டியின் துக்கத்தையொ | 𑌕𑌪𑍀𑌶𑌮𑍍 | வானரசிரேஷ்டருமான (ஹநுமா |
| 𑌅𑌕𑍍𑌷𑌹𑌨𑍍𑌤𑌾𑌰𑌮𑍍 | அக்ஷகுமாரனை ஸம்ஹரித்தவரும் | 𑌵𑌨𑍍𑌦𑍇 | தண்டனிடுகிறேன். |

௨. 𑌮𑌨𑍋𑌜𑌵𑌂 𑌮𑌾𑌰𑍁𑌤𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑍇𑌗𑌂 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌮𑍍 ।
𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌂 𑌵𑌾𑌨𑌰𑌯𑍂𑌥𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌦𑍂𑌤𑌂 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

౨. మనోజవంమారుతతుల్యవేగంజితేంద్రియంబుద్ధిమతాంవరిష్ఠమ్।వాతాత్మజంవానరయూథముఖ్యంశ్రీరామదూతంశిరసానమామి॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| 𑌮𑌨𑍋𑌜𑌵𑌮𑍍 | மனதின்வேகம்போன்ற வேகமுடையவரும் [டையவரும் | 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌮𑍍 | சிறந்தவரும் |
| | | 𑌵𑌾𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑍍 | வாயுபுத்திரரும் [ரும் |
| 𑌮𑌾𑌰𑍁𑌤𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑍇𑌗𑌮𑍍 | - வாயுவுக்குநிகரானவேகமு | 𑌵𑌾𑌨𑌰𑌯𑍂𑌥𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍍 | -வானரத்தலைவருக்குள்முக்கிய |
| 𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 | ஜயிக்கப்பட்ட இந்திரியமுடையவரும் | 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌦𑍂𑌤𑌮𑍍 | ஸ்ரீராகவ தூதனுமான (ஹநுமா |
| | | 𑌶𑌿𑌰𑌸𑌾 | தலையால் [னை) |
| 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌮𑍍 | மதியுடையோருக்குள் | 𑌨𑌮𑌾𑌮𑌿 | வணங்குகிறேன். |

௩. 𑌉𑌲𑍍𑌲𑌂𑌘𑍍𑌯 𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃 𑌸𑌲𑌿𑌲𑌂 𑌸𑌲𑍀𑌲𑌂 𑌯𑌃 𑌶𑍋𑌕𑌵𑌹𑍍𑌨𑌿𑌂 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌯𑌾𑌃 ।
𑌆𑌦𑌾𑌯 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌦𑌦𑌾𑌹 𑌲𑌂𑌕𑌾𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌂𑌜𑌲𑌿𑌰𑌾𑌂𑌜𑌨𑍇𑌯𑌮𑍍 ॥

3. ఉల్లంఘ్యసింధోస్సలిలంసలీలంయశ్శోకవహ్నింజనకాత్మజాయాః।ఆదాయ తేనైవ దదాహలంకాం నమామితం ప్రాంజలిరాంజనేయమ్॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| 𑌯𑌃 | எவர் | 𑌆𑌦𑌾𑌯 | கிரகித்துக்கொண்டு |
| 𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌃 | கடலினுடைய | 𑌤𑍇𑌨𑍈𑌵 | அதனாலேயே |
| 𑌸𑌲𑌿𑌲𑌮𑍍 | ஜலத்தை [படி | 𑌲𑌂𑌕𑌾𑌮𑍍 | இலங்கையை |
| 𑌸𑌲𑍀𑌲𑌮𑍍 | விளையாட்டோடுகூடி யிருக்கும் | 𑌦𑌦𑌾𑌹 | எரித்தனரோ |
| 𑌉𑌲𑍍𑌲𑌂𑌘𑍍𑌯 | தாண்டி | 𑌤𑌮𑍍-𑌆𑌂𑌜𑌨𑍇𑌯𑌮𑍍 | அந்த-ஹநுமானை |
| 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌯𑌾𑌃 | ஜனகபுத்திரியினுடைய | 𑌪𑍍𑌰𑌾𑌂𑌜𑌲𑌿𑌃 | கைகூப்பிக்கொண்டவனாய் |
| 𑌶𑍋𑌕𑌵𑌹𑍍𑌨𑌿𑌮𑍍 | சோகாக்கினியை | 𑌨𑌮𑌾𑌮𑌿 | வணங்குகிறேன். |

௪. 𑌆𑌂𑌜𑌨𑍇𑌯𑌮𑌤𑌿𑌪𑌾𑌟𑌲𑌾𑌨𑌨𑌂 𑌕𑌾𑌂𑌚𑌨𑌾𑌦𑍍𑌰𑌿𑌕𑌮𑌨𑍀𑌯𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ।
𑌪𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑌤𑌰𑍁𑌮𑍂𑌲𑌵𑌾𑌸𑌿𑌨𑌂 𑌭𑌾𑌵𑌯𑌾𑌮𑌿 𑌪𑌵𑌮𑌾𑌨𑌨𑌨𑍍𑌦𑌨𑌮𑍍 ॥

౪. ఆంజనేయమతిపాటలాననం కాంచనాద్రికమనీయవిగ్రహం। పారిజాతతరుమూలవాసినం భావయామి పవమాననందనం॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அதிபாடலாநநம் | மிகச் சிவந்தமுகமுடையவரும் | அஞ்ஜநேயம் | அஞ்சனையிடத்தினின்றுண்டானவரும் |
| காஞ்சநாத்ரிகமநீயவிக்ரஹம் | ஸ்வர்ணம்போன்ற அழகான சரீரமுடையவரும் | பவமாநநந்தநம் | வாயுபுத்திரருமான ஹநுமானை |
| பாரிஜாததருமூலவாஸிநம் | கற்பகவிருக்ஷத்தினடியில் வஸிப்பவரும் | பாவயாமி | மனதால் தியானிக்கிறேன். |

(க-மு-ச-ல்.) தா-ம்.—ஸ்ரீராகவனுடைய குசலந்தெரியாதவளாய் இலங்கையி லெழுந்தருளியிருக்கும் பிராட்டியைத்தேடுநிமித்தம் அதிபயங்கரமான ஸாகரத்தை யொருபொருட்டாயெண்ணாது விளையாட்டுபோற்றாண்டி, இலங்கையில் பிராட்டியைக்கண்டுதொழுது அவளது துக்கத்தையொழித்து ஸ்ரீராகவனுடைய க்ஷேமத்தையறிவித்து அக்ஷகுமாரனை வதைத்து, பிராட்டியினுடைய சோகாக்கினியைக்கொண்டே இலங்கையைக்கொளுத்தி அங்கிருக்குமவருக்குப்பயமுறுத்தி இராக்ஷதகாலனாய் விளங்குபவரும், வாயுபகவானாலஞ்சனையின் கர்ப்பத்திலிருந் தவதரித்தவரும், மஹாமேருவுக்கொப்பான திவ்யதிருமேனி யுடையவரும், பாரிஜாத விருக்ஷத்தினடியில் வாஸஞ்செய்பவரும், மனதின்வேகத்தையொத்தவரும், வாயுவேகம்போன்ற வேகமுள்ளவரும், இந்திரியங்களையெல்லாம் ஜயித்தவரும், மதிமான்களுக்குள்ளே சிறந்தவரும், வாயுபுத்திரரும், வானரஸேநாபதிகளுக்குள் முக்கியரும், ஸ்ரீராமதூதனுமான ஹநுமானுக்கு நான் தலைவணங்கி தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

௫. யத்ர யத்ர ரகுநாதகீர்த்தநம் தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம்।
பாஷ்பவாரிபரிபூர்ணலோசநம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்॥

౫. యత్ర యత్ర రఘునాథకీర్తనం తత్ర తత్ర కృతమస్తకాంజలిం। బాష్పవారిపరిపూర్ణలోచనం మారుతిం నమత రాక్షసాంతకం॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| யத்ர யத்ர | எங்கெங்கே | | ணீரால் நிறைந்த கண்களையுடையவரும் |
| ரகுநாதகீர்த்தநம் | ஸ்ரீராகவன்ஸ்துதியோ | ராக்ஷஸாந்தகம் | அரக்கருக்குக்காலனுமான |
| தத்ர தத்ர | அங்கங்கே | மாருதிம் | வாயுபுத்திரனை |
| க்ருதமஸ்தகாஞ்ஜலிம் | செய்யப்பட்டசிரஸில் அஞ்சலியுடையவரும் | நமத | வணங்குங்கள். |
| பாஷ்பவாரிபரிபூர்ணலோசநம் | ஆநந்தக் கண் | | |

தா-ம்.—எங்கெங்கு பரமபுருஷனான ஸ்ரீராகவனுடைய ஸ்தோத்திரம் நடக்கின்றதோ அங்கங்கு ஆநந்தக்கண்ணீர் நிறைந்த கண்களையுடையவராய் சிரஸிற் கைகூப்பிப் பணிகின்றவரும் இராக்ஷதருக்கந்தகனாயிருநின்ற வாயுகுமாரனை வணங்குங்கள்.

ஸ்ரீராமாயணத்தியாநம்.

க. வால்மீகிகிரிஸம்பூதா ராமஸாகரகாமிநீ।
புநாது புவநம் புண்யா ராமாயணமஹாநதீ॥

౧. వాల్మీకిగిరిసంభూతా రామసాగరగామినీ పునాతు భువనం పుణ్యా రామాయణమహానదీ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வால்மீகிகிரிஸம்பூதா | வால்மீகியாகிறமலையிலுண்டானதும் | புண்யா | பரிசுத்தமுமான |
| ராமஸாகரகாமிநீ | ஸ்ரீராகவனாகிறஸமுத்திரத்தையடைந்ததும் | ராமாயணமஹாநதீ | ஸ்ரீராமாயணமாகிறபெருநதி |
| | | புவநம் | பூமியை |
| | | புநாது | பரிசுத்தஞ்செய்யட்டும். |

தா-ம்.—வால்மீகிமகரிஷியாகிற மலையிற்பிறந்து ஸ்ரீராமனாகிற கடலைச்சேர்ந்து வெகுபுண்ணியப்பிரதமாய் எங்கும் பிரஸரிக்கிற ஸ்ரீராமாயணமென்கிற பெரியநதி உலகத்தைப் பரிசுத்தம் பண்ணக்கடவது.

உ. ச்லோகஸாரஸமாகீர்ணம் ஸர்க்ககல்லோலஸங்குலம்।
காண்டக்ராஹமஹாமீநம் வந்தே ராமாயணார்ணவம்॥

౨. శ్లోకసారసమాకీర్ణం సర్గకల్లోలసంకులమ్। కాండగ్రాహమహామీనం వందే రామాయణార్ణవమ్॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ச்லோகஸாரஸமாகீர்ணம் | சுலோகங்களின்ஸாரமாகியஜலத்தால்நிறைந்ததும் | காண்டக்ராஹமஹாமீநம் | காண்டங்களாகியமுதலைபெருமீன்-இவைகளையுடையதுமான |
| ஸர்க்ககல்லோலஸங்குலம் | ஸர்க்கங்களாகிய அலைகளோடுகலந்திருப்பதும் | ராமாயணார்ணவம் | ஸ்ரீராமாயணமாகிற ஸமுத்திரத்தை |
| | | வந்தே | ஸேவிக்கிறேன். |

[தை

தா-ம்.—சுலோகங்களின் ஸாரமாகிய தண்ணீரால் நிறையப்பெற்று, ஸர்க்கங்களாகிய அலைகளால் வியாப்தமாய், காண்டங்களாகிய முதலைகளையும் பெருமீன்களையு முடையதாய் விளங்கும் ஸ்ரீராமாயண மாகிற ஸமுத்திரத்திற்கு யான் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

௩. 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌪𑍁𑌂𑌸𑌿 𑌜𑌾𑌤𑍇 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 ।
𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌦𑌾𑌸𑍀𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ॥

౩. వేదవేద్యేపరేపుంసి జాతేదశరథాత్మజే । వేదఃప్రాచేతసాదాసీ త్సాక్షాద్రామాయణాత్మనా॥

| | | | |
|---|---|---|---|
| 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑍍𑌯𑍇 | வேதத்தினுலறியத்தக்க | 𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌾𑌤𑍍 | வால்மீகியினிடத்தினின்று |
| 𑌪𑌰𑍇-𑌪𑍁𑌂𑌸𑌿 | உத்தமமான - புருஷன் | 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 | பிரத்தியக்ஷமாக |
| 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑍇 | தசரதபுத்திரராக | 𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 | ஸ்ரீராமாயணரூபத்தாலே |
| 𑌜𑌾𑌤𑍇 (𑌸𑌤𑌿) | உண்டாகை (அளவில்) | 𑌆𑌸𑍀𑌤𑍍 | உண்டாயிற்று, |
| 𑌵𑍇𑌦𑌃 | வேதமானது | | |

தா-ம்.—வேதத்தினு லறியத்தக்க ஜகதீசனை பரமபுருஷன் தசரத சக்கிரவர்த்திக்குத் திருக்குமாரராய்வந் தவதரிக்க, அவரை யறிவிக்கிறவேதமும் வால்மீகியினிடத்திருந்து நேராய் ஸ்ரீராமாயண ஸ்வரூபத்தாலே வந்தவதரித்தது.

௪. 𑌤𑌦𑍁𑌪𑌗𑌤𑌸𑌮𑌾𑌸𑌸𑌨𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌸𑌮𑌮𑌧𑍁𑌰𑍋𑌪𑌨𑌤𑌾𑌰𑍍𑌥𑌵𑌾𑌕𑍍𑌯𑌬𑌦𑍍𑌧𑌮𑍍 ।
𑌰𑌘𑍁𑌵𑌰𑌚𑌰𑌿𑌤𑌂 𑌮𑍁𑌨𑌿𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌂 𑌦𑌶𑌶𑌿𑌰𑌸𑌶𑍍𑌚 𑌵𑌧𑌂 𑌨𑌿𑌶𑌾𑌮𑌯𑌧𑍍𑌵𑌮𑍍 ॥

౪. తదుపగతసమాససంధియోగం సమమధురోపనతార్థవాక్యబద్ధమ్। రఘువరచరితంమునిప్రణీతం దశశిరసశ్చవధంనిశామయధ్వమ్॥

| | | | |
|---|---|---|---|
| 𑌉𑌪𑌗𑌤𑌸𑌮𑌾𑌸𑌸𑌨𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌮𑍍 | சேர்ந்திருக்கிறஸமாஸம் தொடர் ஸந்தி இவைகளையுடையதும் | 𑌮𑍁𑌨𑌿𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌮𑍍 | வால்மீகியினுல் செய்யப்பட்டதும் |
| | | 𑌤𑌤𑍍 | அப்படிப்பட்ட மகிமை யுடையதுமான |
| 𑌸𑌮𑌮𑌧𑍁𑌰𑍋𑌪𑌨𑌤𑌾𑌰𑍍𑌥 𑌵𑌾𑌕𑍍𑌯𑌬𑌦𑍍𑌧𑌮𑍍 | ஸமமாயும் மதுரமாயும் சேர்ந்திருக்கிற வாக்கியத்தால் கட்டப்பட்டிருக்கிறதும் | 𑌰𑌘𑍁𑌵𑌰𑌚𑌰𑌿𑌤𑌮𑍍 | ஸ்ரீராகவசரித்தைதை |
| | | 𑌨𑌿𑌶𑌾𑌮𑌯𑌧𑍍𑌵𑌮𑍍 | கேளுங்கள். |
| 𑌦𑌶𑌶𑌿𑌰𑌸𑌵𑌧𑌮𑍍 | இராவணனுடைய வதத்தை உத்தேசித்து | | |

தா-ம்.—அவ்வவ்விடங்களுக்கேற்ற சொற்றொடர்களோடுகூடி ஒன்றோடொன்றிசைந்து ப்ரயாஸமின்றி பொருள் விளங்கும்படி யமைக்கப்பட்ட வாக்கியக்கட்டுகளை யுடையதும், நாரத மஹரிஷியினுடைய அநுக்கிரஹத்தாலுண்டானதால் அதிமஹிமை யுள்ளதும், மஹாபாபியான இராவணன் வத விருத்தாந்தத்தை யுட்கொண்டதுமாயுள்ள இப்பரிசுத்தமான ஸ்ரீராமசரிதத்தைக் கேளுங்கள்.

### ஸ்ரீராமத்தியானம்.

௧. 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌘𑌵𑌂 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾𑌪𑌤𑌿𑌂 𑌰𑌘𑍁𑌕𑍁𑌲𑌾𑌨𑍍𑌵𑌯𑌰𑌤𑍍𑌨𑌦𑍀𑌪𑌮𑍍 ।
𑌆𑌜𑌾𑌨𑍁𑌬𑌾𑌹𑍁𑌮𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌦𑌳𑌾𑌯𑌤𑌾𑌕𑍍𑌷𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑌰𑌂 𑌨𑌮𑌾𑌮𑌿 ॥

౧. శ్రీరాఘవందశరథాత్మజమప్రమేయం సీతాపతింరఘుకులాన్వయరత్నదీపమ్।
ఆజానుబాహుమరవిందదళాయతాక్షం రామంనిశాచరవినాశకరంనమామి॥

| | | | |
|---|---|---|---|
| 𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑍍 | அளவிடக்கூடாத தேஜஸ்ஸுடையவரும் | 𑌸𑍀𑌤𑌾𑌪𑌤𑌿𑌮𑍍 | ஸீதைக்கு நாயகனும் |
| 𑌰𑌘𑍁𑌕𑍁𑌲𑌾𑌨𑍍𑌵𑌯 𑌰𑌤𑍍𑌨𑌦𑍀𑌪𑌮𑍍 | இரகுகுலத்தினுடைய பரம்பரைக்கு இரத்தினதீபம்போல் இருப்பவரும் | 𑌨𑌿𑌶𑌾𑌚𑌰𑌵𑌿𑌨𑌾𑌶𑌕𑌰𑌮𑍍 | அரக்கரையழிப்பவனும் |
| | | 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑍍 | தசரதபுத்திரரும் |
| | | 𑌰𑌾𑌮𑌮𑍍 | லோகாநந்தகரனுமான |
| 𑌆𑌜𑌾𑌨𑍁𑌬𑌾𑌹𑍁𑌮𑍍 | நீண்ட கைகளையுடையவரும் | 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌘𑌵𑌮𑍍 | ஸ்ரீராகவனை |
| 𑌅𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌦𑌳𑌾𑌯𑌤𑌾𑌕𑍍𑌷𑌮𑍍 | தாமரைப்புஷ்பத்தினுடைய இதழ்போல் அகன்ற கண்களையுடையவரும் | 𑌨𑌮𑌾𑌮𑌿 | (யான்) தண்டன் ஸமர்ப்பிக்கிறேன். |

தா-ம்.—இரகுவம்சத்தில் திருவவதரித்தவரும், ஸீதாவல்லபரும், அளவிடக்கூடாத பரந்தேஜஸ்ஸுடையவரும், இக்ஷ்வாகு மஹாகுலத்திற் கோரி ரத்தினதீபம்போல் விளங்குபவரும், நீண்ட பாகுக்களையுடையவரும், செந்தாமரை தளம்போலகன்று நீண்டு விசாலமா யதிஸுந்தரமாகவிளங்கும் திருக்கண்களையுடையவரும், ஸாதுமநோரஞ்ஜகரும், இராக்ஷஸ மிருத்தியுவும், தசரதபுத்திரருமான ஸ்ரீராமபிரானை வணங்குகிறேன்.

२. वैदेहीसहितं सुरद्रुमतले हैमे महामण्डपे
मध्ये पुष्पकमासने मणिमये वीरासने सुस्थितम् ।
अग्रे वाचयति प्रभञ्जनसुते तत्त्वं मुनिभ्यः परं
व्याख्यान्तं भरतादिभिः परिवृतं रामं भजे श्यामलम् ॥

వైదేహీసహితంసురద్రుమతలే హైమేమహామంటపే మధ్యేపుష్పకమాసనేమణిమయే వీరాసనేసుస్థితమ్।
అగ్రేవాచయతిప్రభంజనసుతే తత్త్వంమునిభ్యఃపరం వ్యాఖ్యాంతంభరతాదిభిఃపరివృతం రామమ్భజేశ్యామళమ్॥

| | | | |
|---|---|---|---|
| सुरद्रुमतले | கற்பகவிருக்ஷத்தின்கீழே | प्रभञ्जनसुते | வாயுபுத்திரர் |
| हैमे | ஸுவர்ண ஸம்பந்தமான | परं-तत्त्वं | மேன்மையான - தத்துவத்தை |
| महामण्डपे | பெரியமண்டபத்தில் | वाचयति (सति) | வாசியாநின்ற (அளவில்) |
| मध्ये पुष्पकम् | புஷ்பகத்தின்மத்தியில் | मुनिभ्यः | முனிவர்களின்பொருட்டு |
| मणिमये | இரத்தினமயமான | व्याख्यान्तम् | பொருளுரைப்பவரும் |
| आसने | ஸிம்ஹாஸநத்தில் | भरतादिभिः | பரதாதிகளால் |
| वीरासने | பத்திரபீடத்தில் | परिवृतम् | சூழப்பட்டவரும் |
| सुस्थितम् | நன்ருக வீற்றிருப்பவரும் | श्यामलम् | கறுத்ததிருமேனியுடையவருமான |
| वैदेहीसहितम् | பிராட்டியோடுகூடியிருப்பவரும் | रामम् | ஸ்ரீராகவனை |
| अग्रे | முன்பு | भजे | ஸேவிக்கிறேன். |

தா-ம்.—கற்பகவிருக்ஷத்தினடியில் ஸ்வர்ணமயமானதோர் மண்டபத்தில் புஷ்பகத்தின் மத்தியில் பரதாதிகளால் சூழப்பட்டு ஸீதாஸமேதனுய் வீராஸனத்தில் மண்டிபோட்டு வீற்றிருந்து பரத்துவத்தை வாயுஸுதரான ஹநுமான் வாசிக்க, அதை மஹரிஷிகள்நிமித்தம் பொருள்விளங்கச் செய்தருளும் பச்சைமாமலைபோன்ற மேனியனுன ஸ்ரீராகவனை ஸ்துதிக்கிறேன்.

௩. आपदामपहर्तारं दातारं सर्वसम्पदाम् ।
लोकाभिरामं श्रीरामं भूयो भूयो नमाम्यहम् ॥

3. ఆపదామపహర్తారం దాతారంసర్వసంపదామ్ । లోకాభిరామంశ్రీరామం భూయోభూయోనమామ్యహమ్॥

| | | | |
|---|---|---|---|
| आपदाम् | ஆபத்துக்களை | लोकाभिरामम् | லோகமனேகரனுமான |
| अपहर्तारम् | அபகரிப்பவரும் | श्रीरामम् | ஸ்ரீராகவனை |
| सर्वसम्पदाम् | ஸமஸ்த ஐசுவரியத்தையும் | भूयो भूयः | அடிக்கடி |
| दातारम् | கொடுப்பவரும் | अहम्-नमामि | யான் - தண்டனிடுகிறேன். |

தா-ம்.—தம்மை யாச்ரயித்த அடியார்பக்கல் 'अपराधसहस्रभाजनम्'' என்கிறபடியே, அநுபவியாதல்லது ஒழியாத கடுவினைகளையும் புல்லெழுந்தொழியும்படி தீரக்கழித்து ஸகலஸம்பத்தை யநுக்கிரஹிக்கும் தன்மையுள்ளவராய், ஸகலஜநங்களுக்கு மத்யாநந்தகரமான திருக்கல்யாண குணங்களையுடைய ஸ்ரீராமபிரானை யானடிக்கடி தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

## பாராயணமுடிவி லநுஸந்திக்கவேண்டிய சுலோகங்கள்.

[illegible] ... न्याय्येन मार्गेण महीं महीशाः । गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥ काले वर्षतु पर्जन्यः पृथिवी सस्यशालिनी । देशोऽयं क्षोभरहितो ब्राह्मणाः सन्तु निर्भयाः ॥ कावेरी वर्धतां काले काले वर्षतु वासवः । श्रीरङ्गनाथो जयतु श्रीरङ्गश्रीश्च वर्धताम् ॥ [illegible] ॥ [illegible] ॥ मङ्गलं कोसलेन्द्राय महनीयगुणाब्धये । चक्रवर्तितनूजाय सार्वभौमाय मङ्गलम् ॥ वेदवेदान्तवेद्याय मेघश्यामलमूर्तये । पुंसां मोहनरूपाय पुण्यश्लोकाय मङ्गलम् ॥ विश्वामित्रान्तरङ्गाय मिथिलानगरीपतेः । भाग्यानां परिपाकाय भव्यरूपाय मङ्गलम् ॥ पितृभक्ताय सततं भ्रातृभिः सह सीतया । नन्दिताखिललोकाय रामभद्राय मङ्गलम् ॥ त्यक्तसाकेतवासाय चित्रकूटविहारिणे । सेव्याय सर्वयमिनां धीरोदाराय मङ्गलम् ॥ सौमित्रिणा च जानक्या चापबाणासिधारिणे । संसेव्याय सदा भक्त्या स्वामिने मम मङ्गलम् ॥ दण्डकारण्यवासाय खण्डितामरशत्रवे । गृध्रराजाय भक्ताय मुक्तिदायास्तु मङ्गलम् ॥ सादरं शबरीदत्तफलमूलाभिलाषिणे । सौलभ्यपरिपूर्णाय सत्त्वोद्रिक्ताय मङ्गलम् ॥ हनुमत्समवेताय हरीशाभीष्टदायिने । वालिप्रमथनायास्तु महाधीराय मङ्गलम् ॥ श्रीमते रघुवीराय सेतूल्लङ्घितसिन्धवे । जितराक्षसराजाय रणधीराय मङ्गलम् ॥ आसाद्य नगरीं दिव्यामभिषिक्ताय सीतया । राजाधि

ராஜராஜாய ராமபத்ராய மங்களம் ॥ மங்களாஶாஸநபரைர் மதாசார்யபுரோகமை: । ஸர்வைஶ்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் ॥

ఏవమేతత్పురావృత్తమాఖ్యానం భద్రమస్తువః । ప్రవ్యాహరత విస్రబ్ధం బలం విష్ణోః ప్రవర్ధతామ్ ॥ లాభస్తేషాం జయస్తేషాం కుతస్తేషాం పరాభవః । ఏషామిందీవరశ్యామో హృదయే సుప్రతిష్ఠితః ॥ కాలే వర్షతు పర్జన్యః పృథివీ సస్యశాలినీ । దేశోऽయం క్షోభరహితో బ్రాహ్మణాస్సంతు నిర్భయాః ॥ కావేరీ వర్ధతాం కాలే కాలే వర్షతు వాసవః । శ్రీరంగనాథో జయతు శ్రీరంగశ్రీశ్చ వర్ధతామ్ ॥ స్వస్తి ప్రజాభ్యః పరిపాలయంతాం న్యాయ్యేన మార్గేణ మహీం మహీశాః । గోబ్రాహ్మణేభ్యః శ్శుభమస్తు నిత్యం లోకాస్సమస్తాస్సుఖినో భవంతు ॥ మంగళం కోసలేంద్రాయ మహనీయగుణాబ్ధయే । చక్రవర్తితనూజాయ సార్వభౌమాయ మంగళమ్ ॥ వేదవేదాంతవేద్యాయ మేఘశ్యామళమూర్తయే । పుంసాం మోహనరూపాయ పుణ్యశ్లోకాయ మంగళమ్ ॥ విశ్వామిత్రాంతరంగాయ మిథిలానగరీపతేః । భాగ్యానాం పరిపాకాయ భవ్యరూపాయ మంగళమ్ ॥ పితృభక్తాయ సతతం భ్రాతృభిస్సహ సీతయా । నందితాఖిలలోకాయ రామభద్రాయ మంగళమ్ ॥ త్యక్తసాకేతవాసాయ చిత్రకూటవిహారిణే । సేవ్యాయ సర్వయమినాం ధీరోదారాయ మంగళమ్ ॥ సౌమిత్రిణా చ జానక్యా చాపబాణాసిధారిణే । సంసేవ్యాయ సదా భక్త్యా స్వామినే మమ మఙ్గళమ్ ॥ దండకారణ్యవాసాయ ఖండితామరశత్రవే । గృధ్రరాజాయ భక్తాయ ముక్తిదాయాస్తు మఙ్గళమ్ ॥ సాదరం శబరీదత్త ఫలమూలాభిలాషిణే । సౌలభ్యపరిపూర్ణాయ సత్త్వోద్రిక్తాయ మఙ్గళమ్ ॥ హనూమత్సమవేతాయ హరీశాభీష్టదాయినే । వాలిప్రమథనాయాస్తు మహాధీరాయ మంగళమ్ ॥ శ్రీమతే రఘువీరాయ సేతూల్లంఘితసింధవే । జితరాక్షసరాజాయ రణధీరాయ మంగళమ్ ॥ ఆసాద్య నగరీం దివ్యామభిషిక్తాయ సీతయా । రాజాధిరాజరాజాయ రామభద్రాయ మంగళమ్ ॥ మంగళాశాసనపరైర్మదాచార్యపురోగమైః । సర్వైశ్చ పూర్వైరాచార్యైస్సత్కృతాయాస్తు మంగళమ్ ॥


*அவதாரமுதலான அந்தந்தகட்டங்களில் விசேஷமாக பகவதாராதனம்செய்து அநந்தரம் பாராயணம் செய்யவெண்டும்.*

---

## ஸ்ரீராமாயணாவதாரிகை.

ஸ்ரீயஃபதியாய், அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாணகுணாத்மகனான ஸர்வேச்வரன், "வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: । ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ" என்கிறபடியே, ஸ்ரீவைகுண்டமென்கிற திவ்யலோகத்தில் திருமாமணிமண்டபத்தில் ஸ்ரீபூமிநீளாதிகளுடன் திவ்யரத்ன ஸிம்ஹாஸனத்தில், ஏழுலகம் தனிக்கோல்செல்ல அமரர்வருமமரர்கள் தொழுதேற்றும்படி வீற்றிருக்கச்செய்தேயும், இந்த ஸம்ஸாரிசேதனரும் அவர் தம் கைங்கரியத்திற்கென்றே பிறந்தும் அது செய்யாதே, பிரளயத்தில் பிரகிருதியில் உரைமெழுக்குப் பொன்போலே ப்ரக்ஷீணஜ்ஞாநராய் போக மோக்ஷசூந்யராய்க் கிடக்கு மிவர்களைக் கடாக்ஷித்தருளி "ஶவவத்ஸம்ஸ்ருதிவஶ்யாந் ஸம்ஹாரேணாவலோக்ய ஹி । ஜீவேஷு கௌஸ்துபவிஶேஷாத் க்ருபா காருண்யவஜ்ஜாயதே" என்கிறபடியே, ஸம்ஸாரசக்கிரத்திற் கிலக்காய்ச் சுழன்றுவருந்துகிற ஜீவனிடத்தில் தம்முடையதோர் கிருபாவிசேஷத்தாலே, "விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும் । பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதிஸம்யுதா" என்கிறபடியே, எம்பெருமானை வணங்க முடியையும், அனந்த கல்யாணகுணங்களால் பரிபூர்ணமான அவன் திருமேனி ஸௌந்தரியத்திலாழ்ந்து ஈடுபடக் கண்களையும், அவனது திவ்யநாமாதிகளைக்கேட்கச் செவிகளையும், அவனிரு திருவடிகளி லர்ச்சித்த துளஸீதளத்தை யாக்கிராணம்செய்ய நாஸிகையையும், அவனது திவ்யகுணங்கள் புணர்க்கப்பட்டகாதைகளை ஸ்துதிக்க நாவையும், அவனை யலங்கரித்தாராதிக்கக் கைகளையும், அவன் ஸந்நிதிசென்று பிரதக்ஷிணங்கள் செய்யப் பாதங்கள்முதலான தேகஸம்பத்தைக் கொடுத்தவிடத்திலும், ஆறுகடக்கக்கொடுத்த ஓடத்தை அவ்வாற்றுநீர் வழிகொண்டு போய் ஸமுத்திரத்திற்புகுவாரைப்போலே, அவை தன்னையேகொண்டு ஈச்வரனையுமறந்து ஈச்வர கைங்கரியத்தையுமிழந்து, இழந்தோமென்கிற விழவுமன்றிக்கே, ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேவிழுந்து கரையேறுவதற்கறியாது, "க்ஷுத்ப்ரஸூதிஸ்தீக்ஷ்ணாஸ்ஸ மவமண்ணகடுதீக்ஷ்ணோஷ்ணைஹ்ரஜநை: । க்ஷிதாவிஹிதஸ்ஸம்ஸ்ருஷ்டம் வயஸ்தோநாதிவேதநை:" என்கிறபடியே, மாத்ருபோஜநத்தி லந்தர்ப் பூதங்களான புளிப்பு, காரம், சுடுகை முதலானகுரூர த்ரவ்யங்களாலே, தொடரிலிட்ட ஈயம்போல் மிகவும்நலிந்து துடியானின்றுகொண்டு இந்தக்கிலேசத்தோடே கர்ப்பதுன்பமாகிற பையிலே கட்டுண்டு அவயவங்களை நீட்டமுடக்க மாட்டாதே கிடந்து, "க்ஷுத்ஸாந்நிஷ்டாந்திக்ஷீராந்நிதி ஜராயுதந்துபாதநம் । நாநவாநாஶ்வஹார ஶவாந்நிதிவேதநயா" என்கிறபடியே, அதிக்கிலேசத்தோடே வெளிவந்து, தின்றவிடத்தைச் சொரிதல் கடித்தவற்றைத் துடைத்தல் செய்யமாட்டாதே பராதீனமாய், இப்படி துக்கத்தோடே அதிசைசவத்தைப்போக்கித் தானே ஒருகாரியம்செய்ய யோக்கியனானவளவிலே, "த்வராவாந் த்வரமேவி வேகாத்மா யதேத ஶ்ரேயஸே ஸதா" என்கிறபடியே, விவேகமுள்ளவன் தன் ச்ரேயஸ்ஸையும்பொருட்டு பகவத்கைங்கரியத்தி லிழியவேண்டியிருக்க அத்தை யிகழ்ந்து, பால்யத்தில் விளையாட்டிற் போதுபோக்கி, யௌவனம் புகுந்தவாறே தனக்கு நிகரான மின்னிடை மடவாரோடு நரகஹேதுவான விஷயாந்தரங்களில் காலத்தைக்

கழித்து, ஜாயிலே வந்தகப்பட்டு, அசக்தியோடே சிந்தாக்கிராந்தனாய் "வாயொருபக்கம் வாங்கி வலிப் பவாய்ந்தநீர்க்குழிகண்கள் மழுத்தத் தாயொருபக்கந் தந்தையொருபக்கந் தாரமொருபக்க மலர்த்தத் தீயொருபக்கஞ்சேர" அப்பொழுது செய்யும்வகை யொன்றுமறியாது திகைத்துத் தடுமாறி ‹‹ஶ்லேஷ்மாந்ந ஷ்ட ரஞ்ஜிதோ[illegible] யாதி கிம்கரவீயதி:'' என்கிறபடியே உத்க்ரமணதசையிலே, க்லேசத்தை யநுபவித்து அநந்தரமிருத்யுபரவசனாய், இப்படி யதிக்ரூரங்களான கர்ப்பஜந்ம பால்ய யௌவந வார்த்திக மரண நரகங்களாகிற அவஸ்த்தாஸப்தகத்திலே கதாகதம்செய்து எப்பொழுதும் மஹாதுக்கங்களை அநுபவிக்குமவர்களுக்கு நல்லது கெட்டதறியுநிமித்தம், ‹‹ஶாஸநாச்சாஸ்த்ரம்'' என்கிறபடியே, ஸ்வ ஆஜ்ஞாரூபமான வேதாக்யஶாஸ்திரத்தைப் பிரவர்த்திப்பித்தவளவிலும், அதையும் அஜ்ஞாநம், ப்ரமம், விபரீதஜ்ஞானங்களாலே இவர்கள் காற்கடைகொள்ள, எழுத்துமூலமான வாஜ்ஞையை உபேக்ஷிக்கும் தேசங்களில் தாங்களே சென்று குறும்பறுக்கும் ராஜாக்களைப்போலே, ஸ்வாசாரமுகத்தாலே இவர்களைத் திருத்திப் பணிகொள்ளவேணுமென்று திருவுள்ளம்பற்றிப் பரமகாருணிகனான ஸர்வேச்வரன், ராமாதிரூபத்தாலே நாலுபடியா யவதரித்தருளினான். அதில் ராமரூபியாய் இராவணனை ஸம்ஹரித்து பித்ருவசந பரிபாலனாதி ரூபங்களான ஸாமான்னியதர்மங்களை யநுஷ்டித்தும், இலக்ஷ்மணரூபியாய் இந்திரஜித்தை ஸம்ஹரித்து பகவச்சேஷத்வரூபமான விசேஷதர்மத்தை யறிவித்தும், பரதரூபியாய் கந்தர்வநிரஸநம்செய்து பகவத்பாரதந்திரியாகிற கரிஷ்டதர்மத்தையும், சத்ருக்நரூபியாய் லவணாஸுரனை ஸம்ஹரித்து பாகவத சேஷத்வரூபமான பரமதர்ம விசேஷத்தை நிலைநிறுத்தியும் போந்தான். ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரன் இப்படி "படாதனபட்டு மனிசர்க்காய்" ஒரு காலவிசேஷத்தில் தாமேவந்தவதரித்து அநுஷ்டித்துக்காட்டின தர்மவிசேஷங்களும் அவனுடைய திருவிளையாட்டுகளும், பின்புள்ளாருமறிந்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்று நினைத்து ஸர்வலோகஹிதபரனும் பகவத்தத்தஜ்ஞாந சக்தியாதிகளையுடையவனும், அவனுடைய நாபிகமலத்தி லாவிர்பவித்தவனுமான சதுர்முகன் ராமசரித்திரத்தால் பவித்திரமாய் சதகோடிப் பிரவிஸ்தரமானதொரு பிரபந்தத்தை நிர்மித்து அதை நாரதாதிகளைக்கொண்டதிகரிப்பித்து இந்த மத்யமலோகமான பூவுலகத்திலும் எப்பொழுதும் ஸ்ரீராமமந்திராநுஸந்தானத்தால் ஸந்துஷ்டஹ்ருதயனான வால்மீகி மஹரிஷியைக்கொண்டு பூர்வோக்தமான ராமசரித்திரத்தைப் பிரவர்த்திப்பிக்க நினைப்புண்டவனாய், ‹‹வால்மீகிநா யதோக்தம் ச ராமாயணமநுத்தமம் । ப்ரஹ்மணா யோஜிதம் த்வம் ஹி ஶதகோடிப்ரவிஸ்தரம் । ஆஹூய நாரதேநைவ வால்மீகாய நிவேதிதம்'' என்கிறபடியே, வால்மீகிக்கு இந்த ஸ்ரீராமாயணத்தை யுபதேசிக்கும்படி நாரதனை அனுப்பினான். இப்படி ஸ்வப்ரயத்நமன்றிக்கே சதுர்முகனா லனுப்பப்பட்டுவந்த நாரதனை ஸ்ரீவால்மீகிபகவான் அர்க்யபாத்யாசமநீயாதிகளாலுபசரித்து தண்டன் ஸமர்ப்பித்து முகுளிதஹஸ்தனாய் பரத்வநிர்ணயம்செய்ய வொருப்பட்டு அகிலஜகத்காரணபூதன் யாவனென்று வினவ, ஸ்ரீநாரதபகவானு மதற்கிசைந்தாநந்தித்து இக்ஷ்வாகுவம்சத்தில் ஸ்ரீராமநாமாங்கிதனாகத் திருவவதரித்தருளின ஸ்ரீயஃபதியே ஸ்வேதர ஸமஸ்தவஸ்துவிலக்ஷணன், அகிலஹேயப்ரத்யநீககல்யாணகுணௌகமஹார்வணன், பரப்ரஹ்மவாச்சியன், அவனே ஜகதாதாரன் என்கிற அர்த்தவிசேஷங்களையுள்ளபடியுட்கொண்டிருக்கிற ஸங்க்ஷேபராமாயணமென்றொரு கையோலை இட்டுக்கொடுக்க, வால்மீகியு மந்த வர்த்தத்தையே ஸ்மரித்தாநந்தித்து மாத்யாந்ஹிகாநுஷ்டாநார்த்தமாக தமஸாதீரம் செல்ல, யாத்ருச்சிகமா யங்கொரு க்ரௌஞ்ச பக்ஷியின் மிதுனத்திலொன்றின் வதத்தைக்கண்டு துக்கஸந்தப்த ஹ்ருதயராய் மோஹித்திருக்குமளவில் அதனை வியாஜீகரித்து சதுர்முக ப்ரேரிதையாய் ஸரஸ்வதியானவள் சந்தோரூபமாய் வால்மீகியின் வதநகமலத்தி லாவிர்பவிக்க, அதை ஸ்மரித்து அதிவிஸ்மிதராய் அதையே அநுஸந்தித்திருக்கு மவர்பக்கல் சதுர்முகன் ஸந்துஷ்டஹ்ருதயனாய் வந்து தோன்ற, அவரை யதாக்கிரமமா யாராதித்து முன்னிலும் காட்டிலதியாச்சரியமுடையராய் நிற்கு மம்மஹரிஷியை அநுக்கிரஹித்து, ‹‹ஶ்லோக ஏவ த்வயா பத்தோ நாத்ர கார்யா விசாரணா'' என்கிறபடியே, நம்முடைய நியமனத்தாலேதான் ஸரஸ்வதி யும்மிடத்தி லாவிர்ப்பவித்தாள் ஆகையால் நீர் நாரதரிடத்தில் கேட்டபடியே, ‹‹குரு ராமகதாம் புண்யாம் ஶ்லோகபத்தாம் மநோரமாம்'' என்கிறபடியே, ராமசரித்தை அதிவிஸ்தாரமாயும் அதிசுருக்கமாயுமிராமல் செய்யக்கடவீர். செய்யுமளவில், ‹‹ரஹஸ்யம் ச ப்ரகாஶம் ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத: । ராமஸ்ய ஸஹஸௌமித்ரே ராக்ஷஸாநாம் ச ஸர்வஶ: ॥ வைதேஹ்யாஶ்சைவ யத்வ்ருத்தம் ப்ரகாஶம் யதி வா ரஹ: । தச்சாப்யவிதிதம் ஸர்வம் விதிதம் தே பவிஷ்யதி । ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி'' என்கிறபடியே, இந்தப்பிரமந்தமானது பொய்யில் பாடலாகக்கடவது. ‹‹ஏதத்ப்ரஹ்மாணமாஸ்தாய தௌ தேவாந்தர்தீயத'' என்றிந்தவிதம் பிரஸாதித்து அந்தர்த்தானமாக, அநந்தரம் வால்மீகிபகவான் நாரதோபதேசத்தாலும், சதுர்முகப் பிரஸாதத்தாலும் நிகரில்லா ஸாமர்த்தியாதி சக்திவிசேஷத்தை யடைந்து "‹‹யோகதர்மஸமாஸ்தித:'' என்கிறபடியே, ஸ்ரீராமசரித்திரத்தை உள்ளதுள்ளபடியே, உள்ளங்கை நெல்லிக்கனிபோல், பிரத்தியக்ஷமாகப்பார்த்து ஸ்ரீராமாயணமென்கிற பிரபந்தரத்நத்தை நிர்மிக்க உபக்கிரமித்தார்.



ஹரிஃ ஓம்.

ஸ்ரீஸீதாலக்ஷ்மணபரதஸத்ருக்ந ஹநுமத்ஸமேத
ஸ்ரீராமசந்த்ரஸ்வாமிநே நம:.

த்ராவிட ப்ரதிபத டீகா தாத்பர்ய ஸஹிதமான

# ஸ்ரீ வால்மீகிராமாயணம்

## சுந்தரகாண்டம்.

### அவதாரிகை.

ஸ்ரீவால்மீகிபகவான், தான் செய்தருளின ஸகல வேதஸாரமான ஸ்ரீராமாயணத்தில், **பாலகாண்டத்தில்,** துஷ்டநிக்ரஹசிஷ்டபரிபாலநங்களைச் செய்தருளி ஸகல தர்மங்களையும் நிலைநாட்டுவதற்காகச் சக்ரவர்த்தித்திருமகனாய் வந்தவதரித்தருளின ஸர்வேச்வரனை ஸ்ரிய:பதிக்குப் புருஷகாரபூதையான பிராட்டியின் சேர்த்தியையும்; **அயோத்யாகாண்டத்தில்,** பித்ருவாக்ய பரிபாலநரூபமான ஸாமாந்யதர்மத்தையும், வநத்துக்கெழுந்தருளுகையில் இளையபெருமாள் பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு பண்ணின சரணாகதியினால் பெருமாள் திருவுள்ளமுகந்து தம் கைங்கர்யத்தைச்செய்யும்படி நியமித்த சரித்திரத்தால் - அவனுடைய கைங்கர்யமே பண்ணத்தக்கது என்கிற விசேஷதர்மத்தையும்; **ஆரண்யகாண்டத்தில்,** ராக்ஷஸர்களால் மிகவருந்திச் சரணமடைந்த ரிஷிகளை ரக்ஷித்த சரித்திரத்தால் - தீநஜநங்களை ரக்ஷிக்கவேண்டும் என்கிற ஸாமாந்யதர்மத்தையும், ஜடாயுவுக்கு மோக்ஷமளித்த சரித்திரத்தால் - பரத்வத்தையும், தம்மைத்தேடுகிற மஹரிஷிகளைத் தாமேகிட்டி ரக்ஷித்த சரித்திரத்தால்-ஸௌலப்யத்தையும்; **கிஷ்கிந்தாகாண்டத்தில்,** ஸுக்ரீவனென்கிற மஹாராஜர்சரித்திரத்தால் - மித்ரஸம்ரக்ஷணம் ஆவச்யகம் என்கிற ஸாமாந்யதர்மத்தையும், தாரை மாரீசன் இவர்களுடைய வாக்யங்களைக்கொண்டு-ஜ்ஞாநசக்திபல ஐச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுக்கள் முதலான ஸமஸ்த கல்யாணகுணங்களையும், சிறிய திருவடிசரித்திரத்தால் - சேதநஸம்ரக்ஷணத்திற்கு ஸ்ரீராமபிரானாகத் திருவவதாரஞ்செய்தருளின வெம்பெருமானுக்கு ஆசார்ய புருஷகாரரூபமான விசேஷதர்மத்தையும் சொல்லி; இந்த **ஸுந்தரகாண்டத்தில்,** அசோகவநத்தில் பிராட்டியினுடைய அநுஷ்டாநத்தாலும் திருவடிக்ருத்யத்தாலும் - பதிவ்ரதாதர்மமும் தூதலக்ஷணமுமாகிய ஸாமாந்யதர்மத்தையும், (ப்ரம்ஹாஸ்வயம்பூ:) என்கிற சுலோகத்தால் - "ஸர்வநாசகன் ஸ்ரீராமனே" என்பதையும், திருவடிசரித்திரத்தால் "ஆசார்யக்ருத்யம் இவ்விதம்" என்கிற விசேஷதர்மத்தையும் சொல்லுகிறார்.

முதல்ஸர்க்கத்தால் சிக்ஷைக்குத்தகுந்த சிஷ்யனிருக்குமிடத்தைத் தேடும்படியான பரமாசாரிய ஸ்வரூபம் சொல்லப்படுகிறது.

## முதல்ஸர்க்கம்.

౧. తతో రావణనీతాయాస్సీతాయాశ్శత్రుకర్శనః।
ఇయేష పదమన్వేష్టుం చారణాచరితే పథి॥

௧. തതോ രാവണനീതായാഃ സീതായാഃ ശത്രുകർശനഃ।
ഇയേഷ പദമന്വേഷ്ടും ചാരണാചരിതേ പഥി॥

௧. ததோராவணநீதாயாஸ்ஸீதாயஶ்ஶத்ருகர்ஶநः।
இயேஷபதமந்வேஷ்டும்சாரணசரிதேபதி॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ததः | (ஜாம்பவானால் உத்ஸாஹம் பண்ணப்பட்ட) பிற்பாடு | அந்வேஷ்டும் | தேடுவதற்கு |
| | | சாரணசரிதே= | |
| சத்ருகர்சனः | சத்ருவை நாசம்பண்ணத்தக்க* (ஹநுமானவர்) | சாரண | சாரணரென்கிற (தேவர்களால்) |
| ராவணநீதாயாः= | | ஆசரிதே | ஸஞ்சரிக்கப்பட்ட |
| ராவண | ராவணனால் | பதி | (ஆகாச) மார்க்கத்தில் |
| நீதாயாः | கொண்டுபோகப்பட்ட | (கந்தும்) | (போக) |
| ஸீதாயாः | பிராட்டியினுடைய | இயேஷ | இச்சித்தார். |
| பதம் | ஸ்தானத்தை | | |

(அன்றியில்) சாரசணசரிதேபதி - சாரணர்களென்கிற தேவவிசேஷர்களால் ஸஞ்சரிக்கப்பட்ட ஆகாசமார்க்கத்தில், பதம் - (பிராட்டியினுடைய) காலடியை, அந்வேஷ்டும் - தேடுவதற்கு, இயேஷ - இச்சித்தார்.

தாத்பர்யம்—ஜாம்பவான், அங்கதன் முதலானவர்களுடைய ஸ்தோத்ரங்களினால் மிகவும் உத்ஸாகத்தையடைந்தும் பகையாளிகளை முடிக்கத்தக்க ஸாமர்த்யமுமுடைய சிறிய திருவடியானவர் தசக்ரீவனாலெடுத்துக்கொண்டு போகப்பட்ட பிராட்டியினுடைய இருப்பிடத்தை ஸித்தர்களென்றும், சாரணர்களென்றும் சொல்லுகிற தேவர்களால் ஸஞ்சரிக்கப்பட்ட ஆகாசமார்க்கத்திலெழுந்தருள எண்ணங்கொண்டார். அன்றியில் ஸித்தாள் சாரணரென்கிற தேவகாயகர்களால் சஞ்சரிக்க யோக்யமான ஆகாசத்தில் ஸீதையினுடைய அடிவைப்பைத்தேட எண்ணங்கொண்டார். இதனால் ஆகாசமார்க்கத்தில்கூட காலடியைத்தேடிக் கண்டறியும்படியான சக்தியுடையவனிந்த ஹநுமானென்று புத்திசாதுர்யம் சொல்லப்படுகிறது.

---

| தஸ்யாம் | அந்த (ஜாதியில்) | பரிமார்க்கிதும் | தேடுவதற்கு |
| தத் | அந்த (ஜந்துவானது) | நஸக்யா | சக்கியமல்ல. |
| பரிமார்க்யதே | தேடப்படுகிறது | | |

౪౪. తదిదం మార్గితం తావచ్ఛుద్ధేన మనసా మయా॥ రావణాన్తఃపురం సర్వం దృశ్యతే న చ జానకీ।

சச. 𑌤𑌦𑌿𑌦𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌿𑌤𑌂 𑌤𑌾𑌵𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑍇𑌨 𑌮𑌨𑌸𑌾 𑌮𑌯𑌾॥
𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌨 𑌚 𑌜𑌾𑌨𑌕𑍀।

சச. ததிதம்மார்க்கிதம்தாவத்ஸுத்தேநமநஸாமயா॥
ராவணாந்தஃபுரம்ஸர்வம்த்ருஸ்யதேநசஜாநகீ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத் | ஆகையால் | ராவணாந்தஃபுரம் | இராவணாந்தப்புரமானது |
| மயா | என்னால் | மார்க்கிதம் | தேடப்பட்டது |
| ஸுத்தேந | கல்மஷமற்ற | தத் | அந்த (இராவணாந்தப்புரத்தில்) |
| மநஸாதாவத் | மனதோடேயே | ஜாநகீ | ஜனகபுத்திரியானவள் |
| ஸர்வம் | ஸமஸ்தமான | நசத்ருஸ்யதே | காணப்படவில்லை. |
| இதம் | இந்த | | |

(௪௨-௪௩-௪௪) தா-ம்—மனம் நிஷ்கல்மஷமாயிருப்பதால் இந்த ஸ்திரீகளைக்கண்டது பாபஹேதுகாமான காரியமாகாவிடினும் யானவர்களைக் காணவேண்டிய காரணமென்னெனில், யான் பிராட்டியைக் காணவேண்டியதற்காகவல்லவோ இலங்கைக்கு வந்தது. ஸ்திரீஜாதியான ஜானகியை ஸ்திரீத்திரளில் காணாமல் மான்திரளிலா போய் காண்பேன். எந்த வஸ்துவைக்காண விரும்புகிறோமோ அதை அதன் ஜாதியிற்றானே தேடவேண்டும்; மானைக் காணவேண்டுமானால் மான்கள் வஸிக்குமிடம் போகவேண்டும்; ஸ்திரீயைக் காணவேண்டுமானால் ஸ்திரீத்திரளில் போய்ப்பார்க்கவேண்டும். இந்த நியாயத்தை யனுஸரித்தே இராவணாந்தப்புரப்பிரவேசஞ்செய்தேன். பிராட்டியை தரிசிக்கவேண்டியென்றே இராவணபத்நிகளைக்கண்டேன். வேறெந்த எண்ணத்தோடு மிவ்விடத்தை யானடையவில்லை. இராவணாந்தப்புரமுழுதும் தேடியும் ஜானகியை நான் காணவில்லை.

౪౫. దేవగంధర్వకన్యాశ్చ నాగకన్యాశ్చ వీర్యవాన్ । అవేక్షమాణో హనుమాన్నైవాపశ్యత జానకీమ్ ।

௪௫. 𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌕𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌨𑌾𑌗𑌕𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍॥
𑌅𑌵𑍇𑌕𑍍𑌷𑌮𑌾𑌣𑍋𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍𑌨𑍈𑌵𑌾𑌪𑌶𑍍𑌯𑌤𑌜𑌾𑌨𑌕𑍀𑌮𑍍।

௪௫. தேவகந்தர்வகந்யாஶ்சநாககந்யாஶ்சவீர்யவாந்॥
அவேக்ஷமாணோஹநுமாந்நைவாபஶ்யதஜாநகீம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வீர்யவாந் | பராக்கிரமசாலியான | கந்யாஶ்ச | பெண்களையும் |
| ஹநுமாந் | ஹநுமானானவர் | நாககந்யாஶ்ச | நாகலோகப்பெண்களையும் |
| தேவகந்தர்வகந்யாஶ்ச= | | அவேக்ஷமாண: | பார்த்துக்கொண்டு |
| தேவகந்தர்வ | தேவர்கள் - கந்தருவர்கள் (இவர்களுடைய) | ஜாநகீம் | பிராட்டியை |
| | | நைவாபஶ்யத | பார்க்கவேயில்லை. |

౪౬. తామపశ్యన్ కపిస్తత్ర పశ్యంశ్చాన్యా వరస్త్రియః ॥ అపక్రమ్య తదా వీరః ప్రధ్యాతుముపచక్రమే ।

௪௬. 𑌤𑌾𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌕𑌪𑌿𑌸𑍍𑌤𑌤𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾𑌵𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃॥
𑌅𑌪𑌕𑍍𑌰𑌮𑍍𑌯𑌤𑌦𑌾𑌵𑍀𑌰𑌃𑌪𑍍𑌰𑌧𑍍𑌯𑌾𑌤𑍁𑌮𑍁𑌪𑌚𑌕𑍍𑌰𑌮𑍇।

௪௬. தாமபஶ்யந்கபிஸ்தத்ரபஶ்யம்ஶ்சாந்யாவரஸ்த்ரிய:॥
அபக்ரம்யததாவீர:ப்ரத்யாதுமுபசக்ரமே।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வீர: | சூரனான | அந்யா: | இதரர்களான |
| கபி: | ஹநுமான் | வரஸ்த்ரிய: | உத்தமஸ்திரீகளை |
| ததா | அப்பொழுது | பஶ்யந் (ஸந்) | பார்த்துக்கொண்டு |
| தத்ர | அவ்விடத்தில் | அபக்ரம்ய | அந்தவிடத்தைவிட்டுத்திரும்பி |
| தாம் | அந்த (ஸீதையை) | ப்ரத்யாதும் | யோசிக்க |
| அபஶ்யந் | பாராதவராக | உபசக்ரமே | ஆரம்பித்தார். |

(௪௫-௪௬) தா-ம்—அவ்விடத்தில் நாகதேவ கந்தர்வாதி அநேகஜாதி ஸ்திரீகளைக்கண்டார். பிராட்டியைமாத்திரம் தரிசிக்கவில்லை. மறுபடியும் உத்தமரூபமுள்ள சிலரைப் பார்த்துவிட்டு தேவி யிங்கில்லையென்று நிச்சயித்து அவ்விடம் விட்டுத்திரும்பி காரியம் கைகூடாததைப்பற்றி சிந்திக்க வெத்தனித்தார்.

౪౭. స భూయస్తు పరం శ్రీమాన్ మారుతిర్యత్నమాస్థితః ॥ ఆపానభూమిముత్సృజ్య తద్విచేతుం ప్రచక్రమే ॥

௪௭. 𑌸𑌭𑍂𑌯𑌸𑍍𑌤𑍁𑌪𑌰𑌂𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌰𑍍𑌯𑌤𑍍𑌨𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌃॥
௪௭உ. 𑌆𑌪𑌾𑌨𑌭𑍂𑌮𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯𑌤𑌦𑍍𑌵𑌿𑌚𑍇𑌤𑍁𑌂𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌰𑌮𑍇॥

௪௭. ஸபூயஸ்துபரம்ஸ்ரீமாந்மாருதிர்யத்நமாஸ்தித:॥
௪௭உ. ஆபாநபூமிமுத்ஸ்ருஜ்யதத்விசேதும்ப்ரசக்ரமே।

இதி ஸ்ரீ𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌏𑌕𑌾𑌦𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃.

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸ்ரீமாந் | ப்ரஸன்னகாந்தியுடைய | ஆபாநபூமிம் | பானபூமியை |
| ஸ:-மாருதி: | அம்மாருதியானவர் | உத்ஸ்ருஜ்ய | விட்டு |
| பரம் | மிகவும் | தத் | அந்த (இராவணாந்தப்புரத்தை) |
| யத்நம் | (ஸீதையைத் தேடுகிற) ப்ரயத்தினத்தை | விசேதும் | தேடுவதற்கு |
| பூய: | மறுபடி | ப்ரசக்ரமே | ஆரம்பித்தார். |
| ஆஸ்தித: | அடைந்தவராக | | |

தா-ம்—ஸீதாதர்சனம் லபிக்காததைப்பற்றிக் கொஞ்சம் யோசித்துவிட்டு தைரியத்தைக் கைவிடாமல் பிரஸன்னவதனராய்ப் பின்னும் பானபூமியிலிருந்து புறப்பட்டு அந்தப்புரத்தில் தேட ஆரம்பித்தார்.

ஸ்ரீஸந்மநோரஞ்ஜநீ நாமத்திராவிடவியாக்யான ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
பதினொன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

## பன்னிரண்டாவது ஸர்க்கம்.

౧. స తస్య మధ్యే భవనస్య మారుతిర్లతాగృహాంశ్చిత్రగృహాన్నిశాగృహాన్ । జగామ సీతాం ప్రతిదర్శనోత్సుకో న చైవ తాం పశ్యతి చారుదర్శనాం

௧. 𑌸 𑌤𑌸𑍍𑌯𑌮𑌧𑍍𑌯𑍇𑌭𑌵𑌨𑌸𑍍𑌯𑌮𑌾𑌰𑍁𑌤𑌿𑌰𑍍𑌲𑌤𑌾𑌗𑍃𑌹𑌾𑌂𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌗𑍃𑌹𑌾𑌨𑍍𑌨𑌿𑌶𑌾𑌗𑍃𑌹𑌾𑌨𑍍, [௧॥
𑌜𑌗𑌾𑌮𑌸𑍀𑌤𑌾𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑍋𑌤𑍍𑌸𑍁𑌕𑍋𑌨𑌚𑍈𑌵𑌤𑌾𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌚𑌾𑌰𑍁𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌮𑍍॥

௧. ஸதஸ்யமத்யேபவநஸ்யமாருதிர்லதாக்ருஹாங்ஶ்சித்ரக்ருஹாந்நிஶாக்ருஹாந்।
ஜகாமஸீதாம்ப்ரதிதர்ஶநோத்ஸுகோநசைவதாம்பஶ்யதிசாருதர்ஶநாம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸ:-மாருதி: | அந்த-ஹநுமான் | நிஶாக்ருஹாந்— | |
| ஸீதாம்ப்ரதி | பிராட்டியைக்குறித்து | நிஶா | இராத்திரியில் வஸிக்கத்தகுந்த |
| தர்ஶநோத்ஸுக: | பார்ப்பதில் உத்ஸாகமுடையவராக | க்ருஹாந் | வீடுகளையும் |
| தஸ்ய-பவநஸ்ய | அந்த-கிருகத்தினுடைய | ஜகாம | அடைந்தார் |
| மத்யே | நடுவில் | சாருதர்ஶநாம் | நற்பார்வையுடைய |
| லதாக்ருஹாந் | (வினோதார்த்தம் கொடிகளாற்செய்யப்பட்ட) வீடுகளையும் | தாம் | அந்த (ஸீதையை) |
| | | நபஶ்யத்யேவ | பார்க்கவேயில்லை. |
| சித்ரக்ருஹாந் | (வேடிக்கையான) வீடுகளையும் | | |

தா-ம்—யாகசாலையிற் கொழுநுனியில் ஜனகனடைந்த லோகோத்தரமான ஸீதையென்னுஞ் செல்வத்தைக் காணவேண்டுமென்கிற குதூகலத்தால் ஹநுமான் அந்த அந்தப்புரத்தில் அதிவிசித்திரமாக நிர்மிக்கப்பட்டிருக்கு மனேக லதாக்கிரகங்களுள் நுழைந்து பார்த்தார். நானாசித்திரங்களா லதிஸுந்தரமாக விளங்கு மனேக கிரீடாக்கிரகங்களிற்றேடினர். திவ்வியாஸ்தரணங்கள் பரப்பிய உத்தமசயனங்களோடுகூடின அனேக படுக்கையறைகளை சோதித்தார். எவ்விடத்திலும் ஆனந்தம்பெருகு மந்த அரவிந்தாக்ஷியைக் காணவேயில்லை.

౨. స చింతయామాస తతో మహాకపిః ప్రియామపశ్యన్ రఘునందనస్య తామ్ । ధ్రువం హి సీతా మ్రియతే యథా న మే విచిన్వతో దర్శనమేతి మైథిలీ ॥

௨. 𑌸𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸𑌤𑌤𑍋𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌸𑍍𑌯𑌤𑌾𑌮𑍍। [௨॥
𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌹𑌿𑌸𑍀𑌤𑌾𑌮𑍍𑌰𑌿𑌯𑌤𑍇𑌯𑌥𑌾𑌨𑌮𑍇𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌵𑌤𑍋𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍇𑌤𑌿𑌮𑍈𑌥𑌿𑌲𑍀॥

௨. ஸசிந்தயாமாஸததோமஹாகபி:ப்ரியாமபஶ்யந்ரகுநந்தநஸ்யதாம்।
த்ருவம்ஹிஸீதாம்ருயதேயதாநமேவிசிந்வதோதர்ஶநமேதிமைதிலீ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸ:-மஹாகபி: | அந்த-ஹநுமான் | மே | எனக்கு |
| ரகுநந்தநஸ்ய | ஸ்ரீராமனுடைய | யதா | எப்பொழுது |
| ப்ரியாம் | இஷ்டையான | தர்ஶநம் | பார்வையை |
| தாம் | அந்த (ஸீதையை) | நேதி | அடையவில்லையோ |
| அபஶ்யந்(ஸந்) | பாராதவராய்க்(கொண்டு) | மைதலீ | மிதிலாதிபதியின் புத்திரியாகிய |
| தத: | பின்பு | ஸீதா | ஸீதையானவள் |
| சிந்தயாமாஸ | எண்ணினார் | ம்ருயதே | மரணமடைந்தாள் |
| விசிந்வத: | தேடுகிற | த்ருவம் | நிச்சயம். |

தா-ம்—இந்நகரத்திலு மிவ்வந்தப்புரத்திலும் ஓரிடமும் பாக்கியில்லாமற் றேடினேன். ஸ்ரீராகவனுக் கத்தியந்தம் பிரியையான அந்த மைதிலியைக்காணவில்லை. ஆகையா லந்த உத்தமியானவள் பதிவிரகந் தாங்கமுடியாமல் பிராணத்தியாகம் செய்துவிட்டாளென்று நிச்சயமாகத் தோற்றுகிறதென்று மஹாபுத்திசாலியான அந்த ஹநுமானெண்ணினர்.

౩. సా రాక్షసానాం ప్రవరేణ జానకీ స్వశీలసంరక్షణతత్పరా సతీ । అనేన నూనం ప్రతిదుష్టకర్మణా హతా భవేదార్యపథే పరే స్థితా ॥

௩. 𑌸𑌾𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌂𑌪𑍍𑌰𑌵𑌰𑍇𑌣𑌜𑌾𑌨𑌕𑍀𑌸𑍍𑌵𑌶𑍀𑌲𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌸𑌤𑍀।
𑌅𑌨𑍇𑌨𑌨𑍂𑌨𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍁𑌷𑍍𑌟𑌕𑌰𑍍𑌮𑌣𑌾𑌹𑌤𑌾𑌭𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌯𑌪𑌥𑍇𑌪𑌰𑍇𑌸𑍍𑌥𑌿𑌤𑌾॥

௩. ஸாராக்ஷஸாநாம்ப்ரவரேணஜாநகீஸ்வஶீலஸம்ரக்ஷணதத்பராஸதீ।
அநேநநூநம்ப்ரதிதுஷ்டகர்மணாஹதாபவேதார்யபதேபரேஸ்திதா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பரே | ஸ்ரேஷ்டமான | ஸ்வஶீல | தனக்குரிய பாதிவிரத்தியத்தை |
| ஆர்யபதே | ஸன்மார்க்கத்தில் | ரக்ஷண | இரக்ஷிப்பதில் |
| ஸ்திதா | இருப்பவளாயும் | தத்பரா | ஆஸக்தையுடையவளாக |
| ஸதீ | பாதிவிருத்தியமுடைய | ராக்ஷஸாநாம் | அரக்கருக்குள் |
| ஸா-ஜாநகீ | அந்த ஜனகபுத்திரீ | ப்ரவரேண | ஶ்ரேஷ்டனாயும் [ன |
| ஸ்வஶீலஸம்ரக்ஷணதத்பரா— | | ப்ரதிதுஷ்டகர்மணா | வெகு க்ரூரகிருத்தியமுடையவனுமா |

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அநேந | இந்த் (ராவணனால்) | நூநம் | நிச்சயம். |
| ஆஹ்ருதாபவேத் | ஸம்ஹரிக்கப்பட்டவளாகஆயிருப்பள் | | |

தா-ம்—பிராட்டியோ ஸன்மார்க்கத்தில் நிலைநிற்கிற மஹாபரிசுத்தை. பாதிவிருத்தியத்தைக் காப்பாற்றுவதில் மஹாதிடசித்தமுள்ளவள். குலஸ்திரீ நெறியினின்று மயிரிழையும் பிசகாத மஹாதர்மநிலை. இப்பேர்ப்பட்ட உத்தமியும் ஜனககுலப்பிரஸூதையுமான அந்த மைதிலியானவள் திரைலோக்கிய ஜயத்தால் கெர்வித்து ஆஹரியபாபகிருத்தியங்களி லதிக துணிவுற்றிருக்கிற அந்த இராக்ஷஸாதமனுடைய மனோரதத்திற்கிணங்கியிராள். அந்த பாபியானவன் கோபங்கொண்டு ஜானகியை ஸம்ஹரித்திருப்பான். இது நிச்சயமென்றெண்ணினர்.

౪. విరూపరూపా వికృతా వివర్చసో మహాననా దీర్ఘవిరూపదర్శనాః । సమీక్ష్య సా రాక్షసరాజయోషితో భయాద్వినష్టా జనకేశ్వరాత్మజా ॥

ச. விரூபரூபா விக்ருதா விவர்சஸோ மஹாநநா தீர்கவிரூபதர்ஶநா:।
ஸமீக்ஷ்ய ஸா ராக்ஷஸராஜயோஷிதோ பயாத்விநஷ்டா ஜநகேஶ்வராத்மஜா॥

ச. விரூபரூபாவிக்ருதாவிவர்சஸோமஹாநநாதீர்கவிரூபதர்ஶநா:।
ஸமீக்ஷ்யஸாராக்ஷஸராஜயோஷிதோபயாத்விநஷ்டாஜநகேஶ்வராத்மஜா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| விரூபரூபா= | | விரூபதர்ஶநா:= | க்ரூரதிருஷ்டிகளையுமுடைய |
| விரூப | உறுப்புக்குறைவான | ராக்ஷஸராஜயோஷித:= | |
| ரூபா | சரீராவயவங்களையுடையவர்களும் | ராக்ஷஸராஜ | இராவணனுடைய (ஆஜ்ஞையைச்செய்கிற) |
| விக்ருதா: | விகாரவேஷத்தையுடையவர்களும் | யோஷித: | ஸ்திரீகளை |
| விவர்சஸ: | தேஜஸ்ஸில்லாதவர்களும் | ஸமீக்ஷ்ய | பார்த்து |
| மஹாநநா: | விசாலமான முகமுடையவர்களும் | ஸா-ஜநகேஶ்வராத்மஜா-அந்த-ஸீதையானவள் | |
| தீர்கவிரூபதர்ஶநா:= | | பயாத் | பயத்தால் |
| தீர்க | அதிகமான | விநஷ்டா | நசித்திருப்பள். |

தா-ம்—பிராட்டியை இலங்கைக்குக் கொண்டுவந்தவுடன் இராவணன் அவளைச்சுற்றி அனேக இராக்ஷஸஸ்திரீகளைக் காவல்வைத்துப் பத்திரம் செய்யும்படி ஆக்கியாபித்திருப்பான். அதில் சிலர் கைகுறைந்து கால்குறைந்து தொந்தி சொரிந்து கண்போய் காதுபோய் அதிவிகாரமான சரீரிகளாயிருப்பார். இன்னம் சிலர் கோரப்பல், உதரம் பெருகும் வாய், எரிகிற கண், பொன்ரேகைபோன்ற மயிர் இப்படி யமகிங்கரர்போல் பயங்கரமான பார்வையுடையவராயிருப்பார். இன்னம் சிலர் பெருத்த முகத்தோடும் ஜ்வலிக்கிற கண்களோடும் கடுகடுக்கிற சொல்லோடும்பயங்கரைகளாயிருப்பார். இப்படி காலமிருத்தியு அனேகவிதமாக மூர்த்திகரித்துவந்ததுபோலிருக்கிற இராக்ஷஸஸ்திரீகளைப்பார்த்து ஸ்ரீராகவனுடைய திருமேனியையே கண்டானந்தித்துவந்த ஸீதை நடுநடுங்கி நாசமடைந்திருப்பாள்.

౫. సీతామదృష్ట్వా హ్యనవాప్య పౌరుషం విహృత్య కాలం సహ వానరైశ్చిరమ్ । న మే౽స్తి సుగ్రీవసమీపగా గతిస్సుతీక్ష్ణదండో బలవాంశ్చ వానరః ॥

ரு. ஸீதாமத்ருஷ்ட்வா ஹ்யநவாப்ய பௌருஷம் விஹ்ருத்ய காலம் ஸஹ வாநரைஶ்சிரம்।
ந மே(அ)ஸ்தி ஸுக்ரீவஸமீபகா கதிஸ்ஸுதீக்ஷ்ணதண்டோ பலவாம்ஶ்ச வாநர:॥

ரு. ஸீதாமத்ருஷ்ட்வாஹ்யநவாப்யபௌருஷம்விஹ்ருத்யகாலம்ஸஹவாநரைஶ்சிரம்।
நமேஸ்திஸுக்ரீவஸமீபகாகதிஸ்ஸுதீக்ஷ்ணதண்டோபலவாம்ஶ்சவாநர:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (யத:) | (எந்தகாரணத்தால்) | வாநரைஸ்ஸஹ | வானரர்களோடுகூட |
| வாநர: | ஸுக்ரீவன் | சிரம்-காலம் | வெகு-காலம் |
| ஸுதீக்ஷ்ணதண்ட: | பயங்கரமான ஆஜ்ஞையுடையவனே | விஹ்ருத்ய | விளையாடி (அவன் ஆஜ்ஞையைத் தப்பின) |
| பலவாம்ஶ்ச | பலவானே | | |
| (தத:) | (அந்தகாரணத்தால்) | மே | எனக்கு |
| ஸீதாம் | பிராட்டியை | ஸுக்ரீவஸமீகா | ஸுக்கிரீவனிடத்திற்குப்போகிற |
| அத்ருஷ்ட்வா | பாராமலும் | கதி: | மார்கமானது |
| பௌருஷம் | சத்துருவினுடைய பராக்கிரமத்தை | நாஸ்திஹி | இல்லையன்றே. |
| அநவாப்ய | அடையாமலும் | | |

தா-ம்—ஸகல வானரர்களையும் நான்கு பிரிவாகப்பிரித்து நான்குதிசைகளுக் கனுப்புகையில் ஸுக்கிரீவமஹாராஜா "நீங்கள் ஒருமாதத்திற்குள் பிராட்டி யிருப்பிடமறிந்து திரும்பிவரவேண்டும். அந்த கெடுவுக்குள் திரும்பிவாராவிடில் கொடுந்தண்டம் விதிக்கப்படும்" என்று ஆக்கியாபித்து விடுத்தார். தெற்குதிக்குநோக்கிவந்த வானரர் கொஞ்சகாலம் பிராட்டியைத்தேடிக் காணாமல் ஸ்வயம் பிரபையிட்ட விருந்து ஸுகத்தில் மதிமயங்கிக்கிடந்து காலங்கழித்து விட்டார்கள். ஸீதை யிங்கிருக்கிறாளென்று ஸமுத்திரந்தாண்டி யிவ்விடம்வந்தும் காரியஸித்தியாகவில்லை. சத்துருவினிடத்தில் என் பலத்தைக் காட்டவுமில்லை. அவனுடைய பலாபலமறியவுமில்லை. காலதாமஸமாகிச்சென்றாலும் பிராட்டியைக் கண்டோமென்கிற ஸந்தோஷஸமாசா

ரத்தைக் கொண்டுபோனு லதனுல் மஹாராஜா ஸமாதானமடையலாம். பிராட்டி தரிசனஞ் செய்யாமலும் இராவணபல பௌருஷங்களை யறியாமலும் என்னுடைய விக்கிரமத்தை யவனுக்கு வெளியிடாமலும் ஏற்படுத்திய கெடுவுக்குள் திரும்பாமலும் என்னவிதமாக ஸுக்கிரீவஸந்நிதானத்தை யடைவேன். ஸுக்கிரீவ மஹாராஜா மஹாபலவான். ஆக்கிவைக்கடப்பவர்களுக்குக் கொடுந்தண்டம் விதிக்கிற பயங்கரன். விளையாட்டிற் காலம் போக்கிவிட்டு நிஷ்பிரயோஜகனுய் காரியஸாதகஞ்செய்யாதவனு யவர் முன்னிலையிற் போவதற்கு நானருகனன்றெண்ணினர்.

౬. దృష్టమంతఃపురంసర్వందృష్టారావణయోషితః।నసీతాదృశ్యతేసాధ్వీవృథాజాతోమమశ్రమః॥

౭. కిన్నుమాంవానరాస్సర్వేగతంవక్ష్యంతిసంగతాః । గత్వాతత్రత్వయావీరకింకృతంతద్వదస్వనః॥

౮. అదృష్ట్వాకింప్రవక్ష్యామితామహంజనకాత్మజామ్ । ధ్రువంప్రాయముపైష్యన్తికాలస్యవ్యతివర్తనే॥

౯. కింవావక్ష్యంతివృద్ధశ్చజాంబవానంగదశ్చసః । గతంపారంసముద్రస్యవానరాశ్చసమాగతాః॥

౧౦. అనిర్వేదశ్శ్రియోమూలమనిర్వేదఃపరంసుఖమ్ । అనిర్వేదోహిసతతంసర్వార్థేషుప్రవర్తకః॥

౧౧. కరోతిసఫలంజంతోఃకర్మయత్తత్కరోతిసః । తస్మాదనిర్వేదకృతంయత్నంచేష్టేహముత్తమమ్॥

౧౨. భూయస్తావద్విచేష్యామిదేశాన్రావణపాలితాన్ । ఆపానశాలావిచితాస్తథాపుష్పగృహాణిచ॥

౧౩. చిత్రశాలాశ్చవిచితాభూయఃక్రీడాగృహాణిచ । నిష్కుటాంతరరథ్యాశ్చవిమానానిచసర్వశః॥

౧౪. ఇతిసంచింత్యభూయోపివిచేతుముపచక్రమే । భూమీగృహాంశ్చైత్యగృహాన్ గృహాతిగృహానపి॥

௬. 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌰𑌾𑌵𑌣𑌯𑍋𑌷𑌿𑌤𑌃।
𑌨𑌸𑍀𑌤𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇𑌸𑌾𑌧𑍍𑌵𑍀𑌵𑍃𑌥𑌾𑌜𑌾𑌤𑍋𑌮𑌮𑌶𑍍𑌰𑌮𑌃॥

௭. 𑌕𑌿𑌨𑍍𑌨𑍁𑌮𑌾𑌂𑌵𑌾𑌨𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌗𑌤𑌂𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌸𑌙𑍍𑌗𑌤𑌾𑌃।
𑌗𑌤𑍍𑌵𑌾𑌤𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌯𑌾𑌵𑍀𑌰𑌕𑌿𑌂𑌕𑍃𑌤𑌂𑌤𑌦𑍍𑌵𑌦𑌸𑍍𑌵𑌨𑌃॥

௮. 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌕𑌿𑌂𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑌾𑌮𑌹𑌂𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌮𑍍।
𑌧𑍍𑌰𑍁𑌵𑌂𑌪𑍍𑌰𑌾𑌯𑌮𑍁𑌪𑍈𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌲𑌸𑍍𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍇॥

௯. 𑌕𑌿𑌂𑌵𑌾𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑍍𑌚𑌜𑌾𑌮𑍍𑌬𑌵𑌾𑌨𑌙𑍍𑌗𑌦𑌶𑍍𑌚𑌸𑌃।
𑌗𑌤𑌂𑌪𑌾𑌰𑌂𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌵𑌾𑌨𑌰𑌾𑌶𑍍𑌚𑌸𑌮𑌾𑌗𑌤𑌾𑌃॥

௧௦. 𑌅𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌶𑍍𑌶𑍍𑌰𑌿𑌯𑍋𑌮𑍂𑌲𑌮𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌃𑌪𑌰𑌂𑌸𑍁𑌖𑌮𑍍।
𑌅𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑍋𑌹𑌿𑌸𑌤𑌤𑌂𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑍇𑌷𑍁𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌕𑌃॥

௧௧. 𑌕𑌰𑍋𑌤𑌿𑌸𑌫𑌲𑌂𑌜𑌨𑍍𑌤𑍋𑌃𑌕𑌰𑍍𑌮𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌰𑍋𑌤𑌿𑌸𑌃।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌕𑍃𑌤𑌂𑌯𑌤𑍍𑌨𑌂𑌚𑍇𑌷𑍍𑌟𑍇𑌹𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥

௧௨. 𑌭𑍂𑌯𑌸𑍍𑌤𑌾𑌵𑌦𑍍𑌵𑌿𑌚𑍇𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌦𑍇𑌶𑌾𑌨𑍍𑌰𑌾𑌵𑌣𑌪𑌾𑌲𑌿𑌤𑌾𑌨𑍍।
𑌆𑌪𑌾𑌨𑌶𑌾𑌲𑌾𑌵𑌿𑌚𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌪𑍁𑌷𑍍𑌪𑌗𑍃𑌹𑌾𑌣𑌿𑌚॥

௧௩. 𑌚𑌿𑌤𑍍𑌰𑌶𑌾𑌲𑌾𑌶𑍍𑌚𑌵𑌿𑌚𑌿𑌤𑌾𑌭𑍂𑌯𑌃𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌗𑍃𑌹𑌾𑌣𑌿𑌚।
𑌨𑌿𑌷𑍍𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌰𑌰𑌥𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌵𑌿𑌮𑌾𑌨𑌾𑌨𑌿𑌚𑌸𑌰𑍍𑌵𑌶𑌃॥

௧௪. 𑌇𑌤𑌿𑌸𑌂𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑍂𑌯𑍋𑌪𑌿𑌵𑌿𑌚𑍇𑌤𑍁𑌮𑍁𑌪𑌚𑌕𑍍𑌰𑌮𑍇।
𑌭𑍂𑌮𑍀𑌗𑍃𑌹𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌤𑍍𑌯𑌗𑍃𑌹𑌾𑌨𑍍𑌗𑍃𑌹𑌾𑌤𑌿𑌗𑍃𑌹𑌾𑌨𑌪𑌿॥

௬. த்ருஷ்டமந்தஃபுரம்ஸர்வம்த்ருஷ்டாராவணயோஷிதஃ।
நஸீதாத்ருஶ்யதேஸாத்வீவ்ருதாஜாதோமமஶ்ரமஃ॥

௭. கிந்நுமாம்வாநராஸ்ஸர்வேகதம்வக்ஷ்யந்திஸங்கதாஃ।
கத்வாதத்ரத்வயாவீரகிம்க்ருதம்தத்வதஸ்வநஃ॥

௮. அத்ருஷ்ட்வாகிம்ப்ரவக்ஷ்யாமிதாமஹம்ஜநகாத்மஜாம்।
த்ருவம்ப்ராயமுபைஷ்யந்திகாலஸ்யவ்யதிவர்த்தநே॥

௯. கிம்வாவக்ஷ்யந்திவ்ருத்தஶ்சஜாம்பவாநங்கதஶ்சஸஃ।
கதம்பாரம்ஸமுத்ரஸ்யவாநராஶ்சஸமாகதாஃ॥

௧௦. அநிர்வேதஶ்ஶ்ரியோமூலமநிர்வேதஃபரம்ஸுகம்।
அநிர்வேதோஹிஸததம்ஸர்வார்த்தேஷுப்ரவர்த்தகஃ॥

௧௧. கரோதிஸபலம்ஜந்தோஃகர்மயத்தத்கரோதிஸஃ।
தஸ்மாதநிர்வேதக்ருதம்யத்நம்சேஷ்டேஹமுத்தமம்॥

௧௨. பூயஸ்தாவத்விசேஷ்யாமிதேசாந்ராவணபாலிதாந்।
ஆபாநஶாலாவிசிதாஸ்ததாபுஷ்பக்ருஹாணிச॥
௧௩. சித்ரஶாலாஶ்சவிசிதாபூயஃக்ரீடாக்ருஹாணிச।
நிஷ்குடாந்தராத்யாஶ்சவிமாநாநிசஸர்வஶஃ॥
௧௪. இதிஸம்சிந்த்யபூயோபிவிசேதுமுபசக்ரமே।
பூமீக்ருஹாம்ஶ்சைத்யக்ருஹாந்க்ருஹாநதிக்ருஹாநபி॥

| பதம். | உரை. |
| --- | --- |
| (மயா) | (என்னால்) |
| ஸர்வம் | ஸமஸ்தமான |
| அந்தஃபுரம் | அந்தப்புரமானது |
| த்ருஷ்டம் | (தேடிப்) பார்க்கப்பட்டது. (அவ்விடத்தில்) |
| ராவணயோஷிதஃ | இராவண ஸ்திரீகள் |
| த்ருஷ்டாஃ | காணப்பட்டார்கள் |
| ஸாத்வீ | பதிவிருதையான |
| ஸீதா | பிராட்டியானவள் |
| நத்ருஶ்யதே | காணப்படவில்லை (ஆகையால்) |
| மம | என்னுடைய |
| ஶ்ரமஃ | கஷ்டமானது |
| வ்ருதா | வியர்தமாக |
| ஜாதஃ | ஆயிற்று |
| கதம் | (இவ்விடத்திலிருந்து) போகிற |
| மாம் | என்னை |
| ஸர்வே | ஸமஸ்தர்களான |
| வாநராஃ | (ஜாம்பவான் முதலான) வானரங்கள் |
| ஸங்கதாஃ | ஒன்றாகக்கூடினவர்களாக |
| கிந்துவக்ஷ்யந்தி | என்னசொல்வார்கள் |
| ஹேவீர | ஹே பராக்கிரமசாலிந்! |
| தத்ர | அந்த இலங்கைக்கு |
| கத்வா | சென்று |
| த்வயா | உன்னால் |
| கிம்-க்ருதம் | என்னசெய்யப்பட்டது |
| தத் | அதை |
| நஃ | எங்களுக்கு |
| வதஸ்வ | சொல்லு |
| (இதி) | (என்று) |
| வக்ஷ்யந்தி | கேழ்ப்பார்கள் |
| அஹம் | (அப்பொழுது) நான் |
| தாம்-ஜநகாத்மஜாம் | அந்த-ஸீதையை |
| அத்ருஷ்ட்வா | பாராமல் |
| கிம்-ப்ரவக்ஷ்யாமி | என்னசொல்வேன் |
| காலஸ்ய | (நான்) வந்தகாலத்தினுடைய |
| வ்யதிவர்த்தநே | தாண்டின பக்ஷத்தில் |
| வாநராஃ | அங்கதாதி வானரர்கள் |
| த்ருவம் | ஸத்தியமாக |
| ப்ராயம் | மரணத்தை |
| உபைஷ்யந்தி | அடைவார்கள் |
| வ்ருத்தஃ | வெகு பெரியவரான |
| ஜாம்பவாந்ஶ்ச | ஜாம்பவானும் |
| ஸஃ-அங்கதஶ்ச | அந்த-அங்கதனும் |
| வாநராஶ்ச | வானரர்களும் |
| ஸமாகதாஃ | ஒன்றாகச்சேர்ந்து வந்து |
| ஸமுத்ரஸ்ய | கடலினுடைய |
| பாரம் | அந்த கரையை |
| கதம் | அடைந்த |
| மாம் | என்னைக் (குறித்து) |
| கிம்வாவக்ஷ்யந்தி | என்னதான் சொல்வார்கள் |
| அநிர்வேதஃ | ஸந்தோஷமானது |
| ஶ்ரியஃ | ஸம்பத்திற்கு |

| பதம். | உரை. |
| --- | --- |
| மூலம் | காரணம் |
| அநிர்வேதஃ | குதூஹலமானது |
| பரம்-ஸுகம் | விசேஷமான-ஸுககரம் |
| அநிர்வேதஃ | உத்ஸாகமானது |
| ஸர்வார்த்தேஷு | ஸமஸ்த காரியங்களில் |
| ஸததம் | எப்பொழுதும் |
| ப்ரவர்த்தகோஹி | பிரவேசிக்கத்தக்கதன்றோ |
| (ஜந்துஃ) | (பிராணியானது) |
| யத்-கர்ம | எந்த-கிருதியத்தை |
| கரோதி | பண்ணுகிறதோ |
| ஜந்தோஃ | பிராணியினுடைய |
| தத் | அந்த (கர்மத்தை) |
| ஸபலம் | பலத்தோடுகூடினதாக |
| ஸஃ | அந்த உத்ஸாகமானது |
| கரோதி | செய்கிறது |
| தஸ்மாத் | ஆகையால் |
| அஹம் | நான் |
| அநிர்வேதக்ருதம் | மங்களத்தை விளைவிக்கிறதும் |
| உத்தமம் | சிரேஷ்டமுமான |
| யத்நம் | பிரயத்தினத்தை |
| சேஷ்டே | செய்கிறேன் |
| ராவணபாலிதாந் | இராவணனால் பாதுகாக்கப்பட்ட |
| தேஶாந் | இடங்களையும் |
| விசிதாஃ | தேடப்பட்ட |
| ஆபாநஶாலாஃ | பானசாலைகளையும் |
| ததா | அப்படியே |
| புஷ்பக்ருஹாணிச | புஷ்பக்ருகங்களையும் |
| பூயஃ | மறுபடியும் |
| தாவத் | இப்பொழுது (நன்றாக) |
| விசேஷ்யாமி | தேடுகிறேன் |
| விசிதாஃ | தேடப்பட்டிருக்கிற |
| சித்ரஶாலாஶ்ச | ஆச்சரியகரமான வீடுகளையும் |
| க்ரீடாக்ருஹாணிச | கிரீடாகிருகங்களையும் |
| நிஷ்குடாந்தராத்யாஶ்ச | வீட்டுத்தோட்டங்களையும் (அவாந்தர வீதிகளையும்) |
| விமாநாநிச | புஷ்பகம்முதலாகிய விமானங்களையும் |
| ஸர்வஶஃ | வெகு பிரகாரமாக |
| பூயஃ | மறுபடி |
| விசேஷ்யாமி | தேடக்கடவேன் |
| இதி | என்று |
| ஸஞ்சிந்த்ய | ஆலோசித்து |
| பூமிக்ருஹாந் | பூமிக்குள் ஏற்படுத்தியிருக்கிற வீடுகளையும் |
| சைத்யக்ருஹாந் | நாற்சந்திமண்டபங்களையும் |
| க்ருஹாநதிக்ருஹாநபி— | |
| க்ருஹ | வீட்டுக்குதூரத்தில் விளையாட்டுநிமித்தமேற்படுத்தப்பட்ட |
| அதிக்ருஹாந் | வீடுகளையும் |
| பூயோபி | மறுபடியும் |
| விசேதும் | தேடுவதற்கு |
| உபசக்ரமே | ஆரம்பித்தார். |

தா-ம்—அனேகமான இராவணனந்தப்புரங்களில் பார்க்கத்தகாதனவும், பிரவேசிக்கக்கூடாதனவுமான ஸமஸ்தவிடங்களிலும் வெகுவாகத்தேடியும் தசானனனுடைய பத்தினிகள் காணப்பட்டார்களேயல்லது, அந்த பரதேவதையான பிராட்டி கா

காணப்படவில்லையே. அஹோ! என்னபண்ணுவேன். ஹநுமான் இலங்கைக்கு போயிருக்கிறான், எவ்விதத்திலாவது காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வருவான். எப்போ வரப்போகிறான். எப்போ நம் உயிர்நிலையைத் தரப்போகிறானென்று வழி பார்த்துக்கொண்டிருக்கிற வானரர்களிடத்திற்குப் பிராட்டியைப்பாராமல் நான் போனால் "இதோ வந்தான் ஹநுமான்" என்று உடனே ஜாம்பவான் முதலான வானரர்கள் ஒன்றுசேர்ந்து ஓடிவந்து வெகு குதூஹலத்தோடு ஹே பராக்கிரமசாலின்! க்ஷேமமாய் வந்தயா? இலங்கையிற்புகுந்து நம்மாதவாகிய பிராட்டியைக்கண்டயா? அங்கு என்னபண்ணினாய்? என்று கேட்பார்களே. அவர்களுக்கு நான் என்னபதில் சொல்லுகிறது. இலங்காநகரமுழுதும் தேடியும் ஸீதையைக் காணவில்லையென்று சொன்னால் அப்பொழுதென்னை என்னவென்று நினைப்பார்கள். மாம் - மஹேந்திரபருவதத்தில் இலங்கைக்குப்போகிறதற்கு யார் ஸமர்த்தனென்று கேட்கும்போது எல்லோரும் அவரவர்கள் சக்தியைச்சொல்லி தப்பித்துக்கொண்டார்கள். அத்தருணத்தில் வெகுவிருத்தரான ஜாம்பவான் என்னை ஸ்தோத்திரம் செய்யும்போது அதற்கு நான் ஸந்தோஷித்து யுக்தாயுக்தமறியாமல் அசட்டுத்தனமாகக் கடல்தாவக் கிளம்பினவென்னை; அல்லது மாம் - கிளம்பும்போது மௌனமாகவராமல் ஹே வானரர்களே! கேளுங்கள். அந்த கோதண்டபாணியான ரகுவீரன் பாணம்போல் இலங்கைக்கு க்ஷணகாலத்திற்போகிறேன். காரியத்தையிதோ ஜயித்துவருகிறேன் என்று சொன்னவென்னை; அல்லது மாம்-இலங்கைக்குப்போய் நகரமுழுதும் தேடுகிறேன். ஸீதையங்கில்லாமற்போனால் தேவலோகமோ நாகலோகமோ எங்கிருப்பளோ அங்கு போகிறேன், அங்கு மில்லாமற்போனால் சிறிதேனும் சிரமமடையாமல் பின்னு மிலங்கைக்குவந்து அந்த மந்தனான இராவணனைக்கட் டிங்குகொண்டு வருகிறேனென்று மார்தட்டினவென்னை; அல்லது மாம்-அப்படி யவனைக்காணவிடில் அவனுடன் இலங்கையைப் பேர்த்துக்கொண்டு வருகிறேனென்றுவீரவாதம்பண்ணி அபயம் செய்துவந்த வென்னை யிப்பொழுது அவமதியார்களோ, நிந்தியார்களோ, தெரியாமல் வந்துவிட்டேனே. இன்னம் கொஞ்சம் ஸாவகாசமாகப்போவோமென்றால் வானரர்களுக்குச்சொன்ன கெடுதப்பினால் ஒருக்கால் அந்த பாபியான இராவணனால் ஹநுமான் மரணமடைந்துவிட்டானோவென்று அவர்களும் மரணமடைவார்களே. ஐயோ! என்ன செய்யப்போகிறேன்.. நான் மஹாஸமுத்திரத்தைத் தாண்டினதும், மத்தியிலுண்டான ஸுரஸை முதலான விக்கினங்களையொழித்ததும், வீரவாதம்செய்ததும் இந்த லங்காநகரப்பிரவேசம் செய்ததுமான இவைகளெல்லாம் காட்டிற்காய்ந்த நிலாபோல் வியர்த்தமாய்விட்டனவே, என்று மனம் கொதித்துவாடி பின்னும் யோசிக்கிறார். ஓஹோ! என்ன மூடனாயிருக்கிறேன். இப்படி தைரியமிழந்து துக்கிக்கலாமா! மஹாபிராஜ்ஞனான புருஷனையும் துக்கரூபமான சிந்தையன்றோ கெடுத்துவிடுகிறது. ஸந்தோஷமிருந்தால் ஸம்பத்துண்டாகும். உத்ஸாகமிருந்தால் ஸுகமுண்டாகும். ஸர்வகாரியங்களையும் குதூஹலமன்றோ நிறைவேற்றுகிறது. எந்த பிராணிகள் ஸந்தோஷத்தோடுகூடி எவ்விதகாரியம் செய்கிறார்களோ, அவ்வித காரியங்களை அந்த ஸந்தோஷமன்றோ பலத்தோடுகூடினவாகச்செய்கிறது. ஆகையால் நானிந்த வியஸனத்தையொழித்து உத்ஸாகத்தையடைந்து முன்தேடின பானசாலைகளிலும் புஷ்பசாலைகளிலும் கிரீடாகிரகங்களிலும் லதாகிரகங்களிலும் சிங்காரத்தோட்டங்களிலும் புஷ்பவனங்களிலும் அரண்மனையிலும் புஷ்பகவிமானத்திலும் மறுபடியும் தேடுகிறேன். எப்படியாவது பிராட்டியிருக்குமிடத்தை யறிகிறேன். இந்தவிதம் மறுபடியும் தேட ஆரம்பித்து பூமியின்கீழ் நிர்மிக்கப்பட்டிருக்கும் கட்டிடங்களிலும் நாற்சந்தி மண்டபங்களிலும், கிரீடார்த்தம் அந்தப்புரத்திற்கு வெளியிலேற்படுத்தியிருக்கும் ஸ்தலங்களிலும் பிரவேசித்துத்தேட வெத்தனித்தார்.

౧౫. ఉత్పతన్నిపతంశ్చాపితిష్ఠన్గచ్ఛన్పునఃపునః । అపావృణ్వంశ్చద్వారాణికవాటాన్యవఘాటయన్॥

౧౬. ప్రవిశన్నిష్పతంశ్చాపిప్రపతన్నుత్పతన్నపి । సర్వమప్యవకాశంసవిచచారమహాకపిః॥

௧௫. 𑌉𑌤𑍍𑌪𑌤𑌨𑍍𑌨𑌿𑌪𑌤𑌂𑌶𑍍𑌚𑌾𑌪𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌪𑌨𑌃𑌪𑌨𑌃।
𑌅𑌪𑌾𑌵𑍃𑌣𑍍𑌵𑌂𑌶𑍍𑌚𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌿𑌕𑌵𑌾𑌟𑌾𑌨𑍍𑌯𑌵𑌘𑌾𑌟𑌯𑌨𑍍॥

௧௬. 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑌤𑌂𑌶𑍍𑌚𑌾𑌪𑌿𑌪𑍍𑌰𑌪𑌤𑌨𑍍𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑌨𑍍𑌨𑌪𑌿।
𑌸𑌰𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑌵𑌕𑌾𑌶𑌂𑌸𑌵𑌿𑌚𑌚𑌾𑌰𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃॥

௧௫. உத்பதந்நிபதந்ஸ்சாபிதிஷ்டந்கச்சந்புநஃபுநஃ|
அபாவ்ருண்வம்ஸ்சத்வாராணிகவாடாந்யவகாடயந்||

௧௬. ப்ரவிஸந்நிஷ்பதந்ஸ்சாபிப்ரபதந்நுத்பதந்நபி|
ஸர்வமப்யவகாஸம்ஸவிசசாரமஹாகபிஃ||

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸஃ-மஹாகபிஃ | அம்மாருதி | அவகாடயந் | (தாளைத்) திறந்துகொண்டும் |
| உத்பதந் | மேலேறியும் | ப்ரவிஸந் | உள்நுழைந்துகொண்டும் |
| நிபதந் | கீழிறங்கியும் | நிஷ்பதம்ஸ்சாபி | வெளியில்வந்துகொண்டும் |
| புநஃபுநஃ | அடிக்கடி | ப்ரபதந் | பூமிலக்கிருஹத்திற் பிரவேசித்துக் கொண்டும் |
| திஷ்டந் | அங்கங்கே நின்றுகொண்டும் | | |
| கச்சந் | நடந்துகொண்டும் | உத்பதந்நபி | அதிலிருந்து மேலேறிக்கொண்டும் |
| த்வாராணி | வாசல்களை | ஸர்வம் | ஸமஸ்தமான |
| அபாவ்ருண்வந் | திறந்துகொண்டு | அவகாஸமபி | இடத்தையும் |
| கவாடாந் | கதவுகளை | விசசார | (தேடிக்கொண்டு) ஸஞ்சரித்தார். |

౧౭. చతురంగులమాత్రోఽపినావకాశస్సవిద్యతే । రావణాంతఃపురేతస్మిన్యంకపిర్నజగామసః॥

௧௭. 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌽𑌪𑌿𑌨𑌾𑌵𑌕𑌾𑌶𑌸𑍍𑌸𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇।
𑌰𑌾𑌵𑌣𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍇𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌯𑌂𑌕𑌪𑌿𑌰𑍍𑌨𑌜𑌗𑌾𑌮𑌸𑌃॥

௧௭. சதுரங்குலமாத்ரோபிநாவகாஸஸ்ஸவித்யதே|
ராவணாந்தஃபுரேதஸ்மிந்யம்கபிர்நஜகாமஸஃ||

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தஸ்மிந் | அந்த | நஜகாம | அடையவில்லையோ |
| ராவணாந்த:புரே | தசானனனுடைய அரண்மனையில் | ஸ:-அவகாஸ: | அந்த-இடமானது |
| யம் | எந்த (இடத்தை) | சதுரங்குலமாத்ரோபி | நான்கு அங்குலங்கூட |
| ஸ:-கபி: | அந்த-ஹனுமான் | நவித்யதே | கிடையாது. |

౧౮. ప్రాకారాంతరరథ్యాశ్చ వేదికాశ్చైత్యసంశ్రయాః । దీర్ఘికాః పుష్కరిణ్యశ్చ సర్వం తేనావలోకితమ్॥

க௮. 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌰𑌥𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌶𑍍𑌚𑍈𑌤𑍍𑌯𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌾𑌃।
𑌦𑍀𑌰𑍍𑌘𑌿𑌕𑌾𑌃𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌿𑌣𑍍𑌯𑌶𑍍𑌚𑌸𑌰𑍍𑌵𑌂𑌤𑍇𑌨𑌾𑌵𑌲𑍋𑌕𑌿𑌤𑌮𑍍॥

க௮. ப்ராகாராந்தரரத்யாஶ்சவேதிகாஶ்சைத்யஸம்ஶ்ரியா:।
தீர்கிகா:புஷ்கரிண்யஶ்சஸர்வம்தேநாவலோகிதம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ப்ராகாராந்தரரத்யாஶ்ச | கோட்டைக்கு நடுவிலிருக்கிற வீதிகளும் | புஷ்கரிண்யஶ்ச | குளங்களும் (இவைமுதலான) |
| சைத்யஸம்ஶ்ரியா: | இராஜவீதியிலிருக்கிற | ஸர்வம் | ஸமஸ்தமும் |
| வேதிகா: | மேடைகளும் | தேந | அந்த (ஹனுமானால்) |
| தீர்கிகா: | தூரவுகளும் | அவலோகிதம் | பார்க்கப்பட்டது. |

౧౯. రాక్షస్యో వివిధాకారా విరూపా వికృతాస్తథా । దృష్టా హనుమతా తత్ర న తు సా జనకాత్మజా॥

க௯. 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑌾𑌵𑌿𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌕𑍃𑌤𑌾𑌸𑍍𑌤𑌥𑌾।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌹𑌨𑍁𑌮𑌤𑌾𑌤𑌤𑍍𑌰𑌨𑌤𑍁𑌸𑌾𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾॥

க௯. ராக்ஷஸ்யோவிவிதாகாராவிரூபாவிக்ருதாஸ்ததா।
த்ருஷ்டாஹநுமதாதத்ரநதுஸாஜநகாத்மஜா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஹநுமதா | ஹநுமாரால் | ராக்ஷஸ்ய: | ராக்ஷஸஸ்திரீகள் |
| விவிதாகாரா: | நானாவிதமான ஆகாரங்களையுடையவர்களும் | தத்ர | அவ்விடத்தில் |
| | | த்ருஷ்டா: | பார்க்கப்பட்டனர் |
| ததா | அப்படியே | ஜநகாத்மஜா | ஜனகபுத்திரியான |
| விரூபா: | குரூபிகளும் | ஸாது | அந்த (ஸீதையோவென்றால்) |
| விக்ருதா: | விகாரவேடம்பூண்டவர்களுமான | ந (த்ருஷ்டா) | பார்க்கப்படவில்லை. |

౨౦. రూపేణాప్రతిమా లోకే వరా విద్యాధరస్త్రియః । దృష్టా హనుమతా తత్ర న తు రాఘవనందినీ॥

உ௦. 𑌰𑍂𑌪𑍇𑌣𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌲𑍋𑌕𑍇𑌵𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌧𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌹𑌨𑍁𑌮𑌤𑌾𑌤𑌤𑍍𑌰𑌨𑌤𑍁𑌰𑌾𑌘𑌵𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍀॥

உ௦. ரூபேணாப்ரதிமாலோகேவராவித்யாதரஸ்த்ரிய:।
த்ருஷ்டாஹநுமதாதத்ரநதுராகவநந்திநீ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| லோகே | உலகத்தில் | தத்ர | அந்த-அந்தப்புரத்தில் |
| ரூபேண | ஸௌந்தரியத்தினால் | த்ருஷ்டா: | பார்க்கப்பட்டார்கள் |
| அப்ரதிமா: | ஸமானமில்லாத | ராகவநந்திநீது | ஸ்ரீராகவனுக்கு ஸந்தோஷத்தை விளைவிப்பவளான ஸீதையோ வென்றால் |
| வரா: | உத்தமர்களான | | |
| வித்யாதரஸ்த்ரிய: | தேவயோனிவிசேஷர்களான ஸ்திரீகள் | | |
| ஹநுமதா | ஹனுமாரால் | நத்ருஷ்டா | காணப்படவில்லை. |

౨౧. నాగకన్యా వరారోహాః పూర్ణచంద్రనిభాననాః । దృష్టా హనుమతా తత్ర న తు సీతా సుమధ్యమా॥

உக. 𑌨𑌾𑌗𑌕𑌨𑍍𑌯𑌾𑌵𑌰𑌾𑌰𑍋𑌹𑌾𑌃𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌨𑌿𑌭𑌾𑌨𑌨𑌾𑌃।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌹𑌨𑍁𑌮𑌤𑌾𑌤𑌤𑍍𑌰𑌨𑌤𑍁𑌸𑍀𑌤𑌾𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾॥

உக. நாககந்யாவராரோஹா:பூர்ணசந்த்ரநிபாநநா:।
த்ருஷ்டாஹநுமதாதத்ரநதுஸீதாஸுமத்யமா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பூர்ணசந்த்ரநிபாநநா: | பூர்ணசந்திரனுக்கு நிகரான முகமுடையவரும் | ஹநுமதா | ஹநுமாரால் |
| | | த்ருஷ்டா: | பார்க்கப்பட்டார்கள் |
| வராரோஹா: | உத்தமர்களான | ஸுமத்யமா | ஸூக்ஷ்மமான இடுப்பையுடைய |
| நாககந்யா: | நாககன்னிகைகள் | ஸீதாது | ஸீதையோவென்றால் |
| தத்ர | அவ்விடத்தில் | (நத்ருஷ்டா) | பார்க்கப்படவில்லை. |

౨౨. ప్రమథ్య రాక్షసేంద్రేణ నాగకన్యా బలాద్ధృతాః । దృష్టా హనుమతా తత్ర న సా జనకనందినీ॥

டுக

உஉ. 𑌪𑍍𑌰𑌮𑌥𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣𑌦𑍇𑌵𑌕𑌨𑍍𑌯𑌾𑌬𑌲𑌾𑌦𑍍𑌧𑍃𑌤𑌾𑌃।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌹𑌨𑍁𑌮𑌤𑌾𑌤𑌤𑍍𑌰𑌨𑌸𑌾𑌜𑌨𑌕𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍀॥

உஉ. ப்ரமத்யராக்ஷஸேந்த்ரேணதேவகந்யாபலாத்த்ருதா:।
த்ருஷ்டாஹநுமதாதத்ரநஸாஜநகநந்திநீ ॥

| பதம். | உரை. | பதம், | உரை. |
|---|---|---|---|
| ராக்ஷஸேந்த்ரேண | இராக்ஷஸப்பிரபுவான (இராவணனு | ஹநுமதா | ஹநுமாரால் |
| ப்ரமத்ய | (தேவர்களை) அடித்து [ல்) | த்ருஷ்டா: | பார்க்கப்பட்டார்கள் |
| பலாத் | பலவந்தமாக-பலத்தால் | ஜநகநந்திநீ | ஜனகருக்கு ஸந்தோஷத்தை யுண்டுப ண்ணுகிற |
| ஹ்ருதா: | கொண்டுவரப்பட்ட | | |
| தேவகந்யா: | தேவகன்னிகைகள் | ஸா து | அந்த (ஸீதையோவென்றால்) |
| தத்ர | அவ்விடத்தில் | நத்ருஷ்டா | பார்க்கப்படவில்லை. |

கடு-மு-உஉ-ல் தா-ம்—காரியஸாதனஞ் செய்யாமல் மஹாராஜஸன்னிதானத்தை யென்னமாயடைவேனென்கிற பயத்தாலும், மஹாபராக்கிரமசாலிகளான வனேக வானரர்களிருக்கத் தன்னைமாத்திர மழைத்துக் கணையாழியைக் கழற்றிக்கொடுத்து நம்பிக்கையுட னனுப்பிய அயோத்தியாமன்னனுக் கென்னபதிற் சொல்லுகிற தென்கிற வெட்கத்தாலும், பிராட்டியைக் காணமற் றிரும்பினல் மஹேந்திரபர்வதத்திலுள்ள வானரர் பிராணத்தியாகஞ் செய்வார்களென்கிற அனுதாபத்தாலும், இலங்கையைப் பேர்க்கிறேன், இராவணனைக் கட்டி யிழுக்கிறேனென்று தான் வீரவாதஞ் செய்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஜாம்பவத்பிரபிருதிகளான வீரர்கள் பரிகஸிப்பார்களென்கிற ரோஷத்தாலும், இத்தியாதி எண்ணங்களால் தூண்டப்பட்ட அந்த புத்திமான் முன்தேடின விடங்களிலெல்லாம் மறுபடியும் ஜானகியைத் தேடினர். அனேக மாளிகைகளின்மேலேறினர். அங்கிருந்து கீழிறங்கினர். அனேக பூபிலங்களுக்குள் நுழைந்தார். அங்கிருந்து மேற்கிளம்பினர். அனேக வீட்டுக்கதவுகளின் தாள்களை விலக்கினர். துவாரங்களைத் திறந்தார். வீடுகளுக்குள் நுழைகிறதும் வெளியே வருகிறதும், மாளிகைகளின்மேற் றாவுகிறதும் கீழே குதிக்கிறதும், பிலங்களுக்குட் பாய்கிறதும் மேலே கிளம்புகிறதும் அங்கங்கு கொஞ்சம் நிற்கிறதும் நாற்புறமும் சுற்றிப் பார்க்கிறதும் இப்படி க்ஷணகாலத்தில் ஸர்வாந்தரியாமிபோல் எங்குமிருந்து எல்லாவிடங்களிலுந் தேடிப்பார்த்தார். அந்த அதிவிஸ்தீர்ணமான இராவணனந்தப்புரத்தில் ஹநுமான் பார்க்காதவிடமில்லை, ஏறுதபடிகளில்லை, தாவாத ஸ்தம்பங்களில்லை, மிதிக்காத மாடிகளில்லை. சதுரங்குலவிஸ்தீர்ணமான விடமும் பாக்கியில்லாமற் சுற்றிப் பார்த்தார். அங்கங்கு அங்கஹீனைகளாயும், விகாரரூபிகளாயும், பயங்கர வேஷதாரிகளாயும், ஸ்தூலசரீரிகளாயும், கிருசதன்விகளாயு மிருக்கிற அனேக இராக்ஷதஸ்திரீகளைக் கண்டார். உலகத்திலுள்ள அழகை யெல்லாஞ் சேர்த்துத் திரட்டி ஸ்திரீரூபமாக அமைத்ததுபோ லதிஸுந்தரமாக விளங்கு மனேக வித்தியாதரஸ்திரீகளைக்கண்டார். பௌர்ணவமி ராத்திரியி லனேக சந்திரர்க ளுதித்தாற்போல் திவ்வியானந்தகரமாயிருக்கிற முகங்களோடு விளங்கு மநேக நாககன்னிகைகளைக் கண்டார். தேவராக்ஷஸயுத்தத்தில் தேவர்களையடித்து இராவணன் கொண்டுவந்த திவ்வியரூபஸம்பன்னைகளான வனேக தேவஸ்திரீகளைக்கண்டார். ஆனல் ஸர்வலோக சரண்ணியனை ஸ்ரீராகவனுக் கானந்தவிர்த்திசெய்கிற அந்த அரவிந்தாக்ஷியைக் காணவில்லை. ஸ்ரீராகவனுடைய நீலோத்பலங்களாகிற திருக்கண்களை மலரச்செய்கிற அந்த இந்துமுகியைக் காணவில்லை. நீலமேகச்சியாமளனை அந்த பக்தவத்ஸலன் திருமேனியைப் பிரகாசிப்பிக்கிற வித்யுன்மாலையைக் காணவில்லை. மஹாக்கியானியான ஜனகனுக்கு புத்திரியா யவதரித்து அவருடைய குலத்தை மஹாபாவனமாகச் செய்து தன்குணத்தாலு மழகாலும் பிதாவை யானந்திப்பித்த அந்த ஜானகியைக் காணவில்லை. தன் சீலத்தாலும் பாதிவிருத்தியத்தாலும் ஸத்சரித்திரத்தாலும் சந்திர ஸூரியகுலங்க ளிரண்டையும் பிரகாசிக்கச்செய்த அந்த ஸாதுவைக்காணவில்லை. தன்னுடைய ஸத்குருவான விசுவாமித்திரமஹரிஷியாலும் தன்பிதாவான தசரதசக்கிரவர்த்தியாலும் பாணிக்கிரகணஞ் செய்விக்கப்பட்டாளென்கிற கௌரவத்தாலும், பர்திரு சிச்ரூஷணர்த்தம் இராஜபோகங்களையொழித்து வனம்வந்தாளென்கிற விசுவாஸத்தாலும் ஸ்ரீரகுநந்தனனுக்கு அத்தியந்தம் பிரியையான ஸீதையைக் காணவில்லை.

౨౩. సోఽపశ్యంస్తాంమహాబాహుఃపశ్యంశ్చాన్యావరస్త్రియః। విషసాదముహుర్ధీమాన్ హనుమాన్మారుతాత్మజః॥

உ௩. 𑌸𑍋𑌽𑌪𑌶𑍍𑌯𑌂𑌸𑍍𑌤𑌾𑌂𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍁𑌃𑌪𑌶𑍍𑌯𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾𑌵𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃।
விஷ𑌸𑌾𑌦𑌮𑍁𑌹𑍁𑌰𑍍𑌧𑍀𑌮𑌾𑌨𑍍𑌹𑌨𑍁𑌮𑌾𑌨𑍍𑌮𑌾𑌰𑍁𑌤𑌾𑌤𑍍𑌮𑌜𑌃॥

உ௩. ஸோபஶ்யம்ஸ்தாம்மஹாபாஹு:பஶ்யம்ஶ்சாந்யாவரஸ்த்ரிய:।
விஷஸாதமுஹுர்தீமாந்ஹநுமாந்மாருதாத்மஜ:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மஹாபாஹு: | பெருத்ததோள்களையுடையவராயும் | முஹு: | அடிக்கடி |
| மாருதாத்மஜ: | வாயுபுத்திரராயும் | பஶ்யந் (ஸந்) | பார்த்துக்கொண்டு |
| தீமாந் | புத்திமானுயுமிருக்கிற | தாம் | அந்த (ஸீதையை) |
| ஸ:-ஹநுமாந் | அந்த-ஹனுமானுனவர் | அபஶ்யந் | பாராதவராக |
| அந்யா: | இதரர்களான | விஷஸாத | துக்கித்தார். |
| வரஸ்த்ரிய: | உத்தமஸ்திரீகளை | | |

౨౪. ఉద్యోగం వానరేంద్రాణాం ప్లవనం సాగరస్య చ । వ్యర్థం వీక్ష్యానిలసుతశ్చింతాం పునరుపాగమత్ ॥

௨௪. [illegible]
[illegible]॥

௨௪. உத்யோகம்வாநரேந்த்ராணாம்ப்லவநம்ஸாகரஸ்யச।
வ்யர்தம்வீக்ஷ்யாநிலஸுதஸ்சிந்தாம்புநருபாகமத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வாநரேந்த்ராணாம் | (அங்கதாதி) வானர சிரேஷ்டர்களுடைய | வீக்ஷ்ய | பார்த்து |
| உத்யோகம் | ஸீதையைத்தேடுகிற பிரயத்தினமும் | அநிலஸுதஃ | வாயுகுமாரன் |
| ஸாகரஸ்ய | ஸமுத்திரத்தினுடைய | புநஃ | மறுபடியும் |
| ப்லவநம்ச | தாண்டினதும் | சிந்தாம் | சிந்தையை |
| வ்யர்த்தம் | பிரயோஜனமில்லை (என்று) | உபாகமத் | அடைந்தார். |

౨౫. అవతీర్య విమానాచ్చ హనుమాన్మారుతాత్మజః । చింతాముపజగామాథ శోకోపహతచేతనః ॥

௨௫. [illegible]
[illegible]॥

௨௫. அவதீர்யவிமாநாச்சஹநுமாந்மாருதாத்மஜஃ।
சிந்தாமுபஜகாமாதஶோகோபஹதசேதநஃ॥

[illegible]

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மாருதாத்மஜஃ | வாயுகுமாரரான | விமாநாத் | (புஷ்பக) விமானத்திலிருந்து |
| ஹநுமாந் | ஹனுமானவர் | அவதீர்ய | இறங்கி |
| ஶோகோபஹதசேதநஃ— | | அத | பின்பு |
| ஶோக | துக்கத்தால் | சிந்தாம் | எண்ணத்தை |
| அபஹத | அடிக்கப்பட்ட | உபஜகாம | அடைந்தார். |
| சேதநஃ | மனதையுடையவராக | | |

௨௩-மு-௨௫-ல் தா-ம்—இந்தவிதம் மறுபடியும் அந்தப்புரமுழுதும்தேடினர். நல்லவடிவுள்ள எல்லா ஸ்திரீகளையும் உற்றுப்பார்த்தார். பிராட்டிதரிசனமாகவில்லை. மனக்கவலை தீரவில்லை. ஹநுமான் பின்னும் தைரியமிழந்து சிந்தாக்கிராந்தரா யாலோசிக்கிறார். ஐயோ! என்னகஷ்டமான வலையிற்சிக்கிக்கொண்டேன். வானரவீரர்களெல்லோரும் ஸ்ரீராமலக்ஷ்மணஸுக்கிரீவ ஸன்னிதானத்தில் பிராட்டியை யெப்படியாவது தரிசித்துவருகிறோமென்று தோள்தட்டிவந்தோமே. எங்களாண்மைக் கென்னபிரயோஜனமாயிற்று. மகேந்திர பர்வதத்திலிருந்து நூறுயோசனை யகலமுள்ள கடலை யொருதாண்டாகத்தாண்டினேனே - அந்த சிரமத்திற் கென்னபலன்கிடைத்தது. இங்கரமுழுதுஞ் சுற்றினேன், அந்தப்புரமுழுதும் பரிசோதித்தேன், இராவண பத்தினிகளனைவரையும் பார்த்தேன் - என்ன பிரயோஜனம்! ஜனகாத்மஜையைக் கண்டேனா? அந்த லோக மாதாவைஸேவித்தேனா? இதற்கென்செய்வேன். ஸுக்கிரீவன் வானராளைவிடுத்ததும் வியர்த்தம். யான் ஸாகரந்தாண்டினதும் வியர்த்தம். தேகத்தைச் சுருக்கிக்கொண்டு யமகிங்கரர்போன்ற இராக்ஷதர்கண்களுக்குப் புலப்படாம லிரவுமுழுதும் நான் சுற்றினதும் வியர்த்தம். இவ்வித எண்ணங்களால் முகம்வாடி மனம்நொந்து புஷ்பகத்தினின்றிறங்கி துக்கஸாகரத்தில் மூழ்கினவராய் அந்த தீரபுருஷன் மறுபடியும் சிந்தித்தார்.

ஸ்ரீ ஸந்மநோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்யாந ஸஹிதமான

ஸுந்தரகாண்டத்தில்

பன்னிரண்டாவது ஸர்க்கம் - முற்றிற்று.

## பதின்மூன்றாவது ஸர்க்கம்.

౧. విమానాత్తు సుసంక్రమ్య ప్రాకారం హరియూథపః । హనుమాన్వేగవానాసీద్యథా విద్యుద్ఘనాంతరే ॥

க. [illegible]
[illegible]॥

க. விமாநாத்துஸுஸங்க்ரம்யப்ராகாரம்ஹரியூதபஃ।
ஹநுமாந்வேகவாநாஸீத்யதாவித்யுத்கநாந்தரே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வேகவாந் | வேகமுடையவரும் | ஸமுஸங்க்ரம்ய | அடைந்து |
| ஹரியூதப: | வானரத்தலைவருமான | கநாந்தரே | மேகத்திநடுவில் |
| ஹநுமாந் | ஹநுமானவர் | வித்யுத்யதா | மின்னற்போல் |
| விமாநாத் | புஷ்பகவிமானத்திலிருந்து | ஆஸீத் | ஆனார். |
| ப்ராகாரம் | கோட்டைமதிலை | | |

தா-ம்.—இந்தவிதம் ஜனகாத்மஜையைக் காணாததைப்பற்றி மிகவுஞ் சிந்தித்துக் கிலேசப்பட்டுக்கொண்டே புஷ்பகவிமானத்தை விட்டிறங்கி கோட்டை மதிற்சுவற்றின்மேலேறிநின்றார். மிகவுங் கறுத்துப் பெருத்து பர்வதம்போல விளங்குகிற பிராகாரச்சுவற்றின்மீது ஸ்வர்ணரேகையையொத்த தேஜஸ்ஸோடுகூடின ஹநுமான் நிற்கையில் மேகராசிமத்தியிற் பளபளக்கிற மின்னற்கொடிபோல் விளங்கினார்.

௨. సంపరిక్రమ్యహనుమాన్ రావణస్యనివేశనాత్ । అదృష్ట్వాజానకీంసీతామబ్రవీద్వచనంకపిః॥

௨. ஸம்பரிக்ரம்யஹநுமாந்ராவணஸ்யநிவேஶநாத்।
அத்ருஷ்ட்வாஜாநகீம்ஸீதாமப்ரவீத்வசநம்கபி:॥

௨. ஸம்பரிக்ரம்யஹநுமாந்ராவணஸ்யநிவேஶநாத்।
அத்ருஷ்ட்வாஜாநகீம்ஸீதாமப்ரவீத்வசநம்கபி:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஹநுமாந் | ஹநுமானென்கிற | ஜாநகீம் | ஜனகபுத்திரியான |
| கபி: | வானரர் | ஸீதாம் | பிராட்டியை |
| ராவணஸ்ய | இராவணனுடைய | அத்ருஷ்ட்வா | பாராமல் |
| நிவேஶநாத் | மாளிகையிலிருந்து | வசநம் | வார்த்தையை |
| (ப்ராகாரம்) | (கோட்டையை) | அப்ரவீத் | (தன்னுடன்)சொல்லிக்கொண்டார். |
| ஸம்பரிக்ரம்ய | நன்றாய் சுற்றி | | |

3. భూయిష్ఠంలోళితాలంకారామస్యచరతాప్రియమ్ । నహిపశ்యామివైదేహీంసీతాంసర్వాంగశోభనామ్॥

௩. பூயிஷ்டம்லோளிதாலங்காராமஸ்யசரதாப்ரியம்।
நஹிபஶ்யாமிவைதேஹீம்ஸீதாம்ஸர்வாங்கஶோபநாம்॥

௩. பூயிஷ்டம்லோளிதாலங்காராமஸ்யசரதாப்ரியம்।
நஹிபஶ்யாமிவைதேஹீம்ஸீதாம்ஸர்வாங்கஶோபநாம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராமஸ்ய | ஸ்ரீராகவனுக்கு | ஸர்வாங்கஶோபநாம்— | |
| ப்ரியம் | இஷ்டத்தை | ஸர்வாங்க | ஸமஸ்த அவயவங்களால் |
| சரதா | செய்கிற (என்றால்) | ஶோபநாம் | மங்களகரையும் |
| லங்கா | இலங்கையானது | வைதேஹீம் | விதேஹத்தரசன் மகளுமான |
| பூயிஷ்டம் | அதிகமாக | ஸீதாம் | ஸீதையை |
| லோளிதா | தேடப்பட்டது | நஹிபஶ்யாமி | பார்க்கவில்லையன்றோ. |

౪. పల్వలానితటాకానిసరాంసిసరితస్తథా । నద్యోనూపవనాంతాశ్చదుర్గాశ్చధరణీధరాః॥
లోళితావసుధాసర్వానతుపశ్యామిజానకీమ్।

௪. பல்வலாநிதடாகாநிஸராம்ஸிஸரிதஸ்ததா।
நத்யோநூபவநாந்தாஶ்சதுர்காஶ்சதரணீதரா:॥
லோளிதாவஸுதாஸர்வாநதுபஶ்யாமிஜாநகீம்।

௪. பல்வலாநிதடாகாநிஸராம்ஸிஸரிதஸ்ததா।
நத்யோநூபவநாந்தாஶ்சதுர்காஶ்சதரணீதரா:॥
லோளிதாவஸுதாஸர்வாநதுபஶ்யாமிஜாநகீம்।

| பதம். | உரை. | பதம். | உரை, |
|---|---|---|---|
| தடாகாநி | ஏரிகளும் | துர்காஶ்ச | புதருகளும் |
| பல்வலாநி | குட்டைகளும் | தரணீதராஶ்ச | மலைகளும் |
| ஸராம்ஸி | ஓடைகளும் | லோளிதா: | தேடப்பட்டன |
| ததா | அவ்விதமே | ஸர்வா | ஸமஸ்தமான |
| ஸரித: | சின்னநதிகளும் | வஸுதா | பூமியும் (தேடப்பட்டது) |
| நத்ய: | பெருநதிகளும் | ஜாநகீம்து | ஜானகியையோவென்றால் |
| அநூபவநாந்தா: | ஜலப்பிராயமானவநப்பிரதேசங்களும் | நபஶ்யாமி | பார்க்கயில்லை. |

౫. ఇహసంపాతినాసీతారావణస్యనివేశనే॥ఆఖ్యాతాగృధ్రరాజేనసచపశ్యామితామహమ్।

௫. [illegible]

௫. யிஹஸம்பாதிநாஸீதாராவணஸ்யநிவேஶநே||
ஆக்யாதாக்ருத்ரராஜேநநசபஶ்யாமிதாமஹம்|

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| க்ருத்ரராஜேந | கழுகுக்கெஜமானனை | அஹம் | நான் |
| ஸம்பாதிநா | ஸம்பாதியால் | இஹ | இந்த (இலங்கையில்) |
| (யா)-ஸீதா | (எந்த) ஸீதையானவள் | ராவணஸ்ய | இராவணனுடைய |
| ஆக்யாதா | சொல்லப்பட்டாளோ | நிவேஶநே | வீட்டில் |
| தாம் | அந்த-(ஸீதையை) | நசபஶ்யாமி | பார்க்கவேயில்லை |

தா-ம்.—அந்த இலங்காதிபதியினுடைய அந்தப்புர முழுதுந் தேடியும் பிராட்டியைக் காணமையால் ஹநுமான் பின்வருமாறுயோசிக்கிறார். பத்தினியை யிழந்து பரிதபிக்கிற இரகுநாதனுக்கு எவ்விதத்திலாவது நன்மை விளைவிக்கவேண்டுமென்கிற மனப்பூர்வமான எண்ணத்துடன் இந்நகரமுழுதுந் தேடிப்பார்த்தேன். ஏரிகளிலும், குளங்களிலும், நீரோடைகளிலும், கசங்களிலும், பெருநதிகளிலும், சிறுநதிகளிலும், வனங்களிலும், தோட்டங்களிலும், மலைகளிலும், குகைகளிலும், ஸமஸ்தமான பூப்பிரதேசங்களிலுந் தேடினேன். விந்தியபர்வதத்தாழ்வரையில் வானரர்கள் பிராயோபவேசஞ்செய்ய வெத்தனிக்கையில் கழுகுராஜாவான ஸம்பாதி "இராமா இலக்ஷ்மணா வென்று கதறிக்கொண்டிருக்கிற ஓர் தருணியை இராவணன் கொண்டுபோனான் - அவள்தான் ஸீதையாயிருக்கவேண்டும்; அவளை இலங்கையிற்கொண்டுபோய் பத்திரப்படுத்தியிருக்கிறான். என்னுடைய திருஷ்டிபலத்தா லிதோபார்க்கிறேன் ஸீதையை" என்றுறுதியாகச் சொன்னாரே - நான் எவ்வளவுநேரந்தேடியும் திவ்வியமங்களபரிபூர்ணையான வென் னன்னையைக் காணவில்லையே. இதற்குநானென்னசெய்வேனென்று யோசித்தார்.

౬. కిన్ను సీతాథ వైదేహీ మైథిలీ జనకాత్మజా॥ ఉపతిష్ఠేత వివశా రావణం దుష్టచారిణమ్।

௬. [illegible]

௬. கிந்நுஸீதாதவைதேஹீமைதிலீஜநகாத்மஜா||
உபதிஷ்டேதவிவஶாராவணம்துஷ்டசாரிணம்|

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வைதேஹீ | விதேஹதேசத்தின்ஸம்பந்தியாயும் | துஷ்டசாரிணம் | கெட்டநடத்தையுடைய |
| ஜநகாத்மஜா | ஜநகன்மகளாயும் | ராவணம் | இராவணனை |
| மைதிலீ | மிதிலாதேசத்தரசன்வளர்த்தவளுமான | விவஶா | பரதந்திரயா (யிருந்தும்) |
| ஸீதா | ஸீதையானவள் | உபதிஷ்டேதகிந்நு | அடைவளாயென்ன. |

தா-ம்.—பிராட்டியானவள் இராவணனுடைய ஸ்வாதீனத்தை யடைந்தவளாயினும் அந்த துராத்மாவினுடைய அதர்மவெண்ணங்களுக்கு ஸம்மதித்திருப்பளோ? அவள் கேவலம் மனுஷியயோனியில்ஜனித்து இந்திரியவிர்த்திகளுக்கு வசப்பட்டு ஸௌந்தரிய ஐசுவர்யாதிகளுக் கீடுபட்டு சீலத்தையிழக்கிற ஸாமான்னிய அபலைகளைப்போன்றவளோ? அயோநிஜையாய் மஹாபரிசுத்தமான யாகபூமியிலவதரித்த ஸீதையென்று காரணப்பெயர்பூண்ட அணங்கன்றோ? அனேக யாகயக்கிய யோகங்களைச்செய்த சிறந்த புண்ணியசீலர்களான விதேகதேசத்தரசர் குலத்தி லாவிர்ப்பவித்த வைதேஹியன்றோ? மஹா வைராக்கியரும் கியானவானுமான ஜனகனென்னு மிராஜரிஷிமடியில் வளர்ந்த ஜானகியன்றோ? சதானந்தப் பிரபிருதிகளான மஹரிஷிகளுடைய வாஸத்தா லதிபுண்ணியக்ஷேத்திரமாய் விளங்குகிற மிதிலாநகரத்தில் வளர்ந்த மைதிலியன்றோ? இங்ஙவிதம் ஜனனத்திலும் குலத்திலும் ஸஹவாஸத்திலும் பால்லியவாஸக்ஷேத்திரத்திலும் ஸர்வவிதத்திலும் லோகோத்தரமான சரித்திரத்தோடுகூடிய ஸ்ரீராகவனுடைய தர்மபத்தினியானவள் இராவணனுடைய வினயவலையிற் சிக்குவளோ? அல்லது அவனுடைய அதட்டிற்கும் மிரட்டிற்கும் பயந்து சீலத்தைக்கெடுப்பளோ? எவ்விதத்திலு மவன் மனோரதத்திற் கிணங்கியிராள்.

౭. క్షిప్రముత్పతతో మన్యే సీతామాదాయ రక్షసః॥ బిభ్యతో రామబాణానామన్తరా పతితా భవేత్।

௭. [illegible]

௭. க்ஷிப்ரமுத்பததோமந்யேஸீதாமாதாயரக்ஷஸ:||
பிப்யதோராமபாணாநாமந்தராபதிதாபவேத்|

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸீதாம் | ஸீதையை | உத்பதத: | உயரக்கிளம்பி (வந்தவனுதலால்) |
| ஆதாய | எடுத்துக்கொண்டு | ராமபாணாநாம் | ஸ்ரீராகவபாணங்களுக்கு |
| க்ஷிப்ரம் | சீக்கிரமாக | பிப்யத: | பயப்பட்டிருக்கிற |

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ரக்ஷஸஃ | இராக்ஷஸனுன (இராவணனிடத்தி லிருந்து) | (ஸா) | (அந்த ஸீதையானவள்) |
| | | பதிதாபவேத் | விழுந்தவளாக ஆனுள் (என்று) |
| அந்தரா | மத்தியில் | மந்யே | எண்ணுகிறேன் |

தா-ம்.—பிராட்டியை இராவணன் கொண்டுபோனுனென்று ஜடாயு ஸம்பாதி முதலானவர்களுடைய வாக்கினுலறிந்தும் ஜானகியானவ ளிலங்கையையடையாமலிருந்தாலுமிருக்கலாம். அந்த தசகண்டன் காம பரவசத்தாற் கபடஞ்செய்து தேவியைத்தூக்கிக்கொண்டாகாயமார்க்கமா யோடுகையில் முன் மாரீசன் ஸ்துதித்த இராகவவிக்கிரமத்தை நினைத்து, அந்த வீரன் ஆசிரமம் சூன்னியமாயிருப்பதைக்கண்டு "ஓகோ! நம் பத்தினியை யாரோ அபகரித்துப்போனுன்" என்று அங்கிருந்தே பாணப்பிரயோகஞ்செய்தா லவையென் கண்டங்களை யறுக்குமே,மார்பைப்பிளக்குமேயென்று தேககம்பமடைகையில் அவன் கைகளினின்று நழுவி பிராட்டிமார்க்கத்தில் பூமியிலொருவேளை விழுந்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

౮. అథవాహ్రియమాణాయాఃపథిసిద్ధనిషేవితే॥మన్యేపతితమార్యాయాహృదయంప్రేక్ష్యసాగరమ్।

அ. [illegible]॥
[illegible]।

அதவாஹ்ரியமாணுயாஃபதிஸித்தநிஷேவிதே॥
மந்யேபதிதமார்யாயாஹ்ருதயம்ப்ரேக்ஷ்யஸாகரம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அதவா | ல்லாவிடில் | ஹ்ருதயம் * | சரீரமானது |
| ஸித்தநிஷேவிதே | ஸித்தர்கள்ஸஞ்சரிக்கப்பட்ட | ஸாகரம் | ஸமுத்திரத்தை |
| பதி | (ஆகாச) மார்க்கத்தில் | ப்ரேக்ஷ்ய | பார்த்து (நடுங்கி) |
| ஹ்ரியமாணுயாஃ | அபகரித்துக்கொண்டுபோகப்பட்ட | பதிதம் | விழப்பட்டதோ (என்று) |
| ஆர்யாயாஃ | பூஜ்யையான (ஸீதையினுடைய) | மந்யே | எண்ணுகிறேன். |

தா-ம்.—உத்தமராஜகுலப்பிரஸூதையான ஜானகி அந்தப்புரவாஸஞ்செய்தவளாதலால் பர்வதங்களையும் வனங்களையும் ஸமுத்திரங்களையும் பார்த்திராள். அப்பேர்ப்பட்ட இராஜசெல்வத்தை அரக்கன் வித்தியாதர ஸஞ்சாரயோக்கியமான வானவீதியில் வகித்துச்செல்லுகையில் அன்னையானவள் அபாரமான ஸமுத்திரத்தைக் கீழேகண்டு நடுநடுங்கி விழுந்து மூழ்கிப்போயிருப்பாளென்றெண்ணுகிறேன்.

౯. రావణస్యోరువేగేనభుజాభ్యాంపీడితేనచ॥తయామన్యేవిశాలాక్ష్యాత్యక్తంజీవితమార్యయా।

கூ. [illegible]॥
[illegible]।

கூ. ராவணஸ்யோருவேகேநபுஜாப்யாம்பீடிதேநச॥
தயாமந்யேவிஶாலாக்ஷ்யாத்யக்தம்ஜீவிதமார்யயா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராவணஸ்ய | இராவணனுடைய | விஶாலாக்ஷ்யா | நீண்டகண்களையுடையவளுமான |
| உருவேகேந | அதிகவேகத்தாலும் | தயா | அந்த (ஸீதையால்) |
| புஜாப்யாம் | தோள்களால் | ஜீவிதம் | பிராணனுனது |
| பீடிதேநச | இறுகக்கட்டுகிறதாலும் | த்யக்தம் | விடப்பட்டது (என்று) |
| ஆர்யயா | பூஜ்யையானவளும் | மந்யே | எண்ணுகிறேன். |

தா-ம்.—இராவணனே மஹாபுஜபலமுள்ளவன். ஸ்வபாவத்திலிராக்ஷதன். அவன் பூவினுமெல்லிய ஸௌகுமாரமான சரீரத்தையுடைய பிராட்டியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே குகையில் அவள் மிகவும் பீடிக்கப்பட்டிருப்பாள். மேலும் பாதிவிருத்திய நெறியில் நிற்கிற அந்த பூஜ்யை ஸ்ரீராகவ கமலஹஸ்தங்கள் ஸ்பரிசிக்கச்சகிப்பளேயல்லது இராக்ஷஸாதமனுடைய கரஸ்பரிசத்தைச்சகிப்பளோ. ஆகையால் ஸௌகுமாரியமறியாமல் முரட்டுத்தனமாகப்பிடிக்கிற அரக்கன் பிடியைத் தாங்கமுடியாமலும், சீலத்தைக் குலைக்கிற பரபுருஷஸ்பரிசத்தை ஸகியாமலும் பிராட்டியானவள் பிராணத்தியாகஞ் செய்திருப்பாளென் றெண்ணுகிறேன்.

౧౦. ఉపర్యుపరివానూనంసాగరంక్రమతస్తదా॥విచేష్టమానాపతితాసముద్రేజనకాత్మజా।

க0. [illegible]॥
[illegible]।

க0. உபர்யுபரிவாநூநம்ஸாகரம்க்ரமதஸ்ததா॥
விசேஷ்டமாநாபதிதாஸமுத்ரேஜநகாத்மஜா।

* ஹ்ருதயமென்றுல் - மனத்திற்குப்பெயர். இவ்விடத்தில் சரீரமென்று சொல்லக்கூடுமோவெனில், பயஸ்தானமான மனத்திற்குச் சரீரம் மூலமாகையால் அதற்கு உபலக்ஷணமென்றறிக.

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸாகரமுபர்யுபரி | ஸமுத்திரத்திற்கு-மேல் மேலே | விவேஷ்டமாநா | தேஹத்தைச் சுருக்கிக்கொண்டவளா |
| க்ரமதஃ | கிரமமாகப்(போகிற இராவணனிடத் | ஸமுத்ரே | ஸமுத்திரத்தில் [க |
| ததா | அப்பொழுது [திலிருந்து) | பதிதா | விழுந்துவிட்டாள் |
| ஜநகாத்மஜா | ஸீதையானவள் | நூநம் | நிச்சயம். |

தா-ம்.—ஸமுத்திரம் தாண்டிக்கொண்டிருக்கையில் பிராட்டியானவ ளந்த தூர்த்தனுடைய ஸ்பரிசம் ஸகிக்கமுடியாமல் அவன் கொஞ்சம் அஜாக்கிரதையாயிருக்கையில் தேகத்தைச் சுருக்கிக்கொண்டு கடலில் விழுந்து மரித்திருப்பாளென்று நிச்சயமாக வெண்ணுகிறேன்.

౧౧. అహెూక్షుద్రేణవానేనరక్షంతీశీలమాత్మనః॥అబంధుర్భక్షితాసీతారావణేనతపస్వినీ।

கக. சுஹொஹாக்ஷுத்ரேணவாநேநரக்ஷந்தீஶீலமாத்மந:॥
சுபந்துர்பக்ஷிதாஸீதாராவணேநதபஸ்விநீ।

கக. அஹோக்ஷுத்ரேணவாநேநரக்ஷந்தீஶீலமாத்மநஃ॥
அபந்துர்பக்ஷிதாஸீதாராவணேநதபஸ்விநீ।

| பதம். | உரை. | பதம். | உரை, |
|---|---|---|---|
| தபஸ்விநீ | தபோபலமுடைய | க்ஷுத்ரேண | நீசனுன |
| ஸீதா | பிராட்டியானவள் | அநேந-ராவணேந | இந்த-இராவணனுல் |
| ஆத்மநஃ-ஶீலம் | தனக்குரிய-பதிவிருதாஸ்வபாவத்தை | பக்ஷிதாவா | பக்ஷிக்கப்பட்டாளோ |
| ரக்ஷந்தீ | காப்பாற்றுகிறபடியாலும் | அஹொ | அந்தோ. |
| அபந்துஃ | பந்துவில்லாதபடியாலும் | | |

தா-ம்.—அந்த ஜனகபுத்திரியானவள் பதியே தெய்வம், பதியே ஸ்வர்க்கம், பதியே பிராணன், என்று நினைக்கிற குலஸ்திரீதவத்தில் நிலைநிற்பவள். ஸ்ரீராகவனைத்தவிர வேறொருபுருஷனை நினைக்காமல் கண்ணெடுத்துப்பாராமல் தன் சீலத்தை யிரக்ஷிக்கிற உத்தமி. இப்படி திடசித்தமுள்ள அந்த பதிவிரதை அரக்கனுடைய காமத்திற்கு முகங்கொடாமல் தடுத்துநிற்கையில் அந்த காதுகன் வாழைக்குருத்துபோ லதிமிருதுளமான அவள் சரீரத்தைப் பக்ஷித்துவிட்டானே! அவள் புலிகையிலகப்பட்ட மான்போற் கதறுகையி லவளை யிரக்ஷிப்பதற்கு பந்துவார்! இராக்ஷஸமண்டலமத்தியில் ஒரு இராஜஸ்திரீ தனியாய் நின்று தன்சீலத்தை யிரக்ஷிக்கையில் அவளுக்கென்ன ஆபத்துதான் நேர்ந்திராது? உயிரோடு பக்ஷிக்கப்பட்டாளோ, என்ன கஷ்டமோ! அஹோ ஜனகநந்தினீ! ஹா ராமப்பிரியே! என்று வியஸனமடைந்தார்.

౧౨. అథవారాక్షసేంద్రస్యపత్నీభిరసితేక్షణా॥అదుష్టాదుష్టభావాభిర్భక్షితాసాభవిష్యతి॥

கஉ. அதவாராக்ஷஸேந்த்ரஸ்யபத்நீபிரஸிதேக்ஷணா॥
அதுஷ்டாதுஷ்டபாவாபிர்பக்ஷிதாஸாபவிஷ்யதி।

கஉ. அதவாராக்ஷஸேந்த்ரஸ்யபத்நீபிரஸிதேக்ஷணு॥
அதுஷ்டாதுஷ்டபாவாபிர்பக்ஷிதாஸாபவிஷ்யதி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அதவா | இல்லாவிடில் | அஸிதேக்ஷணு | கறுத்தகண்களையுடையவளும் |
| துஷ்டபாவாபிஃ | ஸபத்தினியென்கிற கெட்ட அபிப்பிராயத்தையுடைய(ராதலால்) | அதுஷ்டா | ஸாதுவாயிருப்பவளுமான |
| | | ஸா | அந்த (ஸீதையானவள்) |
| ராக்ஷஸேந்தரஸ்ய | இராவணனுடைய | பக்ஷிதா | புஜிக்கப்பட்டவளாக |
| பத்நீபிஃ | பாரியைகளால் | பவிஷ்யதி | ஆயிருப்பள். |

౧౩. సంపూర్ణచంద్రప్రతిమంపద్మపత్రనిభేక్షణమ్॥రామస్యధ్యాయతీవక్త్రంపంచత్వంకృపణాగతా॥

கங. ஸம்பூர்ணசந்த்ரப்ரதிமம்பத்மபத்ரநிபேக்ஷணம்॥
ராமஸ்யத்யாயதீவக்த்ரம்பஞ்சத்வம்க்ருபணாகதா।

கங. ஸம்பூர்ணசந்த்ரப்ரதிமம்பத்மபத்ரநிபேக்ஷணம॥
ராமஸ்யத்யாயதிவக்த்ரம்பஞ்சத்வம்க்ருபணுகதா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸம்பூர்ணசந்த்ரப்ரதிமம்= | | ஈக்ஷணம் | நேத்திரங்களையுடையதாயு மிருக்கிற |
| ஸம்பூர்ண | பூர்ணமான | ராமஸ்ய | ஸ்ரீராகவனுடைய |
| சந்த்ர | மதிக்கு | வக்த்ரம் | முகத்தை |
| ப்ரதிமம் | நிகராயும் | த்யாயதீ | தியானித்துக்கொண்டு |
| பத்மபத்ரநிபேக்ஷணம்= | | க்ருபணு | தீனையாக |
| பத்மபத்ர | தாமரைதளத்திற்கு | பஞ்சத்வம் | மரணத்தை |
| நிப | ஸமானமான | கதா | அடைந்தாள். |

౧౪. హా రామలక్ష్మణేత్యేవంహాయోధ్యేచేతిమైథిలీ॥విలప్యబహువైదేహీన్యస్తదేహాభవిష్యతి।

**கச.** ഹാ രാമ ലക്ഷ്മണേത്യേവം ഹായോധ്യേ ചേതി മൈഥിലീ॥
വിലപ്യ ബഹു വൈദേഹീ ന്യസ്തദേഹാ ഭവിഷ്യതി।

கச. ஹாராமலக்ஷ்மணேத்யேவம்ஹாயோத்யேசேதிமைதிலீ॥
விலப்யபஹுவைதேஹீந்யஸ்ததேஹாபவிஷ்யதி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஹாராம | ஓராகவா (என்றும்) | மைதிலீ | ஸீதையானவள் |
| லக்ஷ்மணேதி | ஓலக்ஷ்மணவென்றும் | இத்யேவம் | இந்தப்பிரகாரமாக |
| ஹாயோத்யேச | ஓ அயோத்தியே யென்றும் | விலப்ய | புலம்பி |
| பஹு | அதிகமாக | ந்யஸ்ததேஹா | விடப்பட்டதேஹமுடையவளாக |
| வைதேஹீ | விதேஹத்தரசன் புத்திரியான | பவிஷ்யதி | ஆயிருப்பள். |

౧౫ అథవానిహతామన్యేరావణస్యనివేశనే॥నూనంలాలప్యతేసీతాపంజరస్థేవశారికా।

**கரு.** അഥവാ നിഹിതാ മന്യേ രാവണസ്യ നിവേശനേ॥
നൂനം ലാലപ്യതേ സീതാ പഞ്ജരസ്ഥേവ ശാരികാ।

கரு. அதவாநிஹிதாமந்யேராவணஸ்யநிவேஶநே॥
நூநம்லாலப்யதேஸீதாபஞ்ஜரஸ்தேவஶாரிகா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அதவா | இல்லாவிட்டால் | நிஹிதா | (பூமியில்யேகாந்தமாகக்கட்டியிருக்கிற வீட்டில்) வைக்கப்பட்டவளாக |
| ராவணஸ்ய | தசமுகனுடைய | | |
| நிவேஶநே | வீட்டில் | லாலப்யதே | கஷ்டப்படுகிறாள் (என்று) |
| ஸீதா | ஸீதையானவள் | மந்யே | எண்ணுகிறேன் |
| பஞ்சரஸ்தா | கூட்டில்வைக்கப்பட்டிருக்கிற | நூநம் | நிச்சயம். |
| ஶாரிகேவ | கிளிபோல் | | |

౧౬. జనకస్యసుతాసీతారామపత్నీసుమధ్యమా॥కథముత్పలపత్రాక్షీరావణస్యవశంవ్రజేత్॥

**கசு.** ജനകസ്യ സുതാ സീതാ രാമപത്നീ സുമധ്യമാ॥
കഥമുത്പലപത്രാക്ഷീ രാവണസ്യ വശം വ്രജേത്।

கசு. ஜநகஸ்யஸுதாஸீதாராமபத்நீஸுமத்யமா॥
கதமுத்பலபத்ராக்ஷீராவணஸ்யவஶம்வ்ரஜேத்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஜநகஸ்ய | ஜனகருடைய | ஸீதா | ஸீதையானவள் |
| ஸுதா | மகளாயும் | ராவணஸ்ய | இராவணனுடைய |
| ராமபத்நீ | ஸ்ரீராகவபத்தினியாயும் | வஶம் | ஸ்வாதீனத்தை |
| உத்பலபத்ராக்ஷீ | கருநெய்தல்போற் கண்களையுடையவளாயும் | கதம் | எப்படி |
| ஸுமத்யமா | ஸூக்ஷ்மமான இடுப்பையுடையவளாயுமிருக்கிற | வ்ரஜேத் | அடைந்திருப்பள். |

(கச-மு-கசு-ல்) தா-ம்—இராவணன் புஷ்பகவிடில் அதிக்ரூரைகளான அவன் பத்தினிகள் சாந்தஸ்வரூபியான அக்கருநெய்தற் கண்ணாளி னழகையுங் காந்தியையுங்கண்டு ஸகியாமல் "ஓகோ! இவளிங்கிருந்தால் நம் மணவாளனுடைய மனத்தைக் கொள்ளைகொள்வாள். நம்மீதுள்ள மோகத்தைக் கெடுத்துவிடுவாள்" என்று பொறாமைகொண்டு ஸககளத்திரபாவத்தால் பக்ஷித்திருப்பார்கள். அல்லது க்ஷணகாலமும் அந்த இராஜேந்திரனை இராகவனைவிட்டுப் பிரியச் சகியாத ஜானகி செங்கமலத்துவயம்போ லதியழகாயும், ஆனந்தகரமாயுமுள்ள திருக்கண்களோடுகூடிய ஸ்வாமியின் பூர்ணேந்து வதனத்தைத் தியானித்துக்கொண்டே தீனையாய் மரித்தாளோ. அல்லது ஸ்ரீராமலக்ஷ்மணனையும், அயோத்தியிலுள்ள பந்துக்களையும், பிரஜைகளையும் நினைத்துக் கதறி தேகத்தையொழித்தாளோ. அல்லது ஸ்வேச்சையாகத்திரிந்து உல்லாசமாக விளையாடும் பசுங்கிளியைக் கூட்டிலடைத்து நிர்ப்பந்திப்பதுபோல் அம்மெல்லிடையாள் தன்னெண்ணத்திற் கிசையாமலிருப்பதுகண்டு அவளை வசீகரிக்கு நிமித்தம் பூமிக்குக்கீழ ஏகாந்தமாகக் கட்டப்பட்டிருக்கிற காராக்கிரகத்தில் தனியாகவைத்து நிர்ப்பந்திக்கிறானோ. இல்லாவிடில் ஸீதை யெவ்விதம் போயிருப்பாள்? இராவணனையோ அவளடைந்திராள். ஏனெனில், (ஜனகஸ்யஸுதா - ராமபத்நீ) மஹா தர்மசீலனும் ஞானவானுமான ஜனகன் குலத்திற்பிறந்து திரைலோக்கியநாதனை தாசரதிக்கு மாலையிட்டு ஸத்ஸம்பிரதாயமார்க்கத்திலேயே வளர்ந்து அஸாது தர்சனமே செய்யாத அந்த பரமஸாதுவானவள் அப்படிப்பட்ட அகிருத்தியத்தை நினைப்பளோ? மேலும் (உத்பலபத்ராக்ஷீ) ஸ்ரீராகவன் திருமுகமண்டலமாகிற பூர்ணசந்திரனுக்கு இவளுடைய திருக்கண்களாகிற கருநெய்தல் மலருமேயல்லது, இவனுடைய க்ரூரமான முகத்திற்கு மலருமோ. மேலும் ஸ்ரீராகவன் திருமேனியைக் கண்டுகளித்த கண்களால் வேறுபுருஷனையுங்கண்டு மகிழ்வாளோ? கரதூஷணவததத்தில் ஸ்ரீராகவன் விக்கிரமத்தைக் கண்டு மகிழ்ந்த அந்த வீரபத்தினி வேறுபுருஷனுடைய ஸ்பரிசத்தையு மிச்சிப்பளோ? ஸர்வலோகசரண்ணியனை ஸ்ரீராகவன் பெருமையைக்கண்டு மகிழ்ந்த ஜானகி இலங்கேசுவரன் பெருமையைக்கண்டு மோகிப்பளோ? ஸ்ரீராகவனுடைய திருக்கல்யாணகுணங்களிலீடுபட்ட அந்த உத்தமி இந்த இராக்ஷஸாதமனுடைய வினயத்திற்குள்ளாவளோ? அந்த அனாரியனுடைய வசமாயிருப்பாளென்று நினைக்கவே கூடாது. அவள் மஹாபரிசுத்தை, மஹாகுணவதி, லோகோத்தரமான ஸத்சரித்திரை. இராகவனுக் கானந்தத்தைத்தந்த தன் கருநெய்தல் விழிகளாலிருள்கொண்ட விராவணனைப்பார்த்திராள். இராகவசயனத்தை மேவிய அந்த பதிவிரதை இராவணசயனத்தை விரும்பியிராள். ஆகையால்தான் புஷ்பகவிமானத்திலுள்ள இராவண பரிக்கிரகஸ்திரீ கோஷ்டியில் பிராட்டியைக்காணவில்லை. ஒருக்கால் பதியைப்பிரிந்த வெகுநாள்வரையில் ஹா ராம! ஹா லக்ஷ்மண! வென்று

கதறிவிட்டுத் தன்னுடனைக் காணுமலும், அவளைக் காணுவோமென்கிற தைரியமில்லாமலும் இனி தேகத்தைக் காப்பாற்றினுல் மானபங்கம் நேரிடுமென்று பயந்து இறந்துவிட்டாளோ? அல்லது தன்னை ஸ்வாதீனப்படுத்தும்பொருட்டு ஏகாந்தமான ஸ்தலத்தில் இராவணனுல் வைக்கப்பட்டு வருந்துகின்ருளோ, எந்நிலைமையிலிருக்கிருளோ தெரியவில்லை.

౧౭. వినష్టా వా ప్రణష్టా వా మృతా వా జనకాత్మజా॥ రామస్య ప్రియభార్యస్య న నివేదయితుం క్షమమ్।

கஎ. [illegible]

கஎ. விநஷ்டாவாப்ரணஷ்டாவாம்ருதாவாஜநகாத்மஜா।।
ராமஸ்யப்ரியபார்யஸ்யநநிவேதயிதும்க்ஷமம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஜநகாத்மஜா | ஸீதையானவள் | ம்ருதாவா | இராகவனுடைய விரகத்தைஸகியாமல்மரணமடைந்தாளோ |
| விநஷ்டாவா | பூமிக்குள்வைத்திருப்பதால்காணப்படவில்லையோ | | |
| ப்ரணஷ்டாவா | இராவண னெடுத்துக் கொண்டு வருகையில்அந்தவேகத்தால் ஸமுத்திரத்தில்விழுந்து பிராணனை யிழந்தாளோ | ப்ரியபார்யஸ்ய | இஷ்டபத்தினியையுடைய |
| | | ராமஸ்ய | ஸ்ரீராகவனுக்கு |
| | | நிவேதயிதும் | அறிவிப்பதற்கு |
| | | நக்ஷமம் | யோக்யமன்று. |

౧౮. నివేద్యమానే దోషః స్యాద్దోషః స్యాదనివేదనే॥ కథం ను ఖలు కర్తవ్యం విషమం ప్రతిభాతి మే।

கஅ. [illegible]

கஅ. நிவேத்யமாநேதோஷஸ்யாத்தோஷஸ்யாதநிவேதநே।।
கதம்நுகலுகர்தவ்யம்விஷமம்ப்ரதிபாதிமே।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| நிவேத்யமாநே | அப்படிசொல்லுகிறதில் | ஸ்யாத் | ஆகிறது (ஆதலால்) |
| தோஷ: | தோஷமானது | கதம்நுகலு | எப்படிதான் |
| ஸ்யாத் | ஆகிறது | கர்த்தவ்யம் | செய்யத்தக்கினது (என்று) |
| அநிவேதநே | சொல்லாமலிருப்பதிலும் | மே | எனக்கு |
| தோஷ: | தோஷமானது | விஷமம்ப்ரதிபாதி | கஷ்டமாகதோன்றுகிறது. |

౧౯. అస్మిన్నేవంగతే కార్యే ప్రాప్తకాలం క్షమం చ కిమ్॥ భవేదితి మతం భూయో హనుమాన్ ప్రవిచారయత్।

கக. [illegible]

கக. அஸ்மிந்நேவம்கதேகார்யேப்ராப்தகாலம்க்ஷமஞ்சகிம்।।
பவேதிதிமதம்பூயோஹநுமாந்ப்ரவிசாரயத்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அஸ்மிந்-கார்யே | இந்த-காரியமானது | இதி | என்கிற |
| ஏவம்கதே-(ஸதி) | இப்படிவிரோதமிருக்கையில் | மதம் | அபிப்ராயத்தை |
| கிம்-ப்ராப்தகாலம் | எது-அடையத்தக்க உசிதகாலமுடையதாகவும் | ஹநுமாந் | ஹனுமாரானவர் |
| க்ஷமஞ்ச | ஸமர்தமாகவும் | பூய: | மறுபடியும் |
| பவேத் | ஆகும் | ப்ரவிசாரயத் | ஆலோசித்தார். |

(கஎ-மு-கக-ல்) தா-ம்—நானிலங்கையைவிட்டுக் கிஷ்கிந்தைக்குப்போய் ஸ்ரீராகவஸந்நிதானத்தி லென்னசொல்வேன். "ஹேராஜேந்திர! இலங்கைக்குப்போனேன், நகரமுழுதுந்தேடினேன், தேவியைக் காணவில்லை, இராவண னெங்கேயாவது பூபிலத்தில் பத்திரப்படுத்திவைத்திருக்கிருனே; அவனெடுத்துக்கொண்டு போகையில் ஸமுத்திரத்திற் றவறிவிழுந்துவிட்டாளோ; அல்லது தேவரீரைப் பிரிந்த துக்கத்தால் பிராணனைவிட்டுவிட்டாளோ" என்றிவ்விதமா யுரைப்பேன். இராப்பகல் ஸீதே ஸீதே யென்று கதறிக்கொண்டு வருந்துகிற அந்த தாசரதியின் செவிகளில் இம்மொழிகள் விழுந்தால் எவ்வளவுகஷ்டப்படுவார். அந்த அபராதத்திற்குக் காரணபூதனுக நானுவேனே-இவ்விதமான ஸங்கதியைத் தெரிந்துகொள்ள ஓர் ஸம்ஸ்தான மந்திரியைத் தூதனுக அனுப்பவேண்டுமோ - ஸங்கதியைத் தெரிவித்தாலு மபராதமுண்டாகிறது; தெரிவியாவிடினும் கஷ்டம். ஹநுமான் ஜயஸ்ரீயுடன் வரப்போகிருனென் றெதிர்பார்ப்பவர்முன் தலைகுனிந்து மௌனமாக நிற்பதோ எனக்கு லக்ஷணம். இப்படிப்பட்ட அஸந்தர்ப்பமான விஷயத்தில் எந்தவிதம் நடப்பது உசிதமானதென்று ஹநுமான் யோசித்தார்.

౨౦. యది సీతామదృష్ట్వాహం వానరేంద్రపురీమితః॥ గమిష్యామి తతః కో మే పురుషార్థో భవిష్యతి।

౨౧. మమేదం లంఘనం వ్యర్థం సాగరస్య భవిష్యతి॥ ప్రవేశశ్చైవ లంకాయా రాక్షసానాం చ దర్శనమ్।

౨౨. కిం మాం వక్ష్యతి సుగ్రీవో హరయో వా సమాగతాః॥ కిష్కింధాం సమనుప్రాప్తం తౌ వా దశరథాత్మజౌ।

౨౩. గత్వా తు యది కాకుత్స్థం వక్ష్యామి పరమప్రియమ్॥ న దృష్టేతి మయా సీతా తతస్త్యక్ష్యతి జీవితమ్।

౨౪. పరుషం దారుణం క్రూరం తీక్ష్ణమింద్రియతాపనమ్॥ సీతానిమిత్తం దుర్వాక్యం శ్రుత్వా స న భవిష్యతి।

౨౫. తంతుకృచ్ఛ్రగతందృష్ట్వాపంచత్వగతమానసమ్॥భృశానురక్తోమేధావీనభవిష్యతిలక్ష్మణః।
౨౬. వినష్టౌభ్రాతరౌశ్రుత్వాభరతోపిమరిష్యతి॥భరతంచమృతందృష్ట్వాశత్రుఘ్నోనభవిష్యతి।
౨౭. పుత్రాన్మృతాన్సమీక్ష్యాథనభవిష్యంతిమాతరః॥కౌసల్యాచసుమిత్రాచకైకేయీచనసంశయః।
(எ-மு-உரு-ல்) தா-ம்.—காமாந்தகாரத்தால் கியானசூன்னியனாய் தனக்கும் தன்னுடைய பிரபிதாமகனுக்கும் அகில லோகங்களுக்கும் மாதாவான ஜானகி தன்னைப் பதியாயடைந்து தன்சயனத்தி லேறவேண்டுமென்கிற துராசையால், தானும் தன்னருமைமக்களும் மற்றுமுள்ள வரக்கரும் ஒருமிக்க மாண்டுபோவதற்காக, இராவணன் அந்த பதிவிரதோத்தமியினுடைய மனதை மதுரவசனங்களாலும் பிரியஸ்தோத்திரங்களாலும் கலைத்து அவளை வஞ்சிக்க ஆரம்பித்தான். அவ்வன்னை ஸங்கல்பங்களாகிற புரவிகள்பூட்டி நெஞ்சமாகிற இரதத்தின்மீதேறி இராஜாதிராஜனும் சரணாகதவத்ஸலனுமான அந்த இரகுநந்தனனுடைய பாதபத்மங்களையடைபவள்போலிருந்தாள். அதாவது, இவ்விராக்ஷஸாதமனுடைய ஆபத்தினின்றுநீங்கி ஸ்ரீராகவன் பக்கல்சேர்ந்து அந்த ஆதிபுருஷனுடைய அத்விதிய ஸௌந்தர்யாதிசயபோகமும், ஸாதுதரிசன ஸல்லாபாதி ஸந்தோஷானுபவமும் யதாபூர்வ மெப்பொழுதுண்டாமோ வென்கிற கருத்துகளைக்கொண்டு அபீஷ்டபலப்பிரதானஞ்செய்யவல்ல ஸர்வஜ்ஞாத்மகனான தன் நாதனையே தியானித்திருந்தாள். சிரகாலதுக்கானுபவத்தால் தேகமிளைத்துமெலிந்திருந்தாள். பர்த்திருவிரகதுக்கம் உள்ளேவதைக்க இராக்ஷஸிகள் வெளியே உபத்திரவிக்க இந்தவிதம் தனியாய்நின்று கஷ்டப்படுகையில் உரோகிணியை

ப்பீடிக்கவருகிற தூமகேதுபோல் தன்னைப் பீடிக்கவந்துவிட்டானே அரக்கனென்றழுதுகொண்டிருந்தாள். இவ்வியஸனமாகிற மஹாஸமுத்திரத்தில் மூழ்கி கரையைக்காணாதிருந்தாள். அல்லும்பகலும் தனக்குநேரிட்ட துக்கத்தையேநினைத்துக் கண்ணீர்விட்டுக்கொண்டிருந்தாள். இந்த துக்கவிமோசனத்திற்கு ஸ்ரீராகவனே கதியென்று அந்த தயாளுவையே நம்பியிருந்தாள். தத்காலத்திலந்தநரேந்திரனால் கைவிடப்பட்டு தீனையாயிருந்தாள். மணிமந்திராதிகளால் தடைபட்டுப் புறம்போக வகையில்லாமல்தவிக்கிற நாகஸ்திரீபோலிருந்தாள். ஸதாசாரானுஷ்டானத்தாலும் தர்மகிருத்தியங்களாலும் திடமான நல்லொழுக்கத்தாலும் சிரேயஸ்கரமாய் விளங்குகிற உத்தமகுலத்திற்பிறந்து துராத்மாக்களுடைய வம்சபூதனான பதிதனால் பாணிக்கிரகணஞ்செய்யப்பட்டு, அந்தவிவாகத்தாலுண்டான த்விதியஜன்மத்தில் பூர்வஸத்குலதேஜஸ்ஸழிந்து ஆசாரஹீனையாய்விளங்கும் ஸ்திரீபோல் காணப்பட்டாள். அஸத்தியமாய்க் கட்டிவிடப்பட்ட உலகநிந்தையால் க்ஷீணமடைகிற கீர்த்திபோலும், அப்பியாஸமின்மையால் மறந்துபோன வேதாத்தியயனம்போலும், தினேதினே குறைந்துபோகிற யசஸ்ஸுபோலும், பரிகாஸத்தால் விர்த்தியடையாத ஸத்கர்மசிரத்தைபோலும், புஷ்பசந்தனதூபதீபாதிகளும் பக்திபூர்வகமான ஸ்துதிவசனாத்யுபசாரங்களும் குறைந்திருக்கிற தேவதாராதனம்போலும், விக்கினங்களாலடிபட்டுப் பலோதயமடையாம லழிகிற ஆசைபோலும் தன்னுடைய தரித்திரமொழியப்போகிறதென்று வெகுநாளாய் நம்பிக்கையோ டெதிர்பார்த்த ஐசுவரியார்த்திக்குக் கிடைத்த ஸ்வல்பதனலாபம்போலும், தவறினவர்களைத் தண்டிக்கவகையின்றி தடுக்கப்பட்டுநிற்கிற இராஜாக்கியைபோலும், உத்பாதகாலத்தில் தீப்பிடித்தெரிகிற திக்குகள்போலும், இஷ்டதேவதாராதனத்திற்குச் சேகரிக்கப்பட்டுப் பரபுருஷனாலபகரிக்கப்பட்ட பூஜாதிரவியம்போலும், பனிவாடையால் விர்த்தியடையாமல் சோபையழிந்திருக்கிற தாமரைத்தடாகம்போலும், யுத்தரங்கத்தில் சத்துருபலாபலமறிந்து ஜயபேரிகைமுழக்கத்துடன் ஸைந்யத்தைநடத்தவல்ல ஸேனாபதியைப்பரிகொடுத்துத் தன்னரசுநாடாய் சிதிலமடைகிற ஸைன்னியம்போலும், இருளால் பிரதிபாதிக்கப்படுகிற பிரகாசம்போலும், ஜலம்வற்றினநதிபோலும், அணைந்த அக்கினிபோலும், இராகுபீடிதமான சந்திரிகையால் விளங்காத பௌர்ணவமிராத்திரிபோலும், இருள்மயமான கிருஷ்ணபக்ஷராத்திரிபோலும் பிரபையற்று வீற்றிருந்தாள். ஜ்யோதிஷ்டோம வாஜபேயாதி யக்கியங்களுபக்கிரமிக்கப்பட்டு, ஸமித்குசலாஜாக்ஷதாதி ஹோமத்திரவியங்கள் நிறைந்து அத்துவரியுஹோதா உத்காதா பிரம்மாக்கள் வேதமந்திரம் ஜபிக்க தீக்ஷிதனான எஜமானனோடும் ஹோமத்தால் ஜ்வலிக்கிற அக்கினிகுண்டத்தோடும் பரமபாவனமாய் விளங்குகிற யக்கியவேதிகையானது நீசஸ்பர்சத்தால் அசுத்தமாகி தேசம்குறைந்த யக்கியவேதிகைபோல் ஸ்ரீராகவார்கையான அந்த புண்ணியாத்மாவானவள் இராக்ஷஸாதமனுடைய ஸ்பரிசத்தால் அபரிசுத்தையாய் பிரகாசமற்றிருந்தாள். குமுதநீலோத்பலங்களும் ஹம்ஸஸாரஸ சக்கிரவாகாதிபக்ஷிகளும்நிறைந்து தேவாமிருதத்திற்கொப்பான திவ்வியதீர்த்தஸமிருத்தியா லதிமனோகரமாய் விளங்கிவருகையில் மதம்பிடித்த வொருகாட்டானையிறங்கி தனது தும்பிக்கையால் ஜலத்தைக்கலக்கி பக்ஷியினங்களை வெருட்டிப் புஷ்பக்கொடிகளை வேருடன் பேர்த்தெறிந்து பங்கமயமாகச்செய்ய அதி ஆபாஸமாய் காணப்படுகிற பத்மினிபோல் ஸ்ரீராகவன்பக்கலிருக்கையில் ஸர்வாபரணபூஷிதையாய் இலக்ஷ்மீதேவிபோ லதிஸுந்தரமாக விருந்த ஜானகி உன்மத்தனான இராவணனாலபகரிக்கப்பட்டபிறகு ஆபரணாலங்காரமும் ஸ்நானலேபனாதிகளுமின்றி சோபையற்றிருந்தாள். பிரவாகானந்தரம் வற்றிப்போன நதிபோலும், ஜலத்தினின்றுபிடுங்கிகரையிலெறியப்பட்டு ஸூரியோஷ்ணத்தால் வாட்டப்பட்ட தாமரைத்தண்டுபோலும், தன்பிராணபந்துவான பர்த்தாவினின்றும் இனத்தினின்றும் பிரிக்கப்பட்டு ஸ்தம்பத்தில் கட்டப்பட்டு தன் விரகதுக்கஸ்மரணையால் பெருமூச்செறிந்து தனியாய்நின்றுவியஸனமுறுகிற கஜப்பேடுபோலும்,சோபையின்றிதேகம்வாடி துக்காக்கிராந்தையாயிருந்தாள். பத்துமாதகாலம் ஸ்நானாதிஸுகங்களை யனுபவியாதவளும், ஆகாரமில்லையென்னும்படி ஜலாகாரமாத்திரத்தால் பிராணனைத்தரித்திருப்பவளும், அதனால் தேகமிளைத்து வாடியிருப்பவளும், திவ்வியாங்கலக்ஷணத்தால் ஸுந்தரமாகவிளங்குபவளும், அலங்காரமில்லாமலே ஸர்வாலங்காரசோபையோடு பிரகாசிப்பவளும், சரத்காலத்தில் கறுத்த இலைகள்நிறைந்த விருக்ஷவரிசைகளோடுவிளங்குகிற பூப்பிரதேசம்போல் கறுத்த நீண்ட மனோகரமான பின்னலிட்டகூந்தலோடு விளங்குபவளும், ஸர்வோத்கிருஷ்டமான பத்மிநீஜாதிலக்ஷணங்களோடு பிரகாசிப்பவளும், விரகதுக்கத்தாலும் ஸதா துக்கத்தியானத்தாலும், அந்த இராக்ஷஸநகரத்தில் தனக்கென்ன ஆபத்துநேரிடுமோவென்கிற பயத்தாலும் மிகவுமிளைத்திருப்பவளும் தன் வியஸனநிவாரணார்த்தம் ஸ்ரீராகவன்வரவை யெதிர்பார்த்து அந்தபரமாத்மாவைக்குறித்துத் தவம்செய்பவளும், இவ்வித அவமானத்தை இராவணன்செய்தானேயென்று துக்கிப்பவளும், இப்பேர்ப்பட்டஅபராதத்தைத் தனக்குச்செய்தஇவ்விராவணன் இரகுவீரபாணத்தா லெப்பொழுது மாண்டுபோவனோவென்று அஞ்சலிசெய்துகொண்டு தன்னிஷ்டதேவதாப் பிரார்த்தனைசெய்பவள்போலிருப்பவளும், காமாதுரனாய்வருகிற இராவணனைப்பார்த்து நடுநடுங்கி ஐயோ! தன்னுடையசீலத்திற் கென்ன ஹானிநேரிடுமோ, தன்னையிரக்ஷிப்பாரொருவருமில்லையே, இந்தஆபத்தினின்றுஎப்படிதப்பிப்பிழைப்பேனென்று நாற்புறமும் சுற்றிப்பார்த்துபயந்திருப்பவளும், நிர்த்தோஷமான பாதிவிருத்தியமுள்ளவளும், கடைக்கண்சிவந்துகருவிழிகள்பொருந்தி மத்தியப்பிரதேச வெண்ணிறத்தோடு அதிமதுரமாகவிளங்குகின்றனவும் அதியழகானஇமைகளென்கிற தாமரைதளங்களா விரக்ஷிக்கப்படுகின்றனவுமான நேத்திராரவிந்தங்களையுடையவளும், ஸ்ரீராகவனையே ஆசிரயித்தவிரதமுடையவளும், அந்த பக்தவத்ஸலனுடைய பிரிவைச்சகியாது துடிப்பவளுமான பிராட்டியையஸமீபித்து, பதிவிரதாக்கினியில்விழுந்து தான்நசிக்கபோகிறதையறியாமல் காமாவேசத்தா லவளைவஞ்சிக்க எத்தனித்தான்.

ஸர்வவரப்பிரதானமுஞ் செய்யவல்ல அந்தலோகஜநநீ பிராகிருதஜனம்போல் ஓர்ஸாமான்னியதேவதையின் பிரஸாதத்தைப்பிரார்த்திப்பவள்போலிருக்கும்படி எங்ஙனே!

ஆயாசமாநாமிதி - ஸ்வாபதேசார்த்தம்.

தன்னுடையநிர்ஹேதுககிருபையால் ஸமஸ்தப்பிராணிகளுடைய பிரார்த்தனையை ஸபலமாக்கி, "நக்ஷமாமி" என்கிற நிரங்குசஸ்வாதந்திரியமுடைய ஸர்வேசுவரனையும் தன்திருமேனிஸௌந்தரியத்தால் வசப்படுத்தி மஹாபாதிகளையும் நித்தியவிபூதியில் அவன்திருவடிகளில் சேர்ப்பிக்கிற புருஷகாரபூதையான பிராட்டி எம்பெருமானுடைய திருமார்பிலிருந்து க்ஷணகால்மும் பிரிந்தறியாதவள். இப்பொழுது தேவதைகள்முதலான ஸகலருடைய கஷ்டத்தைச் சகியாது எம்பெருமானுடைய திருமார்பினின்றுவிலகி அவர்கள்காலிலிட்ட விலங்கைத்தானுங் காலிலிட்டு, அவர்களோடு தானும் துக்கவிமுக்தையாகும்படி, அஞ்சலிபத்தையாய் நிர்மலமனதுடன், ஸர்வஸ்மாத்பரனும் ஸர்வவஸ்துவிலக்ஷணனுமான ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்திருந்தாள்.

ஸ்ரீஸம்மோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

பத்தொன்பதாவதுஸர்க்கம் - முற்றிற்று.

## இருபதாவது ஸர்க்கம்.

౧ సతాంపతివ్రతాందీనాం నిరానందాం తపస్వినీమ్ । సాకారైర్మధురైర్వాక్యైర్న్యదర్శయత రావణః॥

௧. 𑌸𑌤𑌾𑌂 𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌂 𑌦𑍀𑌨𑌾𑌂 𑌨𑌿𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌂 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑍀𑌮𑍍 ।
𑌸𑌾𑌕𑌾𑌰𑍈𑌰𑍍𑌮𑌧𑍁𑌰𑍈𑌰𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌰𑍍𑌨𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌯𑌤 𑌰𑌾𑌵𑌣𑌃 ॥

௧. ஸதாம்பதிவ்ரதாம்தீநாம்நிராநந்தாம்தபஸ்விநீம்।
ஸாகாரைர்மதுரைர்வாக்யைர்ந்யதர்ஶயதராவண:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸ:-ராவண: | அந்த-இராவணனானவன் | தாம் | அந்த-(ஸீதையை) |
| பதிவ்ரதாம் | பர்த்தாவையேவிருதமாயுடையவளும் | ஸாகாரை: | அபிப்பிராயத்தோடுகூடினவும் |
| தீநாம் | பலமற்றவளும் | மதுரை: | இனியனவுமான |
| நிராநந்தாம் | ஸந்தோஷமில்லாதவளும் | வாக்யை: | வார்த்தைகளால் |
| தபஸ்விநீம் | தபமுடையவளுமான | ந்யதர்ஶயத | (தன்அபிப்பிராயத்தை) பிரகாசிப்பித்தான். |

தா-ம்—அன்னபானமின்மையாலிளைத்து, ஸ்நானாலங்காரமனமையால் கறுத்து, பர்த்திருபந்துதரிசனமின்மையால் ஸுகமற்று, துக்கநிவாரணார்த்தம் ஆபத்பாந்தவனும் அனாதைரக்ஷகனுமான தன்பதியையே ஸ்மரித்து, சீல ரக்ஷணமாகிற தபோநிலையிலிருக்கிற அவ்வுத்தமியைப்பார்த்துக் காமுகனான இராவணன் மதுரவாக்கியங்களால் காமவிகாரமான தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான், துக்கத்தால் மனம்புண்ணாகி ஸந்தோஷமென்கிற லேசமுமில்லாதிருந்தாள். மன்மதவடிவுடைய தன் நாதனையே தியானித்திருந்தாள். எந்த ஆபத்திலும் சீலத்தை யிரக்ஷிப்பதில் திடசித்தமுள்ளவளாயிருந்தாள். இப்படி பிறனுடைய காமத்திற்குக் கொஞ்சமேனுமிடங்கொடாத அந்த குணவதியினிடத்தி லிராவணன் தன்னுடைய அல்பபுத்தியை வெளியிட்டான்.

౨. మాందృష్ట్వానాగనాసోరు గూహమానా స్తనోదరమ్ । అదర్శనమివాత్మానం భయాన్నేతుం త్వమిచ్ఛసి॥

௨. 𑌮𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌨𑌾𑌗𑌨𑌾𑌸𑍋𑌰𑍁 𑌗𑍂𑌹𑌮𑌾𑌨𑌾 𑌸𑍍𑌤𑌨𑍋𑌦𑌰𑌮𑍍 ।
𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌭𑌯𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑍁𑌂 𑌤𑍍𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿 ॥

௨. மாம்த்ருஷ்ட்வாநாகநாஸோரு கூஹமாநாஸ்தநோதரம்।
அதர்ஶநமிவாத்மாநம்பயாந்நேதும்த்வமிச்சஸி॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) நாகநாஸோரு | (ஓ) யானையின்துதிக்கை போன்றதுடையுடையவளே | ஆத்மாநம் | தேஹத்தை |
| மாம்-த்ருஷ்ட்வா | என்னை-பார்த்து | பயாதிவ | பயத்தினாலேபோல் |
| த்வம் | நீ | அதர்ஶநம் | பார்க்காமலிருக்குகையை |
| ஸ்தநோதரம் | வயிற்றையும்ஸ்தனங்களையும் | நேதும் | அடைவிப்பதற்கு |
| கூஹமாநா (ஸதீ) | மறைத்துக்கொண்டு | இச்சஸி | இச்சிக்கிறாய். |

தா-ம்—யானைத்துதிக்கைபோ லடிபெருத்து வரவரச்சிறுத்து உன்னதாகிருதியோடுவிளங்குகிற துடைகளையுடைய ஹே ஸுந்தரீ! உன்னிடத்தில் வியாமோகங்கொண்டு வருகிற வென்னைப்பார்த்து ஸ்தனங்களையும் வயிற்றையு மூடிக்கொண்டாய். ஏதோ வென்னைக்கண்டு பயப்படுவதுபோல் தேகத்தை மறைக்க விச்சிக்கிறாய். உன்னிடத்தி லத்தியந்தம் பிரீதியுள்ள வென்னிடத்தி லுனக்கென்ன பயம். உன்னுடைய ஸௌந்தரியாதிசயத்தை யான் பார்க்கவொண்ணாதோ? மேலுமுன்னுடைய சரீரம் என்னால் பார்க்கப்படாததோ? நீ மறைத்துக்கொள்ளுவதிலென்னபயன்?

౩. కామయే త్వాం విశాలాక్షీ బహుమన్యస్వ మాం ప్రియే । సర్వాంగగుణసంపన్నే సర్వలోకమనోహరే॥

௩. 𑌕𑌾𑌮𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌿 𑌬𑌹𑍁𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌵 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌗𑍁𑌣𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌮𑌨𑍋𑌹𑌰𑍇 ॥

௩. காமயேத்வாம்விஶாலாக்ஷிபஹுமந்யஸ்வமாம்ப்ரியே।
ஸர்வாங்ககுணஸம்பந்நேஸர்வலோகமநோஹரே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஹேஸர்வாங்ககுணஸம்பந்நே- | ஸர்வாவயவ ஸுந்தரஸம்ருத்தியுடையவளே | த்வாம் | உன்னை |
| ஹேஸர்வலோகமநோஹரே- | ஓ ஸமஸ்த ஜனங்களின் மனதையரிப்பவளே | காமயே | கோருகிறேன் |
| ஹேவிஶாலாக்ஷீ | விசாலமாய்அகன்றகண்களுடைய (ஸீதையே) | ஹேப்ரியே | ஓ-இஷ்டமானவளே |
| | | மாம்-பஹுமந்யஸ்வ | என்னை-ஆதரவுசெய். |

தா-ம்—அரவிந்ததளம்போலகன்று ஆக்லாதகரமாக விளங்குகிற நேத்திரங்களையுடைய ஹே வரானனே! பாதாதிகேசபரியந்தம் நிர்த்தோஷமான ஸாமுத்திரிகாலக்ஷணமமைந்த ஹே கோமளாங்கி! என்னையும்,

இப்பூமியிலுள்ளோரையும், மற்றுமுள்ள பதினன்குலோகத்தாரையும் மோகிக்கச்செய்கிற ரூபஸம்பத்துள்ள ஹே திவ்யஸுந்தரி! உன் ஸுந்தரவடிவைக்கண்டு யான் மோகித்தேன். உன்னுடைய கடாக்ஷவீக்ஷண்ணியத்தில் யானீடுபட்டேன். உன்னுடைய லாவண்ணியமாகிற வலையிற் சிக்கிக்கொண்டேன். ஆகையால், ஹே பிரியே! உன்னையடைய சேர்க்கையை யான் விரும்புகின்றனன். உன்னோடு இரதிவிலாஸத்தை யனுபவிக்க யான் பிரார்த்திக்கின்றனன். என்னுடைய கோரிக்கையை மானித்து என்னைக் கிருதார்த்தனுகச் செய்யும் விஷயத்தில் நீ கிருபைபுரியவேண்டும்.

౪. నేహ కేచిన్మనుష్యా వా రాక్షసాః కామరూపిణః । వ్యపసర్పతు తే సీతే భయం మత్తః సముత్థితమ్॥

௪. 𑌨𑍇𑌹 𑌕𑍇𑌚𑌿𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑌃।
𑌵𑍍𑌯𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑍁 𑌤𑍇 𑌸𑍀𑌤𑍇 𑌭𑌯𑌂 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌮𑍍॥
நேஹகேசிந்மநுஷ்யாவாராக்ஷஸா꞉காமரூபிண꞉।
வ்யபஸர்பதுதேஸீதேபயம்மத்தஸ்ஸமுத்திதம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸீதே | (ஓ) ஸீதையே | (த்வத்பயகர்தார꞉) | (உனக்குபயமுண்டுசெய்கிறவர்) |
| இஹ | இவ்விடத்தில் | கேசித்-ந- | ஒருவரும்-இல்லை |
| மநுஷ்யாவா | மனிதர்களாவது | தே-மத்த꞉ | உனக்கு-என்னிடத்திலிருந்து |
| காமரூபிண꞉ | இச்சைக்கிசைந்தரூபம்தரிக்கவல்ல | ஸமுத்திதம்-பயம் | உண்டான-பயமானது |
| ராக்ஷஸாவா | இராக்ஷதராவது | வ்யபஸர்பது | போகட்டும். |

தா-ம்—ஜனகன் செல்வமான ஹே ஸீதே! நீ ஏன் பயப்படுகிருய். உன்னை பயமுறுத்தத்தகுந்த மனிதனுவது இராக்ஷதனுவது இவ்விலங்கையிற்கிடையாது. காமரூபிகளான இராக்ஷதர் ஸ்வேச்சாரூபங்கொண்டு உன்னை மிரட்டுவார்களென்று பயப்படாதே. நான்ஏதாவது உனக்குத்திங்கு விளைவிப்பேனென்றஞ்சாதே. உன்னுடைய பிராணவல்லபனுன பிரியநாயகனென்று என்னை நீ மானி. யாதொருபயமுமில்லை.

౫. స్వధర్మో రక్షసాం భీరు సర్వథైవ న సంశయః । గమనం వా పరస్త్రీణాం హరణం సంప్రమథ్య వా॥
౬. ఏవం చైతదకామాం తు న త్వాం స్ప్రక్ష్యామి మైథిలి । కామం కామః శరీరే మే యథాకామం ప్రవర్తతామ్॥

௫. 𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑍋 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌭𑍀𑌰𑍁 𑌸𑌰𑍍𑌵𑌥𑍈𑌵 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃।
𑌗𑌮𑌨𑌂 𑌵𑌾 𑌪𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌹𑌰𑌣𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌮𑌥𑍍𑌯 𑌵𑌾॥

௬. 𑌏𑌵𑌂 𑌚𑍈𑌤𑌦𑌕𑌾𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌨 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌸𑍍𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑍈𑌥𑌿𑌲𑌿।
𑌕𑌾𑌮𑌂 𑌕𑌾𑌮𑌃 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌮𑍇 𑌯𑌥𑌾𑌕𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑌾𑌮𑍍॥

*௫. ஸ்வதர்மோரக்ஷஸாம்பீருஸர்வதைவநஸம்ஶய꞉।
கமநம்வாபரஸ்திரீணாம்ஹரணம்ஸம்ப்ரமத்யவா॥

௬. யேவம்சைததகாமாம்துநத்வாம்ஸ்ப்ரக்ஷ்யாமிமைதிலி।
காமம்காமஶ்ஶரீரேமேயதகாமம்ப்ரவர்த்ததாம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) பீரு | ஓ-பயமுடையவளே | ஏவம்ச | (எங்களுக்கு) இப்படி இருந்தபோதிலு[ம் |
| பரஸ்த்ரீணாம் | இதரஸ்திரீகளை | ஹேமைதிலி | ஓ-மிதிலாதிபதியின்புத்திரியே |
| கமநம்வா | அடைகிறதாவது | அகாமாம்* | (என்னிடத்தில்) மோஹம்கொள்ளாத |
| ஸம்ப்ரமத்ய | நன்ருகபலாத்கரித்து | த்வாம் | உன்னை |
| ஸர்வதைவ | ஸர்வபிரயத்தினத்தாலும் | நஸ்ப்ரக்ஷ்யாமி * | தொடமாட்டேன் (ஆகையால்) |
| ஹரணம்வா | கொண்டுவருவதாவது | மே-ஶரீரே | என்-சரீரத்தில் |
| ரக்ஷஸாம் | இராக்ஷதர்களுக்கு | காமம்-காம꞉ | மிகவும்-இச்சையானது |
| ஸ்வதர்ம꞉ | ஸொந்தமானதர்மம் | யதாகாமம் | யதேச்சையாக |
| ஸம்ஶய꞉ | (இதுவிஷயத்தில்) ஸந்தேகமானது | (தவ) | (உனக்கு) |
| ந | இல்லை | ஸம்ப்ரவர்த்ததாம் | பிரவர்த்திக்கட்டும். |
| ஏதத் | இந்த (பரஸ்திரீகமனமானது) | | |

தா-ம்—பயப்படுகிற ஸ்வபாவமுள்ள ஹே ஸ்திரீரத்தினமே! இராக்ஷஸேந்திரனுன நான் உன்னை பலாத்கரிப்பேனென்று நீ பயப்படவேண்டாம். பரஸ்திரீகளை பலாத்கரித்துச்சேருவதும், அவர்களை பலாத்கரித்துக்கொண்டுவந்து பிறகு நிர்ப்பந்திப்பதும் இராக்ஷஸருக்கு ஸாதாரணதர்மம். இதுவிஷயத்தில் ஸம்சயமி

* பிராட்டியினிடத்திற்கொண்ட கடுங்காமத்தால் வதைபடுகிற இராவணன் வேறுகாரணத்தாலவளை பலாத்கரிக்க முடியாமல் சிருங்காரரீதியறிந்த ரஸிகன்போல் நடித்து வஞ்சனைமொழிகள் கூறுகின்றனன். பலாத்கரிப்பது இராக்ஷஸதர்மமாயினும், ஸீதே! நீ என்மீது காமங்கொள்ளாதவளாகி லுன்னைத் தொடேனென்று சிருங்காரதத்துவோபந்யாஸஞ் செய்கிற இராவணன் முன்னொருக்கால் புஞ்சிகஸ்தலையென்னும் தேவஸ்திரீ பிரம்மதரிசனுர்த்தம் திவ்யாலங்காரஞ்செய்துகொண்டு பக்திசிரத்தாவேஷத்துடன் பிரம்மலோககமனஞ்செய்கையில் மார்க்கத்தி லவளைக்கண்டு மோகித்து பலாத்காரத்தாலவளையடைந்தான். அந்த ஸ்திரீயும், இராவணனு லழிக்கப்பட்ட அலங்காரத்துடன் பிரம்மஸன்னிதானத்தில் முறையிட, அம்மலரவன் இரக்கமுற்று அரக்கர்கோனுடைய அக்கிரமத்தைச்சகியாது, இனி அந்தபாதகன் இம்மாதிரி பலாத்கரித்து எந்தஸ்திரீயையாவது அடைவானுயின் அவன் சிரஸு வெடித்து நசிக்கக்கடவனென்றுசபித்தார். அந்தபிரம்மசாபபயத்தால் ஸீதையை பலாத்கரிக்க முடியாது இவ்விதம் நைச்சியவசனங்களுரைக்கிருனென்றறிக.

ல்லை. ஆகிலும் இராஜைசுவரியத்தில்வளர்ந்த ஸௌகுமாரியத்தன்மைபொருந்திய இராஜபுத்திரியான உன்னிடத்தில் என்னுடைய இராக்ஷஸதர்மத்தை வெளியிடேன். மதனவிலாஸரஸமறிந்திருக்கிற யானுன்னை நிர்ப்பந்திக்கமாட்டேன். உனக்கென்மீது காமமுண்டாகாதவளவில் உன்னை யான் ஸ்பரிசியேன். ஆகையால், யௌவன பரிபக்குவத்தோடு விளங்குகிற எனது சரீரத்தி லுனக்கத்தியந்தம் காமமுண்டாகட்டும். அப்பொழுது, பிரியே! உன்னை யடைந்தானந்திக்கிறேன்.

౭. దేవి నేహ భయం కార్యం మయి విశ్వసిహి ప్రియే । ప్రణయస్వ చ తత్త్వేన మైవం భూః శోకలాలసా ॥

௭. 𑌦𑍇𑌵𑌿 𑌨𑍇𑌹 𑌭𑌯𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌮𑌯𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑌿𑌹𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇।
𑌪𑍍𑌰𑌣𑌯𑌸𑍍𑌵 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌮𑍈𑌵𑌂 𑌭𑍂𑌃 𑌶𑍋𑌕𑌲𑌾𑌲𑌸𑌾॥

*௭. தேவிநேஹபயம்கார்யம்மயிவிஸ்வஸிஹிப்ரியே।
ப்ரணயஸ்வசதத்வேநமைவம்பூஸ்ஸோகலாலஸா।

| பதம். | உரை. | பதம் | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ப்ரியே | (ஓ) இஷ்டமானவளே | தத்வேந* | வாஸ்தவமாக |
| இஹ-பயம் | இவ்விடத்தில்-பயமானது | ப்ரணயஸ்வச | ஸிநேகத்தையும்செய் |
| நகார்யம் | செய்யத்தக்கினதன்று | ஏவம் | இந்தவிதம் |
| (ஹே)தேவீ | (ஓ) தேவியே | ஸோகலாலஸா | வியஸனத்திலாஸக்தியுடையவளாக |
| மயி-விஸ்வஸிஹி | என்னிடத்தில்நம்பு | மாபூः | ஆகவேண்டாம். |

தா-ம்—ஹே பத்மாநநே! உன்னிடத்தி லத்தியந்த மன்பு நிறைந்த இராவணனால் பரிபாலிக்கப்பட்டுவருகிற இவ்விலங்கையிலு முனக்கு பயமுண்டோ! அந்தகனுக்கும் பிரவேசிக்க வரிதான இவ்விலங்காதுர்க்கத்தில் பயப்படுவதற்குக் கிஞ்சித்காரணமுமில்லையென்று நம்பு. மின்னற்கொடிபோல் ஜ்வலிக்கிற ஹே காந்தே! என்னை நீ விசுவஸி. என்மீது மனப்பூர்வமான காமத்தைக்கொள்ளு. என்னையே பிராணபந்துவாக நம்பிச்சேரு. இம்மாதிரி நீ யாரையோ நினைத்துத் துக்கிக்கவேண்டாம். திரிலோகத்தையு மெதிர்த்துன்னை யிரக்ஷிக்கவல்ல வென்னை நீ நம்பி உள்ளாழ்ந்த அன்புடன் அடைவாயாகி லுனக்குக் குறைவில்லை.

౮. ఏకవేణీ ధరాశయ్యా ధ్యానం మలినమంబరమ్ । అస్థానేఽప్యుపవాసశ్చ నైతాన్యౌపయికాని తే ॥

௮. 𑌏𑌕𑌵𑍇𑌣𑍀 𑌧𑌰𑌾𑌶𑌯𑍍𑌯𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌮𑌲𑌿𑌨𑌮𑌮𑍍𑌬𑌰𑌮𑍍।
𑌅𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌽𑌪𑍍𑌯𑍁𑌪𑌵𑌾𑌸𑌶𑍍𑌚 𑌨𑍈𑌤𑌾𑌨𑍍𑌯𑍌𑌪𑌯𑌿𑌕𑌾𑌨𑌿 𑌤𑍇॥

௮. ஏகவேணீதராஸய்யாத்யாநம்மலிநமம்பரம்।
அஸ்தாநேப்யுபவாஸஸ்சநைதாந்யௌபயகாநிதே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே)ஸீதே | (ஓ-ஸீதையே) | அஸ்தாநே | இடமில்லாதவிடத்தில் |
| ஏகவேணீ | ஒரேபின்னலும் | உபவாஸஸ்சாபி | உபவாஸமும் |
| தராஸய்யா | பூமியிற்படுக்கையும் | ஏதாநி | இவை |
| த்யாநம் | (ஸதா) சிந்தையும் | தே-ஔபயகாநி | உனக்கு-யுக்தமானவையன்று. |
| மலிநம்-அம்பரம் | அழுக்கடைந்தவஸ்திரமும் | | |

தா-ம்—இந்திரனுக்கில்லாத போகமும் குபேரனுக்கில்லாத ஸம்பத்தும் நிறைந்த இவ்விலங்காநகரத்தில், லாவண்ணியஸமூகம்போல் லோகோத்தரமான வழகோடு விளங்குகிற திவ்வியாங்கனையான நீ இந்நிலைமையிலிருக்கத்தகுமோ? திவ்விய பரிமளதைலம் தடவி மஞ்சனநீராடி அகிற்புகையூட்டி திவ்வியாபரணங்கள் பூட்டி அழகாகப் பின்னலிட்டுப் பூசூட்டி, இந்தவிதம் கூந்தலை யலங்கரியாமல், ஸீமந்தமென்கிற உச்சிவகிடுமின்றி ஒரேசடையாகப்பின்னி இம்மாதிரிகேசத்தைப் பாழடையச்செய்யலாமோ? நவரத்தினமிழைத்த திவ்வியாஸனத்திலுட்காந்து பஞ்சுமெத்தை பரப்பியதிவ்வியசயனத்திற்படுத்து ஸுகியாமல் கேவலம் தாபஸிபோல் புழுதிபடிந்த பூமியிலுட்காந்து கஷ்டப்படுவானேன். சிரேஷ்டமான பொன்பட்டாடையைத்தரிக்காமல் புழுதியாலுங் கண்ணீராலு மலினமடைந்த இந்த கந்தவஸ்திரத்தையுடுப்பானேன். திவ்வியரஸங்களமைந்த அன்னங்களும் மதுபானங்களும் யதேஷ்டமாகவிருக்கிற இவ்விடத்தில் நீ உபவாஸமிருந்து வருந்துவானேன். ஸகல கிலேசங்களையுமரிக்கவல்ல திவ்வியபோகங்களும் அத்புதக்காக்ஷிகளும் நிறைந்த இவ்வுத்தியானவனத்தில் நீ ஸதா சிந்தாபரையாய் கண்ணீர்விடுவானேன். ஹே ஸீதே! நீ இப்பொழுது ஸகலபோகங்களையு மனுபவிக்கத்தக்க தருணியாயிருக்கிறாய். திவ்வியாங்கலக்ஷணங்களா லுத்கிருஷ்டையாயிருக்கிறாய். ஆஸ்கயாஸிந்தவேஷ முனக்குத்தகுதியல்ல. போகார்த்தமென்றால் கொண்டுவரப்பட்டு ரக்ஷிக்கப்படுகிற நீ இம்மாதிரிபோகங்களையு மலங்காரங்களையும் வர்ஜ்ஜிப்பது யுக்தமன்று.

౯. విచిత్రాణి చ మాల్యాని చందనాన్యగరూణి చ । వివిధాని చ వాసాంసి దివ్యాన్యాభరణాని చ ॥

౧౦. మహార్హాణి చ పానాని శయనాన్యాసనాని చ । గీతం నృత్తం చ వాద్యం చ లభ మాం ప్రాప్య మైథిలి ॥

* உண்மையாகக் காமங்கொள்ளவேண்டுமென்கிறான். மனப்பூர்வமாக நேசியாது, "விதிவசம்" என்று விதியைத்தடுக்கமுடியாமல் இராக்ஷஸேந்திரபலத்தை யெதிர்க்கமுடியாமல் மனவெறுப்போடு தன்னையடைந்தா லதுவும் பலாத்கார கமனமாகி பிரம்மசாபபல மெங்குவந்து விடுமோவென்கிற பயத்தை உள்ளே கருதி இம்மாதிரி யுரைக்கிறானென்றறிக.

௯. 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿𑌚𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑌿𑌚𑌨𑍍𑌦𑌨𑌾𑌨𑍍𑌯𑌗𑌰𑍂𑌣𑌿𑌚।
𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿𑌚𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑌿𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑌿𑌚॥
௧௦. 𑌮𑌹𑌾𑌰𑍍𑌹𑌾𑌣𑌿𑌚𑌪𑌾𑌨𑌾𑌨𑌿𑌶𑌯𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌨𑌾𑌨𑌿𑌚।
𑌗𑍀𑌤𑌂𑌨𑍃𑌤𑍍𑌤𑌂𑌚𑌵𑌾𑌦𑍍𑌯𑌂𑌚𑌲𑌭𑌮𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌮𑍈𑌥𑌿𑌲𑌿॥
௯. விசித்ராணிசமால்யாநிசந்தநாந்யகரூணிச।
விவிதாநிசவாஸாம்ஸிதிவ்யாந்யாபரணாநிச।।
௧௦. மஹார்ஹாணிசபாநாநிஶயநாந்யாஸநாநிச।
கீதம்ந்ருத்தம்சவாத்யம்சலபமாம்ப்ராப்யமைதிலி।।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஹேமைதிலி | ஓஸீதே | மஹார்ஹாணி | உயர்ந்தவையான |
| மாம்-ப்ராப்ய | என்னை-அடைந்து | பாநாநிச | குடிக்கத்தக்கவஸ்துக்களையும் |
| விசித்ராணி-மால்யாநிச-பற்பலவிதமான-புஷ்பமாலைகளையும் | | ஶயநாநி | படுக்கைகளையும் |
| சந்தநாநி | சந்தனங்களையும் | ஆஸநாநிச | ஸிம்மாஸனங்களையும் |
| அகரூணிச | அகில்தூபங்களையும் | கீதம் | கானத்தையும் |
| விவிதாநி | அனேகவிதமான | ந்ருத்தம் | நாட்டியத்தையும் |
| வாஸாம்ஸிச | ஆடைகளையும் | வாத்யம்ச | வாத்தியவிசேஷத்தையும் |
| திவ்யாநி | சிறந்தவைகளான | லப | அடை. |
| ஆபரணாநிச | ஆபரணங்களையும் | | |

தாமம்——ஹே ஸீதே! நீ ஏனிப்படி கஷ்டப்படவேண்டும். உன்னுடைய ஸௌந்தரியத்தையும் யௌவனத்தையும் ஏனிப்படி நாசப்படுத்தவேண்டும். ரூபத்திலும்யௌவனத்திலும் யசஸ்ஸிலும்பராக்கிரமத்திலுமுனக்கனுரூபபுருஷனை வென்னைப் பர்த்தாவாகவடைந்து ஸகலபோகங்களையுமனுபவி. பாதாதிகேசபரியந்தம் திவ்வியாபரணங்களையணிந்துகொள். பற்பலவித பீதாம்பரங்களை யுடுத்திக்கொள். திவ்விய பரிமளசந்தனங்களைப்பூசிக்கொள். நறுமணமுள்ள அகிற்புகையால் கூந்தலைக் கந்தவத்தாகச்செய்துகொள். மதுவினுமினிய பானங்களைப்பருகி ஆனந்தி. சிறந்த ஸிம்மாஸனத்தில் மணக்கோலத்துடன் வீற்றிரு. திவ்விய ஸ்திரீகள் மிருதங்க வீணாவேணுஸகிதமாய் கானம் செய்வதைக்கேட்டும், சுருதி தாளங்களுக்கிணங்க நாட்டியஞ் செய்வதைப்பார்த்தும் ஸந்தோஷி. மிதிலர்கோன் புத்திரியான ஹே ராஜசெல்வமே! ஸுகரஸமறிந்த ஹே பத்மினீ! இந்த கஷ்டதுக்கங்களையெல்லாமொழித்து என்னை நீ நாயகனாகவடைந்து உன்னுடைய ஸுகுமார சரீரத்தை திவ்வியாபரண ஆடைகளாலும் பரிமளத்திரவியங்களாலும் அலங்கரித்துக்கொண்டு இஷ்டான்னபானாதிகளால் ஸுகித்து, நாட்டிய ஸங்கீதகேளிகைகள் நிறைந்த ஸபையில் சத்திர சாமர தாம்பூலாதி உபசாரங்களுடன் ஸிம்ஹாஸனத்தில் இராஜராஜேசுவரியாய் வீற்றிருந்து என்னை ஆனந்திப்பிக்கக் கிருபை பண்ணவேண்டும்.

౧౧. శ్రీరత్నమసి మైవం భూః కురు గాత్రేషు భూషణమ్ । మాం ప్రాప్య హి కథం ను స్యా స్త్వమనర్హా సువిగ్రహే॥
௧௧. 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌤𑍍𑌨𑌮𑌸𑌿𑌮𑍈𑌵𑌂𑌭𑍂𑌃𑌕𑍁𑌰𑍁𑌗𑌾𑌤𑍍𑌰𑍇𑌷𑍁𑌭𑍂𑌷𑌣𑌮𑍍।
𑌮𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌹𑌿𑌕𑌥𑌂𑌨𑍁𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌨𑌰𑍍𑌹𑌾𑌸𑍁𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍇॥
௧௧. ஸ்திரீரத்நமஸிமைவம்பூ꞉குருகாத்ரேஷுபூஷணம்।
மாம்ப்ராப்யஹிகதம்நுஸ்யாஸ்த்வமநர்ஹாஸுவிக்ரஹே।।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸுவிக்ரஹே | ஓ-ஸுந்தரமான தேகமுடையவளே | குரு | செய் |
| த்வம் | நீ | மாம்-ப்ராப்ய | என்னை-அடைந்து |
| ஸ்திரீரத்நமஸி | உத்தமஸ்திரீயாகிறாய் | கதம்நு | எப்படிதான் |
| மைவம்-பூ꞉ | இவ்விதம்-ஆகாதே | அநர்ஹா | அலங்காரத்துக்குத்தகாதவளாக |
| காத்ரேஷு | அவயவங்களில் | ஸ்யா꞉ | ஆகுவாய். |
| பூஷணம் | பூஷணத்தை | | |

தா-ம்——ஹே ஸீதே! உன்னுடைய சரீரம் ஸர்வலக்ஷணங்களமைந்த திவ்வியமங்கள விக்கிரகஸ்வரூபமானது. நீ ஸ்திரீஜாதிக்குள் பரமோத்கிருஷ்டையானவள். அழகிலுனக்கு ஸதிருசமானஸ்திரீ ஸிருஷ்டிவர்க்க முழுதிலுங்கிடையாது. ஆகையாலுன்னுடைய திவ்வியாங்கங்களை அததற்குரிய அலங்காரங்களைச்செய்யாமல் பாழுபண்ணாதே. ஸர்வாலங்காரயோக்கியமான உன்னருமைச்சரீரம் இந்த கடினவிரதத்திற்கும் மலினவேஷத்திற்கும் பாத்திரபூதமன்று. உன்னங்கஸௌந்தரியமிப்படியிருக்க, ஸகலபுவனேசுவரியத்திற்கும் போகத்திற்கு மதிபதியான வென்னைப் பதியாகவடைந்து நீ இவ்விதம் அலங்காரமற்றிருக்க எப்படி அர்கையாவாய். ஏழையான ராமனைவிட்டு ஐசுவரியவானான இராவணனையடைந்தபிறகு இவ்வேஷ முனக்குத்தகுமோ.

౧౨. ఇదం తే చారు సంజాతం యౌవనం వ్యతివర్తతే । యదతీతం పునర్నైతి స్రోతః శీఘ్రమపామివ॥
௧௨. 𑌇𑌦𑌂𑌤𑍇𑌚𑌾𑌰𑍁𑌸𑌂𑌜𑌾𑌤𑌂𑌯𑍌𑌵𑌨𑌂𑌵𑍍𑌯𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇।
𑌯𑌦𑌤𑍀𑌤𑌂𑌪𑍁𑌨𑌰𑍍𑌨𑍈𑌤𑌿𑌸𑍍𑌰𑍋𑌤𑌃𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌪𑌾𑌮𑌿𑌵॥

கஉ. இதம்தேசாருஸம்ஜாதம்யௌவநம்வ்யதிவர்த்ததே।
யதீதம்புநர்நைதிஸ்ரோதஶ்ஶீக்ரமபாமிவ

| பதம். | உரை. | பதம். | உரை |
|---|---|---|---|
| (ஹேசோபனாங்கி) | (ஓ-அழகானசரீரமுடையஸீதே) | ஸ்ரோதஇவ | பிரவாகம்போல் |
| தே | உனக்கு | ஶீக்ரம் | சீக்கிரமாக |
| ஸஞ்ஜாதம் | உண்டாயிருக்கிற | அதீதம் | போனதாக |
| இதம் | இந்த | புநஃ | மறுபடியும் |
| சாரு-யௌவநம் | அழகான-யௌவனமானது | நைதி | வாராதோ (அதுபோல்) உன்னுடையயௌவனம்போனால் வாராது அதற்குள்என்னையடையென்றர்த்தம். |
| வ்யதிவர்த்ததே | போய்விடுகிறது | | |
| யத் | எந்தயௌவனமானது | | |
| அபாம் | ஜலத்தினுடைய | | |

தா-ம்—ஹே பத்ரே! ஸர்வலோகமோகிதமான உன்னுடைய சரீரத்தைக் கிடைப்பதற்கரிய யௌவனஸம்பத்தடைந்திருக்கிறது. அது நீர்க்குமிழிபோல் ஸ்வல்பகால வாழ்வுள்ளது. அது உன்னை யதிக்கிரமித்துப் போய்விடட்டானல் பிரவாகவேகத்தால் தள்ளுண்டுபோகிற ஜலம்போல் மீளவும் திரும்பிவராது. ஆகையால் ஸகல ஸுகங்களோடு மனுபவிக்கத்தகுந்த இக்காலத்தை வீணுக்கப்போக்கிவிடாதே.

౧౩. త్వాంకృత్వోపరతోమన్యే రూపకర్తాసవిశ్వసృక్। నహిరూపోపమాత్వన్యా తవాస్తి శుభదర్శనే॥

கங. [Grantha verse]

கங. த்வாம்க்ருத்வோபரதம்மந்யேரூபகர்த்தாஸவிஶ்வஸ்ருக்।
நஹிரூபோபமாத்வந்யாதவாஸ்திஶுபதர்ஶநே॥

| பதம் | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஶுபதர்ஶநே | ஓ-நற்பார்வையுடையவளே | ஸஃ-விஶ்வஸ்ருக் | அந்த-பிரம்ஹாவானவர் |
| தவ | உன்னுடைய | த்வாம் | உன்னை |
| ரூபோபமா | ரூபத்துக்குஸமானமாக | க்ருத்வா | செய்து |
| அந்யா | வேறொருஸ்திரீயானவள் | உபரதஃ | திரும்பினவராக |
| ந-ஹி | (என்தகாரணத்தால்) இல்லையோ | மந்யே | எண்ணுகிறேன். |
| ரூபகர்த்தா | அத்புதமானரூபத்தைச்செய்கிற | | |

தா-ம்—சோபனதர்சனமுள்ள ஹே இந்துமுகி! உன்னைப்போல் ஸுந்தரவடிவுள்ள ஸ்திரீ இப்பிரபஞ்சத்தி லெங்குங்கிடையாது. இவ்வடிவழகையும் தேஜோவிசேஷத்தையும் வேறெங்கும் நான் கண்டதில்லை. ஆகையால் இந்த அத்புதரூபத்தை ஸிருஷ்டித்த பிரம்மா துல்யரூப ஸிருஷ்டிசெய்யமுடியாமல் திரும்பிவிட்டாரென்றெண்ணுகிறேன்.

౧౪. త్వాంసమాసాద్య వైదేహి రూపయౌవనశాలినీమ్। కః పుమానతివర్తేత సాక్షాదపి పితామహః॥

கச. [Grantha verse]

கச. த்வாம்ஸமாஸாத்யவைதேஹீரூபயௌவநஶாலிநீம்।
கஃபுமாநதிவர்த்தேதஸாக்ஷாதபிபிதாமஹஃ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) வைதேஹி | ஓ-ஸீதே | பிதாமஹோபி | பிரமனும் |
| ரூபயௌவநஶாலிநீம் | ரூபயௌவனுதிகளால் பிரகாசிக்கிற | புமாந் | புருஷனும் |
| த்வாம் | உன்னை | கஃ | எவன்தான் |
| ஸமாஸாத்ய | அடைந்து | அதிவர்த்தேத | அதிக்கிரமிப்பான். |
| ஸாக்ஷாத் | பிரத்தியக்ஷமான | | |

தா-ம்—விதேகதேசபூஷணமான ஹே கல்யாணி! உத்தமலக்ஷணமமைந்த ஸுகுமார தனுவோடு அதியழகாக விளங்குகிறாய். யௌவனபரிபக்குவத்தால் அதிமனோகரியாகக் காணப்படுகிறாய். திவ்விய போகயோக்கியமான தருணியாகப் பிரகாசிக்கிறாய். உன்னுடைய அபூதபூர்வ ஸௌந்தரியத்தைக் கண்டு உன்னை ஸிருஷ்டித்த பிரம்மாவும் மோகிப்பர். அப்படியிருக்க வேறெந்த புருஷன்தான் உன்னுடைய தேஜஸ்ஸுக்கிடேட்டு மயங்கான்.

౧౫. యద్యత్పశ్యామి తే గాత్రం శీతాంశుసదృశాననే। తస్మింస్తస్మిన్ పృథుశ్రోణి చక్షుర్మమ నిబధ్యతే॥

கரு. [Grantha verse]

கரு. யத்யத்பஶ்யாமிதேகாத்ரம்ஶீதாம்ஶுஸத்ருஶாநநே।
தஸ்மிந்ஸ்தஸ்மிந்ப்ருதுஶ்ரோணீசக்ஷுர்மமநிபத்யதே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஶீதாம்ஶுஸத்ருஶாநநே- | ஓ-மதிக்கொப்பான முகமுடையவளே | யத்யத் | எங்கெங்கே |
| | | தே-காத்ரம் | உன்னுடைய-அவயவத்தை |

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பஶ்யாமி | பார்க்கிறேனே | மம-சக்ஷுஃ | என்னுடைய-திருஷ்டியானது |
| (ஹே) ப்ருதுஶ்ரோணி- | (ஓ) பெருத்த பிருஷ்டமுடைய ஸீதே | நிபத்யதே | கட்டப்படுகிறது. |
| தஸ்மிஂஸ்தஸ்மிஂ | அங்கங்கே | | |

தா-ம்—அமிருதகலைகளா லகிலலோகங்களையு மானந்திப்பிக்கிற பூர்ணேந்துவையொத்த வதனமுடைய ஹே ஸுந்தரி! கனத்த பின்பாகத்தால் அதிமனோக்கியையான ஹே பேண்மணி! உன் அங்கஸௌந்தரியமுழுதையும் பார்க்க அசக்தனாயிருக்கிறேன். எங்கெந்த அவயவத்தை எனது கண்கள் பார்க்கின்றனவோ, அந்தந்த அவயவலக்ஷணவிசேஷமானது எனது சக்ஷுரிந்திரியத்தைப் புறம்போகாமல் பத்தப்படுத்திவிடுகிறது. மற்ற அவயவங்களினழகைப் பார்க்கக் கண்ணில்லையேயென்று துக்கமடைகிறேன்.

౧౬. భవమైథిలిభార్యామేమోహమేనంవిసర్జయ।బహ్వీనాముత్తమస్త్రీణామాహృతానామితస్తతః॥
సర్వాసామేవభద్రంతేమమాగ్రమహిషీభవ।

கசு. ஹவமெஂதிலிஹாயாமெமொஹமெநஂவிஸஜய।
ஹஹ்வீநாமுத்தமஸ்த்ரீணாமாஹ்ருதாநாமிதஸ்ததஃ॥
ஸவாஸாமெவஹத்ரஂதெமமாக்ரமஹிஷீஹவ।

கசு. பவமைதிலிபார்யாமேமோஹமேநம்விஸர்ஜய।
பஹ்வீநாமுத்தமஸ்திரீணாமாஹ்ருதாநாமிதஸ்ததஃ॥
ஸர்வாஸாமேவபத்ரந்தேமமாக்ரமஹிஷீபவ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) மைதிலி | (ஹே) ஸீதே | பஹ்வீநாம் | அனேகர்களான |
| மே-பார்யா | எனக்கு-பத்தினியாக | ஸர்வாஸாம் | ஸமஸ்தர்களான |
| பவ | ஆகு | உத்தமஸ்த்ரீணாமேவ | உத்தமஸ்திரீகளுக்குள்ளே |
| ஏநம்-மோஹம் | இந்த-அஜ்ஞானத்தை | மம | எனக்கு |
| விஸர்ஜய | விடு | அக்ரமஹிஷீ | பட்டஸ்த்ரீயாக |
| இதஸ்ததஃ | இங்கங்கே | பவ | ஆகு |
| ஆஹ்ருதாநாம் | எடுத்துக்கொண்டுவந்த | தே-பத்ரம்-(அஸ்து) | உனக்கு-மங்களம்-(உண்டாகட்டும்.) |

தா-ம்—ஹே ஸீதே! சிந்தையால் வேதனைப்பட்டுக் கண்ணீர்விடுகிற இந்நிலைமையை விட்டுவிடு. ஸகலபோகபாக்கியங்களையு மனுபவிக்கத்தக்க இக்காலத்தை வீணாகக்கழித்துவிடாதே. உன்னுடைய யௌவனம் ஸபலமாகும்படி யென்னைப் பர்த்தாவாகக்கோரு. என்னுடைய புஷ்பசய்யாஸனத்திலேறு. திவ்வியாபரணாலங்காரங்களைத்தரித்து திவ்வியோபசாரங்களைப்பெற்றுபற்பலவிடங்களிலிருந்து யான்யுத்தஞ்செய்துகொண்டுவந்த என்னுடைய பத்தினிகளான இந்த உத்தமஸ்திரீகளுக்கெல்லாம் மேலான பதவியையடைந்து எனக்கு இஷ்டமஹிஷியாய் இலங்காராஜ்ஜியத்திற்குப் பட்டமஹிஷியாய் வாழ்ந்திரு. இந்த அழுகைக்கோலம் வேண்டாம், மணக்கோலமுனக்குண்டாகட்டும்.

౧౭. లోకేభ్యోయానిరత్నానిసంప్రమథ్యాహృతానివై॥తానిమేభీరుసర్వాణిరాజ్యంచైతదహంచతే।

கஎ. லொகெஹெ்யாயாநிரத்நாநிஸஂப்ரமய்யாஹ்ருதாநிவெ॥
தாநிமெஹீருஸவாணிராஜ்யஂவெதஉஹஂவதெ।

கஎ. லோகேப்யோயாநிரத்நாநிஸம்ப்ரமத்யாஹ்ருதாநிவை॥
தாநிமேபீருஸர்வாணீராஜ்யம்சைததஹம்சதே।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) பீரு | ஓ-பயமுடையவளே | ஸர்வாணி | (இன்னும்என்னிடத்திலிருக்கிற) ஸமஸ்தங்களும் |
| லோகேப்யஃ | பூமிகளிலிருந்து (ஜனங்களிடத்திலிருந்து | அஹம்ச | நானும் |
| ஸம்ப்ரமத்ய | உபத்திரவம்செய்து | ஏதத் | இந்த |
| யாநி-ரத்நாநி | எந்த-இரத்தினங்கள் | மே | என்னுடைய |
| ஆஹ்ருதாநி | (என்னால்)கொண்டுவரப்பட்டனவோ | ராஜ்யம்ச | இலங்காபுரியும் |
| தாநி | அவைகளும் | தே | உன்னுடையது. |

தா-ம்—ஹே ஸீதே! இந்திரவருணகுபேராதிப்பிரபிருதிகளையும் இப்பூமண்டலத்திலுள்ள இராஜாக்களையும் மற்றுமுள்ளலோகபாலரையுமடித்து என்னென்ன இரத்தினவிசேஷங்கள் இங்குகொண்டுசேர்த்திருக்கிறேனே அவையெல்லா முன் ஸ்வாதீனத்தை யடையட்டும். மஹாபாக்கியவான்களுக்கும் கிடைக்காத, இந்த இலங்காராஜ்ஜியம் உன்னுடையதாகட்டும். திரிலோகபிரஸித்தவீரனும் இராக்ஷஸப்பிரபுவும் கணக்கற்ற திவ்வியாங்கனைகளுக்குப் பிராணவல்லபனுமானநானுமுனக்கு பிருத்தியனாய்விடுகிறேன். இந்தவிதமிலங்கைசுவரியத்தையும் இலங்காராஜ்ஜியத்தையும்கொண்டு இராவணபிருத்தியத்துவத்தையும்அடையக்கடவாய்.

౧౮. విజిత్యపృథివీంసర్వాంనానానగరమాలినీమ్॥జనకాయప్రదాస్యామితవహేతోర్విలాసిని।

கஅ. விஜிதூவ்ருயிவீஂஸவாஂநாநாநமரமாலிநீஂ॥
ஜநகாயவ்ரதாஸ்யாமிதவஹெதொவிலாஸிநி।

கஅ. விஜித்யப்ரிதிவீம்ஸர்வாம்நாநாநகரமாலிநீம்॥
ஜநகாயப்ரதாஸ்யாமிதவஹேதோர்விலாஸிநீ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) விலாஸிநி | ஓ-சிருங்கார சேஷ்டையுடையவளே | ஜநகாய | ஜனகமஹாராஜாவின்பொருட்டு |
| நாநாநகரமாலிநீம் | அனேகபட்டணத்தின்வரிசையுடைய | தவஹேதோஃ | உன்னிமித்தமாக |
| ஸர்வாம்-ப்ருதிவீம் | ஸமஸ்தமான-பூமியை | ப்ரதாஸ்யாமி | கொடுக்கிறேன். |
| விஜித்ய | ஜெயித்து | | |

தா-ம்—ஹே ஸீதே! நீ என்னை யடைவாயாகில், முக்தாஹாரந்தரித்த உத்தமஸ்திரீபோல் பற்பல விசித்திரநகரகோடிகளா லதிசிறப்பாக விளங்குகிற இப்பூமண்டலமுழுதையுஞ்ஜயித்து உன்பிதாவான ஜனகமஹாராஜனுக்களிக்கிறேன். சிருங்காரவிலாஸத்திற்கு திவ்வியயோக்கியையாயும், அஸாதாரண லாவண்ணியத்தா லதிமனோஹரையாயுமிருக்கிற உன்னைப்பெற்ற அந்த மஹாபுருஷனுக்கு இப்பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணபூமியையும் அதற்குள்ளிருக்கு மிரத்தினங்களையும் தானஞ்செய்கிறேன். அப்பொழுதாவது நீயென்போகத்திற் கிணங்குவாயோ?

౧౯. నేహపశ్యామిలోకేన్యం యోమే ప్రతిబలో భవేత్ ॥ పశ్యమేసుమహద్వీర్యమప్రతిద్వంద్వమాహవే ।

கக. [illegible]॥
[illegible]।

கக. நேஹபஶ்யாமிலோகேந்யம்யோமேப்ரதிபலோபவேத்॥
பஶ்யமேஸுமஹத்வீர்யமப்ரதித்வந்த்வமாஹவே।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| யஃ-மே | எவன்-எனக்கு [பான் | ஆஹவே | யுத்தத்தில் |
| ப்ரதிபலஃ-பவேத் | ஸமமானபலமுடையவனாக - இருப் | அப்ரதித்வந்த்வம் | ஈடற்றதும் |
| அந்யம் | (அப்படிப்பட்ட) இதரனை | ஸுமஹத் | வெகுசிறந்ததுமான |
| இஹ-லோகே | இந்த-உலகத்தில் | மே-வீர்யம் | என்-பராக்கிரமத்தை |
| நபஶ்யாமி | பார்க்கவில்லை | பஶ்ய | பார். |

தா-ம்—விரஹ்ணங்களால் கிலேசமடைந்து வருந்துகிற ஹே ஜானகி! உன்னைப் பத்தினியாகவடைந்து உன்னுடைய ஸௌந்தரியத்தை ஸபலமானதாகச் செய்யக்கோருகிற வென்னுடைய பல பௌருஷ விக்கிரமாதிப்பிரதாபங்களை யோசித்துப்பார். இவ்வுலகத்தி லெனக்கு ஸதிருசமான புருஷனுமுண்டோ. யுத்தரங்கத்தி லென்னோடெதிர்த்து நிற்கத்தகுந்த வீரனும் இவ்வுலகிலுண்டோ. இந்திரகுபேரவருணயமாதி திசாதிபதிகளைவென்ற என்னுடைய விக்கிரமத்தை நீயே யோசித்துப்பார். திரிலோகதுல்லியமான வடிவழகுள்ள உன்னை யனுபவிக்க எனக்கும் மேலான வீரபுருஷனுண்டோ, ஓர்ந்துபார்.

౨౦. అసకృత్సంయుగే భగ్నా మయా విమృదితధ్వజాః ॥ అశక్తాః ప్రత్యనీకేషు స్థాతుం మమ సురాసురాః ।

உ௦. [illegible]॥
[illegible]॥

உ௦. அஸக்ருத்ஸம்யுகேபக்நாமயாவிம்ருதிதத்வஜாஃ॥
அஶக்தாஃப்ரத்யநீகேஷுஸ்தாதும்மமஸுராஸுராஃ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸுராஸுராஃ | தேவர்களென்ன, அஸுரர்களென்ன இவர்கள் | விம்ருதிதத்வஜாஃ | முறிக்கப்பட்டகொடியுடையவர்களா |
| | | மம | எனக்கு (எதிரில்) [க |
| அஸக்ருத் | அடிக்கடி | ப்ரத்யநீகேஷு | சத்துருக்களின்நடுவில் |
| ஸம்யுகே | யுத்தத்தில் | ஸ்தாதும் | நிற்பதற்கு |
| மயா | என்னால் | அஶக்தாஃ | சக்தியற்றவர்கள். |
| பக்நாஃ | அவமானிக்கப்பட்டவர்களாகவும் | | |

தா-ம்—ஹே ஸுந்தரி! என்னுடைய பிரதாபமுனக்குத் தெரியாவிடில் சொல்லுகிறேன் கேள். வானுலகவாஸிகளான தேவதானவரெல்லோரும் என்னோடு பலமுறை யுத்தஞ்செய்து தோல்வியடைந்தவர்கள். அனேக தடவை அவர்களை இக்கைகளினாலடித்துப்பிளந்து அங்கஹீனர்களாயோடும்படிசெய்தேன். அவர்களுடைய இரதங்களும் விமானங்களும் தவிடுபொடியாகி த்வஜங்கள் முறிந்து கீழேவிடும்படி செய்தேன். இவ்விதம் அவமானமடைந்த அவர்களிலொருவராவது என்னோடு யுத்தத்தி லெதிர்த்து நிற்பாரில்லை.

౨౧. ఇచ్ఛయా క్రియతామద్య ప్రతికర్మ తవోత్తమమ్ ॥ సప్రభాణ్యవసజ్జ్యంతాం తవాంగే భూషణాని చ ।
సాధు పశ్యామి తే రూపం సంయుక్తం ప్రతికర్మణా ॥

உக. [illegible]॥
[illegible]।
[illegible]॥

உக. இச்சயாக்ரியதாமத்யப்ரதிகர்மதவோத்தமம்।
ஸப்ரபாண்யவஸஜ்யந்தாம்தவாங்கேபூஷணாநிச।
ஸாதுபஶ்யாமிதேரூபம்ஸம்யுக்தம்ப்ரதிகர்மணா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அத்ய | இப்பொழுது | ஸப்ரபாணி | காந்தியோடுகூடின |
| தவ | உனக்கு | பூஷணாநிச | ஆபரணங்களையும் |
| உத்தமம்-ப்ரதிகர்ம | சிறந்த-அலங்காரமானது | அவஸஜ்யந்தாம் | பூட்டப்படட்டும் |
| இச்சயா | ஆசையோடே [படட்டும் | ப்ரதிகர்மணா-ஸம்யுக்தம்-அலங்காரத்தோடு-கூடின | |
| க்ரியதாம் | (அலங்கரிக்கிறஸ்திரீகளால்)செய்யப் | தே-ரூபம் | உன்னுடைய-உருவத்தை |
| தவ-அங்கே | உன்னுடைய-தேகத்தில் | ஸாது-பஶ்யாமி | நன்முக-பார்க்கிறேன். |

தா-ம்—ஹே ஸீதே! இன்னமென்ன யோசிக்கிறாய். உன்னுடைய ஸௌந்தரியத்திற் கனுகுணமான இப் பேர்ப்பட்ட பர்த்தா கிடைப்பது துர்லபம். உன்னை இம்மலினப்பிரபையோடு பார்க்க எனக்கு விருப்பமில்லை. இதோ நூறுபரிசாரகஸ்திரீகள் வந்திருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு ஸகலாலங்காரங்களையுஞ்செய்து கொள். பரிமளத்திரவியஸகிதமான திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய். திவ்வியாபரணங்களால் பாதாதிகே சபரியந்தம் அலங்கரித்துக்கொள். திவ்வியவஸ்திரங்களைத்தரித்துக்கொள். இவ்வலங்காரங்கள் பிறருடைய நிர்ப்பந்தத்திற்காகச் செய்துகொண்டால் விளங்காவாதலால் மனப்பூர்வமான ஆசையோடு செய்துகொள். இந்த விகாரவேஷம் நீங்கி ஸர்வாபரணாலங்கிருதையாய்,திவ்விய புஷ்பமால்லியாம்பரதாரியாய்,ஸ்வகீயமான உன்னுடைய அப்பிரமேயப்பிரபையோடு பிரகாசிக்கிற உன் ஸௌந்தரியத்தைப் பார்த்தானந்திக்கிறேன். ஹே ஸீதே!மன்மதபாணத்தாலடியுண்டுதவிக்கிற வென்னை உன்னுடைய சோபனதர்சனத்தாலிரக்ஷிக்கவேண்டும்.

౨౨. ప్రతికర్మాభిసంయుక్తా దాక్షిణ్యేన వరాననే । భుంక్ష్వ భోగాన్యథాకామం పిబ భీరు రమస్వ చ॥

உஉ. 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌦𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑍇𑌨𑌵𑌰𑌾𑌨𑌨𑍇।
𑌭𑍁𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌵𑌭𑍋𑌗𑌾𑌨𑍍𑌯𑌥𑌾𑌕𑌾𑌮𑌂𑌪𑌿𑌬𑌭𑍀𑌰𑍋𑌰𑌮𑌸𑍍𑌵𑌚॥

உஉ. ப்ரதிகர்மாபிஸம்யுக்தாதாக்ஷிண்யேநவராநநே।
புங்க்ஷ்வபோகாந்யதாகாமம்பிபபீருரமஸ்வச॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) வராநநே | சிரேஷ்டமானமுகமுடையவளே | போகாந்-புங்க்ஷ்வ | ஸுகங்களை-அநுபவி |
| தாக்ஷிண்யேந | ஸரளத்தாலே | (ஹே) பீரு | ஓ-பயமுடையவளே |
| ப்ரதிகர்மாபிஸம்யுக்தா-அலங்காரத்தோடுகூடினவளாக | | பிப | (மத்தியாதிகளை) பானம்செய் |
| யதாகாமம் | யதேச்சையாக | ரமஸ்வச | க்ரீடி. |

தா-ம்—ஹே ஸுந்தரி! கடைந்தெடுத்த ஸ்வர்ணபிம்பம்போல் திவ்வியப்பிரபையோடு விளங்குகிற உன்னுடைய தனுவினிணையில்லாவெழிலையும், பரிபூர்ண யௌவனபாக்கியத்தையும் வீணான பிடிவாதத்தாலனுபவியாமல் கெடுத்துவிடாதே. இந்த துர்ப்புத்தியைவிட்டு தாக்ஷிண்ணியகுணத்தைக்கொண்டு உனக்கனுரூபனான என்னை ஸகலருமகிழும்படிப் பதியாகவரித்து, அலங்காரத்தைக் கோருகின்ற உன்னுடைய திவ்வியாங்கங்களில் உத்தமாபரணங்களைத்தரித்து அத்புதசோபையுடன் விளங்கு. உனக்கிஷ்டமான போகங்களைத் திருப்தியாக அநுபவி. உத்தியானவனங்களி லுல்லாஸமாயுலாவு. மந்தமாருதனை ஸந்தோஷமாக ஸேவி. நதிகளிலும் தடாகங்களிலும் ஜலக்கிரீடாலீலைசெய். திவ்வியான்ன பக்ஷிய பாயஸங்களைக் குறைவற புஜி. இஷ்டமான மத்தியங்களை ஸம்பூர்ணமாகப்பருகு. உன்னுடைய பிரியநாயகனான என்னோடுசேர்ந்து அஹோராத்திரம் க்ரீடி. இந்தவிதம் ஸந்தோஷமாகக் காலங்கழிக்கும் வழியைத்தேடு.

౨౩. యథేష్టం చ ప్రయచ్ఛ త్వం పృథివీం వా ధనాని చ। లలస్వ మయి విస్రబ్ధా ధృష్టమాజ్ఞాపయస్వ చ॥ మత్ప్రసాదాల్లలంత్యాశ్చ లలంతాం బాంధవా [స్తవ।

உங. 𑌯𑌥𑍇𑌷𑍍𑌟𑌂𑌚𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑍍𑌵𑌂𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂𑌵𑌾𑌧𑌨𑌾𑌨𑌿𑌚।
𑌲𑌲𑌸𑍍𑌵𑌮𑌯𑌿𑌵𑌿𑌸𑍍𑌰𑌬𑍍𑌧𑌾𑌧𑍃𑌷𑍍𑌟𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌸𑍍𑌵𑌚॥

𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌲𑍍𑌲𑌲𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌲𑌲𑌨𑍍𑌤𑌾𑌂𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌸𑍍𑌤𑌵।

உங. யதேஷ்டம்சப்ரயச்சத்வம்ப்ருதிவீம்வாதநாநிச।
லலஸ்வமயிவிஸ்ரப்தாத்ருஷ்டமாஜ்ஞாபயஸ்வச॥

உச. மத்ப்ரஸாதால்லலந்த்யாஶ்சலலந்தாம்பாந்தவாஸ்தவ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| த்வம் | நீயானவள் | த்ருஷ்டம் | காணப்பட்டதை |
| யதேஷ்டம் | யதேச்சையாக | ஆஜ்ஞாபயஸ்வ | ஆஜ்ஞாபி |
| ப்ரிதிவீம்வா | பூமியையாவது | லலந்த்யா: | (என்விஷயத்தில்) பிரீதிசெய்கிற |
| தநாநிச | தனங்களையாவது | தவ | உன்னுடைய |
| ப்ரயச்ச | கொடு | பாந்தவாஶ்ச | பந்துக்களும் |
| மயி | என்னிடத்தில் | மத்ப்ரஸாதாத் | என்அநுக்கிரகத்தால் |
| விஸ்ரப்தா | ஸ்வஸ்தையாக (நம்பினவளாக) | லலந்தாம் | இரமிக்கட்டும். |
| லலஸ்வ | பிரீதிபண்ணு | | |

தா-ம்—ஹே ஜனகாத்மஜே! என்னோடு போகத்தை யபேக்ஷித்தவுடன் நீ இந்த இலங்காநகரத்திற்குப் பட்டமஹிஷியாய் ஸகல அதிகாரங்களையும் நீயே வகித்துச் செங்கோல் செலுத்து. எவனெவனுக்கு எதைக் கொடுக்கவேண்டுமென் றிச்சிக்கிறாயோ, பூமியோ ஸ்வர்ணமோ எதுவோ, அதை உன்னிஷ்டப்பிரகாரங்கொடு. ஸமஸ்த ஆக்கியைகளையும் நீயே விதி. எல்லாவிஷயங்களையும் ஸ்வதந்திரியாய் நீயே நடத்து. ஒன்றைமாத்திரம் நான் விரும்புகிறேன். நீ என்னையே நாயகனுகக்கோரி சிருங்காரபோகங்களா லெனக்குப் பிரீதிபண்ணு. இவ்வுலகி லெனக்கு ஸர்வஸ்வமான காமபோகத்தை யளிக்கிற உன்னுடைய பந்துமித்துருக்களனைவரும் என்னுடைய தயைக்குப் பாத்திரபூதர்களாய் ஒருவராலும் தீங்கடையாது ஸுகமாக வாழ்ந்திருக்கக்கடவர். அவர்களெல்லோரும் என்னுடைய பலத்தால் பயமின்றி ஆனந்தமாக வாழட்டும்.

౨౫. ఋద్ధింమమానుపశ్యత్వం శ్రియంభద్రేయశశ్చమే॥

உ௫. ருத்திம்மமாநுபஶ்யத்வம்ஶ்ரியம்பத்ரேயஶஸ்சமே॥

உ௫. ருத்திம்மமாநுபஶ்யத்வம்ஶ்ரியம்பத்ரேயஶஸ்சமே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) பத்ரே-த்வம் | ஓ-மங்களகரமானவளே-நீ | ஶ்ரியம் | ஸம்பத்தையும்(இராஜ்ஜியலக்ஷ்மியை[யும்) |
| மம-ருத்திம் | என்னுடைய - ஸர்வவஸ்து ஸ்மிருத்தியையும் | யஶஶ்ச | கீர்த்தியையும் |
| | | அநுபஶ்ய | பாராய். |

தா-ம்—ஹே பத்ரே! ஸர்வலோகமுங்கண்டு மகிழும்படியான உத்தமஸௌந்தரியமுள்ள நீ உனக்கு மாலையிட்ட இராமனைவிட்டு இலங்கேசுவரனை என்னைப் பதியாகவடையும்படி பிரார்த்திக்கின்றேனே. இது வீண்மனோராஜ்ஜியமென்றெண்ணுகிறாயோ. ரூபயௌவன குலைசுவரியங்களாலுனக்குத் தகுதியல்லனென்று நினைக்கிறாயோ. உன்னை மணம்புரிந்த இராமனென்கிற மனுஷியனைவிட மேலானவனல்லனென்று யோசிக்கிறாயோ. ஸீதே! இதுவிஷயத்தி லுனக்கு ஸந்தேகம் வேண்டாம். என்னுடைய ஸம்பத்தென்ன, சோபையென்ன, பராக்கிரமமென்ன, யசஸ்ஸென்ன, இவைகளையெல்லா மோர்ந்துபார். சத்துருக்களணுகாத் ஸமுத்திரமத்தியில், இரத்தினகாஞ்சனமயமாய், விசுவகர்மநிர்மாணமாய், ஸகலைசுவரியஸம்பூர்ணமாய், இந்திரகுபேராதிகளுக்கும் கிடைக்காத பாக்கியமாய், அத்விதீயமான ஸுந்தரஸிருஷ்டியாய் அமைந்திருக்கிற இவ்விலங்காநகரத்திற்கு நானீசுவரன். புஷ்பகமென்கிற திவ்வியவிமானத்தில் ஸஞ்சரிப்பவன். மூன்றுலோகங்களிலுமுள்ள வீரர்களுடைய விக்கிரமத்தை யாக்கிரமித்த சூரன். திக்கஜங்களை யெதிர்த்து யுத்தஞ்செய்த தீரன். பசுபதி உமையோடு அசைந்தாடும்படி கைலையைப்பேர்த்த பலவான். மாரனுருக்கொண்ட யௌவனமத்தியில் தன் பிரம்மகுலத்தி லாவிர்ப்பவித்து பிரம்மவரப்பிரதானம்பெற்ற கீர்த்திமான். இவ்விதப் பிரதாபசாலியான என்னுடைய கௌரவத்தை யோசித்துப்பார்.

౨౬. కింకరిష్యసిరామేణసుభగేచీరవాససా। విక్షిప్తవిజయోరామోగతశ్రీర్వనగోచరః॥
వ్రతీస్థండిలశాయీచశంకేజీవతివానవా।

உ௬. கிம்கரிஷ்யஸிராமேணஸுபகேசீரவாஸஸா।
விக்ஷிப்தவிஜயோராமோகதஶ்ரீர்வநகோசர:॥
வ்ரதீஸ்தண்டிலஶாயீசஶங்கேஜீவதிவாநவா।

உ௬. கிம்கரிஷ்யஸிராமேணஸுபகேசீரவாஸஸா।
விக்ஷிப்தவிஜயோராமோகதஶ்ரீர்வநகோசர:॥
வ்ரதீஸ்தண்டிலஶாயீசஶங்கேஜீவதிவாநவா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸுபகே | (ஓ) ஸுந்தரி | ராம: | ஸ்ரீராகவன் |
| விக்ஷிப்தவிஜய: | விடப்பட்டஜயமுடையவனும் [னும் | ஜீவதிவா | பிழைத்திருக்கிறானே |
| கதஶ்ரீ: | போயிருக்கிறராஜ்யலக்ஷ்மியுடையவ | நவா | இல்லையோ (என்று) |
| வநகோசர: | ஆரண்ணியத்தைஇருப்பிடமாயுடையவனும் | ஶங்கே | எண்ணுகிறேன் |
| | | சீரவாஸஸா | மரயுரிவியையுடுத்திருக்கிற |
| வ்ரதீ | அன்னபானநிநியமமுடையவனும் | தேந-ராமேண | (அந்த) ஸ்ரீராகவனோடு |
| ஸ்தண்டிலஶாயீச | பூமியைபடுக்கையாயுடையவனுமான | கிம்-கரிஷ்யஸி | என்ன-பண்ணப்போகிறாய். |

தா-ம்—ஹே திரிலோகஸுந்தரி! உன் புத்திவிசேஷத்தை யென்னவென்று சொல்லுவேன். சுத்த தரித்திரனும் உன்னுடைய ஸௌந்தரியத்திற்குத் தகாதவனும் உனது பாக்கியவிசேஷத்தா லுன்னைவிட்டுப் பிரிந்தவனுமான அந்த ஏழைராமனைக்குறித்து இன்னம் கிலேசப்படுகிறாய். அவன் ஜயஸ்ரீயால் திரஸ்கரிக்கப்பட்ட அபலவான். இராஜலக்ஷ்மியால் திரஸ்கரிக்கப்பட்ட தரித்திரன். பலவானுனால் யுத்தஞ்செய்து ஜயஸ்ரீயோடு இராஜ்ஜியஸம்பத்தை யனுபவியானோ. இப்படி பலமற்று நாடிழந்து திக்கநிழலில்லாமல் காடோடிவந்தான். வனஸஞ்சாரியானபிறகு அவனுக்கு உண்ணச்சோறில்லை, உடுக்கத்துணியில்லை, படுக்கப்பாயில்லை. காய்கிழங்குகளைத்தின்று மரயுரியுடுத்து பூமியில் படுத்து தபஸியாய்த் திரிந்துகொண்டிருந்தான். அவனிப்பொழுது உயிரோடிருக்கிறானோ இல்லையோ அதுவே ஸந்தேகம். அப்படி யவன் ஜீவித்திருந்தாலும் தயோ

வேஷம்பூண்ட விரக்தனுன அவனேடென்ன ஸுகமனுபவிக்கப்போகிருய். உனக்குக் காமரஸம் தரப்போகிருனே, தருவதற்குத்தானவனுக்கு யோக்கியதையுண்டோ. ஸுகமின்றி ஆகாரமின்றி தபஸியாய் விரக்தனுய் வனவாஸஞ்செய்கிற அவ்வேழையைச்சேர்ந்து என்னபலனடையப்போகிருயோ எனக்குத்தெரியவில்லே.

౨౭. నహివైదేహిరామస్త్వాంద్రష్టుంవాప్యుపలప్స్యతే॥పురోబలాకైరసితైర్మేఘైర్జ్యోత్స్నామివావృతామ్।

௨௭. 𑌨𑌹𑌿𑌵𑍈𑌦𑍇𑌹𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂𑌵𑌾𑌪𑍍𑌯𑍁𑌪𑌲𑌪𑍍𑌸𑍍𑌯𑌤𑍇॥
𑌪𑍁𑌰𑍋𑌬𑌲𑌾𑌕𑍈𑌰𑌸𑌿𑌤𑍈𑌰𑍍𑌮𑍇𑌘𑍈𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌮𑌿𑌵𑌾𑌵𑍃𑌤𑌾𑌮𑍍।

௨௭. நஹிவைதேஹிராமஸ்த்வாம்த்ரஷ்டும்வாப்யுபலப்ஸ்யதே॥
புரோபலாகைரஸிதைர்மேகைர்ஜோத்ஸ்நாமிவாவ்ருதாம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) வைதேஹி | (ஓ) ஸீதே | மேகைः | மப்புகளால் |
| ராமः | ஸ்ரீராகவன் | ஆவ்ருதாம் | சூழப்பட்ட |
| த்வாம் | உன்னே | ஜ்யோத்ஸ்நாமிவ | நிலாபோல் |
| புரோபலாகைः | முன்னேகொக்குகளேயுடையதும் | த்ரஷ்டும்வா | பார்ப்பதற்காவது |
| அஸிதைः | கறுத்துமிருக்கிற | நோபலப்ஸ்யதேஹி | அடையமாட்டானன்றே. |

தா-ம். வருஷாகாலத்தில் ஸ்வச்சமானவெண்ணிறமுடைய கொக்குகள்முன்னேடேப்பெற்ற நீர்கொண்டகார்மேகத்தால் மறைக்கப்படும் சந்திரிகையைக்காண்பதரிதுபோல், என்னுலபகரிக்கப்பட்டு பத்திரம்பண்ணப்பட்டிருக்கிறஉன்னே அந்தஇராமன்பார்ப்பதற்குக்கூட அசக்தன்.

౨౮. నచాపిమమహస్తాత్త్వాంప్రాప్తుమర్హతిరాఘవః॥హిరణ్యకశిపుఃకీర్తిమింద్రహస్తగతామివ।

௨௮. 𑌨𑌚𑌾𑌪𑌿𑌮𑌮𑌹𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿𑌰𑌾𑌘𑌵𑌃॥
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌶𑌿𑌪𑍁𑌃𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌹𑌸𑍍𑌤𑌗𑌤𑌾𑌮𑌿𑌵।

௨௮. நசாபிமமஹஸ்தாத்வாம்ப்ராப்துமர்ஹதிராகவः॥
ஹிரண்யகஶிபுःகீர்திமிந்த்ரஹஸ்தகதாமிவ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| இந்த்ரஹஸ்தகதாம் | தேவராஜாவின்கையையடைந்த | த்வாம் | உன்னே |
| ஹிரண்யகஶிபுः * | ஹிரண்ணியகசிபுவினுடைய | மம-ஹஸ்தாத் | என்னுடைய-கையிலிருந்து |
| கீர்த்திமிவ | யசஸ்ஸுபோல் | ப்ராப்துமபி | அடைவதற்குங்கூட |
| ராகவः | ஸ்ரீராகவன் | நசார்ஹதி | தகான். |

தா-ம். மஹேந்திரனுடைய வசத்தையடைந்த ஹிரணியகசிபுவின்கீர்த்தி (பார்யை) போல் என்னுடையஸ்வாதீனத்தையடைந்த உன்னே இராகவன் திரும்பியடையப்போகிறதில்லே.

౨౯. చారుస్మితేచారుదతిచారునేత్రేవిలాసిని॥మనోహరసిమేభీరుసుపర్ణఃపన్నగంయథా।

௨௯. 𑌚𑌾𑌰𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑍇𑌚𑌾𑌰𑍁𑌦𑌤𑌿𑌚𑌾𑌰𑍁𑌨𑍇𑌤𑍍𑌰𑍇𑌵𑌿𑌲𑌾𑌸𑌿𑌨𑌿॥
𑌮𑌨𑍋𑌹𑌰𑌸𑌿𑌮𑍇𑌭𑍀𑌰𑍁𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌃𑌪𑌨𑍍𑌨𑌗𑌂𑌯𑌥𑌾।

௨௯. சாருஸ்மிதேசாருததீசாருநேத்ரேவிலாஸிநீ॥
மநோஹரஸிமேபீருஸுபர்ணःபந்நகம்யதா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| சாருஸ்மிதே | புன்சிரிப்புடையவளே | ஸுபர்ணः | கருத்மானுனவர் |
| சாருததீ | அழகானபற்களேயுடையவளே | பந்நகம்யதா | ஸர்ப்பத்தைப்போல் |
| சாருநேத்ரே | ஸுந்தரமானகண்களேயுடையவளே | மே-மநः | என்னுடைய-மனதை |
| விலாஸிநீ | சிருங்காரசேஷ்டையுடையவளே | ஹரஸி | ஹரிக்கிருய். |
| (ஹே) பீரு | (வாராய்) பயமுடைய (ஸீதே) | | |

தா-ம்—ஹே ஸீதே! கோவக்கனிபோலும் பவழத்தளிர்போலு மதிகோமளமாக விளங்குகிற உன்னுடைய அதரத்தின்மீது நர்த்தனஞ்செய்கிற அந்த மந்தஹாஸத்தினழகும், சந்திரிகையைப்பழிக்கிற அந்த மூருவலழகும், கமலதளம்போலகன்று செவியளவில் நீண்டு கருவிழிகள் பொருந்தி செவ்வரிகளோடி மதன விலாஸத்தோடு விளங்கு மந்த நேத்திரத்துவயத்தினழகும், ஆலிங்கனுதி சேஷ்டைகளால் சிருங்காரமிருதரஸத்தை யமிதமாகப்பொழியவல்ல உன்னுடைய ஸ்வரூபத்தினழகும் இவையெல்லாமொன்றுசேர்ந்து என் மனதைப் பிளக்கின்றனவே. ஹே ஸுந்தரி! கருடன் வாயிற்பற்றிய ஸர்ப்பம்போ லுன் வசத்தில் யான் சிக்கிக்கொண்டு துடிக்கிறேன். கண்களாகிற பாணங்களால் மார்பைப்பிளக்கிருய். இலாவண்ணியமாகிற அக்கினியால் தஹிக்கிருய். இந்தவிதம் என்னுவி உன் ஸ்வாதீனத்தை யடைந்துவிட்டது.

* ஹிரணியகசிபுவனத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கையில் கர்ப்பிணியாயிருந்த அவன்பத்தினியை இந்திரனபகரித்து ஹிரணியனேவிட கொடியன்ஜனிப்பனேவென்கிற பயத்தாலவளேக்கொல்லஎத்தனிக்க நாரதமஹரிஷியின் நல்வார்த்தையாலவளேவிட்டுவிட்டான். (இதனுல் பிராட்டியும் ஸ்ரீராகவனேயடைவளென்பது கருத்து).

౩౦. క్లిష్టకౌశేయవసనాంతన్వీమప్యనలంకృతామ్॥ త్వాందృష్ట్వాస్వేషుదారేషురతింనోపలభామ్యహమ్।

௩௰. 𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑍌𑌶𑍇𑌯𑌵𑌸𑌨𑌾𑌂𑌤𑌨𑍍𑌵𑍀𑌮𑌪𑍍𑌯𑌨𑌲𑌂𑌕𑍃𑌤𑌾𑌮𑍍॥
𑌤𑍍𑌵𑌾𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌸𑍍𑌵𑍇𑌷𑍁𑌦𑌾𑌰𑍇𑌷𑍁𑌰𑌤𑌿𑌂𑌨𑍋𑌪𑌲𑌭𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍।

௩௰ க்லிஷ்டகௌஶேயவஸநாம்தந்வீமப்யநலங்க்ருதாம்॥
த்வாம்த்ருஷ்ட்வாஸ்வேஷுதாரேஷுரதிம்நோபலபாம்யஹம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| க்லிஷ்டகௌஶேயவஸநாம் = | | த்ருஷ்ட்வா | பார்த்து |
| க்லிஷ்ட | கசங்கின | ஸ்வேஷு-தாரேஷு | சொந்தமான-பத்தினிகளிடத்தில் |
| கௌஶேயவஸநாம் | பட்டுவஸ்திரமுடையவளும் | ரதிம் | ப்ரீதியை |
| தந்வீம் | இளைத்தவளும் | அஹம் | நான் |
| அநலங்க்ருதாமபி | அலங்கரித்துக்கொள்ளாமலிருக்கிற | நோபலபாமி | அடைகிறேனில்லை. |
| த்வாம் | உன்னை | | |

தா-ம்—ஹே மைதிலீ! உன்னுடைய மோகனசக்திப் பிரபாவத்தை யென்னவென்று சொல்லுவேன். நீ இப்பொழுது கசங்கி கிழிந்து மலினமாய் ஸ்பர்சயோக்கியமற்றிருக்கிற ஸாமான்னிய பட்டுவஸ்திரம் தரித்திருக்கிறாய். அன்னபானமில்லாது தேகமிளைத்து மிகவும் வாடியிருக்கிறாய். ஆபரணாலங்காரமின்றி பிறந்த வடிவோடு தேகமுழுதும் புழுதிபடிந்து புகரற்றிருக்கிறாய். இப்படி மோகனங்கிதங்கள் கொஞ்சமேனுமில்லாமலிருக்கையிலும் உன்னுடைய அவாங்மனஸகோசரமான இலாவண்ணியம் என்மனதைக் கொள்ளைகொண்டுவிட்டது. திவ்வியரூபவதிகளாய் எனக்கு இதுவரையில் காமஸுகந்தந்துவந்த என்னுடைய பிரிய பார்யைகளிடத்திலும் உன்னுடைய தர்சனானந்தரம் இரதிலீலைகொள்ள நானிச்சிக்கவில்லை. அவர்கள்மீதெனக்கிருந்த ஸ்வல்பவியக்தமான மோகத்தை உன்னுடைய ஸௌந்தரியமழித்துவிட்டது.

౩౧. అంతఃపురనివాసిన్యఃస్త్రియస్సర్వగుణాన్వితాః॥ యావంత్యోమమసర్వాసామైశ్వర్యంకురుజానకి।

௩௧. 𑌅𑌂𑌤𑌃𑌪𑍁𑌰𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍍𑌯𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃॥
𑌯𑌾𑌵𑌂𑌤𑍍𑌯𑍋𑌮𑌮𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌮𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂𑌕𑍁𑌰𑍁𑌜𑌾𑌨𑌕𑍀।

௩௧. அந்த:புரநிவாஸிந்ய:ஸ்த்ரியஸ்ஸர்வகுணாந்விதா:॥
யாவந்த்யோமமஸர்வாஸாமைஶ்வர்யம்குருஜாநகி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஜாநகீ | (ஓ) ஜனகபுத்திரியே | யாவந்த்ய: | எவ்வளவுபேர்களோ |
| ஸர்வகுணாந்விதா: | ஸமஸ்தகுணங்களோடு கூடி | ஸர்வாஸாம் | அவ்வளவுபெயர்களுக்கும் |
| அந்த:புரநிவாஸிந்ய: | அந்தப்புரத்தில்வஸிக்கிற | ஐஶ்வரியம் | ஸுவாமித்துவத்தை |
| ஸ்த்ரிய: | ஸ்திரீகள் | குரு | (நீ) செய். |
| மம | எனக்கு | | |

தா-ம்—ஹே ஜனகசெல்வமே! எனது அந்தப்புரத்தில் வாஸஞ்செய்கிற மஹாரூபவதிகளான என்னுடைய பத்தினிகளனைவரும் உனக்கு ஸேவகம் செய்யட்டும். அவர்களில் தேவகந்தர்வ யக்ஷ கின்னர கிம்புருஷ வித்தியாதரஸ்திரிக ளனேகர், உத்தமகுலப்பிரஸூதைகளான மஹாராஜாக்களுடைய புத்திரிகளனேகர். அவர்களுடைய லோகோத்தரமான ஸௌந்தரியவிசேஷத்தைக் கேள்வியுற்று யான் யுத்தஞ்செய்து அவர்களை யடைந்தனன். அந்த ஸ்திரீரத்தினமண்டலத்திற்கு அதிபதியாய் என்னுடைய அவிச்சின்னபோகத்திற்குரியளாய் இவ்விலங்காநகரராஜமஹிஷியாய் விளங்குவதற்கு விரும்பு.

౩౨. మమహ్యసితకేశాంతేత్రైలోక్యప్రవరాఃస్త్రియః॥ తాస్త్వాంపరిచరిష్యంతిశ్రియమప్సరసోయథా।

௩௨. 𑌮𑌮𑌹𑍍𑌯𑌸𑌿𑌤𑌕𑍇𑌶𑌾𑌂𑌤𑍇𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌪𑍍𑌰𑌵𑌰𑌾𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃॥
𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌪𑌰𑌿𑌚𑌰𑌿𑌷𑍍𑌯𑌂𑌤𑌿𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑌪𑍍𑌸𑌰𑌸𑍋𑌯𑌥𑌾।

௩௨. மமஹ்யஸிதகேஶாந்தேத்ரைலோக்யப்ரவராஸ்த்ரிய:॥
தாஸ்த்வாம்பரிசரிஷ்யந்திஶ்ரியமப்ஸரஸோயதா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) அஸிதகேஶாந்தே - | (ஓ) கறுப்புற்றகேச நுனியுடையவளே | மம-ஸ்த்ரிய: | என்னுடைய-ஸ்திரீகள் |
| த்ரைலோக்யப்ரவரா: - | மூன்றுலோகங்களிலும்சிரேஷ்டர்களான | ஶ்ரியம் | ஸ்ரீமஹாலக்ஷிமியை |
| | | அப்ஸரஸோயதா | அப்ஸரஸ்திரீகள்போல் |
| | | த்வாம் | உன்னை (உனக்கு) |
| தா: | அப்படிபிரஸித்திபெற்ற | பரிசரிஷ்யந்தி | ஸேவிக்கட்டும் (பணிவிடைசெய்யட்டும். |

தா-ம்—நுனிபிளந்து சிவந்திராமல் ஏகாக்கிரங்களோடு நன்றாகக்கறுத்து நீண்டுபிரகாசிக்கிற திருக்கூந்தலையுடைய திருமாதே! க்ஷீரஸாகரத்திலாவிர்ப்பவித்த மங்களதேவதையான இலக்ஷ்மீதேவியை அப்ஸரஸஸ்திரீஸமூகஞ் சூழ்ந்துபசரிப்பதுபோல் திரிலோகபிரஸித்த ஸுந்தரிகளான வென்பத்தினிகளனைவரும் உன்னைச்சூழ்ந்துபசரிக்கும்படியான பெரும்பாக்கியத்தை நீ விரும்பு.

33. యానివైశ్రవణేసుభ్రురత్నానిచధనానిచ॥ తానిలోకాంశ్చసుశ్రోణిమాంచభుంక్ష్వయథాసుఖమ్।

௩௩. யாநிவைச்ரவணேஸுப்ரூ ரத்நாநிச தநாநிச॥
தாநிலோகாம்ச்சஸுச்ரோணி மாம்சபுங்க்ஷ்வயதாஸுகம்।

௩௩. யாநிவைஶ்ரவணேஸுப்ரூரத்நாநிசதநாநிச॥
தாநிலோகாம்ஶ்சஸுஶ்ரோணிமாம்சபுங்க்ஷ்வயதாஸுகம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸுப்ரு | (ஓ) சிறந்தபுருவமுடையவளே | தாநி | அவைகளையும் |
| (ஹே) ஸுஶ்ரோணி | அழகியபிருஷ்டமுடையவளே | லோகாம்ஶ்ச | லோகங்களையும் |
| வைஶ்ரவணே | குபேரஸம்பந்தமான (பட்டணத்தில்) | மாம்ச | என்னையும் |
| யாநிரத்நாநிச | எந்தரத்தினங்களும் | யதாஸுகம் | யதாஸுகமாக |
| தநாநிச | தனங்களும் (இருக்குமோ) | புங்க்ஷ்வ | அனுபவி(ஸ்வாதீனம்செய்துகொள். |

தா-ம்—விற்போல் வளைந்த புருவமுடைய திவ்வியானனே! உன்மீது எனக்குள்ள மோகம் அமிதமாக விர்த்தியாகிறது. உனக்கு எதுவேண்டுமென்றாலும் தருகிறேன். குபேரபொக்கிஷத்திலுள்ள ஸகலரத்தினங்களும் தனங்களு முன் ஸ்வாதீனம். விக்கிரமதேஜஸ்ஸால் நானாண்டுவருகிற ஸகலராஜ்ஜியமு முன் ஸ்வாதீனம். ஜகத்பிரஸித்தவீரனான நானுமுனக்கு பிருத்தியன். பெருத்துருண்டு கனத்து விளங்குகிற பிருஷ்டத்துவயமாகிற மஸ்தகத்தா லென் கல்நெஞ்சை யிடித்துப்பிளக்கிற ஹே விலாஸினீ! உன்னை யடையும் விஷயத்திலுனக்கு ஸர்வத்தையு மர்ப்பணஞ்செய்கிறேன். எனக்கு ஐசுவரியம் வேண்டாம், இராஜ்ஜியம் வேண்டாம், ஆத்மஸ்வாதீனமும் வேண்டாம். உன்னுடைய சிருங்காரவிலாஸத்தை யடைந்தேனானால், ஹே பிரியே! அதுவே யெனக்கு ஸர்வஸ்வம்.

34. నరామస్తపసాదేవినబలేననవిక్రమైః॥ నధనేనమయాతుల్యస్తేజసాయశసాపివా।

௩௪. நராமஸ்தபஸாதேவிநபலேநநவிக்ரமை:॥
நதநேநமயாதுல்யஸ்தேஜஸாயஶஸாபிவா।

௩௪. நராமஸ்தபஸாதேவிநபலேநநவிக்ரமை:॥
நதநேநமயாதுல்யஸ்தேஜஸாயஶஸாபிவா।

| பதம் | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) தேவி | வாராய்ஸீதே | விக்ரமை:-ந | பராக்கிரமங்களினாலும்-ஆகான் |
| ராம: | இராகவன் | தநேந-ந | தனத்தினாலும்-ஆகான் |
| தபஸா | தபஸ்ஸினால் | தேஜஸா-ந | பிரதாபத்தாலும்-ஆகான் |
| மயா | என்னோடு | யஶஸாபிவா | யசஸ்ஸினாலும் |
| துல்ய:-ந | ஸமானனாக-ஆகான் | (மயாதுல்யோந) | (ஒருவிதத்தாலும்)என்னோடுஸமானனாகான். |
| பலேந-ந | தேகஸாரத்தினால்-ஆகான் | | |

தா-ம்—திவ்வியப்பிரபையோடு ஜ்வலிக்கிற ஸுந்தரமே! உன்னுடைய துக்கத்திற்குக் காரணபூதனான இராமனுடைய கௌரவத்தைக் கொஞ்சம் வியவகரிப்போம். அவனுக்கு மெனக்குமுள்ள தாரதம்மியத்தை விசாரிப்போம். பதினாயிரவருஷம் கோகர்ணத்திற் கடுந்தவம்பூண்டு மலரவன் பிரஸாதம்பெற்ற வெனக்கு தபஸ்ஸில் ஸதிருசனாவனோ உன்னுடைய ராமன். கைலாஸத்தைப் பேர்த்துப் பந்தாடின தோள்வலியுடைய வெனக்கு தேகபலத்தில் ஸதிருசனாவனோ அந்த கந்தமூலாசனனான உன்னுடைய ராமன். இந்திரவருணகுபேரயமாதிகளையும் திக்கஜங்களையும் வென்று மூன்றுலோகங்களையும் நாமோச்சாரணமாத்திரத்தால் கம்பிக்கச்செய்கிற உக்கிரகோதண்டத்தைப்பிடித்த வீரனான வெனக்கு விக்கிரமத்தில் ஸதிருசனாவனோ அந்த விளையாட்டு விற்பிடித்த உன்னுடைய ராமன். குபேரசெல்வத்தைப் பழிக்கும்படியான தனத்தோடு நிறைந்து மார்த்தாண்ட மண்டலம்போல் ஜ்வலிக்கிற ஸ்வர்ணரத்தின நிர்மாணமான இலங்காநகரத்திற்கதிபதியான வெனக்கு ஐசுவரியத்தில் ஸதிருசனாவனோ அந்த தரித்திரசிகாமணியான உன்னுடைய ராமன். பிரம்மகுலப்பிரஸூதனும் இராஜராஜேசுவரனும் திவ்வியாலங்கிருதவேஷதாரியுமான என்னுடைய தேஜஸ்ஸுக்கு ஸதிருசமான தேஜஸ்ஸுடையனாவனோ அந்த ஸர்வநிகிருஷ்ட மானிடவடிவம்பூண்ட உன்னுடைய ராமன். பலபௌருஷவிக்கிரமாதிகுணங்களாலும் ஸர்வசத்துருஹர்த்தாவென்கிற பிரதாபத்தாலும் கீர்த்திமானாய் விளங்குகிற வெனக்கு யசஸ்ஸில் ஸதிருசனாவனோ அந்த நாடோடியான உன்னுடைய ராமன். எந்தவிதத்திலும் தானவனெனக்கு ஸமானன். அவனுக்கு மெனக்கும் ஸாமான்னியங் கல்பிக்க வகையுமுண்டோ. அவன் யாரோ ஒருதரித்திரன், அபலவான், அதிருஷ்டஹீனன், வகையின்மையால் இராஜ்ஜியத்தைப் பறிகொடுத்த துர்ப்பலன். ஏதோ கிஞ்சித் புண்ணியவிசேஷத்தா லுனக்கு மாலையிட்டான். மஹாபாகையான உன்னை நீடூழியனுபவிக்கும்படியான பாக்கியவந்தனோ. ஸீதே! உனக்கேனிந்த அல்பபுத்தி. ஏழைராமனை அழகுராமனென்று நினைத்து மோசம்போகிறாயே. அவனைத் திரும்பியடைந்தக்கா லுனது யௌவனம் ஸபலமாகுமோ. உனது ஸௌந்தரிய மனுருபஸௌந்தரிய யோகமுடையதாமோ. ஏனிந்த வீணெண்ணம். இராமனை நிராசைபண்ணு, உனது போகத்தைப் பிரார்த்திக்கிற இராவணனை ஆதரவுபண்ணு. நீஸுகப்படலாம்.

౩౫. పిబవిహరరమస్వభుఙ్క్ష్వభోగాన్ ధననిచయంప్రదిశామి మేదినీంచ॥
మయిలలలలనే యథాసుఖంత్వంత్వయిచసమేత్యలలంతు బాంధవాస్తే।

௩௫. [illegible]
[illegible]

௩௫. பிபவிஹரரமஸ்வபுங்க்ஷ்வபோகாந்தநிசயம்ப்ரதிஶாமிமேதிநீம்ச॥
மயிலலலலநேயதாஸுகம்த்வம்த்வயிசஸமேத்யலலந்துபாந்தவாஸ்தே।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) லலநே | (ஓ) விலாஸவதி | ப்ரதிஶாமி | கொடுக்கிறேன் |
| த்வம் (மது) பிப | நீ (மத்தியத்தை) குடி | மயி | என்னிடத்தில் |
| விஹர | ஸஞ்சரி | யதாஸுகம் | ஸுகத்தையதிக்கிரமியாமல் |
| ரமஸ்வ | கிரீடி | லல | கிரீடி |
| போகாந் | ஸுகங்களை | தே | உன்னுடைய |
| புங்க்ஷ்வ | அனுபவி | பாந்தவாஶ்ச | பந்துக்களும் |
| தநிசயம் | தனஸமூகத்தையும் | ஸமேத்ய | வந்து |
| மேதிநீம்ச | பூமியையும் | த்வயிச | உன்னிடத்திலும் |
| தே | உன்பொருட்டு | லலந்து | ஆசையுடையவர்களாகட்டும். |

தா-ம்—சிருங்காரவிலாஸயோக்கியமான மனோரமே! நீ யென்மடியிலேறி ஸமஸ்த ஸுகங்களையுமனுபவி. யதேஷ்டமாக மதுபானம்பண்ணு, புஷ்பகத்திலேறி இஷ்டப்பிரகாரம் ஸஞ்சரி. அஹோராத்திரமென்னோடுகூடி கிரீடி. இப்படி, இச்சித்தபோகங்களைக் காலநிர்ணயமும் வரையளவுமில்லாது புஜி. ஸமஸ்தராஜ்ஜியங்களையும் தனங்களையு முன்வசப்படுத்திவிடுகிறேன். அவைகளை விரும்பியபடி யனுபவி. எனக்கு சிருங்காரரஸத்தைமாத்திரம் குறைவறக்கொடு. உன்னுடைய மன்மதலீலையாலெனக்குத் திருப்திசெய், அதுதானென்னுடைய பிரார்த்தனை. மற்றவிஷயங்களில் உனதாக்கினையே செல்லட்டும். உனது பாந்தவாளனைவரும் இங்கு பயமின்றி வந்து உன்னோடு ஸந்தோஷமாய் வஸிக்கட்டும்.

౩౬. కుసుమితతరుజాలసంతతాని భ్రమరయుతాని సముద్రతీరజాని॥ కనకవిమలహారభూషితాంగి విహరమయాసహ భీరు కాననాని।

௩௬. [illegible]

௩௬ உ. [illegible]

௩௬. குஸுமிததருஜாலஸந்ததாநிப்ரமரயுதாநிஸமுத்ரதீரஜாநி॥

௩௬ உ. கநகவிமலஹாரபூஷிதாங்கிவிஹரமயாஸஹபீருகாநநாநி।

இதி ஸ்ரீ[illegible] ஸுந்தரகாண்டே - விம்ஶ: ஸர்க்க:.

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) கநகவிமலஹாரபூஷிதாங்கி= | | தருஜால | விருக்ஷவரிசையினால் |
| கநகவிமல | பொன்போல் ஸ்வச்சமான | ஸந்ததாநி | திட்டமானவும் |
౧౬. ఉపధాయభుజంతస్యలోకనాథస్యసత్కృతమ్॥కథంనామోపధాస్యామిభుజమన్యస్యకస్యచిత్।

கசு.* 𑌉𑌪𑌧𑌾𑌯𑌭𑍁𑌜𑌂𑌤𑌸𑍍𑌯𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑌸𑍍𑌯𑌸𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍍॥
𑌕𑌥𑌂𑌨𑌾𑌮𑍋𑌪𑌧𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌭𑍁𑌜𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌯𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍।

கசு. உபதாயபுஜம்தஸ்யலோகநாதஸ்யஸத்க்ருதம்॥
கதம்நாமோபதாஸ்யாமிபுஜமந்யஸ்யகஸ்யசித்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (அஹம்) | (நான்) | அந்யஸ்ய | இதரனான |
| லோகநாதஸ்ய | லோகநாயகனான | கஸ்யசித் | ஒராளொருவனுடைய |
| தஸ்ய | அந்தராமனுடைய | புஜம் | தோளை |
| ஸத்க்ருதம் | பூஜிக்கத்தக்கின | கதம்நாம | எப்படி தான் |
| புஜம் | வலதுதோளை | உபதாஸ்யாமி | திண்டாகச்செய்துகொள்வேன். |
| உபதாயா | திண்டாகச்செய்துகொண்டு | | |

தா-ம்—ஸர்வலோக ரக்ஷணத்தைவகித்து அதனாலதிபூஜ்ஜியதையான ஸ்ரீராகவனுடைய வலதுதிரு த்தோளையடைந்து ஸுகித்த யான் வேறுபுருஷனுடைய தோளையடைந்து என்னவிதம் ஸுகமுறக்கூடும். பராக்கிரமத்திலும், ஔதாரியத்திலும், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனத்திலும் அந்த தீரனுடைய தோள்க ளுக் கிவ்வுலகிலிணையுண்டோ. பிரம்மாதிஸ்தாவராந்தத்திற்கும் நாதனான அந்தபுருஷோத்தமனுடைய புஜஸம் ச்லேஷத்தா லின்புற்றவெனக்கு மற்றபிராகிருத புருஷனுடையதோள் என்னஸுகம் தரக்கூடியது.

౧౭. అహమౌపయికీభార్యాతస్యైవవసుధాపతేః॥వ్రతస్నాతస్యవిప్రస్యవిద్యేవవిదితాత్మనః।

கஎ. 𑌅𑌹𑌮𑍌𑌪𑌯𑌿𑌕𑍀𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑌵𑌸𑍁𑌧𑌾𑌪𑌤𑍇𑌃॥
𑌵𑍍𑌰𑌤𑌸𑍍𑌨𑌾𑌤𑌸𑍍𑌯𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌵𑌵𑌿𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।

கஎ. அஹமௌபயிகீபார்யாதஸ்யைவவஸுதாபதே:॥
வ்ரதஸ்நாதஸ்யவிப்ரஸ்யவித்யேவவிதிதாத்மந:।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வ்ரதஸ்நாதஸ்ய | வித்தியாவிருத ஸ்நானம் செய்தவனும் | தஸ்ய-வஸுதாபதேரேவ | அந்தபூபதியான (இராமனுக்கே) |
| விதிதாத்மந: | ஆத்மஜ்ஞானமுமுடைய | அஹம் | நான் |
| விப்ரஸ்ய | பிராம்ஹணனுக்கு | ஔபயிகீ | தகுதியான |
| வித்யேவ | யோகாப்யாஸரூபவித்தைபோல் | பார்யா | மனைவி. |

தா-ம்—வேதவேதாங்க சாஸ்திரார்த்தங்களை நன்றாயுணர்ந்து அவ்வேதங்களுக்குப்பரனானபரமாத்மா வின்ஸ்வரூபத்தையறிந்த பிராம்மணோத்தமருக்குரிய யோகவித்தைபோல், சீலவயோவிருத்தியால் துல்யரா ய் பூமாதேவிக்குப் பதியாயிருக்கிற ஸ்ரீராகவனுக்கே நான் உசிதையானபாரியை. அதாவது "ஹ்ரீஸ்சதேல க்ஷ்மீஸ்சபத்ந்யௌ" என்கிற வேதவாக்கியத்திற்கிணங்க, பூதேவியைப் பத்தினியாயடைந்துள்ள ஸ்ரீமந்நாரா யணனுக்கேயுரிய இலக்ஷ்மீதேவி நானென்று கூடமாகத்தெரிவிக்கிறாள்.

౧౮. సాధురావణరామేణమాంసమానయదుఃఖితామ్॥వనేవాశితయాసార్ధంకరేణ్వేవగజాధిపమ్।

கஅ. ஸாது-ராவணராமேண மாம்ஸமாநய து-கிதாம்॥
வநே வாஸிதயா ஸார்த்தம் கரேண்வேவ கஜாதிபம்।

கஅ. ஸாதுராவணராமேணமாம்ஸமாநயதுஃகிதாம்॥
வநேவாஸிதயாஸார்த்தம்கரேண்வேவகஜாதிபம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ராவண | வாராய் இராவணனே | கரேண்வா (கரேணும்) | பெண்யானையை |
| துஃகிதாம் | துக்கத்தையடைந்த | கஜாதிபமிவ (கஜாதிபேநேவ)-கஜராஜாவோடுபோல் |  |
| மாம் | என்னை | ராமேண-ஸார்த்தம் | ஸ்ரீராகவனோடுகூட |
| வநே | அரணியத்தில் | ஸாதுஸமாநய | நன்றாக சேர்ப்பி. |
| வாஸிதயா | யௌவனமுடைய |  |  |

தா-ம்—அரணியத்திற் பதியின்மையால் துக்கப்படுகிற பெண்யானையை புருஷகஜத்தோடு சேர்ப்பது போல் நாதனையிழந்து துக்கபீடிதையாய் தீனவதனையாய் அன்னபானமின்றிவருந்துகிற வென்னோடு என் பிராணதாரகனை ஸ்ரீராகவனைச்சேர்க்கிற பரமோபகாரத்தைப்பண்ணு.

முன்சுலோகத்தால் ஸீதாராமாள் இலக்ஷ்மீநாராயணனென்றுதெரிவித்து இந்தசுலோகத்தால் தன்னை ஸ்ரீராகவனோடு சேர்ப்பித்து பகவச்சரணங்களைப்பற்றி ஸேவித்தால் அபராதக்ஷமங்கிடைத்து க்ஷேமமுண்டாகுமென்கிறாள்.

౧౯. * మిత్రమౌపయికంకర్తుంరామస్థానంపరీప్సతా॥వధంచానిచ్ఛతాఘోరంత్వయాసౌపురుషర్షభః।

கக. மித்ரமௌபயிகம் கர்த்தும் ராமஸ் ஸ்தாநம் பரீப்ஸதா॥
வதம் சாநிச்சதா கோரம் த்வயா ஸௌ புருஷர்ஷப:।

கக. மித்ரமௌபயிகம்கர்த்தும்ராமஸ்தாநம்பரீப்ஸதா॥
வதம்சாநிச்சதாகோரம்த்வயாஸௌபுருஷர்ஷப:।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸ்தாநம் | (வாஸயோக்கியமானஇலங்கையின்) ஸ்தானத்தை | த்வயா | உன்னால் |
|  |  | புருஷர்ஷப: | புருஷசிரேஷ்டனான |
| பரீப்ஸதா | கோருகிறவனும் | அஸௌ-ராம: | இந்த ஸ்ரீராகவன் |
| கோரம் | பயங்கரமான | மித்ரம் | ஸ்நேகததை |
| வதம் | கொலையை | கர்த்தும் | செய்துகொள்வதற்கு |
| அநிச்சதாச | இச்சியாதவனுமான | ஔபயிகம் | யுக்தமானவர். |

தா-ம்—அடேராவண! நீ ஸ்ரீராகவனுக்கு மஹாபராதஞ்செய்துவிட்டாய். அந்த இரகுவீரனையெதிர்த்து நீ ஜீவியாய். நீ இத்தனைகாலம் பெருமையோடாண்டுவந்த இவ்விலங்காநகரத்தில் நீடூழிவாழ விரும்பினையாகில், யுத்தகளத்தில் கோரமானமரணத்தையடையாது ஜீவிக்கவிரும்பினையாகில், உடனே அந்த சரண்ணியனை ஸ்நேகம்செய்துகொள். மஹாபராதிகளாயினும் சரணமடைந்த சத்துருக்களையிரக்ஷிக்கிற குணமுள்ளவர். அபராதங்களைக் கொஞ்சமேனும் ஸ்மரியாததயாளு. அவரை நீயேபோய் வணங்கினையாகிலுனக்கு மங்களமுண்டாகும். இல்லாவிடில் புத்திரமித்திர பாந்தவர்களோடு ஒருமிக்க மாண்டுபோவாய். மரிப்பதிலும் வீரமரணங் கிடைக்குமென்றெண்ணாதே. உன்னைச் சித்திரவதம்பண்ணி படுநரகிற்றள்ளுவார். இந்தகோரத்தை விரும்பாயாகில் அவரைச் சரணமடைந்து ஜீவிக்கக்கடவாய்.

தநிஶ்லோகியிநு விஶேஷாயடு்.

சுஶோகவநிகையிலே எழுந்தருளியிருக்கிற பிராட்டி ஸந்நிதியிலே ராவணநுசென்று தன்னுடைய வஹிஜநவிஷயவிநோதங்களில் காட்டாரில்காட்டில் தனக்குள்ளமினுக்கத்தைச்சொல்லியும் ... வியாந க்ஷத்ர யநயாநு ... ஊஷண வசிகா வாசிவ ... ஊவஸ ஊவஸிகளைத் தருகிறேனென்றும் பிராட்டியை நிலைபோக்கலாமோவென்று ஏத்தி வார்த்தைசொல்லி பிராட்டியு மிவன்சொல்லுகிறவை யொன்றையும்பாராதே இவனுடைய சுநந்தத்தையேபார்த்து இவனுக்கொரு நல்வார்த்தைசொல்லுவாரில்லாமையிறே இவனிப்படி பிதற்றுகிறதென்று ஆவாய ... வாயியாய் ... ஆத்தெதயாகையாலே இவனுக்கு ஹிதஞ்சொல்லுகிறாள். சொல்லுகிறவிடத்தில் - த்ருணமந்தராகக்ருத்வா-என்று ... பார்த்து வார்த்தைசொல்லக்கடவதல்லவென்றும் ... யாலே யாதல்- த்ருணத்தோபாதியும் அவனை மதியாமையாலேயாதல் - சுவேதநமான வித்துரும்பு ப்ரதிவசநம்பண்ணிலன்றோ நான்சொன்ன வார்த்தையை யிவன் ப்ரதிபத்திபண்ணுவதென்றும் நினைவாலேயாதல் - ... நினைவாலேயாதல்-பெருமாள் துரும்பைக்கொண்டு காகத்தையோட்டினாப்போலே இவளு மித்துரும்பைக்கொண்

டிவனை யோட்டவேணுமென்றும் நினைவாலேயாதல். ப்ரமாதஸ்ஸம்போலே பராபவாயனை யுனக்கு ஹோமஹ்மிதுவன்றோவென்றும் நினைவாலேயாதல் - ஸீதாஹவஹ நஷ்டேஃம் - என்று ஆத்மகமான சுத்தி யைஸ்ரீதஜமாகப்பண்ணப் புகுகிறுப்போலே அசேதநமான துரும்பை சேதநமாகப் பண்ணுவோமெ ன்கிற ஸங்கல்பத்தாலேயாதல் – ஆஸனமாயிருக்கிற விவனுக்கும் நமக்குமொரு வ்யவதாநம் வேணுமென் று நினைவாலேயாதல்-துரும்பைத் தூணாக்கி யித்தூணில் நின்றும் ராகவஸிம்ஹத்தைப் புறப்பட விக்கவே ணுமென்றும் நினைவாலேயாதல். ப்ரத்யுவாச சுசிஸ்மிதா-சொல்லப்புகுகிறவிவள் வீரபத்நியாகையாலே இப்புல்லைக்கவ்வி அவ்வாண்பிள்ளை காலிலேவிழாயென்று நினைவாலேயாதல்-என்னைப்போரப்பொலியச்சொ ன்ன வுன்னையும் நீயடிக்கின்ற ராக்ஷஸர்களையு மித்துரும்போபாதிகாண் நினைத்திருப்பதென் றும் நினைவாலேயாதல் - துரும்பைமுன்னேபொகட்டு நாஹமௌபயிகீ பார்யா பரபார்யா ஸதீ தவ - எ ன்றிந்த ஔபயிகீ யுனக்காகாதுகாண். ஸ்வேஷு தாரேஷு ரம்யதாம் - உனக்கு வகுத்த பெண்டுகள் வய றெரியாதபடி யவர்களோடுபொருந்தி வர்த்திக்கப் பாராயென்றுசொல்லி - இஹ ஸந்தோ ந வா ஸந்தி - பள்ள ரும்பறையருமாய்ப் பெரும்பரப்பான யித்தேசத்துக்குள்ளே ஒருவன் ஸந்துப்பட்டானின்றுல் இங்ஙனே செய்யலாகாதுகாணென்று ஹிதஞ்சொல்லி மீழ்கைக்கு ஒருநன்மனிதரில்லையாகாதே. ந ஸந்தி - ஸ்ரீவிபீ ஷணாழ்வான் தொடக்கமான ஸஜ்ஜநர்களுண்டாகையாலே ஸத்துக்களில்லையென்னவொண்ணாது. உண்டு; ஸதோ வா நாநுவர்த்தஸே - ஸதாம் வாணீ ப்ரணீதாஸேவயா உபதேஷ்ட்ரி - என்று தங்கள் காலிலேகுனிந் தநுவர்த்திக்கிறவர்களுக்கிறே அவர்கள் நல்லதுசொல்லுவது-அப்படிக் கவர்கள் காலிலேகு னிந்தறியாயோ-அடியேதொடங்கி நீ யில்வூரிலிருந்தவளல்ல. நேத்துவந்த நீ குனியேனென்றறிந்தபடி யெ ன்னென்ன - ததா ஹி விபரீதா தே புத்தி: - உன் புத்தியின் பொல்லாங்குதானே அதைச் சொல்லுகிற துகாணென்ன புத்தியின்பொல்லாங்கு அறிகைக்கு நீ யதைப்பார்த்தியன்றேயென்ன - ஆசாரவர்ஜிதா - உன் னுடைய வர்த்தனத்தாலே அநுமித்தேன்காணென்று ஹிதஞ்சொல்லுமவர்கள் சொல்லாதபடியானவிவ னுடைய துராசாரத்தைக்கண்டு வெறுத்து இனியொருவனையும் அநுவர்த்திக்கவேண்டா - அநுவர்த்த நிரபேக்ஷமாக நானுனக்கு ஹிதஞ்சொல்லுகிறேன். நான் சொன்னபடியே அநுஷ்டிக்கப் பாராயென்கிறு ள் - ஆமாகில் அநுஷ்டிக்கிறேன், அந்த ஹிதந்தன்னைச் சொல்லலாகாதோவென்ன - மித்ரமௌபயிகங்கர்த்தும் ராம: - பெருமாளோடே வுனக்கு விரோதம்பண்ணினால் ஜயியாது, அவரோடே உறவுபண்ணக்காண வடு ப்பதென்கிறாள். மித்ரங்கர்த்தும் ஔபயிகம் - தீரக்கழிய வபராதம் பண்ணின வுனக்கு அவர்திருவடிகளிலே ஶரணம்புகவேணுங்காண் - மித்ரமென்றுநிற்கச்செய்தே ஶரணமென்பானென்னென்னில் - மேல்ஶ்லோகத்தி லே - விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல: - தேந மைத்ரீ பவது தே - என்று அவர் ஶரணாகதவத்ஸ லர்காண். ஆனபின்பு நீயும் ஶரணம்புகாயென்று அர்த்தத்திலே மைத்ரீஶப்தப்ரயோகம் பண்ணுகையாலே ஶரணஶப்தம் பர்யாயமாக்கக்கடவது. அபயப்ரதானம் ஞாநம் ஸம்ரக்ஷணமென்று ஸக்ய த்தை ஸக்யப்ரகாரமாகவுஞ் சொல்லித்திறே - ஆகையாலே அவனை ஶரணம் புகாயென்கிறாள். தமேவ ஶ ரணம் கச்ச ஸர்வபாவேந பாரத - என்று பிராட்டியைப்போலே யாசார்யரா யிருப்பார் வேறேசிலரு மிப் பாசுரஞ்சொன்னார்களிறே. ஆனால் நேர்கோடுநேரே ஶரணமென்னாதே மித்ரமென்பானென்னென்னில் க்ஷத் ரியரைப்போலே தந்தாமைஉயரவைத்துப் பிறரைத்தண்ணிதாகச் சொல்லும்படியான புன்மையில்லாத பிரா ட்டி நீர்மையாலே சொல்லுகிறாள். இவரோயன்றி யிப்படிசொன்னார். பெருமாள் தாமும் ராக்ஷஸனை மித்ர பாவேந-என்றும், ஒருகுரங்கை ஸகா பரம் - என்றும், ஓரோட்டை யோடகாரனை ஆத்மஸமஸ்ஸகா-என் றும் உகந்ததோழன் நீயென்றும் அருளிச்செய்தாரிறே. இன்னமொரு ஆகாரத்தாலே மித்ரஶப்தம் சொல்லு கிறாள். அதென்னென்னில் ; நமஸ்யமென்றுவணங்கவிலரக்கனாய் துர்புத்தியான விவனை ஶரணம்புகா யென்று விசையானென்றும் அத்தாலே தோழமைக்கொள்ளாயென்கிறாள். மித்ரங்கர்த்தும் ஔபயிகம்-மிதாத் த்ராயத இதி மித்ரமென்று, ஞிமிதா ஸ்நேஹநே - என்கிற தாதுவிலேயாய் பெருமாளுக்கு த்வேஷவிஷயமாகா தே ஸ்நேஹவிஷயமாகை யழகியதுகாண். நோக்கவிவருக்கு ஶத்ருவுமாய் த்வேஷமுமா யிருக்கிற நான் ராக்ஷஸனாய் பெருமாளுக்கு த்வேஷவிஷயமாகாதே இவர்பக்க லுறவுகொண்டாடப் புகுகிறேனோவென்ன மித்ரங்கர்த்தும் ஔபயிகம் - இப்படி ப்ராதிகூல்யம்பண்ணின வுனக்கு பத்தும்பத்தாகவுறவுசெய்யவேணு ங்காண். இதுபண்ணினால் ப்ரயோஜநமென்னென்ன - மித்ரங்கர்த்தும் ஔபயிகம் - உன் ப்ராணரக்ஷணத்தி ல் விநியோகங்கொள்ளலாம். ஔபயிகம் - உபாயம் கீர்த்திகாரணம்-உன்னுடைய உஜ்ஜீவநத்துக்கு உபா யம் - உபாயேஹ்ரஸ்வ - என்கிற ஸூத்ரத்தாலே உபாயஶப்தம் உபேயஶப்தமாய் ஸ்வார்த்தே டக்காய் உகா ரேஶமாய் வ்ருத்தியாய் அகாரலோபமாய் ஔபயிகமென்று ஸித்தமாகிறது. இப்படிக்கு இது உபாய மென்றுமிடம் - ஸ்தாநம் பரீப்ஸதா வதம் சாநிச்சதா வென்று மேலே தானேசொல்லுகையாலே ஸ்பஷ்டமிறே. ஆனால் நான் உறவுக்கிசையக்கொள்ள முகந்தாராதே ப்ராதாவிகளாயுதாரிகிலோவென்ன - ராம: - ஸ்வயா

தே பொருந்தும்படியான, நீர்மையுடையவர்காண். ராமே - தெய்வதைரோடும் காகத்தோடும் குரங்கோடும் உறவுசெய்கிறவ ரித்தனை யொழுகுதையுடைய வுன்னைவிடுகிறாரோ. ராமே - நீயல்லேனென்னிலும் - யதிவா ராவணஸ்யமூ-ஸ்மதெனம் - என்று அழைத்துவிடுவது ஆபத்துமுடிகினவாறே - ஸஹூ வென்று விட்டடிப் பதாகிற பெருமாளித்தனை - நீ யிசைவாயுமானால் விடுகிறாரோ - ராமௌ ஸஹாத்ரங்கள் ... மெயிகம் ... மான ... களைவிட்டு ... மென்றும் நி வாஸஸ்ய ... என்றுஞ்சொல்லுகிற ... தான பெருமாளோடே வுறவுசெ ய்யப்பார் - ராமே-ராமதீதிராமே-நயஸஹீ ... என்று உன்னைவிட்டகன்று நிற்கிற உன்னுடைய வுறவுமுறையும் உன்னுயிருமுண்டாக்கவிலே பழையபடியே பொருந்தும்படிபண்ண வல்லர்காண் - பண்டே என்றுதாயிருக்கிறவத்தை இவர்பொருந்தும்படி தரிக்கப்பண்ணவேணுமோவென்ன- ஸ்தானம்வரீஷ்டா - வயதூரிஷ்டா - இதுக்குமுன்பு உன்னுதேயாகிலும் உன்குடியிருப்பும் ப்ராணனும் மேலும் வேண்டியிருந்தாயாகி லவரைப்பற்றவடுக்கும் - ஸ்தானம்வரீஷ்டா - ஸ்தானம் - ஆவாஸ - ... வரூஸம்காயம்ரக்ஷ... - என்று உன்தம்பிக்கு இப்படைவீடுகுடுக்கவாய்த்துப்போகிறார் அதுசெய்யாதபடி நீயேயிப்படைவீடாளவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். ஸ்தானம்வரீஷ்டா-ஸ்தானம்ஷ ... - ... - என்று காக்கைபோலே கண்டவிடமெங்கும் பறந்து திரியாதே நிலை கொள்ளவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். ஸ்தானம் - ஸம்ஸ்தானம் - அதாவது ... மான வரிக்ரமு ம் நீயும் தோப்புங்குலையாமலிருக்கவேண்டி யிருந்தாயாகிலென்றுமாம். ஸ்தானம்வரீஷ்டா-ஸ்தானம்- ... நமாய் ... யாகிற ப்ரஹ்மாதிகள் ... மும் ... வரான ... மும் நீதேடிப்படைத்த வஸ்துமும இது நெடுங்காலம் குடியாக்கின படை வீடுமாகிற ... ஸ்தானம் குலையாமேயிருக்கவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். படைவீடும் ... நமும் பார்த்திருக்கிறேனே வேறேவோரிடத்திலேபோயிருக்கிறேனென்ன ஸ்தானம்வரீஷ்டா - வரிதஸ்தானஷ்டா - ... வாதால ... ராவணம் - ... ஸ்கார ... என்று ... தன்னிலும் மலைமொழிஞ்சில்களிலேயாகிலுமாம் - உனக்கு ஜநஸ்ரீயான வாதால த்திலே போகிலுமாம் - உன்னை யிப்படி வரந்தந்து வாழ்வித்த ப்ரஹ்மலோகத்திலேபோகிலுமாம் - அவ்வோ விடங்களி லுனக்குயிர்கொண்டு நிற்கவொண்ணுது, சுற்றிலே போயிருக்கப் பார்த்தாயாகிலு மவருறவாகவே ணுங்காண். ப்ரவிஸஸ்தங்களிலே போயிருக்கிறபோதன்றே அவர்வேண்டுவது. அஜாதவாஸமாக ஒரு விடத்திலே மறையவிருக்கிறேனென்ன - வயதூரிஷ்டா - உன்னை உயிரோடே விடிலன்றே நீயொளித்தி ருப்பது, அப்படி சாகாமலிருக்கைக்கு வேண்டியிருந்தாயாகிலு மவரைப்பற்றவேணும். வயதிஷ்டா -ஒரு வர்ணாதிகளாற்பிறக்கிற மரணமொழிய ஒருஶத்ருவசத்தினாலே புகந்து தலையறுப்புண்டா யென்கிற வ ரிஹவம் வராதே யொழியவேண்டியிருந்தாயாகிலென்றுமாம். வீரனுக்கு ஶத்ருவின் கையிலே படுகையன் றே தாமென்கிறுயாகில் வொரம்வயதிஷ்டா - நாட்டாரைப்போலே சாமாறு சாம்போது மவரைப் பற்ற வேணுங்காண். வொரம்வயம் - உன்னைக்கொல்லும்போது மெளிதாகவிடுவரோ. ஆளைவரவிட்டு நிலைநாட்டி அந்த ... தனைக்கொண்டு தறைக்கீடாகத் தோப்பைமுறித்து உன்பசலைத்திருகி வுன்னேலக்கத்திலே மதி யாதேபுகந்து தன்னுயன்பெருமையையு முன்தாழ்மையையும்சொல்லி யுன்படைவீடு பொறியும் புகையு மெ ழும்பும்படி சுட்டுக் கரிக்கூடாக்கி மீண்டுவந்து விசேஷம்சொல்லும்படிபண்ணி ... பரிகரத்தை யுடைத் து காண்பாரைக்காண்பித்துக்கொண்டு உன்னுழியநெஞ்சிலே கல்லிட்டாபோலே யுனக்கு நீர் சிறையானகட லிலே கல்லிட்டடைத்துப்பெருவழியாக்கிக் குரங்குகளை கால்நடையே யக்கரைப்படுத்தி வுன்படைவீட்டை யடைய மதிட்படுத்தி நீயாண்டபரிகரமடைய வெறுந்தறையாக்கி யுன்னுறவுமுறையாரை மூக்கை யரிவது, தோளைத்துணிப்பது, காலைத்தறிப்பது, தலையையறுப்பதாய் பனங்கனியுதிர்த்தாப்போலே யுன்தலைகளை யுதி ர்ப்பது தோள்களைக்கழிப்பது வுடலைத்துளைப்பது இவ்வுதிரக்குறையை உன் பெண்டுகளுக்குக் காட்டுவதாக ஸஹூ - என்றுவிட்டடிப்பதாய் இப்படி விசவயம் பண்ணிக்கா ணுன்னை யவர்கொல்லுவது. இப்படிக்குக்கொ டுங்கொலைவேண்டித்தில்லையாகி லவரைப்பற்றென்றுகவுமாம். இவர் வெறுத்தமனிதரி லிதுக்குமுன் னிப்படி ப்பட்டாருண்டோவென்ன; கூயா - இப்படி வேறொருவ ரித்தனை யவரயம் பண்ணினாருமில்லை—இப்படிப் பட்டவர்களுமில்லை. ஆதராயியாய் ... பண்ணி ... யுனைக்கித்தனையும் வேணும். ஸ்தானம்வரீஷ்டா வயதூரிஷ்டாகூயா - நீயிருக்குமாறிருக்கும்போது மவர்வேணும் - நீசாமா றுசாம்போது மவர்வேணும். அவர்தாமிங்கே ஸந்நிஹிதராகவே வேண்டாவோவென்ன; இத்தாலிங்கேநிற் கிறாரென்கிறாள். ... - என்றும், ... - என்றும், எப்போதும் பெருமாளையே பாவிக்கையாலே யுருவெளிப்பாடாய் தனக்கெப்பொழுதும் ஸந்நிஹி தராயிருக்கையாலே இவரென்றுகாட்டுகிறாள். இவனுக்கிதுக்குமுன் அவரோடு வாஸனையில்லாமையாலும் ... மில்லாமையாலும் ... வரணைகையாலு தோற்றுதிறே. ப்ரதி ... ராவணனுக்குட்பட வாஸனையுண்டாகையாலே வ்ருக்ஷேவ்ருக்ஷேபஸ்யாமி - என்று பார்த்த பார்த்த விட

மெங்கும் பெருமாளாய்த்தோற்றித்திறே - ராவணன் தானும் பூசலிலே வாசனைப்பண்ணின பின்பு திருச்சரங்கள் நெஞ்சிலேபட்டு ஸாநுதாபவசநா மென்று நினைத்துக்கொண்டுபட்டானிறே. ஸ: - ஸஹி ததேஶவத்ஜ்ஞாந காருஸம்பலமயியையிறே - அயமென்பது. இங்கு ஸந்தியில் அதிஶயத்தாலும் ப்ரகாஶவிஶேஷத்தாலும் அதிஶயவிஶேஷவாசியான அதிஶப்தத்தாலே சொல்லுகிறாள். ஸ: ஸஹ்யாஶ்ரயஸ்தத்ர துஷ்டி ஸஹ்யாஸஹ்யாப்ரதிஷ்டிதம் என்றும் "உன்னைக்கொண்டென்னுள் வைத்தேனென்னையுமுன்னிலிட்டேன்" என்றும் சொல்லுகிறபடியே யிவர்திருவுள்ள மவர்பக்கலிலே தட்டுமாறிக்கிடைக்கையாலே பிராட்டிக் கொருபோகியாகத் தோற்றக்குறையில்லையிறே. ஸ:-ஆஶ்ரிதாக்கி யவரைப் பெறும்போது நான் பண்ணின விரோதங்களை நினைத்து விமுகராயிருக்கிறவர் என்னைக் கைக்கொள்ளுவரோவென்ன வத்ஸல: - செய்தார்செய்த குற்றங்களை நினைத்திருக்குமவரல்லர் - பிழையறியாத பெருமாள்காண் - வத்ஸல: அவிஜ்ஞாதாவென்றும், ந ஸ்மரத்யபகாராணாம் ஶதமப்யாத்மவத்தயா - என்றும் - அபராதஸஹஸ்ரஸ்ய ஸதேவக்ஷாந்தேஷயாம் - என்றும், கவிபாட்டுக்கொண்டவர்காண். வத்ஸல: - பிழையறியாத வளவேயல்ல, தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் - என்றும், குன்றனையக்குற்றஞ்செயினுமென்றும் செய்தகுற்றம் நற்றமாகவே கொள்ளும்படியான உத்தமவத்ஸலர்காண். வத்ஸல:-யதிவா ராவணஸ்ஸ்வயம் - என்றும் ம்ருத்யுநாஜாநாதி - என்றும் ப்ரதிகூலாசரணத்திலே யகப்பட வுன்னை ரக்ஷிக்கைக்கு அழைத்துவிடுவது போகவிடுவதாகப் புகுகிறவர் நீயுமநுகூலித்தால் விடுவரோ - வத்ஸல: - நீ வத்ஸலர்களில் அக்ரேஸரனாயிருக்குமாப்போலேகாண் அவரும் வத்ஸலர்களில் உத்தமராயிருக்கும்படி. வத்ஸல: - வத்ஸோதர: - என்கிறபடியே அபராதிகிறான் செய்தகுற்றத்தை நினைத்திருக்குமவன் - ஸஹ்யாதிகிறான் குற்றத்தை நாளோட்டத்தோடே பொறுக்குமவன் - உத்தமனாகிறான் குற்றங் காண்பானேன் மறப்பானேன் என்று முதலுக்குக்காணாதவன். வத்ஸல: - இப்படி அநர்ஹவிபாகத்தில் அவருடைய ஶாந்திவாத்ஸல்யத்தாலே யுனக்கு ஸம்பாதநமென்று நினைத்திரு. வத்ஸல: - அவருடைய கொம்பாலே வுனக்குக் கொலையென்றுநினைத்திரு. இத்தாலிவனுக்கிப்படி உபதேஶம் பண்ணும்படியான பிராட்டியினுடைய நீர்மையினேற்றமும், இப்படிப்பட்ட வித்நீர்மையை யகப்படக் கைதப்பும்படியான ராவணனுடைய பாபப்ராசுர்யமுஞ் சொல்லிற்றாயிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

౨౦. విదితస్సహి ధర్మజ్ఞశ్శరణాగతవత్సలః। తేన మైత్రీ భవతు తే యది జీవితుమిచ్ఛసి।

౨౧. ప్రసాదయస్వ త్వం చైనం శరణాగతవత్సలమ్। మాం చాస్మై ప్రయతో భూత్వా నిర్యాతయితుమర్హసి।

௨௦. விதிதஸ்ஸ ஹி தர்மஜ்ஞஶ்ஶரணாகதவத்ஸல:॥
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி।

௨௧. ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் ஶரணாகதவத்ஸலம்॥
மாம் சாஸ்மை ப்ரயதோ பூத்வா நிர்யாதயிதுமர்ஹஸி।

௨௦. விதிதஸ்ஸஹிதர்மஜ்ஞஸ்ஸரணாகதவத்ஸல:॥
தேநமைத்ரீபவதுதேயதிஜீவிதுமிச்சஸி।

௨௧. ப்ரஸாதயஸ்வத்வம்சைநம்ஶரணாகதவத்ஸலம்॥
மாம்சாஸ்மைப்ரயதோபூத்வாநிர்யாதயிதுமர்ஹஸி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸ: | அந்த ஸ்ரீராகவன் | த்வம்ச | நீயும் |
| தர்மஜ்ஞ: | நியாயமுணர்ந்தவர் | ஏநம் | இந்த |
| ஶரணாகதவத்ஸல: | சரணம் புகுந்தவரிடத்தி லன்புடையவர் (என்று எல்லோர்களாலும்) | ஶரணாகதவத்ஸலம் | சரணமடைந்தோரிடத்தில் வாத்ஸல்லியமுள்ள ஸ்ரீராகவனை |
| விதிதோஹி | அறியப்பட்டவரன்றோ (ஆகையால்) | ப்ரஸாதயஸ்வ | அநுக்கிரகமுடையவராகச்செய்து |
| ஜீவிதும் | பிழைப்பதற்கு | ப்ரயத: | நியாயத்தையடைந்தவனாக[கொள் |
| இச்சஸி-யதி | (நீ) கோருவாயாகில் | பூத்வா | ஆகி |
| தே | உனக்கு | மாம்ச | என்னையும் |
| தேந | அந்த ஸ்ரீராகவனோடு | அஸ்மிந் | இந்த இராகவனையும்பொருட்டு |
| மைத்ரீ | சிநேகம் | நிர்யாதயிதும் | திருப்பிக்கொடுப்பதற்கு |
| பவது | உண்டாகட்டும் | அர்ஹஸி | யோக்கியனாகிறாய். |

தா-ம்—ஹேராவண! என்னுடையநாதன் ஸகலதர்மங்களுமுணர்ந்தவர். சரணமடைந்தோ ரிடத்தில் மிகுந்தவாத்ஸல்லியமுள்ளவர். அவருடைய அனந்தகல்யாண குணங்களுக்குள் இவ்விரண்டும் மஹாப்பிரஸித்தமானவை. எக்காலத்திலும் தர்மநெறியினின்றுதவறார். சரணமடைந்தவனைக்கைவிடார். ஆகையால், ஹேராக்ஷஸ! இவ்வைசுவரியத்திலும் வைபோகத்திலும் விருப்புற்று ஜீவதாரணஞ்செய்யக் கோருவாயாகில்

அந்த சரணாகதவத்ஸலனுடைய ஸ்னேகமுனக்கத்தியந்தமாவசியகம். மஹாபராதியான நீ அவரையடுத்தாலல்லது அவருடையபாணத்திற்குத்தப்பாய். சரணாகதி பண்ணிணையாகில் ஸமஸ்த வபராதங்களு மறைபட்டுப்போம்; உனக்கு மங்களமுண்டாகும். உனதுக்ஷேமார்த்தம் ஸ்ரீராகவனிடத்தில்ஸ்னேகம்பாராட்டி அவருடைய அநுக்கிரகப் பிரஸாதத்திற்குப் பாத்திரபூதனாயமைந்து அந்தரங்கமான விநீதபாவத்தோடு என்னை மறுபடியும் அந்த சரண்ணியனிடத்தில் சேர்க்கக்கடவாய்.

౨౨. ఏవంహితేభవేత్స్వస్తిసంప్రదాయరఘూత్తమే।అన్యథాత్వంహికుర్వాణోవధంప్రాప్స్యసిరావణ।

௨௨. 𑌏𑌵𑌂𑌹𑌿𑌤𑍇𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌸𑌂𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑍇॥
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾𑌤𑍍𑌵𑌂𑌹𑌿𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑍋𑌵𑌧𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌸𑍍𑌯𑌸𑌿𑌰𑌾𑌵𑌣।

௨௨. ஏவம்ஹிதேபவேத்ஸ்வஸ்திஸம்ப்ரதாயரகூத்தமே॥
அந்யதாத்வம்ஹிகுர்வாணோவதம்ப்ராப்ஸ்யஸிராவண।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ராவண | அடே இராவண | ஸ்வஸ்தி-பவேத் | மங்களம் உண்டாகும் |
| ஏவம் | நான்சொன்னபடி | அந்யதா | வேறுவிதமாக |
| ரகூத்தமே | ஸ்ரீராகவனிடத்தில் | குர்வாண꞉ | செய்கிற |
| ஸம்ப்ரதாய | (என்னைக்) கொடுத்து | த்வம்ஹி | நீயோவென்றால் |
| (ஸ்திதாய) | (நிற்கிற) இருக்கிற | வதம் | கொலையை |
| தே | உன்பொருட்டு | ப்ராப்ஸ்யஸி | அடைவாய். |

தா-ம்—ஹேராக்ஷஸாதிப! யானுபதேசித்தவண்ணம் அந்த ரகுகுலதிலகனான ஸ்ரீராமனிடத்தில் என்னை மறுபடியுங்கொண்டு சேர்த்து அவரது ஸந்நிதியில் வணங்கிநிற்பாயாகில் அந்த காருண்ணியன் நீ செய்த வபராத சதங்களையும்க்ஷமித்து புத்திரமித்திர களத்திரபாந்தவாளோடு சிரகாலவாழ்க்கையை யுனக்கனுக்கிரகிப்பார். அப்படிசெய்யாது விபரீதபுத்திகொண்டாயாகில்அந்தகோதண்ட தீக்ஷாகுரு, நீர்க்காவல்கொண்ட உன் அரணைக்கிட்டித் தன்னுடைய திருச்சரங்களா லுன்மந்திரிமக்கள் சகோதரரனைவரு முன்கண்முன் மடியச்செய்து, உன் அங்கனாசதம்மயிர்விரித்தழ, மண்டோதரிவயிறெரியப்பதற, உனது தசசிரஸ்ஸுகளைக் கிரீடகுண்டலங்களோடு பனங்காய்போலறுத்துத்தள்ளுவார். இப்படிப்பட்டவதம் நீயடைவது நிச்சயம்.

౨౩. వర్జయేద్వజ్రముత్సృష్టంవర్జయేదంతకశ్చిరమ్।త్వద్విధంతునసంక్రుద్ధోలోకనాథస్సరాఘవః।

௨௩. 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑍍𑌵𑌜𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑌂𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌦𑌨𑍍𑌤𑌕𑌶𑍍𑌚𑌿𑌰𑌮𑍍॥
𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌧𑌂𑌤𑍁𑌨𑌸𑌂𑌕𑍍𑌰𑍁𑌦𑍍𑌧𑍋𑌲𑍋𑌕𑌨𑌾𑌥𑌸𑍍𑌸𑌰𑌾𑌘𑌵𑌃।

௨௩. வர்ஜயேத்வஜ்ரமுத்ஸ்ருஷ்டம்வர்ஜயேதந்தகஶ்சிரம்॥
த்வத்விதம்துநஸம்க்ருத்தோலோகநாதஸ்ஸராகவ꞉।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| உத்ஸ்ருஷ்டம் | (இந்திரனால்) விடப்பட்ட | வர்ஜயேத் | விடுவான் |
| வஜ்ரம் | வஜ்ஜிராயுதமானது | லோகநாத꞉ | ஜகந்நாதனான |
| (த்வத்விதம்) | (உன்போலொத்தவனை) | ஸ꞉ | அந்த |
| வர்ஜயேத் | விடும் | ராகவஸ்து | ஸ்ரீராகவனோவென்றால் |
| அந்தக꞉ | இயமன் | ஸம்க்ருத்த꞉ | கோபித்தவராக |
| (த்வத்விதம்) | (உன்போலொத்தவனை) | த்வத்விதம் | உன்னைப்போன்றவனை |
| சிரம் | வெகுகாலம் | ந (வர்ஜயேத்) | (விடமாட்டார்.) |

தா-ம்—அடேராவண! ஸ்ரீராமாபராதியானபிறகு ஸ்ரீராமபாணத்திற்குத் தப்பிப்பிழைக்கலாமென்றெண்ணுகிறாயோ? திக்பாலகரைவென்றனம், திக்கஜங்களையிடித்தனம், திரைலோக்கிய ஜயத்தையடைந்தனம், நமக்கிம்மானுஷவைஷம்மிய மெவ்வளவென்றுநினைக்கிறாயோ? அடமந்தபுத்தே! உனக்குத்தெரியாதோ ஸ்ரீராகவவீரியம். இட்டகுறியைத்தவறுதடிக்கிற இந்திரவஜ்ஜிரமும் உன்மீது பிரயோகிக்கப்பட்டால் உனது விக்கிரமத்திற்கஞ்சி உன்னைவிட்டுவிடலாம். உனதாயுள்முடிந்தும் உனது தௌஷ்டியத்திற்கஞ்சி உனது பிராணனைக் கொண்டுபோகாது அந்தகனும் சிரகாலம்விட்டுவிடலாம். ஸ்ரீராகவ கோபமுண்டாகில் க்ஷணகாலமாவதுதக்குமோ உனதுசிரஸு. உத்தரக்ஷணத்தில் நீ மடிந்துபோவது நிச்சயமென்றறியக்கடவாய்.

౨౪. రామస్యధనుషశ్శబ్దంశ్రోష్యసిత్వంమహాస్వనమ్।శతక్రతువిసృష్టస్యనిర్ఘోషమశనేరివ।

௨௪. 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌧𑌨𑍁𑌷𑌶𑍍𑌶𑌬𑍍𑌦𑌂𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿𑌤𑍍𑌵𑌂𑌮𑌹𑌾𑌸𑍍𑌵𑌨𑌮𑍍॥
𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍁𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌯𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑌮𑌶𑌨𑍇𑌰𑌿𑌵।

௨௪. ராமஸ்யதநுஷஶ்ஶப்தம்ஶ்ரோஷ்யஸித்வம்மஹாஸ்வநம்॥
ஶதக்ரதுவிஸ்ருஷ்டஸ்யநிர்கோஷமஶநேரிவ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே ராவண) | (அடே இராவண) | மஹாஸ்வநம் | பெருநாதமுடைய |
| த்வம் | நீ | ராமஸ்ய | ஸ்ரீராமனுடைய |
| ஶதக்ரதுவிஸ்ருஷ்டஸ்ய-இந்திரனால்விடப்பட்ட | | தநுஷ:-ஶப்தம் | வில்லினுடைய-டங்காரநாதத்தை |
| அஶநே: | இடியினுடைய | ஶ்ரோஷ்யஸி | கேழ்க்கப்போகிறாய். |
| நிர்க்கோஷமிவ | சப்தத்தைப்போல் | | |

தா-ம்—ஸ்ரீராகவனிடத்தில் விரீதபுத்தியை யடையாத ஹேராக்ஷஸாதம! இந்திரனாலேவப்பட்ட இடிமுழக்கம்போல் பயங்கரத்வனியோடுகோஷிக்கிற ஸ்ரீராகவ தனுஷ்டங்காரத்தை நீ சீக்கிரத்திலிந்நகரில் கேழ்க்கப்போகிறாய்.

౨౫. ఇహ శీఘ్రం సుపర్వాణో జ్వలితాస్యా ఇవోరగాః॥ ఇషవో నిపతిష్యంతి రామలక్ష్మణలక్షణాః।

౨౬. రక్షాంసి పరినిఘ్నంతః పుర్యామస్యాం సమంతతః॥ అసంపాతం కరిష్యంతి పతంతః కంకవాససః।

౨౭. రాక్షసేంద్రమహాసర్పాన్ స రామగరుడో మహాన్॥ ఉద్ధరిష్యతి వేగేన వైనతేయ ఇవోరగాన్।

௨௫. 𑌇𑌹𑌶𑍀𑌘𑍍𑌰𑌂𑌸𑍁𑌪𑌰𑍍𑌵𑌾𑌣𑍋𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌇𑌵𑍋𑌰𑌗𑌾𑌃॥
𑌇𑌷𑌵𑍋𑌨𑌿𑌪𑌤𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃।

௨௬. 𑌰𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑌿𑌪𑌰𑌿𑌨𑌿𑌘𑍍𑌨𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌂𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃॥
𑌅𑌸𑌂𑌪𑌾𑌤𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌪𑌤𑌨𑍍𑌤𑌃𑌕𑌙𑍍𑌕𑌵𑌾𑌸𑌸𑌃।

௨௭. 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌸𑌰𑍍𑌪𑌾𑌨𑍍𑌸𑌰𑌾𑌮𑌗𑌰𑍁𑌡𑍋𑌮𑌹𑌾𑌨𑍍॥
𑌉𑌦𑍍𑌧𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿𑌵𑍇𑌗𑍇𑌨𑌵𑍈𑌨𑌤𑍇𑌯𑌇𑌵𑍋𑌰𑌗𑌾𑌨𑍍।

௨௫. இஹஶீக்ரம்ஸுபர்வாணோஜ்வலிதாஸ்யாஇவோரகா:॥
இஷவோநிபதிஷ்யந்திராமலக்ஷ்மணலக்ஷணா:।

௨௬. ரக்ஷாம்ஸிபரிநிக்நந்த:புர்யாமஸ்யாம்ஸமந்தத:॥
அஸம்பாதம்கரிஷ்யந்திபதந்த:கங்கவாஸஸ:।

௨௭. ராக்ஷஸேந்த்ரமஹாஸர்ப்பாந்ஸராமகருடோமஹாந்॥
உத்தரிஷ்யதிவேகேநவைநதேயஇவோரகாந்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹேராவண) | (அடே இராவண) | பதந்த: | விழுந்தனவாக |
| ஸுபர்வாண: | சிறந்தகணுக்களையுடையதும் | ரக்ஷாம்ஸி | இராக்கதரை |
| ராமலக்ஷ்மணலக்ஷணா: | ஸ்ரீராகவ லக்ஷ்மணர்களின்பெயரை யடையாளமாயுமுடைய | பரிநிக்நந்த: | ஹிம்ஸித்துக்கொண்டு |
| | | அஸம்பாதம் | அவகாசமில்லாததை |
| இஷவ: | பாணங்கள் [டைய | கரிஷ்யந்தி | செய்யப்போகின்றன |
| ஜ்வலிதாஸ்யா: | விஷாக்கினியால் எரிகிற முகங்களையு | மஹாந் | பெரியவரான (சிறந்தவரான) |
| உரகாஇவ | ஸர்ப்பங்கள்போல் | ஸ:-ராம: | அந்த-ஸ்ரீராகவன் |
| இஹ | இந்த (இலங்கையில்) | ராக்ஷஸேந்த்ரமஹாஸர்ப்பாந்-இராக்கதமுக்கியாளாகிறபெரு | |
| ஶீக்ரம்-நிபதிஷ்யந்தி | த்வரையாக-விழப்போகின்றன | ராமகருட: | இராமனாகிறகருடன் [ஸர்ப்பங்களை |
| கங்கவாஸஸ: | கழுகுஇரக்கையைவஸ்திரமாயுடைய (பாணங்கள்) | வைநதேய: | கருத்மானனவர் |
| | | உரகாநிவ | ஸர்ப்பங்களைப்போல் |
| அஸ்யாம்-புர்யாம் | இந்த-பட்டணத்தில் | வேகேந | வேகத்தோடே |
| ஸமந்தத: | நாற்புறத்திலும் | உத்தரிஷ்யதி | மேலெடுத்தெறியப்போகிறார். |

தா-ம்—ஹேராக்ஷஸேந்திர! உனது துர்ப்புத்தியாலிந்நகருக்குக்கொஞ்சகாலத்தில்நேரிடப்போகிற பிரளயத்தைச் சொல்லுகிறேன்கேள். அந்தரகுவீரன் இவ்விடம் வந்தவுடன் தனது உக்கிரகோதண்டத்தை வளைத்து, தங்கக்கட்டுகட்டி இராமலக்ஷ்மண நாமாங்கிதங்களைவகித்துக் காலகோடிவிஷத்தைக்கக்குகிற ஸர்பபங்கள்போல் ஜ்வலிக்கிற தேஜஸ்ஸுடைய திவ்வியசரங்களை வர்ஷிக்கப்போகிறார். கழுகுரக்கைகள்போன்ற இரக்கைகளையுடைய அந்ததிடங்கொண்ட ராமபாணங்கள் இலங்காநகரமுழுது மிடைவெளியில்லாமல் வியாபித்து இராக்கதருடைய மார்பைப்பிளந்து கண்டங்களைச்சேதித்துப் பரமஹிம்ஸை செய்யப்போகின்றன. மஹாவேகவானன வைனதேயனுடைய மூக்கிற்சிக்கியஸர்ப்பங்கள் வதைபடுவதுபோல் நீங்களெல்லோரு மூந்தவிஜயராகவனுடைய விக்கிரமவேகத்தா லாகாயத்திலெடுத்தெறியப்பட்டு நசிக்கப்போகிறீர்கள்.

(அவதாரிகை) தன்னிடத்திலிருந்து ஸீதையையொருக்காலும் இராமன் அடையமாட்டானென்றுசொன்ன இராவண வசனத்திற்குபதிலுத்தரம் சொல்லப்படுகிறது.

౨౮. అపనేష్యతి మాం భర్తా త్వత్తః శీఘ్రమరిందమః॥ అసురేభ్యః శ్రియం దీప్తాం విష్ణుస్త్రిభిరివ క్రమైః।

௨௮. 𑌅𑌪𑌨𑍇𑌷𑍍𑌯𑌤𑌿𑌮𑌾𑌂𑌭𑌰𑍍𑌤𑌾𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌃𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮𑌃॥
𑌅𑌸𑍁𑌰𑍇𑌭𑍍𑌯𑌃𑌶𑍍𑌰𑌿𑌯𑌂𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑌿𑌵𑌕𑍍𑌰𑌮𑍈𑌃।

௨௮. அபநேஷ்யதிமாம்பர்த்தாத்வத்தஶ்ஶீக்ரமரிந்தம:॥
அஸுரேப்யஶ்ஶ்ரியம்தீப்தாம்விஷ்ணுஸ்த்ரிபிரிவக்ரமை:।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| விஷ்ணு: | (வாமனாவதாரம் செய்தருளின) விஷ்ணுவானவர் | அரிந்தம: | சத்துருநாசகரான |
| த்ரிபி: | மூன்றுகளான | பர்த்தா | என் நாதனுன (ஸ்ரீராகவன்) |
| க்ரமை: | அடிவைப்புகளால் | மாம் | என்னை |
| அஸுரேப்ய: | அஸுரர்களிடத்திலிருந்து | ஶீக்ரம் | த்வரையாக |
| தீப்தாம் | ஒளியுற்ற | த்வத்த: | உன்னிடத்திலிருந்து |
| ஶ்ரியமிவ | இராஜ்ஜியஸம்பத்துபோல் | அபநேஷ்யதி | எடுத்துகொண்டுபோகப்போகிறார். |

தா-ம்—மேகத்தால் மறைப்புண்ட சந்திரிகைபோலும் இந்திரஹஸ்தகதமான ஹிரண்ணியகசிபு கீர்த்திபோலும் உன்வசத்தையடைந்த வென்னை ஸ்ரீராமன் தரிசிப்பதற்கு மசக்தனென்றுபிதற்றுகிற அடே ராவண! என்னுடையநாதன் மானிடவடிவங்கொண்டமையா லவருடைய விக்கிரமமகிமையை யறியாமலேசுகிறாய். வாமனரூபியாய் மூன்றடிநிலம்யாசித்துப் பிறகுதனது விசுவரூபத்தைவெளியிட்டுப்பூமியையோரடியாலும் வானையோரடியாலுமளந்து மூன்றாவதடிவைப்பால் அஸுரேசுவரனை பலிசக்கிரவர்த்தியின் ஸர்வ ஸ்ரீயையும் ஸ்வீகரித்த ஸ்ரீமந்நாராயணன்போல் எனதுபர்த்தாவும் சிறியஉருவங்கொண்டவராயினும் உன்போன்ற பிரபலசத்துருக்களனேகரை சிரமமின்றி தனதுகோதண்டத் திருவிளையாட்டால் க்ஷணகாலத்தில் முடிக்கவல்ல மஹாதீரன். பாணிக்கிரகணஞ்செய்த பத்தினியைப்பரிக்க வகையறியாத சௌரியமற்ற துர்ப்பலனென்றெண்ணிமகிழாதே. இன்னம்சிலநாளில் என்னைப்பற்றிவந்த உன்னிருபது புயங்களைப் பனைமரம் வெட்டிச்சாய்ப்பதுபோலறுத்து, மகுடமேந்திய சிரங்களைப் பனங்காய்போலுதிர்த்து அவைதூஷித்தவாயில்மண்ணிட்டு, இவ்விதம்கஷ்டப்படுகிற வென்னைத் திரும்பியடைந்து ரக்ஷிக்கப்போகிறார்.

౨౯. జనస్థానే హతస్థానే నిహతే రక్షసాం బలే॥ అశక్తేన త్వయా రక్షః కృతమేతదసాధు వై।

௨௯. 𑌜𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌹𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌨𑌿𑌹𑌤𑍇 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌬𑌲𑍇॥
𑌅𑌶𑌕𑍍𑌤𑍇𑌨 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌰𑌕𑍍𑌷𑌃 𑌕𑍃𑌤𑌮𑍇𑌤𑌦𑌸𑌾𑌧𑍁 𑌵𑌈।

௨௯. ஜநஸ்தாநேஹதஸ்தாநேநிஹதேரக்ஷஸாம்பலே॥
அஶக்தேநத்வயாரக்ஷ:க்ருதமேததஸாதுவை।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஜநஸ்தாநே | கரன்முதலானவர்களுடைய வாஸஸ்தானமானது | அஶக்தேந | சக்தியற்றிருக்கிற |
| ஹதஸ்தாநே | நாசம்பண்ணப்பட்டஇடமுடையதாக | த்வயா | உன்னால் |
| ரக்ஷஸாம் | இராக்ஷதர்களுடைய | அஸாது | நலமில்லாமலிருக்கும்படி |
| பலே | ஸைந்நியமானது | ஏதத் | (யுக்தமில்லாமல்திருட்டுத்தனத்தாலபகரித்துவந்த) இந்தகிருத்தியமானது |
| நிஹதே(ஸதி) | அடிக்கப்பட்டிருக்கையில் | க்ருதம் | செய்யப்பட்டது. |
| (ஹே) ரக்ஷஸ | ஓ ராவணா | | |

தா-ம்—கரதூஷணப்பிரமுகாளான இராக்ஷதவீரரும் அவர்களுடைய அளவற்ற ஸைன்னியமும் ஸ்ரீரகுவீர கோதண்டத்தால் ஒருமுகூர்த்த நாழிகைக்குள்மடிந்து தண்டகாரண்ணியமுழுதும் இராக்கத சூன்னியமாயிருக்கையில் கேவலமபலனான நீ அந்தநரஸிம்மத்துவயத்தை யெதிர்க்கபயந்து வஞ்சனையாலவர்களை ஆசிரமத்தினின்று வெளிப்படுத்தி ஸமயம்பார்த்து என்னையபகரித்துவந்தாய். இந்த சோரகிருத்தியம் பௌருஷலேசமாவதுள்ளவீரன் செய்யத்தகுந்ததோ. ஸர்வலோகநிந்திதமும் விற்பிடித்தவீரன் செய்யத்தகாததுமான இச்செய்கை விக்கிரமவிளம்பரத்தை யடிக்கடிசெய்துகொள்ளுகிற உன்னாலேயே செய்யப்பட்டது.

౩౦. ఆశ్రమం తు తయోః శూన్యం ప్రవిశ్య నరసింహయోః॥ గోచరం గతయో ర్భ్రాత్రో రపనీతా త్వయాధమ।

௩௦. 𑌆𑌶𑍍𑌰𑌮𑌂 𑌤𑍁 𑌤𑌯𑍋𑌃 𑌶𑍂𑌨𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌯𑍋𑌃॥
𑌗𑍋𑌚𑌰𑌂 𑌗𑌤𑌯𑍋𑌰𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑍋𑌰𑌪𑌨𑍀𑌤𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾𑌧𑌮।

௩௦ ஆஶ்ரமந்துதயோஶ்ஶூந்யம்ப்ரவிஶ்யநரஸிம்ஹயோ:।
கோசரம்கதயோர்ப்ராத்ரோரபநீதாத்வயாதம।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) அதம | அடே நீச | ஶூந்யம் | (அவர்களில்லாமல்) பாழடைந்த |
| கோசரம் | வெளிதேசத்தை | ஆஶ்ரமம் | முனிவர் இருக்கத்தகுந்த இடத்தை |
| கதயோ: | அடைந்தவாளும் | ப்ரவிஶ்ய | புகுந்து |
| ப்ராத்ரோ: | தமையன்தம்பிமார்களும் | த்வயா | உன்னால் |
| நரஸிம்ஹயோ: | புருஷசிரேஷ்டருமான | அபநீதா | (நான்) எடுத்துக்கொண்டுவரப்பட்டேன். |
| தயோ: | அந்த (இராமலக்ஷ்மணருடைய) | | |

தா-ம்—ஹேராக்ஷஸாதம! உன்னுடைய பராக்கிரமப்பிரபாவத்தை யென்னிடத்திலோ புகழ்ந்துகொள்ளுவது! என்னை நீ அபகரித்தவிதம் யானறியேனோ. மஹாகஜங்களின் மஸ்தகத்தைப்பிளக்கிற ஸிம்ஹங்கள்போல் ஸர்வசத்துரு ஹந்தாக்களான இராமலக்ஷ்மணுளென்கிற நரசிரேஷ்டர் என்னை யாசிரமத்தில் தனியேவிட்டு வெளியிற்போயிருக்கையில் நீ என்னையபகரித்துவந்தாய்.

3೧. నహిగంధముపాఘ్రాయరామలక్ష్మణయోస్త్వయా॥శక్యంసందర్శనేస్థాతుంశునాశార్దూలయోరివ।

௩௧. 𑌨𑌹𑌿𑌗𑌂𑌧𑌮𑌁𑌪𑌾𑌘𑍍𑌰𑌾𑌯𑌰𑌾𑌮𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾॥
𑌶𑌕𑍍𑌯𑌂𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑍇𑌸𑍍𑌥𑌾𑌤𑍁𑌂𑌶𑍁𑌨𑌾𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌯𑍋𑌰𑌿𑌵।

௩௧. நஹிகந்தமுபாக்ராயராமலக்ஷ்மணயோஸ்த்வயா॥
ஶக்யம்ஸந்தர்ஶநேஸ்தாதும்ஶுநாஶார்த்தூலயோரிவ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஶுநா | நாயினால் | கந்தம் | வாஸனையை |
| ஶார்த்தூலயோரிவ | இரண்டுபுலிகள்போல் | உபாக்ராய | முகந்து |
| த்வயா | உன்னால் | ஸ்தாதும் | இருப்பதற்கு |
| ராமலக்ஷ்மணயோ: | இராமலக்ஷ்மணருடைய | நஶக்யம் | சக்கியமன்று. |
| ஸந்தர்ஶநே | பார்வையில் | | |

தா-ம்—ஹேராக்ஷஸ! வியாக்கிரமிருப்பதை வாஸனையாலறிந்து நடுங்கியோடுகிற சுவானம்போல் ஸ்ரீராமலக்ஷ்மணரென்கிற நரவியாக்கிரர் ஸமீபத்திலிருக்கிறாரென்று கேட்டமாத்திரத்திற் காதவழியோடும் படியான நடைநடுக்கமுள்ளவன் நீ. அவர்களைப் பிரத்தியக்ஷத்தில்கண்டால் அவர்முன்நிற்பதற்கு முனக்கு தைரியமுண்டோ.

3౨. తస్యతేవిగ్రహేతాభ్యాంయుగగ్రహణమస్థిరమ్॥వృత్రస్యేవేంద్రబాహుభ్యాంబాహోరేకస్యనిగ్రహః।

௩௨. 𑌤𑌸𑍍𑌯𑌤𑍇𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂𑌯𑍁𑌗𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑍍॥
𑌵𑍃𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌬𑌾𑌹𑍁𑌭𑍍𑌯𑌾𑌂𑌬𑌾𑌹𑍋𑌰𑍇𑌕𑌸𑍍𑌯𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃।

௩௨. தஸ்யதேவிக்ரஹேதாப்யாம்யுகக்ரஹணமஸ்திரம்॥
வ்ருத்ரஸ்யேவேந்த்ரபாஹுப்யாம்பாஹோரேகஸ்யநிக்ரஹ:।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தஸ்ய | (அஸமர்த்தத்தால்திருட்டுத்தனமாயென்னையபகரித்துவந்த) அந்த | வ்ருத்ரஸ்ய | விருத்திராஸுரனுடைய |
| தே | உனக்கு | ஏகஸ்ய-பாஹோ: | ஒன்றான-தோளுக்கு |
| தாப்யாம் | அந்தஇராமலக்ஷ்மணரோடு | இந்த்ரபாஹுப்யாம் | இந்திரனுடையதோள்களோடு |
| யுத்தே (ஸதி) | சண்டையுண்டாயிருந்துள்ளளவில் | விக்ரஹேஸதி | யுத்தமுண்டாயிருந்துள்ளளவில் |
| யுகக்ரஹணம் | யுத்தத்தில் (ஜயாபஜயங்கள்) | நிக்ரஹஇவ | அபஜயம்போல் |
| | | அஸ்திரம் | நிலையற்றது. |

தா-ம்—சிங்ககர்ஜ்ஜனையைக்கேட்டகஜம்போலும் புலிநாற்றமறிந்தசுவானம்போலும்பயந்து ஸ்ரீராமலக்ஷ்மணதரிசனமுங்கூடாதென்று அவர்களை வஞ்சனையால்வெளிப்படுத்தி, மாயவேஷத்தாலென்னை மதிமயங்கப்பண்ணி, யாகவேதிகைபோல் பரிசுத்தமானதிவ்வியாசிரமத்திலுனது அபரிசுத்ததாள்களைவைத்தென்னையபகரித்துவந்த அடசோர! எதிர்நின்று யுத்தஞ்செய்ய வல்லமையற்றுப்பின்புறந்தேடின அஸத்தே! உனக்குமவ்வில்லாளர்க்கும்போர்நேரில் உனக்குஜயம்கிடைத்துவிடுமோ! ஸீதாபஹரணம்லபித்துவிடுமோ! நீ எதிர்த்துயுத்தஞ்செய்ய அவ்வளவுநேரமாவது உன்பிராணனையுனக்குவைப்பார்களோ. ஜயாபஜயமென்கிற சங்கைக்கு மிடங்கொடுப்பார்களோ. விருத்திராஸுரனுடைய ஒருகைக்கும் இந்திரனுடைய இரண்டுகைகளுக்கும் யுத்தம்நேர்ந்தபோது இந்திரஜயமெப்படிஸித்தமாயிற்றோ அவ்வண்ணம் இராக்ஷஸப்பதரான நீயொருவன்யுத்தவீராளான அவ்விருவரை யெதிர்த்தக்கா லுன்விநாசம் ஸ்திரமன்றோ.

33. క్షిప్రంతవసనాథోమేరామస్సౌమిత్రిణాసహ॥తోయమల్పమివాదిత్యఃప్రాణానాదాస్యతేశరైః।

௩௩. 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌤𑌵𑌸𑌨𑌾𑌥𑍋𑌮𑍇𑌰𑌾𑌮𑌸𑍍𑌸𑍌𑌮𑌿𑌤𑍍𑌰𑌿𑌣𑌾𑌸𑌹॥
𑌤𑍋𑌯𑌮𑌲𑍍𑌪𑌮𑌿𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌃𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌾𑌦𑌾𑌸𑍍𑌯𑌤𑍇𑌶𑌰𑍈𑌃।

௩௩. க்ஷிப்ரம்தவஸநாதோமேராமஸ்ஸௌமித்ரிணாஸஹ॥
தோயமல்பமிவாதித்ய:ப்ராணாநாதாஸ்யதேஶரை:।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மே | என்னுடைய | தவ | உன்னுடைய |
| ஸ:-நாத: | அந்த-(என்)பர்த்தாவான | ப்ராணாந் | உயிரை |
| ராம: | ஸ்ரீராகவன் | ஶரை: | பாணங்களால் |
| ஸௌமித்ரிணாஸஹ | இலக்ஷ்மணரோடுகூட (வந்து) | க்ஷிப்ரம் | சீக்கிரமாக |
| ஆதித்ய: | ஸூரியன் | ஆதாஸ்யதே | எடுக்கப்போகிறார். |
| அல்பம்-தோயமிவ | கொஞ்சமான-ஜலத்தைப்போல் | | |

தா-ம்—ஹேராக்ஷஸ! "யுத்தத்தினாலோஸாமர்த்தியத்தினாலோவஞ்சனையினாலோ எந்தவிதத்தினாலோ ஸீதையென்வசமாய்விட்டாள், எப்படிப்பட்டவீரராயினு மினியவரென்செய்வார், ஸீதையிருக்குமிடமவரறிவரோ, அறிந்தும் ஜலமத்தியிலுள்ள விக்கோட்டையை யவரணுகுவரோ," என்று இவ்வெண்ணங்களால் ஸந்தோஷங்கொள்ளாதே. நீ ஸமுத்திரத்திலொளிந்தாலும் பாதாளபிலத்தில் நுழைந்தாலும் மாயாசக்தியால் மறைந்தாலும், ஸர்வலோகநாதனும் எனக்குப் பிராணபந்துவுமானவந்த இரகுவீரன் உன்னைவிடார். ஸம்ஸ்தவிடங்களிலும் தடையின்றிச்செல்லுகிற ஸூரியகிரணம்போல் ஸ்ரீராகவவிக்கிரமும்செல்லும். நீர்க்காவலால் திடங்

கொண்டிருக்கிற அடேராவணா! இன்னம் கொஞ்சகாலத்தில் என்னுடையநாதன் இலக்ஷ்மணஸஹிதராய் இங்குவந்து ஸ்வல்பஜலத்தை க்ஷணகாலத்தில்ஸூரியகிரணமாகர்ஷிப்பதுபோல் உன்னுடைய பஞ்சப்பிராணன்களையும் தன்னுடைய திவ்வியசரங்களால் அனாயாஸமாய் அதித்வரையிலரிக்கப்போகிறார்.

౨౪ గిరింకుబేరస్యగతోపధాయవాసభాంగతోవావరుణస్యరాజ్ఞః।
అసంశయందాశరథేర్నమోక్ష్యసేమహాద్రుమఃకాలహతోశనేరివ॥

௨௪. [illegible]
[illegible]

௨௪. கிரிம்குபேரஸ்யகதோபதாயவாஸபாம்கதோவாவருணஸ்யராஜ்ஞ:।।
அஸம்ஶயம்தாஶரதேர்நமோக்ஷ்யஸேமஹாத்ருமஃகாலஹதோஶநேரிவ।

[illegible] - [illegible].

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே ராவண) | (வாராய் இராவணா) | கதோவா | அடைந்தவனானாலும் |
| குபேரஸ்ய | குபேரனுடைய | காலஹத: | காலத்தாலடிக்கப்பட்ட |
| கிரிம் | கைலாயத்தை அல்லது கந்தமாதனபர்வதத்தை | மஹாத்ரும: | பெருமரமானது |
| கதோவா | அடைந்தவனானாலும் | அஶநேரிவ | இடியினின்றுபோல் |
| வருணஸ்ய | வருணனென்கிற | தாஶரதே: | இராகவனிடத்தினின்று |
| ராஜ்ஞ: | அரசனுடைய | அபதாய | அதிக்கிரமித்து |
| ஸபாம் | ஸபையை | நமோக்ஷ்யஸே | விடப்படமாட்டாய். |
| | | அஸம்ஶயம் | ஸந்தேகமில்லை. |

தா-ம்—அடேராவணா! இவ்விடம் பத்திரமில்லையென்று வேறெங்குஓடினாலுமோடு. கைலாஸம் அல்லது கந்தமாதனமென்று சொல்லப்பட்ட குபேராசிரியமான கிரியிலாவதோடியொளித்துக்கொள். வருணனுடைய ஸபையிலாவதோடிப்புகுந்துகொள். இன்னமெதுபத்திரமென்று தோன்றுகிறதோ அங்குஓடியொளித்துக்கொள். ஸ்ரீராமபாணத்திற்குத் தப்புவாயென்று நினைக்கிறாயோ! விதிபலத்தாலேவப்பட்டுஅழிக்கவருகிற இடிக்கிலக்கானவிருக்ஷம்போல் உன்விநாசகாலம்நெருங்க உன்சிரஸையுத்தேசித்துவருகிற ஸ்ரீராமபாணமுன்னைக்கொல்லாமல்விடாது. குபேரபலமும் வருணபலமு மற்றதேவதாபலமும் ஸ்ரீராமசரத்திற்கீடல்ல.

ஸ்ரீஸந்மகோரஞ்ஜநீநாமத்திராவிட வ்யாக்யாநஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

இருபத்தோராவதுஸர்க்கம் - முற்றிற்று.

## இருபத்திரண்டாவதுஸர்க்கம்.

౧. సీతాయావచనంశ్రుత్వాపరుషంరాక్షసాధిపః। ప్రత్యువాచతతస్సీతాంవిప్రియంప్రియదర్శనామ్॥

௧. [illegible]
[illegible]

௧. ஸீதாயாவசநம்ஶ்ருத்வாபருஷம்ராக்ஷஸாதிப:।
ப்ரத்யுவாசததஸ்ஸீதாம்விப்ரியம்ப்ரியதர்ஶநாம்।।

| பதம். | உரை | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராக்ஷஸாதிப: | இராக்ஷஸப்பிரபுவான(இராவணன்) | ப்ரியதர்ஶநாம் | இஷ்டமான பார்வையுடைய |
| ஸீதாயா: | பிராட்டியினுடைய | ஸீதாம் | பிராட்டியை(ப்பார்த்து) |
| பருஷம்-வசநம் | கடினமான-வார்த்தையை | விப்ரியம் | அநிஷ்டமான (வசனத்தை) |
| ஶ்ருத்வா | கேட்டு | ப்ரத்யுவாச | பதில்சொன்னான். |
| தத: | பிறகு | | |

தா-ம்—இந்தவிதம் தனக்கிட்ட வபராதங்களைக் கொஞ்சமேனும் ஸ்மரியாது, இவன் எப்படியாவது தர்மசிந்தாபரனாய் பகவத்பிரஸாதம்பெற்று உஜ்ஜீவித்தாற்போதுமென்கிற சேதன வாத்ஸல்யமிகுதியால், பிராட்டியானவள் ஹிதமொழிகளைப் பலவாறாகவுரைத்தனள். பிரதமத்தில், அவனுக்குக் கிடைத்திருக்கிற தாராஸம்பத்தைக்காட்டி, ஸ்ரீராகவார்கையானதா னவனுக்கு லபிக்கமாட்டாததை யுரைத்தாள். பிறகுபரதாரகமனவிச்சையாலுண்டாகு மனர்த்தங்களைக்காட்டி, ஸாதுவசனங்களையதிக்கிரமியாது தர்மாசாரத்தோடு உஜ்ஜீவியென்று நீதிமார்க்க முபதேசித்தாள். அனந்தரம், பதிசோரனைத் தாகநீர்யாசிக்குமாப்போலே தன்னை விட்டுவிடவேண்டுமென்றுகோரிதைன்னியதசையைவெளியிட்டுயாசித்தாள். கடைசியாக, ஸ்ரீராகவலக்ஷ்மண விக்கிரமத்தைஏற்கனவேயறிந்து பயத்தால்சோரகிருத்தியஞ்செய்த வவ்வரக்கனையிகழ்ந்து, தன்னைவிடாத பக்ஷத்தி லிரகுவீரகோதண்டத்தாலுண்டாகப்போகிற கோரவதத்தைக்காட்டி பயமுறுத்தினள். இப்படி கஷ

பய்விதங்களாலுரைத்த அக்கிருபாகிதியின் பத்திபவசனங்களில் குரூரமல்லாது ஹிதங்கண்டானில்லே. 'கால பலத்தாலவனுக்கு அந்ததர்மக்கியையின்ஸாரவாக்கியங்கள்கர்ணகடோமாகவேயிருந்தன. ஆகையாலவனுடைத் தந்திரியெல்லாம் வியர்த்தமாய்விட்டது. அவள்பிரதிவசனம் முடிந்தவுடன்காமமயலால்ஹிதாஹிதமறியவொண்ணா யற்றிருக்கிற இராவணன் அந்த பதிவிரதையின்மனம்வருந்தும்படி இன்னம சிலஅநுசார மொழிகளைச் சொல்லலுற்றனன்.

౨. యథాయథాసాంత్వయితా వశ్యః స్త్రీణాం తథాతథా । యథాయథా ప్రియం వక్తా పరిభూతస్తథాతథా॥

௨. யதாயதாஸாந்த்வயிதாவஶ்யஃ ஸ்த்ரீணாந்ததாததா।
யதாயதாப்ரியம்வக்தாபரிபூதஸ்ததாததா॥

௨. யதாயதாஸாந்த்வயிதாவஶ்யஃஸ்த்ரீணாம்ததாததா।
யதாயதாப்ரியம்வக்தாபரிபூதஸ்த்தாததா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| யதாயதா | எப்படி எப்படி | யதா யதா | எப்படி எப்படி |
| ஸாந்த்வயிதா | நல்வார்த்தைசொல்லுகிறுனே (அந்த புருஷன்) | ப்ரியம் | இஷ்டவசனத்தை |
|  |  | வக்தா | சொல்லுகிறுனே |
| ததா ததா | அப்படி அப்படியே | ததா ததா | அப்படி அப்படி |
| ஸ்த்ரீணம் | ஸ்திரீகளுக்கு | பரிபூதஃ | (ஸ்த்ரீகளால்) அவமானப்படுத்தப்படு கிருன். |
| வஶ்யஃ | (தான்) ஸ்வாதீனனுகிருன் |  |  |

தா-ம்.—புருஷன் ஸ்திரீகளுக்குநல்வார்த்தைசொல்லச்சொல்ல இவன் அவர்கள்வசியனுகிறுனல்லது அவர்களிவன் ஸ்வாதீனத்தையடைகிறதில்லே. இவன் பிரியமொழிகளுரைக்கவுரைக்க அவர்களால் திரஸ்க ரிக்கப்படுகிருன்.

3. సన్నియచ్ఛతి మే క్రోధం త్వయి కామస్సముత్థితః । ద్రవతో మార్గమాసాద్య హయానివ సుసారథిః॥

௩. ஸந்நியச்சதி மே க்ரோதம் த்வயி காமஸ்ஸமுத்திதஃ।
த்ரவதோ மார்க்கமாஸாத்ய ஹயாநிவ ஸுஸாரதிஃ॥

௩. ஸந்நியச்சதிமேக்ரோதம்த்வயிகாமஸ்ஸமுத்திதஃ।
த்ரவதோமார்க்கமாஸாத்யஹயாநிவஸுஸாரதிஃ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹேஸீதே) | (வாராய்ஜனகபுத்ரீ) | ஆஸாத்ய | அடைந்து |
| த்வயி | உன்னிடத்தில் | த்ரவதஃ | ஓடுகிற |
| ஸமுத்திதஃ | உண்டான | ஹயாந் | குதிரைகளை |
| காமஃ | ஆசையானது | ஸுஸாரதிரிவ | ஸமர்த்தனை தேர்ப்பாகன்போல் |
| மே-க்ரோதம் | என்னுடைய-கோபத்தை | ஸந்நியச்சதி | அடக்குகிறது. |
| அமார்க்கம் | கெட்ட வழியை |  |  |

தா-ம்—ஹேஸீதே! கேவலம் ஸதிரீஜாதியான நீ மஹாராஜாவான வெனக்குச்செய்யு மவமானத்தால்மிகுந்த கோபத்தையடைந்திருக்கிறேன். நீ என்மனதிற்கிசையு நிமித்தம் ஸர்வஸ்வங்களையு முனக்கர்ப்பணஞ்செய்வதாக வாய்மொழிதந்து உன்னைப் பலவாறுகப்பிரார்த்திக்தும் நீ மனமிரங்காது ஆபரணாலங்காரங்களைவர்ஜ்ஜித்து என்னை அவமானிக்கிருய். இக்கஷ்டத்தையாலுன்விஷயத்தில் மஹாகோபங்கொண்டவனுயினும் உன்மீதெனக்குள்ள காமமான தென்னையடக்குகின்றது. இராஜமார்க்கத்தைவிட்டுப் புறங்களிற்பாய்க்தோடுகிற அசுவங்களைக் கடிவாள ஸூத்திரத்தாலடக்கித் திருப்பிக்கொண்டுபோகிற ஸமர்த்தனைஸாரதிபோல் குரோதபலத்தாலுன்னைப்பிரிகிற வென்மனதைக் காமமானது உன்னிடத்தில்பிரீதிபண்ணும்படிசெய்கிறது. ஆகையாலல்லவோ நீசெய்கிற வபராதத்தைக்க்ஷமித்து உனக்குத்தீங்குசெய்ய மனமில்லாதிருக்கின்றனன்.

౪. వామః కామో మనుష్యాణాం యస్మిన్ కిల నిబధ్యతే । జనే తస్మిం స్త్వనుక్రోశ స్స్నేహశ్చ కిల జాయతే॥

౫. ఏతస్మాత్కారణాన్నత్వాం ఘాతయామి వరాననే । వధార్హామవమానార్హాం మిథ్యాప్రవ్రజితే రతామ్॥

௪. வாமஃகாமோமநுஷ்யாணாம்யஸ்மிந்கிலநிபத்யதே।
ஜநேதஸ்மிம்ஸ்த்வநுக்ரோஶஸ்ஸ்நேஹஶ்சகிலஜாயதே॥

௫. ஏதஸ்மாத்காரணாந்நத்வாம்காதயாமிவராநநே।
வதார்ஹாமவமாநார்ஹாம்மித்யாப்ரவ்ரஜிதேரதாம்॥

௪. வாமஃகாமோமநுஷ்யாணாம்யஸ்மிங்கிலநிபத்யதே।
ஜநேதஸ்மிந்ஸ்த்வநுக்ரோஶஸ்ஸ்நேஹஶ்சகிலஜாயதே॥

௫. ஏதஸ்மாத்காரணாந்நத்வாம்காதயாமிவராநநே।
வதார்ஹாமவமாநார்ஹாம்மித்யாப்ரவ்ரஜிதேரதாம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மநுஷ்யாணாம் | பிராணிகளுக்கு | ஸ்நேஹஸ்ச | நட்பும் |
| வாம: | அழகான | அநுக்ரோஸஸ்ச | தயையும் |
| காம: | (போகத்தில்) ஆசையானது | ஜாயதேகில | உண்டாகிறதன்றோ |
| யஸ்மிந்கில | எவ்விடத்தில் | ஏதஸ்மாத்காரணாத் | இந்தகாரணத்தால் |
| நிபத்யதே | கட்டப்படுகிறதோ (அல்லது) | (ஹே) வராநநே | (ஓ)சிரேஷ்டமானமுகமுடையவளே |
| மநுஷ்யாணாம் | பிராணிகளுக்கு | மித்யாப்ரவ்ரஜிதே | பொய்யான வநவிருத்தி யுடைய (ராமனிடத்தில்) |
| காம: | போகவிச்சையானது | | |
| வாம:கில | பிரதிகூலமன்றோ (அப்படியிருந்தும்) | ரதாம் | ஆஸக்தியுடையவளும் (அதனால்) |
| யஸ்மிந் | எவ்விடத்தில் (அக்காமமானது) | வதார்ஹாம் | கொலைக்குரியவளும் |
| நிபத்யதே | கட்டப்படுகிறதோ | அவமாநார்ஹாம் | அவமானத்திற் கிசைந்தவளுமான |
| தஸ்மிந்-ஜநே | அந்த-ஜனத்தினிடத்தில் | த்வாம்-நகாதயாமி | உன்னை-கொலைசெய்யேன். |

தா-ம்—ஹேஸீதே! ஸகலமனுஷ்யரும் காமத்திற்கிடுபெடுகின்றனர். காமத்திலேயே பரமஸுகத்தை யனுபவிக்கின்றனர். பிறகு அக்காமமே அவருக்கு சத்துருவாய்விடுகிறது. ஒருமனிதன் எவ்விடத்தில் காமத்தால்கட்டப்படுகிறானோ அவ்விடத்திலவன்தோஷங்களைவிசாரிக்கிறதில்லை, அபராதங்களைப்பார்க்கிறதில்லை, அவ்விடத்திலவனுக்குப் பரமமைத்திரமும் தாக்ஷிணியமும் ஜனிக்கின்றன. என்ன அவமானம் நேரிடினும் அதைக்கவனியாது தான்காமுற்றஸ்திரீக்குபவ்வியனாய்விடுகிறான். இந்நியதான், ஹேஸுந்தரி! உன்விஷயத்திலெனக்குண்டாயிருக்கும் க்ஷமைக்குக்காரணம். இராஜாதிராஜன், இராக்ஷஸேந்திரன், ஸார்வபௌமன், மஹாப்பிரதாபவான், யானுன்னைக்காமுற்றனன். தண்டகாரண்ணியத்தினின்றுன்னைக் கொண்டிங்கு சேர்த்தனன். பத்துமாதமுன்னைப் பலவாறுபிரார்த்தித்தனன். நீ என்னையடையவிரும்பாது அந்த நாடோடிராமனிடத்திலேயே வியாமோகங்கொண்டிருக்கிறாய். பௌருஷமின்மையா லிராஜ்ஜியமிழந்து தபஸ்வியென்று கபடவேஷம்பூண்டு வனத்தில்ஸஞ்சரிக்கிற அந்தஅல்பனையேபூஷிக்கிறாய். உனது ரதியையிச்சிக்கிறவென்னுடைய பலபௌருஷவிக்கிரமங்களையும் பெருமையையுமறியாது மந்தபுத்தியா லென்னைத்தூஷிக்கிறாய். ஹேஸீதே! உனது நடத்தைக்கும் பிடிவாதத்திற்கும் பயமின்றிப்பிரதிசொன்னக் குரூரவசனங்களுக்கும் உன்னையான் தண்டித்திருக்கவேண்டும். உன்னைக் கண்டார்கண்டு சிரிக்கும்படி அவமானித்திருக்கவேண்டும். ஸ்திரீஜாதியென்கிற தயையின்றி உன்னைச்சித்திரவதம் செய்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட மஹாபராதியாயினும் உன்னிடத்தில் யான்கிருபைகொண்டவனாயினன். பீடிப்பதற்கும் அவமானிப்பதற்கும் மனமில்லனாயினன். இதற்குக் காரணமெனதுகாமந்தான். காமுற்றவிடங்களிற் சிற்றங்கொள்ளாததுகாமங்கொண்டார் குணமாதலின் நீ செய்த வபராதசதங்களைப் பிரணயலீலையென்று மானித்துன்னை க்ஷமித்திருக்கின்றனன்.

தீர்த்தியவிசேஷார்த்தம்:

யஸ்மின்-எந்த, ஜநே-பக்தஜனத்தினிடத்தில், அநுக்ரோஸ:-கிருபையும், ஸ்நேஹஸ்ச-பிரியமும், நிபத்யதே-கட்டப்படுகிறதோ, தஸ்மிந்-அந்த, ஜநே-பக்தஜனவிஷயத்தில், மநுஷ்யாணாம்-மனிதர்களுக்கு, காம:- ஆவலானது, வாம:கிம் - பிரதிகூலமாயென்ன, ஆசிருதவாத்ஸல்லியதயா பரிபூர்ணையான என்னிடத்தில் பிருத்தியனாகவேண்டுமென்கிற விருப்பமானது உனக்கு யுக்தந்தான், ஆனால் என்னைக் கொலைபுரிகிற ஸ்திரீகாதுகனான உன்விஷயத்தில் விசுவாஸம் யுக்தமன்றென்கிற விஷயத்தில் சொல்லப்படுகிறது; ஏதஸ்மாத்காரணாத் - உன்னிடத்தில் பிருத்தியத்துவத்தைக் கோருகிறேனாதலால், ப்ரவ்ரஜிதே-வநவிருத்தியுடைய, (மத்ஸ்வாமிநி-என் ஸ்வாமியான, என்னுதனான, ராமே-ஸ்ரீராகவனிடத்தில்,) ரதாம்-விருப்பமுற்றவளும் என்னுடையதேவதையுமான, த்வாம்-உன்னை, ஹேவராநநே-வாராய் சிரேஷ்டமானதிருமுகமுடையவளே, நகாதயாமி - ஹிம்ஸியேன், வதார்ஹாம் - கொலைக்கு பாத்திரபூதையும், அவமாநார்ஹாம் - அவமானத்திற்குரியவளுமான, ஸ்த்ரியமபி-ஸ்திரீஜாதியையும், காதயாமீயத் - கொல்கிறவனென்கிற யாதொன்றுண்டோஅது, மித்யா-பொய்.

ஆசிருதஜனவிஷயத்தில் ஸ்நேகமும் கிருபையுமுண்டாகில் அவருடைய பிருத்தியத்துவத்தை யங்கீகரிப்பதற்கு அவரிடத்துள்ள காமம்பிரதிகூலமாகுமோ. உன்னிடத்தில் வாத்ஸல்லிய பரிபூர்ணையாயிருக்கிற வென்கீழ் நீ தாஸ்ஸியம்புரியவிரும்புவது யுக்தந்தான். ஆகிலும் ஸ்திரீகாதுகனான உன்னையானேற்றுக்கொள்வது தகுதியோவென்னில், ஹேதேவி! ஸமாதானமுரைக்கின்றனனதைக்கேட்டருளாய். யான்ஸ்திரீகாதுகனல்லன். வதத்திற்கும் அவமானத்திற்கும் தகுதியானவபராதம்செய்தஸ்திரீயாயினு மவளையான்ஹிம்ஸியேன். ஸ்திரீகாதுகனென்று எனக்குமித்தியாபவாதமுண்டாயிருக்கிறது. என்னுடையநாதனான ஸ்ரீராகவனிடத்தி லத்தியந்தம் விசுவாஸமுள்ள ஹேபரதேவதே! இந்த மித்தியாபவாதத்தால் என்னைப்பரிகரியாதே, அவசியமென்தாஸ்ஸியத்தை யங்கீகரித்தருளாய்.

௨. పరుషాణీహ వాక్యాని యాని యాని బ్రవీషి మామ్ । తేషు తేషు వధో యుక్తస్తవ మైథిలి దారుణః॥

௩. பாருஷாணீஹவாக்யாநியாநியாநிப்ரவீஷிமாம்।
தேஷுதேஷுவதோயுக்தஸ்தவமைதிலிதாருண:॥

௩. பருஷாணீஹவாக்யாநியாநியாநிப்ரவீஷிமாம்।
தேஷுதேஷுவதோயுக்தஸ்தவமைதிலிதாருண:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) மைதிலி | (ஓ) ஸீதே | யாநியாநி | எந்தெந்த |
| இஹ | இவ்விடத்தில் | பருஷாணி | கடோங்களான |
| மாம் | என்னை | வாக்யாநி | வார்த்தைகளை |

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ப்ரவீஷி | சொல்லுகிறாயோ | தாருண:-வத: | பயங்கரமான-கொலையானது |
| தேஷுதேஷு | அங்கங்கே | யுக்த: | தகுந்தது. |
| தவ | உனக்கு | | |

௬. ఏవముక్త్వాతు వైదేహీం రావణో రాక్షసాధిపః। క్రోధసంరంభసంయుక్తస్సీతాముత్తరమబ్రవీత్॥

௬. [illegible]
[illegible]

௬. ஏவமுக்த்வாதுவைதேஹீம்ராவணோராக்ஷஸாதிப:|
க்ரோதஸம்ரம்பஸம்யுக்தஸ்ஸீதாமுத்தரமப்ரவீத்||

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராக்ஷஸாதிப:-ராவண:- | இராக்ஷஸப்பிரபுவான இராவணன் | ஸம்ரம்ப | பரபரப்போடு |
| வைதேஹீம் | பிராட்டியை (ப்பார்த்து) | ஸம்யுக்த: | கூடினவனாக |
| ஏவம்-உக்த்வா | இந்தவிதம்-சொல்லி | ஸீதாம் | பிராட்டியைக்குறித்து |
| க்ரோதஸம்ரம்பஸம்யுக்த:= | | உத்தரம் | பிரதிவசனத்தை |
| க்ரோத | கோபத்தினுடைய | அப்ரவீத் | (பின்வருமாறு) சொன்னான். |

(௬-மு-எ-வ) தா-ம்.—ஹேஸீதே! நீ இப்பொழுதுரைத்த கர்ணகடூரமான பிரதிமொழிக்கு முன்னைக் கோரவதத்திலி ட்டிருக்கவேண்டும். வரம்பின்றி மனம்போனவாறு எந்நிலைமையையும் கௌரவத்தையும்யோசியாது குரூரவசனங்கள் மொழிந்தனை. உன்னைத்தக்ஷணமே வதைத்திருக்கவேண்டுமென்றறி. இந்தவிதம் அபிமதையாகாது திரணத்தைப்புகட்டி முன்னிருக்கிற தீங்குகளைப் பயமின்றி யிடித்துரைத்த பிராட்டியின் அவமதிப்பால் மனக்கொதிப்படைந்து இவ்வாறுரைத்து அத்யுக்கிரமானகோபத்துடன் திவிழிவிழித்து மீசைதுடிக்க தேகம்படபடக்க, மிகுந்த பரபரப்புடன் இன்னம் சிலபயங்கரமொழிகளையறைந்தனன்.

௭. ద్వౌమాసౌ రక్షితవ్యౌ మే యోऽవధిస్తే మయా కృతః। తతశ్శయనమారోహ మమ త్వం వరవర్ణిని॥

௮. ఊర్ధ్వం ద్వాభ్యాం తు మాసాభ్యాం భర్తారం మామనిచ్ఛతీమ్। మమ త్వాం ప్రాతరాశార్థమారభన్తే మహానసే॥

௭. [illegible]
[illegible]

௮. [illegible]
[illegible]

௭. த்வௌமாஸௌரக்ஷிதவ்யௌமேயோவதிஸ்தேமயாக்ருத:|
ததஶ்ஶயநமாரோஹமமத்வம்வரவர்ணிநி||

௮. ஊர்த்வம்த்வாப்யாந்துமாஸாப்யாம்பர்த்தாரம்மாமநிச்சதீம்|
மமத்வாம்ப்ராதராஶார்த்தமாரபந்தேமஹாநஸே||

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) வரவர்ணிநி | (ஓ) சிரேஷ்டமான தேககாந்தியுடையவளே | ஆரோஹ | ஏறு |
| | | த்வாப்யாம்-மாஸாப்யாம்- | இரண்டு-மாஸங்களுக்கு |
| தே-மயா | உனக்கு-என்னால் | ஊர்த்வம்து | மேலோவென்றால் |
| ய:-அவதி:- | எந்த-கெடுவானது | மாம்-பர்த்தா | என்னை-நாயகனாக |
| க்ருத: | செய்யப்பட்டதோ (அதற்கு) | அநிச்சதீம்-த்வாம் | இச்சியாத-உன்னை |
| த்வௌ-மாஸௌ | இரண்டு-மாதங்கள் | ப்ராதராஶார்த்தம் | இரண்டுமாஸம் பூர்த்தியாகி மறுநாள் காலைபோஜனநிமித்தம் |
| மே-ரக்ஷிதவ்யௌ | என்னால்-இரக்ஷிக்கத்தக்கவை (பார்க்கத்தக்கவை) | | |
| தத:-மம | பிறகு-என்னுடைய | மம | என்னுடைய (பாசகர்கள்) |
| ஶயநம் | படுக்கையை | மஹாநஸே | சமையல்கட்டிலில் |
| த்வம் | நீ | ஆரபந்தே | ஹிம்ஸிப்பார்கள். |

தா-ம்.—ஹேஸீதே! தங்கப்பிரபைபோன்றகாந்தியுடைய உனதுதிவ்யவபுவழகில்யானீடுபட்டேனாகையால் நீ புத்தியின்மையாற்செய்தவபராதங்களைக்ஷமித்தேன். நீ என்னைபர்த்தாவாகவரிப்பதற்கு ஆதியிலேற்படுத்திய ஓராண்டுகெடுவிற்பத்து மாதஞ்சென்றுவிட்டது. இன்னமிரண்டு மாதத்திற்குள் நீமனோநிச்சயஞ்செய்து என்சயனத்தை யடையவேண்டும். அதற்குள் நீ மனமிசைந்தென்னை ஸந்தோஷிப்பிக்காயாகில் மூன்றுமாதப்பிரதம தினகாலையில் உனதுமாம்ஸத்தைப் பாகஞ்செய்து எனக்காகாரமாயமைப்பதற்காக எனதுபரிசாரகர்கள் சமையற்சாலைக்குன்னைக்கொண்டுபோய்ப் பீடிப்பார்கள். இதையறிந்துநீ உஜ்ஜீவிக்கும்வண்ணம் நடந்துகொள்ளக்கடவாய்.

௰. తాం తర్జ్యమానాం సంప్రేక్ష్య రాక్షసేన్ద్రేణ జానకీమ్। దేవగన్ధర్వకన్యాస్తా విషేదుర్వికృతేక్షణాః॥

௰. [illegible]
[illegible]

௰. தாந்தர்ஜ்யமாநாம்ஸம்ப்ரேக்ஷ்யராக்ஷஸேந்த்ரேணஜாநகீம்|
தேவகந்தர்வகந்யாஸ்தாவிஷேதுர்விக்ருதேக்ஷணா:||

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராக்ஷஸேந்த்ரேண | இராக்ஷஸராஜாவான (இராவணனு | தேவகந்தர்வகந்யாঃ | தேவகந்தர்வகன்னிகைகள் |
| தர்ஜ்யமாநாம் | மிரட்டப்பட்ட [ல்) | விக்ருதேக்ஷணঃ | விகாரமான கண்களையுடையவர்களா |
| தாம்-ஜாநகீம் | அந்த-ஜனகபுத்திரியை (ப்பார்த்து) | விஷேதுঃ | துக்கித்தார்கள். [ய்க்கொண்டு |

தா-ம்—இவ்விதமிராவணனு லதட்டப்பட்ட பிராட்டியின் தைன்னியத்தையும் துக்கத்தையுங்கண்டு அவ்வரக்கனைப் பின்றொடர்ந்துவந்த தேவகந்தர்வஸ்திரீகள் மிகவும்வருந்தமுற்றனர். பெருங்காற்றிலசைந் தாடுகிற இளவாழைபோல் இராக்ஷஸபீதியாலும் அவனுடைய உக்கிரவசனங்களாலும் தேககம்பமெடுத்துக் கண்ணீர்சொரிந்து என்செய்வோமென்று பரிதபிக்கிற ஏழையைக்கண்டவுடன் அம்மாதரும் பயந்து பிரமி த்தபார்வையோடு தூக்கிந்தனர்.

౧౧. ఓష్ఠప్రకారైరపరా వక్త్రైర్నేత్రైస్తథాపరాః । సీతామాశ్వాసయామాసుస్తర్జితాం తేనరక్షసా॥

கக. ஒஷ்ட்ரப்ரகாரைரபராவக்த்ரைர்நேத்ரைஸ்ததாபராঃ।
ஸீதாமாஶ்வாஸயாமாஸுஸ்தர்ஜிதாம்தேநரக்ஷஸா॥

கக. ஓஷ்டப்ரகாரைரபராவக்த்ரநேத்ரைஸ்ததாபராঃ।
ஸீதாமாஶ்வாஸயாமாஸுஸ்தர்ஜிதாம்தேநரக்ஷஸா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தேந-ரக்ஷஸா | அந்த-இராக்ஷஸனுல் | ததா-அபராঃ | அவ்விதமே-வேறுசிலஸ்திரீகள் |
| தர்ஜிதாம்-ஸீதாம் | மிரட்டப்பட்ட-பிராட்டியை | வக்த்ரநேத்ரைঃ | முகமென்ன கண்களென்ன, இவைக ளின் ஸமிக்கியைகளாலும் |
| அபராঃ | சிலஸ்திரீகள் | | |
| ஒஷ்டப்ரகாரைঃ | உதட்டுஸமிக்கியைகளாலும் | ஆஶ்வாஸயாமாஸுঃ | தேறுதலைச்செய்தார்கள். |

தா-ம்—பிராட்டி இவ்வண்ண மதட்டப்பட்டு நடுங்குகையில் மறைவில்நின்ற வேறுஸ்திரீகளில் சிலர் உதடுகளாலும், சிலர் முகங்களாலும், சிலர் கண்களாலும் ஸமிக்கியைகளைச் செய்து, அந்த ஸமிக்கியைகளால் "ஸீதே! இதெல்லாம்வீண்மிரட்டுதான், காரியத்திலொன்றுமில்லை, பயப்படாதே" என்கிற அர்த்தத்தை வெளியிட்டு, துக்கிக்கிற ஜானகியைத்தேற்றினர்கள்.

౧౨. తాభిరాశ్వాసితా సీతా రావణం రాక్షసాధిపమ్ । ఉవాచాత్మహితం వాక్యం వృత్తశౌణ్డీర్యగర్వితమ్॥

கஉ. தாபிராஶ்வாஸிதாஸீதாராவணம்ராக்ஷஸாதிபம்।
உவாசாத்மஹிதம்வாக்யம்வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம்॥

கஉ. தாபிராஶ்வாஸிதாஸீதாராவணம்ராக்ஷஸாதிபம்।
உவாசாத்மஹிதம்வாக்யம்வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தாபிঃ | அந்த ஸ்திரீகளால் | வ்ருத்தஶௌண்டீர்யகர்விதம் (யதாயதா)= | |
| ஆஶ்வாஸிதா-ஸீதா | தேற்றரவுசெய்யப்பட்ட-பிராட்டி | வ்ருத்த | பாதிவிருத்தியத்தினுடைய |
| ராக்ஷஸாதிபம் | இராக்ஷஸராஜாவான | ஶௌண்டீர்ய | பலத்தினல் (உண்டான) |
| ராவணம் | இராவணனை (ப்பற்றி) | கர்விதம் (யதாயதா) | பெருமைதோன்றும்படி |
| ஆத்மஹிதம்-வாக்யம் | தனக்குநல்லதான - வார்த்தையை | உவாச | சொன்னாள். |

தா-ம்—ஸமீபத்திலுள்ள ஸ்திரீகளின் ஜாடையால் திடமடைந்த பிராட்டியானவள் ரௌத்திரமொழிகளுரைத்த இராவணனைப்பார்த்துத் தன்னுடையபாதிவிருத்தியதேஜஸ்ஸுக்குமுன் அவனுடையபலமுழுதுந் திரணப்பிராயமென்கிற பெருமைதோன்றும்படி தனக்கு ஹிதமான இன்னம் சிலவசனங்களைக்கூறினள்.

౧౩. నూనం న తే జనః కశ్చిదస్తి నిఃశ్రేయసే స్థితః । నివారయతి యో న త్వాం కర్మణోఽస్మాద్విగర్హితాత్॥

கரு. நூநம்நதேஜநঃகஶ்சிதஸ்திநிঃஶ்ரேயஸேஸ்திதঃ।
நிவாரயதியோநத்வாம்கர்மணோஸ்மாத்விகர்ஹிதாத்॥

கரு. நூநம்நதேஜநঃகஶ்சிதஸ்திநிঃஶ்ரேயஸேஸ்திதঃ।
நிவாரயதியோநத்வாம்கர்மணோஸ்மாத்விகர்ஹிதாத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹேராவண) | (அடேராவண) | நூநம் | நிச்சயம் |
| தே-நிঃஶ்ரேயஸே | உனக்கு-நல்விஷயத்தில் [வன்) | யঃ-அஸ்மாத் | எவன்-இந்த (இப்படி) |
| ஸ்திதঃ | இருப்பவன் (ஹிதோபதேசம் செய்ப | விகர்ஹிதாத் | நிந்திக்கப்பட்ட |
| கஶ்சித்-ஜநঃ | ஒரு-பிராணியும் | கர்மணঃ | வியாபாரத்திலிருந்து |
| நாஸ்தி | இல்லை | த்வாம்-நநிவாரயதி | உன்னை-திருப்பவில்லையோ. |

தா-ம்—அடேராவண! உன்னுடைய அன்னத்தையுண்டு பந்துக்களென்றும் மந்திரிகளென்றும் பெயர்பூண்டு உன்னைச்சூழ்ந்திருக்கிற எண்ணிறந்தஜனங்களுள் ஸன்மார்க்கநெறியில் நிலைநிற்கிற ஸாதுவொருவனுமில்லை. அதர்மத்தில் பிரவர்த்திக்கிற தங்களரசனுக்கு சாஸ்திரவிதிகளைத் துணிவுடனுபதேசித்து ஸத்ஸம்பிரதாயத்திலாஸக்தி ஜனிப்பிக்கத்தக்க ஸத்புருஷனொருவனுமில்லை. எல்லோருமுனது தயவையபேக்ஷித்து

உன்க்ஷேமத்தைக்கருதாது, உனக்கின்பமளிக்கிற பாபவிர்த்தியிலுன் மனங்குதூகலங்கொள்ளும்படி இச்சகம் பாம்கிற தூர்மந்திரிகளென்றேயெண்ணுகிறேன். இங்கிருந்தபடி நீயெப்படியறிந்தாயெனில் உன்னுடையகட த்தையே அதை வியக்தமாக்குகிறது. பரதாரையைகிர்ப்பந்திக்கிற இந்தபரமநிகிருஷ்டமான பாபவிருத்தியத் தினின்றுன் மனதைத்தடுப்பாரொருவனுமில்லையே.

౧౪. మాంహిధర్మాత్మనఃపత్నీంశచీమివశచీపతేః। త్వదన్యస్త్రిషులోకేషుప్రార్థయేన్మనసాపికః॥

கச. [illegible]

[illegible]॥

கச. மாம்ஹிதர்மாத்மநஃபத்நீம்ஶசீமிவஶசீபதே:।

த்வதந்யஸ்த்ரிஷுலோகேஷுப்ரார்த்தயேந்மநஸாபிக:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தர்மாத்மந: | தர்மத்தையேஸ்வரூபமாயுடைய (ஸ்ரீ ராகவனுக்கு) | த்வத் | உன்னைக்காட்டிலும் |
| பத்நீம்-மாம்ஹி | பாரியையான-என்னையோவென்றால் | அந்ய:-க: | வேறொருவனை-எவன் (தான்) |
| ஶசீபதே: | இந்திரனுக்கு (பாரியையான) | த்ரிஷுலோகேஷு | மூன்றுலோகங்களில் |
| ஶசீமிவ | சசிதேவியைப்போல் | மநஸாபி | மனதினாலாவது |
| | | ப்ரார்த்தயேத் | கோருவான். |

தா-ம்—ஹேராக்ஷஸாதம! ஸகலதேவகணங்களுக்கு அதிபதியான மஹேந்திரனுக்கு சசீதேவிபத்தினி போல் மானுஷகோடிகளுக்கெல்லாம் பிரபுவான ஸ்ரீராகவனுக்குநான்தர்மபத்தினீ. இந்திரபத்தினியையொரு வனுங்கோரத்துணியாதுபோல் அந்த தர்மஸ்வரூபியானமனுஜேந்திரனுடைய போகத்திற்கேயுரியபரிசுத்தை யானவென்னை வாய்கூசாது பிரார்த்திக்கிற நீயல்லாமல் இம்மூவுலகில் அனர்த்த ஹேதுகாமான இக்காமபாவ த்தை மனதிலுங்கொள்ளத்தக்க வேறொருவனுமுண்டோ? ஆத்மநாசத்தையும் வம்சநாசத்தையுமறியாமல் பதிவிரதாக்கினியைப்பற்றவருகிற உன்போல் வேறுமூடர் இவ்வுலகிலுளரோ?

౧౫. రాక్షసాధమరామస్యభార్యామమితతేజసః। ఉక్త్వానసియత్పాపంక్వగతస్తస్యమోక్ష్యసే॥

கரு. [illegible]

[illegible]॥

கரு. ராக்ஷஸாதமராமஸ்யபார்யாமமிததேஜஸ:।

உக்தவாநஸியத்பாபம்க்வகதஸ்தஸ்யமோக்ஷ்யஸே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே)ராக்ஷஸாதம | (ஓ)இராக்ஷஸநீசனே | உக்தவாந்-அஸி | சொன்னவனாகை-ஆனாயோ |
| அமிததேஜஸ: | மிதமற்றபராக்கிரமமுடைய | தஸ்ய | அவரிடத்திலிருந்து |
| ராமஸ்ய | ஸ்ரீராகவனுடைய | க்வ-கத: | எங்கு-போனவனாக |
| பார்யாம் | பத்தினியான (எனனை) | மோக்ஷ்யஸே | தப்பித்துக்கொள்ளப்போகிறாய். |
| யத்-பாபம் | எந்த-பாபரூபமானவாக்கியத்தை | | |

𑌤𑌸𑍍𑌯𑌨𑍈𑌰𑍃𑌤𑌰𑌾𑌜𑌸𑍍𑌯𑌰𑌾𑌜𑌰𑌾𑌜𑌸𑍍𑌯𑌭𑌾𑌮𑌿𑌨𑌿॥

உக. 𑌕𑌿𑌂𑌤𑍍𑌵𑌂𑌨𑌕𑍁𑌰𑍁𑌷𑍇𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑌹𑌿।
𑌸𑌾𑌧𑍁𑌤𑍇𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋𑌦𑍇𑌵𑌿𑌕𑌥𑌿𑌤𑌂𑌸𑌾𑌧𑍁𑌭𑌾𑌮𑌿𑌨𑌿॥

உக½. 𑌗𑍃𑌹𑌾𑌣𑌸𑍁𑌸𑍍𑌮𑌿𑌤𑍇𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌨𑍍𑌯𑌥𑌾𑌨𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌸𑌿॥

கஅ. ததஸ்துதுர்முகீநாமராக்ஷஸீவாக்யமப்ரவீத்।
யஸ்யஸூர்யோநதபதிபீதோயஸ்யசமாருதஃ॥

ககூ. நவாதிஸ்மாயதாபாங்கேகிம்த்வம்தஸ்யநதிஷ்டஸி।
புஷ்பவ்ருஷ்டிம்சதரவோமுமுசுர்யஸ்யவைபயாத்॥

உ௦. ஶைலாஶ்சஸுப்ருபாநீயம்ஜலதாஶ்சயதேச்சதி।
தஸ்யநைருதராஜஸ்யராஜராஜஸ்யபாமிநி॥

உக. கிம்த்வம்நகுருஷேபுத்திம்பார்யார்த்தேராவணஸ்யஹி।
ஸாதுதேதத்வதோதேவிகதிதம்ஸாதுபாமிநி॥

உக½. க்ருஹாணஸுஸ்மிதேவாக்யமந்யதாநபவிஷ்யஸி॥

இதி ஸ்ரீஸுந்தரகாண்டே - த்ரயோவிம்ஶஸ்ஸர்க்கஃ.

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தூர்முகீநாம | தூர்முகியென்றுபெயருடைய | (ததா) | (அப்பொழுது விடுகின்றன) |
| ராக்ஷஸீ | இராக்ஷஸியானவள் | பாமிநி | அழகுடையவளே! |
| ஸூர்ய:-யஸ்ய-பீத: | ஸூரியன்-எவனுக்கு-பயந்தவனாக | தஸ்ய | அப்படிப்பட்ட |
| நதபதி | தபிக்கவில்லையோ | நைருதராஜஸ்ய | இராக்ஷஸராஜாவான [கு |
| யஸ்யச(பீத:) | எவனுக்கு(பயந்தவனாக) | ராஜராஜஸ்ய-ராவணஸ்ய- | இராஜேந்திரனான இராவணனுக் |
| மாருத:-நவாதிஸ்ம | வாயு-வீசவில்லையோ | பார்யார்த்தே | பாரியையாயிருக்கிற பிரயோஜனத் |
| ஆயதாபாங்கே | நீண்டகடைக்கண்ணுடையவளே | புத்திம் | புத்தியை (இஷ்டத்தை) [தில் |
| த்வம்-கிம் | நீ-என்னநிமித்தமாக | கிம்-த்வம்-நகுருஷே | ஏன்-நீ-செய்யமாட்டாய் |
| தஸ்ய | அப்படிப்பட்ட (இராவணனுக்கு ஸ் | தேவி-தே | ஸீதே-உனக்கு |
| நதிஷ்டஸி | இருக்கவில்லை [வாதீனையாக) | ஸாது ஸாது | மிகவும் நன்றாக |
| யஸ்ய-பயாத் | எவனிடத்திலுண்டான-பயத்தால் | தத்வத:-கதிதம் | யதார்த்தமாக-சொல்லப்பட்டது |
| தரவ:-புஷ்பவ்ருஷ்டிம்- | விருக்ஷங்கள்-புஷ்பவருஷத்தை | ஸுஸ்மிதே | மந்தஹாஸமுடையவளே! |
| முமுசு: | (காலவிபரிணாமமின்றி) விடுகின்றன | பாமிநி | இரதிலீலைக்கிசைந்த ஸுந்தரமே! |
| (ஹே) ஸுப்ரூ: | (ஓ)அழகானபுருவமுள்ளவளே [வோ | வாக்யம்-க்ருஹாண | (என்) வார்த்தை-கிரகி |
| சைலாஶ்ச-ஜலதாஶ்ச | பர்வதங்களும்-மேகங்களும் | அந்யதா-நபவிஷ்யஸி | வேறுபிரகாரமாக-ஆகாதே |
| பாநீயம் | ஜலத்தை | (இதி) அப்ரவீத் | (என்று) சொன்னாள். |
| யதா இச்சதி | எப்பொழுது விரும்புகிறானோ | | |

(கஅ-மு-உகஉ-ல்) தா-ம்—ஹேஸீதே! உனதுதோளையிச்சிக்கிற இராவணனுடைய பிரதாபத்தை இன்னம் விவரித்துச்சொல்லுகிறேன்கேள். அகிலபுவனத்தையும் தன்னுடைய உஷ்ணரச்மியால் தபிக்கச்செய்கிற ஆதித்தியன் இராவணவிக்கிரமபயத்தா விலங்கையில் மந்தமாகப்பிரகாசிக்கின்றனன். கடலுமுலகுமொன்றுசேர்ந்து அல்லோலகல்லோலப்படும்படி வீசுகிறமாருதன் தசக்கிரீவபயத்தால் இங்கு மந்தமாகவீசுகின்றனன். சிலருதுக்களிற்புஷ்பித்து சிலருதுக்களில் சும்மாவிருக்கிறதன்மையுடைய விருக்ஷங்கள் பௌலஸ்தியபயத்தால் காலநிர்ணயம்பாராது மஹாராஜா இச்சித்தமாத்திரத்தில் புஷ்பங்களைச்சொரிகின்றன. சிலகாலத்தில்மாத்திரம் வர்ஷிக்கிறமேகங்கள் இங்கு இராவணாக்கியையால் விரும்பியபோது திவ்வியதீர்த்தங்களைப்பொழிகின்றன. கிரிகளுமவ்வண்ணமே வேண்டியபோது சுத்தநீரை நதிகளில்பெருக்குகின்றன. இந்தஆச்சரியங்கள், ஹேஸுந்தரி, எங்காவதுண்டோ! தேவதைகளாரம்பமான சேதனசேதனவஸ்துக்களனைவுமிவ்வாறு ஸேவிக்கப்பெற்ற பிரபு வேறெங்காவதுளனோ! அப்படிப்பட்ட மஹானுனதுபோகத்தை யிச்சிக்கையில் அவனுக்கேன் பிரீதிசெய்யக்கூடாது? எக்காரணத்தாலிம்மஹாப்பிரபுவின் விசுவாஸத்தை மானிக்காமலிருக்கிறாய்! இராக்ஷஸகோடிகளுக்கெல்லா மதிபதியான இராவணனிப்படி பிரார்த்திப்பது உனக்கு ஸாமான்னிய பாக்கியமோ? உன்னுடைய விற்போன்றபுருவத்தினழகும், அகன்று செவியளவில்நீண்டு மனோகரமாக விளங்குமுனது நேத்திராரவிந்தங்களின் ஸுந்தரமும், இரதிலீலைக்கிசைந்தஉன்னுடைய தனுவினிணையில்லாவெழிலும், மின்னற்கொடிபோல் ஜ்வலிக்கிற உன்னுடைய அஸாதாரண தேஜஸ்ஸும், சந்திரிகையைப் பழிக்கிற உன்னுடைய மந்தஹாஸத்தின் விலாஸமும் சிருங்காரரஸத்தைக்கோருகின்றனவே. ஹேஸுந்தரி! கிட்டிவந்ததருணத்தை யேன் கைநழுவவிடுகிறாய். ஸூரியன்பயப்படுகிறவிக்கிரமனை நீ விரும்புகிறாயில்லை. மாருதன் ஸேவிக்கிற மன்மதனை நீ விரும்புகிறாயில்லை. விருக்ஷங்கள்பூஜிக்கிற வஸந்தனை நீ விரும்புகிறாயில்லை. மேகங்கள் மானிக்கிறமன்னனை நீ விரும்புகிறாயில்லை. மலைகள் வணங்குகிற மஹாபாகுவை நீ விரும்புகிறாயில்லை. ஹேபாமிநீ! நான்சொல்லுகிற ஹிதவசனங்களை யுற்றுக்கேள். உனக்கு ஸ்திரமான நன்மையையே உரைக்கின்றனன். இராவணனைச்சேரு, திவ்வியஸுகங்களை யனுபவிக்கப்பாரு, இதுதானுனக்குத் தத்துவார்த்தமான வசனம். இவைகளைக் கிரகித்துக்கொள். இவைகளுக்கு அன்னியதா நடக்காதே. இவ்விதம் தூர்முகியென்னுமிராக்ஷஸி இராவணன் பெருமையையும் அவனையடைந்தக்கால் ஸீதைக்குண்டாகும் போகாதிஸுகங்களையும் விவரித்துரைத்தனள்.

ஸ்ரீஸந்மநோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்
இருபத்துமூன்றாவதுஸர்க்கம் - முற்றிற்று.

## இருபத்துநான்காவதுஸர்க்கம்.

౧. తతస్సీతాముపాగమ్యరాక్షస్యోవికృతాననాః । పరుషంపరుషానార్యఊచుస్తాంవాక్యమప్రియం॥

௧. 𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌵𑌿𑌕𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌃।
𑌪𑌰𑍁𑌷𑌂𑌪𑌰𑍁𑌷𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑌊𑌚𑍁𑌸𑍍𑌤𑌾𑌂𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌂॥

௧. ததஸ்ஸீதாமுபாகம்யராக்ஷஸ்யோவிக்ருதாநநா:।
பருஷம்பருஷாநார்யஊசுஸ்தாம்வாக்யமப்ரியம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத: | பின்பு | ஸீதாம்-உபாகம்ய | ஸீதையை-அடைந்து |
| விக்ருதாநநா: | விகாரமானமுகமுடையவர்களும் | பருஷம் | கடுமையானதும் |
| பருஷா: | கடினர்களானவர்களும் | அப்ரியம்-வாக்யம் | இஷ்டமில்லாததுமான-வார்த்தையை |
| ராக்ஷஸ்ய: | இராக்ஷஸிகளுமான | தாம் | அந்த (பிராட்டியைப்பார்த்து) |
| நார்ய: | ஸ்திரீகள் | ஊசு: | சொன்னார்கள். |

தா-ம்—அரக்கன்பிடித்தப்புறம் போனவளவில், அவனுலாக்கியா பிக்கப்பட்ட காவல்ஸ்திரீகளில் சிலர் அவன்பெருமையைப் பிராட்டிக்காலாபித்தனர். அவ்வரிசையில் துர்முகி தன்ஸ்தோத்திரத்தை முடித்தபிறகு வேறுசிலராக்ஷஸிகள் அன்னையையணுகி மஹாகர்ணகடூரமான வசனங்களைமொழிந்தனர். குரூரத்திலும் குரோதத்திலும் கோரரூபத்திலும் ஸ்வஜாதிநாரிகளைப்பழிப்பவர்களான அவ்விராக்ஷஸாதமிகள் தங்களுடைய விப்பிரியவசனங்களால் தேவியை அளவின்றிப் பீடித்தனர்.

௨. కింత్వమంతఃపురే సీతే సర్వభూతమనోహరే । మహార్హశయనోపేతే న వాసమనుమన్యసే॥

௨. [illegible]

[illegible]

௨. கிம்த்வமந்த:புரேஸீதேஸர்வபூதமனோஹரே।
மஹார்ஹஶயநோபேதேநவாஸமநுமந்யஸே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸீதே | (ஓ) ஸீதே | அந்த:புரே | அந்தப்புரத்தில் |
| த்வம் | நீயானவள் | கிம் | ஏன் (என்னநிமித்தமாக) |
| *ஸர்வபூதமனோஹரே - ஸமஸ்தப்பிராணிகள்மனதைமிழுக்க [வல்ல | | வாஸம் | இருப்பை (வாஸத்தை) |
| மஹார்ஹஶயநோபேதே-விலையுற்றமஞ்சத்தோடுகூடின | | நாநுமந்யஸே | அங்கீகரியாமலிருக்கிறாய் |

தா-ம்—ஹேஸீதே! நீ புழுதிபடிந்த இப்பாழ்தரையிலேனுட்கார்ந்து அவதிப்படவேண்டும். ஆபரணமின்றி அலங்காரமின்றி அன்னபானமின்றி மலினப்பிரபையோடு கண்ணீருங்கண்ணுமாக ஏன்ஸங்கடப்படவேண்டும். நீயோ அகிலலோகமு மோகிக்கும்படியான திவ்வியஸௌந்தரியமுள்ளவள், மஹாபோகங்களையனுபவிப்பதற் கருகையான பாக்கியசாலி. பஞ்சணைபரப்பிய ஹம்ஸதூளிகாமஞ்சத்திற்படுத்து திவ்வியாங்கனைகள்செய்கிற இனியஉபசாரங்களைப்பெற்று, நித்திய மன்மதோத்ஸவங்களிற்களித்து வாழ்கிற அந்தப்புரவாஸத்தை யேன் விரும்பவில்லை. இராவணனந்தப்புரமானது ஸகலபிராணிகளுடைய மனதையு மிழுக்கவல்ல பேரானந்தத்தோடு கூடினதல்லவோ! வருந்திநீநோடாது, உன்னைத்தேடிவந்தழைக்கிற போகபாக்கியங்களை நீயேனங்கீகரியாமலிருக்கிறாய்.

3. మానుషీ మానుషస్యైవ భార్యాత్వం బహుమన్యసే । ప్రత్యాహర మనో రామాన్నత్వం జాతు భవిష్యసి॥

௩. [illegible]

[illegible]

௩. மாநுஷீமாநுஷஸ்யைவபார்யாத்வம்பஹுமந்யஸே।
ப்ரத்யாஹரமனோராமாந்நத்வம்ஜாதுபவிஷ்யஸி॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மாநுஷீ | மனுஷ்யஸ்திரீயான (நீ) | மந: | மனதை |
| மாநுஷஸ்யைவ | மனுஷியனுக்கே | ப்ரத்யாஹர | திருப்பிக்கொள் |
| பார்யாத்வம் | மனைவியாயிருக்குகையை | த்வம் (தஸ்ய) | நீ (அந்த இராமனுக்கு) |
| பஹுமந்யஸே | அங்கீகரிக்கிறாய் | ஜாது | எப்பொழுதும் (இனிமேல்) |
| ராமாத் | இராமனிடத்திலிருந்து | நபவிஷ்யஸி | (பாரியையாக) ஆகமாட்டாய் |

தா-ம்—ஹேஸீதே! நீ மனுஷியஸ்திரீயாகையால் மனுஷியனுக்கேபாரியையாகுகையைக்கோருகிறாய். இராவணனுன்னைக்காமுற்றபிறகு ஸ்வஜாதிபர்த்தாவான இராமனையடைவது உனக்கு ஸாத்தியமோ. இனி இராமனை நீ ஒருக்காலுமடையப்போகிறதில்லை. ஆகையால் ஸீதே! இராமனை நிராசைபண்ணு, இராவணன்மீது காதல்கொள்ளு.

## தீர்த்தீயவிசேஷார்த்தம்.

மாநுஷீ (த்வம்)-மனுஷியஸ்திரீயான (நீ) மநுஷ்யஸ்யைவ-மனுஷியாவதாரங்கொண்டஸ்ரீராமனுக்கே, பார்யா-மஹுமந்யஸே-பாரியையாகவெகுவாகவிரும்புகிறாய், (தத்யுக்தம் - அதுஸரியே - ஆகையால்) ராமாத் - ஸ்ரீராமனிடத்திலிருந்து, மந:-மனதை, நப்ரத்யாஹர-திருப்பாதே, த்வம்-நீ, ஜாது-எப்பொழுதாவது, (ராமஸ்யபார்யா) பவிஷ்யஸி-(ஸ்ரீராகவனுக்கே பாரியையாக) ஆவாய். (தா-ம்)—மானுஷஸ்திரீ ரூபங்கொண்ட நீ மனுஷியாவதாரங்கொண்ட ஸ்ரீராமனுக்குப் பாரியையாக அடையவிரும்புவது யுக்தந்தான். ஆகையால் ஸ்ரீராமனிடத்துள்ள உன்மனதைத் திருப்பிக்கொள்ளாதே, எப்பொழுதாவது அவருக்கே நீ பாரியையாவது நிச்சயம்.

* இப்பதத்தை ஸீதைக்கு ஸம்போதனமாகவுங்கொள்ளலாம்.

౪. త్రైలోక్యవసుభోక్తారం రావణం రాక్షసేశ్వరమ్ । భర్తారముపసంగమ్య విహరస్వ యథాసుఖమ్॥

௪. 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌵𑌸𑍁𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌂 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍।
𑌭𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍁𑌪𑌸𑌙𑍍𑌗𑌮𑍍𑌯 𑌵𑌿𑌹𑌰𑌸𑍍𑌵 𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌮𑍍॥

௪. த்ரைலோக்யவஸுபோக்தாரம்ராவணம்ராக்ஷஸேஸ்வரம்।
பர்த்தாரமுபஸங்கம்யவிஹரஸ்வயதாஸுகம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| த்ரைலோக்யவஸுபோக்தாரம் | மூன்றுலோகதனத்தைப் புஜிப்பவனும் | பர்த்தாரம் | நாயகனாக |
| ராக்ஷஸேஸ்வரம் | இராக்ஷதநாதனுமான | உபஸங்கம்ய | அடைந்து |
| ராவணம் | இராவணனை | யதாஸுகம் | யதேச்சையாக |
| | | விஹரஸ்வ | க்ரீடி. |

தா-ம்—ஹேஸீதே! எங்கள்பெருமான் மூன்றுலோகங்களிலுமுள்ள பிரபலவீரரைவென்று அவரவரிடத்துள்ள ரத்தினவிசேஷங்களைப்பறித்துவந் தனுபவிக்கிறமஹாப்பிரபு. அளவற்ற ஐசுவரியம் பொருந்திய இவ்வரக்கர் புரிக்குநாதன். சத்துருக்களைக்கதறக்கதற வடிக்கிறபீமவிக்கிரமன். இவ்விதபெருமைகள்பொருந்திய வெங்கள்கோமானைப் பதியாகவடைந்து ஸகலஸுகங்களையும் யதேஷ்டமாக அனுபவி.

౫. మానుషీ మానుషం తం తు రామమిచ్ఛసి శోభనే । రాజ్యాద్భ్రష్టమసిద్ధార్థం విక్లబం త్వమనిందితే॥

௫. 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌮𑌾𑌨𑍁𑌷𑌂𑌤𑌂𑌤𑍁𑌰𑌾𑌮𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿𑌶𑍋𑌭𑌨𑍇।
𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑍍𑌰𑌷𑍍𑌟𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌂𑌵𑌿𑌕𑍍𑌲𑌬𑌂𑌤𑍍𑌵𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑍇॥

௫. மாநுஷீமாநுஷம்தம்துராமமிச்சஸிஸோபநே।
ராஜ்யாத்ப்ரஷ்டமஸித்தார்த்தம்விக்லபம்த்வமநிந்திதே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸோபநே | (ஓ) மங்களகரே | மாநுஷம் | மனிதஜாதியுமான |
| மாநுஷீ-த்வம் | மனுஷியஸ்திரீயான-நீ | தம் | அந்த (இராகவனை) |
| ராஜ்யாத்-ப்ரஷ்டம் | இராஜ்ஜியத்திலிருந்து-நழுவினவனும் | அநிந்திதே | நிந்திக்கத்தகாதவளே! |
| விக்லபம் | பயத்தினால் பங்கமடைந்தவனும் | இச்சஸி | இச்சிக்கிறாய். |
| அஸித்தார்த்தம் | தனமற்றவனும் | | |

(தா-ம்)—திவ்வியமங்கள ஸ்வரூபமுள்ள ஹேஸுந்தரி! திரிலோகமும் பூஜிக்கத்தகுந்த உன்னதபதவியிலிருந்து வாழத்தக்கபாக்கியவதி நீ. உன்னுடைய அங்கஸௌந்தரியத்திற் கனுரூபனும் திரைலோக்கியராஜ்ஜியாதிபதியுமான இராவணேசுவரனுன்னைக்காதலிக்கிறான். அவனுடைய பிரார்த்தனைகளை அசட்டைபண்ணி ஸ்வஜாதியானான அந்த நாடோடி ராமனையே இச்சிக்கிறாய். அந்தராமனுடைய வைபவ மெப்படிப்பட்டது பார்! அவன்ராஜ்ஜியப்பிரஷ்டன், பயமிகுதியால் புத்திஸ்வாதீனமிழந்தகோழையன், அர்த்தஹீனன், பாஹுபல பராக்கிரமாதிகளற்றமானிடன். இப்படி க்ஷீணலக்ஷ்மியையடைந்துள்ள ராமனெங்கே, திரிலோக பிரஸித்தமான பிரதாபமுள்ள எங்கள் ராக்ஷஸேசுவரனெங்கே! இவ்வளவையுமறிந்து அந்ததரித்திரசிகாமணியையேகோருகிற உன்னுடையமடமையை என்னவென்று சொல்லுவோம்.

திர்ந்தியவிசேஷார்த்தம்.

அஸித்தார்த்தம் (𑌅𑌸𑍍𑌯 𑌅𑌸𑍌 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌃 𑌅𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑌃, 𑌤𑌂) ஸித்தஸர்வப்பிரயோஜனனான ஸ்ரீமஹாவிஷ்ணுவை (ஸித்தார்த்தனென்று பகவானுக்கோர்திருநாமம்) அகாரவாச்சியம் விஷ்ணுவைக்குறிக்கிறது. விக்லபம்=தயாளுவை.

தா-ம்—இலக்ஷ்மீதேவியான நீ இப்பொழுது மானுஷஸ்திரீ யவதாரங்கொண்டிருக்கிறாய். அந்தபரமதயாளுவான ஸ்ரீமந்நாராயணமூர்த்தியும் ஸ்ரீராமனென்கிற மனுஷியாவதாரங்கொண்டிருக்கிறார். ஆகையால் இந்த மனுஷியாவதாரலீலையில் பிதுருவாக்கிய பரிபாலனார்த்தம் இராஜ்ஜியத்தை யிழந்து அரண்ணியவாஸஞ்செய்கிற அந்த தயாளுவையே நீ இச்சிக்கிறாய், இதுயுக்தம்.

౬. రాక్షసీనాం వచః శ్రుత్వా సీతా పద్మనిభేక్షణా । నేత్రాభ్యామశ్రుపూర్ణాభ్యామిదం వచనమబ్రవీత్॥

௬. 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌨𑌾𑌂𑌵𑌚𑌃𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌸𑍀𑌤𑌾𑌪𑌦𑍍𑌮𑌨𑌿𑌭𑍇𑌕𑍍𑌷𑌣𑌾।
𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌶𑍍𑌰𑍁𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌿𑌦𑌂𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௬. ராக்ஷஸீநாம்வசஸ்ஸ்ருத்வாஸீதாபத்மநிபேக்ஷணா।
நேத்ராப்யாமஸ்ருபூர்ணாப்யாமிதம்வசநமப்ரவீத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பத்மநிபேக்ஷணா | தாமரைமலர்க்கு ஸமானமான கண்களையுடைய | அஸ்ருபூர்ணாப்யாம் | (துக்கத்தாலுண்டான) கண்ணீரால் நிறைந்த |
| ஸீதா | பிராட்டியானவள் | நேத்ராப்யாம் | கண்களோடு (கூடினவளாக) |
| ராக்ஷஸீநாம் | இராக்ஷஸிகளுடைய | இதம்-வசநம் | இந்தவாக்கியத்தை |
| வச:-ஸ்ருத்வா | வார்த்தையை-கேட்டு | அப்ரவீத் | சொன்னாள். |

தா-ம்—இந்தவிதம் அனரியமாயும் ஸ்ரீராகவநிந்திதமாயும் கர்ணகடோமாயுமிருக்கிற இராக்ஷஸிவசனங்களைக்கேட்டுச் செவிநொந்து மனமுளைந்து துக்கித்தபிராட்டி அரவிந்ததளம்போ லதியழகா யமைந்துள்ள திருக்கண்களில் நீர்சொரிந்துகொண்டு அந்தகாதுகிகளைப்பார்த்துப் பின்வருமாறு பிரதியுரைத்தனள்.

౭. యదిదం లోకవిద్విష్టముదాహరథ సంగతాః । నైతన్మనసి వాక్యం మే కిల్బిషం ప్రతిభాతి వః॥

எ. யதிதம்லோகவித்விஷ்டமுதாஹரதஸங்கதா:।
நைதந்மநஸிவாக்யம்மேகில்பிஷம்ப்ரதிபாதிவ:॥

எ. யதிதம்லோகவித்விஷ்டமுதாஹரதஸங்கதா:।
நைதந்மநஸிவாக்யம்மேகில்பிஷம்ப்ரதிபாதிவ:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே ராக்ஷஸ்ய:) | (அடி ராக்ஷஸிகளே) | வ: | உங்களுடைய |
| ஸங்கதா: | (நீங்களெல்லோருமொன்று) சேர்ந்து | (தத்)ஏதத்-வாக்யம் | (அந்த)இந்த-வாக்கியமானது |
| லோகவித்விஷ்டம் | உலகத்தாரொப்பாததான | மே-மநஸி-அகில்பிஷம் | என்னுடைய-மனதில்- பாபாவஹமற் |
| யத்-இதம் | எந்த-இந்த (வாக்கியத்தை) | நப்ரதிபாதி | தோன்றவில்லை. [றதாக |
| உதாஹரத | சொன்னீர்களோ | | |

౮. న మానుషీ రాక్షసస్య భార్యా భవితుమర్హతి । కామం ఖాదత మాం సర్వా న కరిష్యామి వో వచః॥

அ. நமாநுஷீராக்ஷஸஸ்யபார்யாபவிதுமர்ஹதி।
காமங்காததமாம்ஸர்வாநகரிஷ்யாமிவோவச:॥

அ. நமாநுஷீராக்ஷஸஸ்யபார்யாபவிதுமர்ஹதி।
காமம்காததமாம்ஸர்வாநகரிஷ்யாமிவோவச:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மாநுஷீ-ராக்ஷஸஸ்ய | மநுஷ்யஸ்திரீ-அரக்கனுக்கு | மாம்-காமம்-காதத | என்னை-மிகவும்-பக்ஷியுங்கள் |
| பார்யா-பவிதும் | மனைவியாக-ஆவதற்கு | வ:-வச: | உங்களுடைய-வார்த்தையை |
| நார்ஹதி- | தக்கவளன்று (ஆகையால்) | நகரிஷ்யாமி | செய்யேன். |
| ஸர்வா: | (நீங்கள்) எல்லோரும் | | |

தா-ம்—ஹேராக்ஷஸிகாள்! நீங்களெல்லோரு மொன்றுசேர்ந்து உலகமொவ்வாதனவும் நியாயவிருத்தமானவுமான துர்வசனங்களை மொழிந்தீர்கள். அவையெல்லாமென் செவிக்குப் பாபாவகமாகவே இருக்கின்றன. மனுஷியஸ்திரீ அரக்கனுக்குப்பத்தினியாகத்தகுந்தவளோ. நான்மானுஷஸ்திரீ, உங்களிராவணனுக்குப்பத்தினியாகேன். என்னை என்னஹிம்ஸை வேண்டுமென்றாலும் செய்துகொள்ளுங்கள், ஸம்பூர்ணமாகப்பக்ஷித்தாலும்ஸரியே. பாபாவகமும் ஸ்வபாவவிருத்தமுமான உங்கள் போதனைக்கு யானிணங்கேன்.

அவதாரிகை—இராஜ்ஜியப்பிரஷ்டனும் தனஹீனனும் ஆண்மையற்றவனுமாகையால் ஸ்ரீராகவனைத் திரஸ்கரிக்க வேண்டுமென்று சொன்ன இராக்ஷஸிகள் வசனங்களுக்குப் பதிலுரைக்கிறாள்.

౯. దీనో వా రాజ్యహీనో వా యో మే భర్తా స మే గురుః । తం నిత్యమనురక్తాస్మి యథా సూర్యం సువర్చలా॥

கூ. தீநோவாராஜ்யஹீநோவாயோமேபர்த்தாஸமேகுரு:।
தந்நித்யமநுரக்தாஸ்மியதாஸூர்யம்ஸுவர்ச்சலா॥

கூ. தீநோவாராஜ்யஹீநோவாயோமேபர்த்தாஸமேகுரு:।
தம்நித்யமநுரக்தாஸ்மியதாஸூர்யம்ஸுவர்ச்சலா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தீநோவா | தரித்திரனானாலும் | ஸூர்யம் | ஸூரியனை |
| ராஜ்யஹீநோவா | இராஜ்ஜியமிழந்தவனானாலும் | ஸுவர்ச்சலா-யதா | ஸுவர்ச்சலாதேவிபோல் [க |
| ய:-மே-பர்த்தா | எவன்-என்னுடைய-நாயகனோ | நித்யம்-அநுரக்தா | எப்பொழுதும்-அனுராகமுடையவளா |
| ஸ:-மே-குரு: | அவனே-எனக்கு-சிரேஷ்டன் | அஸ்மி | ஆகிறேன். |
| தம் | அவனை (க்குறித்து) | | |

தா-ம்—ஹேராக்ஷஸிகாள்! என்னுடைய பர்த்தாதரித்திரனும் இராஜ்ஜியஸம்பத்திழந்தவனும் ஸர்வநிகிருஷ்டமான மானிடவடிவம்பூண்டவனுமாதலால் தியஜிக்கத்தகுந்தவனென்றுபோதித்தீர்களல்லவா! பிரதியுத்தரமளிக்கின்றனன் கேளுங்கள். எவனென்னைப்பாணிக்கிரகணஞ் செய்தனனோ அவன் தரித்திரனாயினும் துர்ப்பலனாயினும இராஜ்ஜியமிழந்த தௌர்ப்பாக்கியனாயினும் அவனே எனக்கு மஹாபூஜ்ஜியனான ஸத்குரு. தீனனாயினு மவனேயெனக்குப்பிராணபந்து, குரூபியாயினுமவனே யெனக்குமன்மதன், தரித்திரசிகாமணியாயினு மவனேஎனக்கு ஸம்பத்யுக்தனான ஸ்ரீமான். ஆகையால்ஸூரியபகவானைப் பின்தொடருகிற ஸுவர்ச்சலாதேவிபோல் எனக்குமாலையிட்ட ஸ்ரீரகுநாதனைத்திருவுற்ற காலத்தும்துயருற்ற காலத்தும்ஒத்திருக்குமுள்ளத்தளாய், மாறாதஅனுராகத்துடன்நேசித்துப்பின்தொடருவேன். எக்காலத்துமவனேஎனக்குப்பூஜ்ஜியன், அவனேகுலதெய்வம், அவனைவிட்டு வேறொருவனையான் ஸ்மரியேன். ஆகையால், இராக்ஷஸிகளே! உங்களாசன் மூன்றுலகையு மொருகுடைக்கீழாளுமன்னனாயினும் அவனுக்கு நான்பத்தினியாகேன், நீங்கள் சிரமப்படவேண்டாமென் றுரைத்தனள்.

அவ

சேதனோஜ்ஜீவனார்த்தம் இலக்ஷ்மீநாராயணன் ஸ்ரீஸீதாராமலக்ஷ்மண பரதசத்ருக்னனென்கிறரூபங்கொண்டு சதுர்விததர்மமுறைமைகளை விளக்கினானதலின், பிராட்டி தனதுபாகமான பாதிவிருத்தியதருமத்தை இந்தசுலோகத்தால் (கூ-வது) வெளியிடுகிறாள். பாக்கியதசையில் பதியை அனுஸரிக்கிறதும் ரிக்ததசையில் தியஜிக்கிறதும் குலஸ்திரீதர்மமல்ல; உபயதசையிலும்சலிக்காத அனுராகத்தோடும் பக்தியோடும், வஸ்துவைச்சாயையனுஸரிக்குமாப்போல், பர்த்தாவைப் பின்தொடருபவளேபதிவிரதை. இம்மஹாதர்மத்தைப் பிராட்டி, பதியிழந்துபாரிழந்து அரண்ணியத்தில்வஸிக்கிற ஸ்ரீராகவனிடத்துள்ள தன்னுடைய அநந்யசிந்தாஸஹிதபக்திப் பிரேமவிசேஷத்தாலும், அகண்டஸாம்பிராஜ்ஜியத்திரட்டான இலங்கைசுவரியத்தைத் திரணமாயெண்ணிஜீவஹானிக்கும்பயப்படாது அரக்கனுக்களித்த பிரதியுத்தரத்தாலும் நிதர்சனமாகக்காட்டி இந்தசுலோகத்தாலும் வெளியிட்டாள்.

౧౦. యథాశచీమహాభాగా శక్రం సముపతిష్ఠతి । అరుంధతీ వసిష్ఠం చ రోహిణీ శశినం యథా ॥

౧౧. లోపాముద్రా యథాఽగస్త్యం సుకన్యా చ్యవనం యథా । సావిత్రీ సత్యవంతం చ కపిలం శ్రీమతీ యథా ॥

౧౨. సౌదాసం మదయంతీవ కేశినీ సగరం యథా । నైషధం దమయంతీవ భైమీ పతిమనువ్రతా ॥

౧౨½ తథాహమిక్ష్వాకువరం రామం పతిమనువ్రతా ।

௧0. [illegible]
[illegible]

௧௧. [illegible]
[illegible]

௧௨. [illegible]
[illegible]

௧௨½. [illegible]

௧0. யதாஶசீமஹாபாகாஶக்ரம்ஸமுபதிஷ்டதி।
அருந்ததீவஸிஷ்டம்சரோஹிணீஶஶிநம்யதா॥

௧௧. லோபாமுத்ராயதாகஸ்த்யம்ஸுகந்யாச்யவநம்யதா।
ஸாவித்ரீஸத்யவந்தம்சகபிலம்ஶ்ரீமதியதா॥

௧௨. ஸௌதாஸம்மதயந்தீவகேஶிநீஸகரம்யதா।
நைஷதம்தமயந்தீவபைமீபதிமநுவ்ரதா॥

௧௨½. ததாஹமிக்ஷ்வாகுவரம்ராமம்பதிமநுவ்ரதா।

| பதம். | உரை | பதம். | உரை. |
|---|---|---|---|
| மஹாபாகா-ஶசீ | பெரும்பாக்கியமுடைய - சசீதேவியானவள் | ஸ்ரீமதி | ஸ்ரீமதி யென்பவள் |
| யதா-ஶக்ரம் | எப்படி-இந்திரனை | கபிலம்-யதா | கபிலமஹாமுனியை-எப்படியோ |
| ஸமுபதிஷ்டதி | சேர்ந்திருக்கிறாளோ | மதயந்தீ | மதயந்தியானவள் |
| அருந்ததி | அருந்ததிதேவியானவள் | ஸௌதாஸம்-இவ | ஸௌதாஸனென்பவனை-எப்படியோ |
| வஸிஷ்டம் (யதா) | வஸிஷ்டமஹாமுனியை(எப்படியோ) | கேஶிநீ-ஸகரம்-யதா | கேசினீ-ஸகரனை-எப்படியோ |
| ரோஹிணீ | ரோஹிணீதேவி | தமயந்தீ-நைஷதம்-இவ | தமயந்தி-நளமஹாராஜாவை-எப்படியோ |
| ஶஶிநம்-யதா | சந்திரனை-எப்படியோ | பைமீ | விதர்ப்பராஜபுத்திரியானஇந்துமதி |
| லோபாமுத்ரா | லோபாமுத்திரையென்பவள் | பதிம் | தன்பர்த்தாவானஅஜமஹாராஜாவை |
| அகஸ்த்யம்-யதா | அகத்தியமுனியை-எப்படியோ | (யதா)அநுவ்ரதா | (எப்படி) அனுஸரித்தாளோ |
| ஸுகந்யா | ஸுகன்னியையென்பவள் | ததா-அஹம்ச | அப்படியே-நானும் |
| ச்யவநம்-யதா | சியவனனை-எப்படியோ | இக்ஷ்வாகுவரம் | இக்ஷ்வாகுகுலசிரேஷ்டரும் |
| ஸாவித்ரீ | ஸாவித்திரியானவள் | பதிம்-ராமம் | என்பர்த்தாவுமான-ஸ்ரீராகவனை |
| ஸத்யவந்தம்(யதா) | ஸத்தியவந்தனை (எப்படியோ) | அநுவ்ரதா | அனுஸரித்தவள். |

தா-ம்—ஹேராக்ஷஸிகாள்! என்னுடைய பாதிவிருத்திய மகிமையறியாது அனுசிதமொழிகளை யுரைக்கின்றீர்கள். ஐசுவரியத்திற்கு மழகிற்கும் சீலத்தைவிற்கிற ஸாமான்னியமாதரைப்போல் உங்கள் பெருமானுடைய ஐசுவரியயௌவனப் பிரதாபவிபவங்களிலீடுபட்டு அங்கருத்திற்கிசைவேனென்று பிரமிக்கின்றீர்களோ? மஹாபாக்கியவதியான சசீதேவி, அருந்ததீ, உலோபாமுத்திரை, ஸுகன்னியை, ஸாவித்திரீ, ஸ்ரீமதீ, மதயந்தீ, கேசினீ, தமயந்தி, இந்துமதிமுதலிய பதிவிருதோத்தமிகள் தங்கள் தங்கள் பர்த்தாக்களை யனுஸரித்து சாசுவதமானகீர்த்தியை யுலகத்திலெப்படிநிலைநாட்டினரோ அவ்வண்ணமேயானும் இக்ஷ்வாகுகுலசிரேஷ்டரான ஸ்ரீராகவனையனுஸரித்து பதிவிரதாக்கிரகண்ணியையென்கிற சீரைத்தேடுவனல்லது இராக்ஷஸராஜனுக்கபிமதையாகிற நீசபாவத்தை யான்மனதிற்கொள்ளேன்.

౧౩. సీతాయా వచనం శ్రుత్వా రాక్షస్యః క్రోధమూర్ఛితాః ॥ భర్త్సయంతి స్మ పరుషైః వాక్యై రావణచోదితాః ।

௧௩. [illegible]
[illegible]

கங. ஸீதாயாவசநம்ஶ்ருத்வாராக்ஷஸ்யஃக்ரோதமூர்ச்சிதாஃ॥
பர்த்ஸயந்திஸ்மபருஷைர்வாக்யைராவணசோதிதாஃ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராவணசோதிதாஃ | இராவணனாலேவப்பட்ட | க்ரோதமூர்ச்சிதாஃ | கோபத்தால் மெய்மறந்தவர்களாக |
| ராக்ஷஸ்யஃ | இராக்ஷஸிகள் | பருஷைஃ-வாக்யைஃ | கடோங்களான-வசனங்களால் |
| ஸீதாயாஃ-வசநம் | பிராட்டியினுடைய-வார்த்தையை | பர்த்ஸயந்திஸ்ம | பயப்படுத்தினார்கள். |
| ஶ்ருத்வா | கேட்டு | | |

தா-ம்—இவ்விதம் பதிலுரைத்தபிராட்டியின்மீது மஹாகோபங்கொண்டு அந்தகோரராக்ஷஸிகள் உக்கிரவசனங்களால் மறுபடியும் ஜானகியை அதட்டினார்கள்.

౧౪. అవలీనస్సనిర్వాక్యో హనుమాన్ శింశుపాద్రుమే॥ సీతాం సంతర్జయంతీస్తా రాక్షసీరశృణోత్కపిః।

கச. [illegible]॥
[illegible]।

கச. அவலீநஸ்ஸநிர்வாக்யோஹநுமாஞ்ஶிம்ஶபாத்ருமே।
ஸீதாம்ஸந்தர்ஜயந்திஸ்தாராக்ஷஸீரஶ்ருணோத்கபிஃ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஶிம்ஶபாத்ருமே | சிம்சுபாவிருக்ஷத்தின்மீது [கிற | ஸந்தர்ஜயந்தீஃ | மிகவும் மிரட்டுகின்ற |
| நிர்வாக்யஃ-அவலீநஃ | வார்த்தையற்றவராக-மறைந்திருக் | தாஃ-ராக்ஷஸீஃ | அந்த-இராக்ஷஸஸ்திரீகளை (அவர்கள் வாக்கியத்தை) |
| ஸஃ-ஹநுமாந்-கபிஃ | அந்த-ஹநுமானென்கிற-வானரர் | | |
| ஸீதாம் | பிராட்டியை | அஶ்ருணோத் | கேட்டார். |

தா-ம்—சிம்சுபாவிருக்ஷத்திய பல்லவஸமூகத்தில் மறைந்து ஓர் கிளையின்மீதுட்கார்ந்து அடியில்நடக்கிற விருத்தாந்தங்களை மௌனமாய்கவனித்துவந்த ஹநுமான் பிராட்டியைஹிம்ஸிக்கிற அவ்விராக்ஷஸிகளின் கடூரவசனங்களைச் செவியுற்றனர்.

౧౫ తామభిక్రమ్య సంక్రుద్ధా వేపమానాం సమంతతః॥ భృశం సంలిలిహుర్దీప్తాన్ ప్రలంబాన్ దశనచ్ఛదాన్।

౧౬. ఊచుశ్చ పరమక్రుద్ధాః ప్రగృహ్యాశు పరశ్వధాన్॥ నేయమర్హతి భర్తారం రావణం రాక్షసాధిపమ్।

கரு. [illegible]॥
[illegible]।

கசா. [illegible]॥
[illegible]।

கரு. தாமபிக்ரம்யஸம்க்ருத்தாவேபமாநாம்ஸமந்ததஃ।
ப்ருஶம்ஸம்லிலிஹுர்தீப்தாந்ப்ரலம்பாந்தஶநச்சதாந்।

கசா. ஊசுஶ்சபரமக்ருத்தாஃப்ரக்ருஹ்யாஶுபரஶ்வதாந்॥
நேயமர்ஹதிபர்த்தாரம்ராவணம்ராக்ஷஸாதிபம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸங்க்ருத்தாஃ | கோபமுடைய (ஸ்திரீகள்) | பரஶ்வதாந் | கண்டகோடாலியை |
| வேபமாநாம்-தாம் | நடுங்குகிற-அந்த (ஸீதையை) | ஆஶு-ப்ரக்ருஹ்ய | சீக்கிரமாக-எடுத்துக்கொண்டு |
| ஸமந்ததஃ-அபிக்ரம்ய | நாற்புறமும்நன்றாகச்சூழ்ந்துகொண்டு | பரமக்ருத்தாஃ | வெகுகோபித்தவர்களாக |
| ப்ருஶம்-தீப்தாந் | மிகவும்-பிரகாசிக்கிறவும் | இயம்-ராக்ஷஸாதிபம் | இந்தஸீதை-இராக்கதநாதனை[ற்கு] |
| ப்ரலம்பாந்-தஶநச்சதாந் | தொங்குகிறவுமான-உதடுகளை | ராவணம்-பர்த்தாரம் | இராவணனைபர்த்தாவாக(அடைவத |
| ஸம்லிலிஹுஃ | பிதுக்கினார்கள் | நார்ஹதி-ஊசுஃ | தகாதவள்என்று-சொன்னார்கள். |

தா-ம்—பயத்தினால் அங்கமுழுதும் படபடத்துநடுங்குகிற பிராட்டியைக்குரோதமூர்ச்சிதரான இராக்ஷஸிகள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டனர். அக்கினிசிகைபோல்ஜ்வலிக்கிற தங்களிலம்போதரங்களைப்பிதுக்கிமிரட்டினர். கண்டகோடாரியென்னும் உக்கிராயுதத்தை பரபரப்புடன் கையிலேந்திகடூரவசனங்களால் பயமுறுத்தினர். மஹாகீர்த்திமானான நம்பிரபுவை மணம்புரியத்தக்கபூர்வஸுகிருதமுள்ளபாக்கியவதியிவளோ! இவள் அதிருஷ்டஹீனை, ஸுபுத்தியற்றபேதை, இப்படி பலவாறுபிதற்றிக்கொண்டு தேவியைஹிம்ஸித்தனர்.

౧౭. సంభర్త్స్యమానా భీమాభీ రాక్షసీభిర్వరాననా॥ సా బాష్పమపమార్జంతీ శింశుపాం తాముపాగమత్।

கஎ. [illegible]॥
[illegible]।

கஎ. ஸம்பர்த்ஸ்யமாநாபீமாபீராக்ஷஸீபிர்வராநநா।
ஸாபாஷ்பமபமார்ஜந்தீஶிம்ஶபாம்தாமுபாகமத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| வராங்கா-ஸா | ஸிரேஷ்டமானமுகமுடைய அந்த(ஸீதையானவள்) | ஸம்பர்த்ஸ்யமானா | பயப்படுத்தப்பட்டவள்(ஆதலால்) [டு |
| பீமாபிஃ | பயங்கரைகளான | பாஷ்பம்-அபமார்ஜந்தீ-கண்ணீரை உதிர்க்கிறவளாய்க்கொண் |  |
| ராக்ஷஸீபிஃ | இராக்ஷஸஸ்திரீகளால் | தாம்-ஸிம்ஸுபாம் | (ஹனுமானேறியிருக்கிற) அந்த ஸிம்சு |
|  |  | உபாகமத் | அடைந்தாள். [பாவிருக்ஷத்தை |

தா-ம்—வாவியுட்பூத்த கமலமலர்போல் அதியுல்லாஸமாக விளங்கும் திருமுகமுடையபிராட்டி இராக்ஷஸிகளுடைய கோரஹிம்ஸை பொறுக்கமுடியாது துக்கித்துக்கொண்டே ஹநுமானிருக்கும் ஸிம்சுபாவிருக்ஷத்தினடியைச்சேர்ந்தாள்.

౧౮. తతస్తాంశింశుపాంసీతారాక్షసీభిస్సమావృతా॥అభిగమ్యవిశాలాక్షీతస్థౌశోకపరిప్లుతా।

கஅ. ததஸ்தாம்ஶிம்ஶுபாம்ஸீதாராக்ஷஸீபிஸ்ஸமாவ்ருதா॥
அபிகம்யவிஶாலாக்ஷீதஸ்தௌஶோகபரிப்லுதா।

கஅ. ததஸ்தாம்ஸிம்ஸுபாம்ஸீதாராக்ஷஸீபிஸ்ஸமாவ்ருதா।
அபிகம்யவிஸாலாக்ஷீதஸ்தௌஸோகபரிப்லுதா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ததஃ | பின்பு | தாம்-ஸிம்ஸுபாம் | அந்த-ஸிம்சுபாவிருக்ஷத்தை |
| விஸாலாக்ஷீ | அகன்றகண்களையுடைய | அபிகம்ய | அடைந்து |
| ஸீதா | பிராட்டி | ஸோகபரிப்லுதா | துக்கத்தோடு கூடினவளாய்க்கொண் |
| ராக்ஷஸீபிஃ | இராக்ஷஸஸ்திரீகளால் | தஸ்தௌ | இருந்தாள். [டு |
| ஸமாவ்ருதா | சூழப்பட்டவளாக |  |  |

౧౯. తాంకృశాందీనవదనాంమలినాంబరధారిణీమ్।భర్త్సయాంచక్రిరేసీతాంరాక్షస్యస్తాంసమంతతః।

கக. தாம்க்ருஶாம்தீநவதநாம்மலிநாம்பரதாரிணீம்॥
பர்த்ஸயாம்சக்ரிரேஸீதாம்ராக்ஷஸ்யஸ்தாம்ஸமந்ததஃ।

கக. தாம்க்ருஸாம்தீநவதநாம்மலிநாம்பரதாரிணீம்।
பர்த்ஸயாம்சக்ரிரேஸீதாம்ராக்ஷஸ்யஸ்தாம்ஸமந்ததஃ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராக்ஷஸ்யஃ | இராக்ஷஸிகள் | தாம்-ஸீதாம் | அந்த-பிராட்டியை |
| க்ருஸாம் | இளைத்தவளும் | ஸமந்ததஃ | நாற்புறத்திலும் (சுற்றிக்கொண்டு) |
| தீநவதநாம் | இரங்கத்தக்கமுகமுடையவளும் | தாம் | அப்படி தீனையாயிருக்கிற ஜானகியை |
| மலிநாம்பரதாரிணீம் | அழுக்கடைந்த ஆடையையுடுத்திருப்பவளுமான | பர்த்ஸயாம்சக்ரிரே | பயப்படுத்தினார்கள். |

தா-ம்—ஸ்தானபேதத்தால் துக்கத்தின் கொடுமையைக்கொஞ்ச மாற்றலாமென்று தேவியானவள் மண்டபத்தைவிட்டு மரத்தினடியை யடைந்தாள். இளமானைச்சூழ்ந்து பிடிக்கும் சுவானஸமூகம்போல் அவ்விராக்ஷஸாதமிகள் அங்கும்வந்து சூழ்ந்துகொண்டனர். கல்நெஞ்சுள்ள கடும்பாபியும்கண்டு பரிதபிக்கும்படி தீனநிலைமையிலுள்ள அத்திருமாதை கொஞ்சமேனும் அனுதாபமின்றி மறுபடியும் வதைக்க ஆரம்பித்தனர். அவளோ சுருங்கியவதனத்தோடும் கிருசித்ததனுவோடும் கிழிந்தவஸ்திரத்தோடும் மஹாகொடிய வியஸனத்தில் தபித்துக்கொண்டிருந்தாள். இராஜைசுவரியத்திற்பிறந்து இராஜைசுவரியத்தில்வளர்ந்து இராஜைசுவரியத்தில்வாழ்ந்த அவளுடைய ஸௌகுமாரியமெங்கே! பதியைப்பிரிந்து பந்துதரிசனமிழந்து இராக்ஷஸிமத்தியிற் படாதபாடுபடுகிற அவள்தைன்னியமெங்கே! அந்தசாந்தஸ்வரூபியின்தன்மையையும்துக்கமிகுதியையுமறியாத அந்த கடுரைகள் பச்சைரணத்திலூசியிட்டாற்போல், பின்னும்பிடித்தனர்.

౨౦. తతస్తాంవినతానామరాక్షసీభీమదర్శనా॥అబ్రవీత్కుపితాకారాకరాళానిర్ణతోదరీ।

உ௦. ததஸ்தாம்விநதாநாமராக்ஷஸீபீமதர்ஶநா॥
அப்ரவீத்குபிதாகாராகராளாநிர்ணதோதரீ।

உ௦. ததஸ்தாம்விநதாநாமராக்ஷஸீபீமதர்ஸநா।
அப்ரவீத்குபிதாகாராகராளாநிர்ணதோதரீ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ததஃ | பின்பு | நிர்ணதோதரீ | உன்னதமான வயிறுடையவளும் |
| பீமதர்ஸநா | பயங்கரமான பார்வையுடையவளும் | விநதாநாம | விநதையென்று பெயருடையவளுமா |
| குபிதாகாரா | கோபசின்னமுடையவளும்(அதனல்) | ராக்ஷஸீ | இராக்ஷஸியானவள் [ன |
| கராளா | பயங்கரையாயிருப்பவளும் | தாம்-அப்ரவீத் | அந்த(ஸீதையைக்குறித்து)சொன்னள். |

தா-ம்—ஸிம்சுபாவிருக்ஷத்தினடியைச்சேர்ந்தபிறகு விநதையென்பவள் பிரதமத்தில்பிடிக்க ஆரம்பித்தனள். கோரதரிசன முள்ளவளும் ஸதாகோப முள்ளவளும் உன்னதமான உதர முள்ளவளும், பிராட்டியினிடத்தில் அதிகமாகச் சீற்றங்கொண்டிருப்பவளுமான அந்தபீமராக்ஷஸி ஜானகியைக்குறித்துப்பின்வருமாறுரைத்தனள்.

౨౧ సీతేపర్యాప్తమేతావద్భర్తుఃస్నేహోనిదర్శితః॥సర్వత్రాతికృతంభద్రేవ్యసనాయోపకల్పతే।

உக. ஸீதெபயாப்தெமதாவத்ஹ ஸ்நெஹொ நிஜீஶிதஃ॥
ஸவ்த்ராதிக்ருதம்ஹத்ரெ வ்யஸநாயொவகல்பதெ।

உக. ஸீதேபர்யாப்தமேதாவத்பர்த்துஸ்ஸ்நேஹோநிதர்ஶிதঃ।
ஸர்வத்ராதிக்ருதம்பத்ரேவ்யஸநாயோபகல்பதே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பத்ரே | மங்களஸ்வரூபியான | நிதர்ஶிதঃ | (உன்னால்) காண்பிக்கப்பட்டது |
| ஸீதே | ஜானகீ | ஸர்வத்ர | எங்கும் (எல்லாவிஷயத்திலும்) |
| பர்த்துঃ | நாயகனுடைய (நாயகனிடத்துள்ள) | அதிக்ருதம் | அதிகமாகப்பண்ணப்பட்டது |
| ஸ்நேஹঃ | விசுவாஸமானது | வ்யஸநாய | துக்கத்தின்பொருட்டு |
| ஏதாவத்-பர்யாப்தம் | இதுவரையில்-பூர்த்தியாக | உபகல்பதே | ஆகிறது. |

தா-ம்—சோபனரூபமுள்ள ஹேஸீதே! உனக்குஇராமனிடத்துள்ள பிரேமையும் ஸுந்தரவடிவுள்ள உன்னிடத்திவிராமனுக்குள்ள பிரேமையும் இதுவரையிலுன்னுடைய துக்கவிசேஷத்தால் ஸம்பூர்ணமாகக்காண்பிக்கப்பட்டன. இந்தபர்த்திருவாத்ஸல்யவிசேஷமானது அபூதபூர்வமானதென்று யாங்களனைவருமறிந்தோம். இதுவரையில்நிறுத்து. "அதிஸர்வத்ரவர்ஜயேத்" என்று நியாயமிருப்பதால், அந்தநியாயத்தையினி நீ அனுஸரிக்கவேண்டும். எக்காரியத்திலும் அதிஉதவாது. அதியாகச்செய்வது துக்கஹேதுவாகும். ஆகையால் ஸீதே! இந்தஸ்நேகவிளம்பரமானது இனி அதியாகுமாதலாலதைவிட்டுவிடத்தக்கின வளாகிறாய். யானுனது மங்களத்தைக்கோருகிறேனாதலி னிவ்விஷயத்தையுனக்குரைத்தனன்.

౨౨ పరితుష్టాస్మిభద్రంతేమానుషస్తేకృతోవిధిః॥

౨౩. మమాపితువచఃపథ్యంబ్రువంత్యాఃకురుమైథిలి। రావణంభజభర్తారంభర్తారంసర్వరక్షసామ్॥

౨౪. విక్రాంతంరూపవంతంచసురేశమివవాసవమ్। దక్షిణంత్యాగశీలంచసర్వస్యప్రియదర్శనమ్॥

உஉ. வரிதுஷாஸ்மி ஹத்ரங்தெ மாநுஷஸ்தெ க்ருதொ வியிঃ॥
மமாவி து வசঃ வத்யம் ஬்ருவந்த்யாঃ குரு மெமமிலி।

உங. ராவணம் ஹஜ ஹத்தாரம் ஹத்தாரம் ஸவ்ரக்ஷஸாம்॥
விக்ராந்தம் ரூவவந்தம் ச ஸுரெஶமிவ வாஸவம்।

உச. உக்ஷிணம் த்யாகஶீலம் ச ஸவ்ஸ்ய ப்ரியஜீஶநம்॥

உஉ. பரிதுஷ்டாஸ்மிபத்ரந்தேமாநுஷஸ்தேக்ருதோவிதিঃ॥
மமாபிதுவசঃபத்யம்ப்ருவந்த்யாঃகுருமைதிலி।

உங. ராவணம்பஜபர்த்தாரம்பர்த்தாரம்ஸர்வரக்ஷஸாம்॥
விக்ராந்தம்ரூபவந்தம்சஸுரேஶமிவவாஸவம்।

உச. தக்ஷிணம்த்யாகஶீலஞ்சஸர்வஸ்யப்ரியதர்ஶநம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மைதிலி-தே | ஸீதே-உன்னால் | ரூபவந்தம்ச | ஸௌந்தரியமுடையவனும் |
| மானுஷঃ | மனுஷியஸம்பந்தமான | தக்ஷிணம் | ஸமஸ்த காரியங்களில் ஸமர்த்தனும் (இங்கிதக்ஞனும்) |
| விதிঃ-க்ருதঃ | ஏற்பாடானது(பதிவிரதாதர்மாசரணமானது)-செய்யப்பட்டது | த்யாகஶீலஞ்ச | கொடுப்பதையேஸ்வபாவமாயுடையவனும் (ஆகையால்) |
| தே-பத்ரம் | உனக்கு மங்களமுண்டாக | ஸர்வஸ்ய-ப்ரியதர்ஶநம் | ஸமஸ்தருக்கும்-இஷ்டமானபார்வையை யுடையவனும் |
| பரிதுஷ்டா-அஸ்மி | ஸந்தோஷித்தவளாக-ஆகிறேன் | ஸுரேஶம் | தேவராஜாவான |
| பத்யம்-ப்ருவந்த்யাঃ | ஹிதத்தை-சொல்லுகிற | வாஸவமிவ(ஸ்திதம்) | இந்திரனைப்போலிருப்பவனுமான |
| மம-வசঃ-குரு | என்னுடைய-வார்த்தையை-செய் | ராவணம்-பர்த்தாரம்-பஜ | இராவணனை-பதியாக-அடை. |
| ஸர்வரக்ஷஸாம்ச-பர்த்தாரம் | எல்லாவரக்கருக்கும்-இராஜாவும் | | |
| விக்ராந்தம் | பராக்கிரமமுடையவனும் | | |

౨౫. మానుషంకృపణంరామంత్యక్త్వారావణమాశ్రయ। దివ్యాంగరాగావైదేహిదివ్యాభరణభూషితా॥

౨౬. అద్యప్రభృతిసర్వేషాంలోకానామీశ్వరీభవ। అగ్నేఃస్వాహాయథాదేవీశచీవేంద్రస్యశోభనే॥

உரு. மாநுஷம் க்ருவணம் ராமம் த்யக்த்வா ராவணமாஶ்ரய।
திவ்யாங்கராகா வைதெஹி திவ்யாஹரணஹூஷிதா॥

உசா. அத்ய ப்ரஹ்ருதி ஸவெஷாம் லொகாநாமீஶ்வரீ ஹவ।
அஃநெஃ ஸ்வாஹா யதா தெவீ ஶசீவெந்த்ரஸ்ய ஶொஹநெ॥

உரு. மாநுஷம்க்ருபணம்ராமம்த்யக்த்வாராவணமாஶ்ரய।
திவ்யாங்கராகாவைதேஹிதிவ்யாபரணபூஷிதா॥

உசா. அத்யப்ரப்ருதிஸர்வேஷாம்லோகாநாமீஶ்வரீபவ।
அக்நேஸ்ஸ்வாஹாயதாதேவீஶசீவேந்த்ரஸ்யஶோபநே॥

| பதம். | உரை. |
|---|---|
| வைதேஹி | ஸீதே |
| திவ்யாங்கராகா | சிரேஷ்டமான சந்தனப்பூச்சால் தேகாலங்காரமுள்ளவளாகவும் |
| திவ்யாபரணபூஷிதா | சிறந்த ஆபரணங்களால் தேகத்தை அலங்கரித்தவளுமாக |
| மானுஷம்-க்ருபணம் | மனுஷியனும்-அல்பனுமான |
| ராமம்-த்யக்த்வா | இராமனை-விட்டு |
| ராவணம்-ஆஶ்ரய | இராவணனை-அடை |

| பதம். | உரை. |
|---|---|
| ஶோபநே | மங்களஸ்வரூபியே! |
| அக்நேঃ-ஸ்வாஹாதேவீயதா-அக்கினிபகவானுக்கு-ஸ்வாஹாதேவிபோல் | |
| இந்த்ரஸ்ய-சசீவ | இந்திரனுக்கு-சசிதேவிபோல் |
| (த்வம்-ராவணஸ்ய-பார்யா-பூத்வா-நீஇராவணனுக்குபார்யையாய்) | |
| அத்யப்ரப்ருதி | இதுமுதல் |
| ஸர்வேஷாம்-லோகாநாம்-ஸமஸ்தங்களான-உலகங்களுக்கு | |
| ஈஶ்வரீபவ | ஏவல்கர்த்தாவாக-ஆய்விடு. |

౨౭. కింతేరామేణవైదేహికృపణేనగతాయుషా । ఏతదుక్తంచమేవాక్యంయదిత్వంనకరిష్యసి॥

౨౮ అస్మిన్ముహూర్తేసర్వాస్త్వాంభక్షయిష్యామహేవయమ్।

உஎ. கிந்தேராமேணவைதேஹிக்ருபணேநகதாயுஷா।

ஏததுக்தஞ்சமேவாக்யம்யதித்வம்நகரிஷ்யஸி॥

உஅ. அஸ்மிந்முஹூர்த்தேஸர்வாஸ்த்வாம்பக்ஷயிஷ்யாமஹேவயம்।

உஎ. கிந்தேராமேணவைதேஹிக்ருபணேநகதாயுஷா।

ஏததுக்தம்சமேவாக்யம்யதித்வம்நகரிஷ்யஸி॥

உஅ. அஸ்மிந்முஹூர்த்தேஸர்வாஸ்த்வாம்பக்ஷயிஷ்யாமஹேவயம்।

| பதம். | உரை. |
|---|---|
| க்ருபணேந | குஸ்திதனும் |
| கதாயுஷா | போன ஆயஸ்ஸுடையவனுமான (அல்பாயுளுள்ளவனும்) [ஜனம்) |
| ராமேண-தே-கிம் | இராமனோடு-உனக்கென்ன-(பிரயோஜனம்) |
| மே-உக்தம்-ஏதத்வாக்யம்-என்னால் சொல்லப்பட்ட இந்தவாக்கியத்தை | |

| பதம். | உரை. |
|---|---|
| த்வம்-நகரிஷ்யஸியதி | நீ-செய்யாயானல் |
| அஸ்மிந் -முஹூர்த்தே-இந்தக்ஷணத்திலேயே | |
| ஸர்வாঃ-வயம் | ஸமஸ்தரான-நாங்கள் |
| (ஹே) வைதேஹி-த்வாம்-(ஓ) ஸீதே!-உன்னை | |
| பக்ஷயிஷ்யாமஹே | தின்றுவிடுவோம். |

(உஉ-மு-உஅ-ல்) தா-ம்—ஹேஸுந்தரி! மனுஷியருக்காக விதிக்கப்பட்ட பாதிவிருத்தியதர்மத்தை நன்றாகப் பிரகடனஞ்செய்தாய். யானுமிதைப்பார்த்துப் பரமஸந்துஷ்டையானேன். ஸ்வஜாதி தர்மானுஷ்டானஞ்செய்த உனக்குமங்களமுண்டாகட்டும். இதுவரையிற்போதும். ஸாமான்னியரான மானுஷர்க்கென்றுண்டான அந்ததர்மத்தை இனி ஆசரிக்கவேண்டாம். ஏகதாரவிரதமும் பாதிவிருத்தியதர்மமும் இராக்ஷதருக்கில்லை. யானுபதேசிக்கிற ஹிதவசனங்களை யங்கீகரித்து அவ்வண்ணம் நடக்கக்கடவாய். நீ இதுவரையிலாசிரயித்தவன் கேவலமோரல்பமனுஷியன், அல்பாயஸ்ஸுள்ளவன், அதிருஷ்டஹீனன், அபலவான், அர்த்தமில்லான், உன்னைப்பரிக்கவகையில்லான். அந்தகிருபண சிரோமணியை இனி நீ மானிக்கவேண்டாம். இன்றோடு அவனையும் அவனிடத்துள்ள வாத்ஸல்லியத்தையும் வாஸனையறவிட்டுவிடு. எங்கள் மஹாராஜாவின் கௌரவத்தைப்பார். சத்துருக்களைக் கதறச்செய்கிற வீரியவான், திரிலோகத்தையும் ஜயித்தவிக்கிரமன், இராக்ஷதகோடிகள் ஸேவிக்கும் மஹாப்பிரபு, மன்மதனைப்போல் திவ்வியரூபமுள்ளவன், இங்கிதங்களறிந்த புத்திமான், தொட்டகாரியங்களை முடிக்கவல்லஸாமர்த்தியவான், யாசித்தவர்க்குக்குறைவின்றியளிக்கும்பரமோதாரன், ஸகலருங்காமுறத்தகுந்தஸுந்தரவடிவுள்ளவன், எல்லோரையு மானந்திப்பிக்கிறகல்யாணகுணமுள்ளவன். இப்படிதேவராஜாபோல்பெருமைகொண்டவெங்கள்ஸார்வபௌமனை நீயாசிரயிக்கக்கடவாய். திரிலோகராஜ்ஜியாதிபதியான வெங்கள் இராவணனெங்கே, அரண்ணியவாஸியான உன்னுடையஇராமனெங்கே! மன்மதவடிவங்கொண்ட எங்கள் மன்னவனெங்கே, மானிடவடிவங்கொண்ட அந்த துர்ப்பலனெங்கே! ஆகையாலிந்த இராஜராஜேசுவரனை இராவணேசுவரனைப் பர்த்தாவாகவரித்து ஸகலபோகங்களையு மாளப்பெறுவாய். திவ்வியாபரணங்களால் தேகத்தையலங்கரித்துக்கொள். திவ்வியபரிமள சந்தனங்களால் தேகத்தைசோபித்துக்கொள். இப்படிஸகலஆபரணங்களையும் அலங்காரங்களையும் அணிந்துகொண்டு மன்மதனோடு இரதீதேவிபோல் இராவணனோடுசேர்ந்து பிரம்மானந்தமாகக்கிரீடி. அக்கினிக்கு ஸ்வாஹாதேவிபோலும், மஹேந்திரனுக்கு சசிதேவிபோலும் இராவணனுக்கு ஸீதா தேவியென்று உலகமுழுதும் கொண்டாடும்படி செய்துகொள். இந்தவிதம் இந்திராதிதேவர்களும் வணங்கப்பெற்ற இலங்கேசுவரனைப் பதியாகவடைந்து ஸகலபோக ஸாம்பிராஜ்ஜியங்களுக்குமதிபதியாய், எங்களுக்கும், மந்தோதரிப்பிரபிருதிகளான மற்றஸ்திரீகளுக்கும், இம்மூன்றுலோகத்திற்கு மிந்தக்ஷணமுதலீசுவரியாய்வீற்றிருக்கிற உன்னதபதவியிலிருந்துஸுகி, அந்தஇராமனுகிற மனுஷியனாலுனக்கென்ன பிரயோஜனமிருக்கிறது. அல்பாயஸ்ஸுள்ள அந்ததுர்ப்பலனோடு என்னஸுகமனுபவிக்கப்போகிறாய். பிரதியொன்றுஞ்சொல்லாமல் இலங்காராஜ்ஜியபாக்கியத்தையடைந்தானந்திக்கக்கடவாய். யான்சொல்வதற்கிசையாயாகில் நாங்களெல்லோருமொன்றுசேர்ந்து இப்பொழுதே உன்னைப் பக்ஷித்துவிடுவோம்.

## தீர்த்தியவிசேஷார்த்தம்.

ராவணঃ-பகைவரை அழும்படிசெய்பவன், பர்த்தா-சிசுருஷாதிகைங்கரியங்களால் ஸ்வாமியைப் போஷிப்பவன், அதாவதுபிருத்தியன்-இப்பதங்களுக் கிவ்வர்த்தஞ்செய்து பின்வருமாறு அந்வயிக்கிறார். வைதேஹி-ஸீதே, மாநுஷঃவிதிঃ-மனுஷியஜாதிக்கு விதிக்கப்பட்ட பாதிவிருத்தியதர்மப்பிரகடனமானது, (த்வயா-உன்னால்) க்ருதঃ-செய்யப்பட்டது, பரிதுஷ்டா

ஸ்மி-ஸந்தோஷித்தவளாகஆகிறேன், தே-பத்ரம்-உனக்குமங்களமுண்டாகட்டும், அபிது-ஆனல், பத்யம்-ஹிதத்தை, ப்ருவந்த்யாஃ-உரைக்கிற, மம-என்னுடைய, வசஃ-வார்த்தையை, குரு-செய், க்ருபணம்-அல்பமான, மாநுஷம்-மனுஷ்யதர்மமானபயத்தை, த்யக்த்வா-விட்டு, ராவணம்-சத்துருக்களைத்தபிக்கச்செய்பவனும், ரக்ஷஸாம்-அரக்கருக்கு, பர்த்தாரம்-இராஜாவான, ராவணம-இராவணனை, பர்த்தாரம்-பிருத்தியனாக, ஆஶ்ரய-ஆசிரயி, விக்ராந்தம்-பராக்கிரமசாலியும், ரூபவந்தம்-அழகுள்ளவனும், தக்ஷிணம்-ஸமர்த்தனும் (இங்கிதக்கியனும்) த்யாகசீலம்-கொடையாளனும், ஸர்வஸ்ய-எல்லோருக்கும், ப்ரியதர்ஶநம்-இஷ்டமானபார்வையுடையவனும், ஸுரேஶம்-தேவராஜாவான, வாஸவமிவ(ஸ்திதம்) இந்திரனைப்போலிருப்பவனும், மானுஷம்-மனுஷியாவதாரங்கொண்டவனுமான, ராமம்-ஸ்ரீராமனை, பஜ-ஸேவி, க்ருபணேந-கார்ப்பண்ணியத்தால், கிம்-என்ன பிரயோஜனம், கதாயுஷா-அடைந்தஆயஸ்ஸுள்ள (தீர்க்காயுஷ்மானான) ராமேண-இராமனோடு, (ஸங்கமஃபவிஷ்யதி-சேர்க்கையுண்டாகும்) அக்நேஃ-அக்கினிபகவானுக்கு, ஸ்வாஹாதேவீயதா-ஸ்வாஹாதேவியெப்படியோஅப்படியும், இந்த்ரஸ்ய-இந்திரனுக்கு, ஶசீவ-சசிதேவிபோலும், (ராமஸ்யப்ரியபார்யாபூத்வா-இராமனுக்குப்பிரியபார்யையாகி) திவ்யாங்கராகா-சந்தனதிலேபனங்களாலலங்காரமுடையவளும், திவ்யாபரணபூஷிதா-சிறந்தஆபரணங்களால் பூஷிக்கப்பட்டவளுமாக, அத்யப்ரப்ருதி-இந்தக்ஷணமுதல், ஸர்வேஷாம்லோகாநாம்-ஸமஸ்தலோகங்களுக்கும், ஈஶ்வரீ-நியந்தாவாக, பவ-ஆய்விடு, மே-என்னல், உக்தம்-சொல்லப்பட்ட, ஏதத்வாக்யம்-இந்தவசனத்தை, த்வம்-நீ, நகரிஷ்யஸியதி - (அங்கீகரித்து அவ்வண்ணம்) செய்யாயாகில், அஸ்மிந்முஹூர்த்தே-இந்தக்ஷணத்தில், த்வாம்-உன்னையுத்தேசித்து, வயம்ஸர்வாஃ-நாங்களெல்லோரும், (விஷம் - விஷத்தை) பக்ஷயிஷ்யாமஹே-பக்ஷிப்போம்.

தா-ம்—மங்களரூபமுள்ளஹேதேவி! மனுஷியாசாரத்திற்காகவிதிக்கப்பட்டபாதிவிருத்தியதர்மத்தை நீ நன்றாகப்பிரகடனஞ்செய்தாய், அதற்காக உன்னையான்புகழ்ந்து கொண்டாடுகிறேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். ஹிதமுரைக்கிறவென்வசனத்தைக் கொஞ்சங்கேட்டருளாய். அல்பரான மனுஷியஜாதிக்குரிய பயத்தைவிட்டு, சத்துருஹந்தாவும் இராக்ஷஸேசுவரனும் உன்னிடத்தில் பிருத்தியத்துவத்தைக் கொண்டவனுமான இராவணனைஆசிரயி. அதாவது அவனுடைய தாஸ்யத்தை அங்கீகரித்து அனுக்கிரகஞ்செய். மஹேந்திரனைப்போல் சௌரியதைரிய ஸௌந்தரியதயாதாக்ஷண்ணியாதி குணவிசேஷங்களுள்ளவனும் ஸகலஜனப்பிரியனுமான ஸ்ரீராமனையே பஜனம்பண்ணு. கார்ப்பண்ணியத்தா லென்னபிரயோஜன மிருக்கிறது. தீர்க்காயுஷ்மானான ஸ்ரீராகவனோடு உனக்கு எப்படியுஞ் சேர்த்தியுண்டாகப்போகிறது. அக்கினியோடு ஸ்வாஹாதேவிபோலும், மஹேந்திரனோடு சசிதேவிபோலும் ஸ்ரீராகவனோடு நீ சேர்ந்து திவ்வியாபரணங்களையணிந்துகொண்டு சந்தனபுஷ்பஹாரங்களைத் தரித்துக்கொண்டு, எங்களுக்கும் மற்றுமுள்ள திரிலோகவாஸிகளுக்கும் நியந்தாவாய் இராஜராஜேச்வரியாக வீற்றிருக்கப்போகிறாய். யான்செய்தவிண்ணப்பத்தைமாத்திர மங்கீகரியாயாகில் நாங்களனைவரும் உன்னிமித்தம் விஷத்தையுண்டு பிராணனைவிட்டுவிடுவோம். இவ்வித மந்தஸ்திரீ இராவணனது தாஸ்யத்தையங்கீகரிக்கவேண்டுமென்று ஸீதையைப்பிரார்த்தித்தனள்.

౨౯. అన్యాతువికటానామలంబమానపయోధరా।అబ్రవీత్కుపితాసీతాంముష్టిముద్యమ్యగర్జతీ।

உ௯. [illegible]

உ௯. அந்யாதுவிகடாநாமலம்பமாநபயோதரா॥
அப்ரவீத்குபிதாஸீதாம்முஷ்டிமுத்யம்யகர்ஜதீ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| லம்பமாநபயோதரா | தொங்குகிறஸ்தனமுடைய | முஷ்டிம்-உத்யம்ய | பிடியை-எடுத்து |
| விகடாநாம-அந்யா | விகடையென்றுபெயருடைய-வேறொ | கர்ஜதீ | இரைகின்றவளாக |
| குபிதா(ஸதீ) | கோபித்தவளாய்க் கொண்டு) [ருவள் | ஸீதாம்-அப்ரவீத் | ஸீதையைப்பார்த்து-சொன்னாள். |

தா-ம்—தொங்குகிற ஸ்தனத்துவயத்தையுடைய விகடையென்னு மோரிராக்ஷஸியானவள் மிகுந்த கோபத்துடன் முஷ்டியைத்தூக்கிக்கொண்டு பிராட்டியைப்பார்த்துப் பின்வருமாறுகர்ஜித்தாள்.

30. బహూన్యప్రియరూపాణివచనానిసుదుర్మతే।అనుక్రోశాన్మృదుత్వాచ్చసోఢానితవమైథిలి।

௩௦. [illegible]

௩௦. பஹூந்யப்ரியரூபாணிவசநாநிஸுதுர்மதே॥
அநுக்ரோஶாந்ம்ருதுத்வாச்சஸோடாநிதவமைதிலி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸுதுர்மதே-மைதிலி | மிக கெட்டபுத்தியுடைய-ஸீதே | (ராவணேந)-அநுக்ரோஶாத்-(இராவணனால்)-தயையாலும் | |
| பஹூநி-அப்ரியரூபாணி-அனேகமானவும்-அநிஷ்டஸ்வரூபங்களுமான | | ம்ருதுத்வாச்ச | மிருதுவான சரீரமுடையவளென்றும் |
| தவ-வசநாநி | உன்னுடைய-வார்த்தைகள் | ஸோடாநி | (தக்க சிக்ஷைசெய்யாமல்) ஸகிக்கப்பட்டன. |

నచనఃకురుషేవాక్యంహితంకాలపురస్సరమ్॥

[illegible]

நசநஃகுருஷேவாக்யம்ஹிதம்காலபுரஸ்ஸரம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| காலபுரஸ்ஸரம்-நஃ-வாக்யம்-காலோசிதமான-எங்களுடைய - வசனத்தை | | நகுருஷே (யதி) | செய்யாமற்போவாயாகில் |
| | | ஹிதம்-ந | (உனக்கு) நன்மை-இல்லை. |

தா-ம்—அடிதுர்ப்புத்தே! அப்பிரியமுங்கர்ணகடோமுமான அனேகதுர்வசனங்களை வரம்பின்றி மஹாராஜர்முன் உரைத்தாய். அவைகளையெல்லாம் கிருபையாலும் மிருதுத்தன்மையுள்ள அபலையென்கிற இரக்கத்தாலுமவர்பொறுத்தார். ஆகையால் தகுந்ததண்டனை உனக்குவிதிக்கப்படவில்லை. காலோசிதமும் உனக்கு ஹிதமுமான எங்கள் சொற்படி நீ நடக்காயாகில் உனக்கு நன்மையொருக்காலு முண்டாகப்போகிறதில்லை.

3౧. ఆనీతాసి సముద్రస్య పారమన్యైర్దురాసదమ్ । రావణాంతఃపురం ఘోరం ప్రవిష్టా చాసి మైథిలి॥

3౨. రావణస్య గృహే రుద్ధామస్మాభిస్తు సురక్షితామ్ । న త్వాం శక్తః పరిత్రాతుమపి సాక్షాత్పురందరః॥

௩௧. [illegible]
[illegible]

௩௨. [illegible]
[illegible]

௩௧. ஆநீதாஸிஸமுத்ரஸ்யபாரமந்யைர்துராஸதம்।
ராவணாந்தஃபுரம்கோரம்ப்ரவிஷ்டாசாஸிமைதிலி॥

௩௨. ராவணஸ்யக்ருஹேருத்தாமஸ்மாபிஸ்துஸுரக்ஷிதாம்।
நத்வாம்ஶக்தஃபரித்ராதுமபிஸாக்ஷாத்புரந்தரஃ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அந்யைஃ-துராஸதம் | இதரர்களால்-அடையமுடியாத | ராவணஸ்ய-க்ருஹே | இராவணனுடைய-கிருகத்தில் |
| ஸமுத்ரஸ்ய-பாரம் | கடலினுடைய-அக்கரையை [ய் | அஸ்மாபிஃ-ருத்தாம் | எங்களால்-தடுக்கப்பட்டவளும் [னை |
| ஆநீதா-அஸி | அடைவிப்பிக்கப்பட்டவளாக-ஆகிரு | ஸுரக்ஷிதாம்-த்வாம் | நன்றாகரக்ஷிக்கப்பட்டவளுமான-உன் |
| (ஹே) மைதிலி | (ஓ) ஸீதே [தை | பரித்ராதும் | காப்பாற்றுவதற்கு |
| கோரம்-ராவணாந்தஃ புரம் | பயங்கரமான-இராவணாந்தப் புரத் | ஸாக்ஷாத்-புரந்தரோபி | பிரத்தியக்ஷமான-இந்திரனும் |
| ப்ரவிஷ்டாச-அஸி | பிரவேசித்தவளாகவும்-ஆகிறாய் | நஶக்தஃ | சக்தனல்ல. |

33. కురుష్వ హితవాదిన్యా వచనం మమ మైథిలి । అలమశ్రుప్రపాతేన త్యజ శోకమనర్థకమ్॥

௩௩. [illegible]
[illegible]

௩௩. குருஷ்வஹிதவாதிந்யாவசநம்மமமைதிலி।
அலமஶ்ருப்ரபாதேநத்யஜஶோகமநர்த்தகம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மைதிலி-ஹிதவாதிந்யாஃ-ஸீதே-ஹிதம்சொல்லுகிற | | அஶ்ருப்ரபாதேந-அலம்-கண்ணீர்பெருக்குவதால்-போதும் | |
| மம-வசநம்-குருஷ்வ | என்னுடைய-வார்த்தையை-செய் | அநர்த்தகம்-ஶோகம்-த்யஜ - பிரயோஜனமற்ற- துக்கத்தை-விடு. | |

34. భజ ప్రీతిం ప్రహర్షం చ త్యజైతాం నిత్యదైన్యతామ్ । సీతే రాక్షసరాజేన సహ క్రీడ యథాసుఖమ్॥

௩௪. [illegible]
[illegible]

௩௪. பஜப்ரீதிம்ப்ரஹர்ஷம்சத்யஜைதாம்நித்யதைந்யதாம்।
ஸீதேராக்ஷஸராஜேநஸஹக்ரீடயதாஸுகம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| (ஹே) ஸீதே | (ஓ) ஸீதே [தையும் | ஏதாம்-நித்யதைந்யதாம்-த்யஜ | இந்த-ஸதாவியஸனத்தை-விடு |
| ப்ரீதிம் | (இராவண விஷயமான) ஸ்நேஹத் | ராக்ஷஸராஜேநஸஹ | இராக்ஷஸராஜாவான (இராவணனோ |
| ப்ஹர்ஷம்ச-பஜ | ஸந்தோஷத்தையும்-அடை | யதாஸுகம்-க்ரீட | யதேச்சையாக-விஹரி. [டு |

(௩௧-மு-௩௪-ல்) தா-ம்—அடிமைதிலி! இராமனையும் மற்றுமுள்ளபந்துக்களையும் நினைத்துநினைத்துக் கண்ணீர்விடுவதில் யாதுபயன்? அவர்களில்யாராவது இங்குவந்துன்னை ரக்ஷிக்கவல்லரோ! யாவருக்கும் துஸ்ஸஹமான இம்மஹாஸமுத்திரந்தாண்டி இக்கரைசேர்ந்துவிட்டாய், மஹாபயங்கரமான இராவணாந்தப்புரத்தையும் பிரவேசித்துவிட்டாய், இவ்விடத்தில் எம்போன்ற உக்கிரராக்ஷஸிகளால் அங்கிங்கோடியொளியாமல் காக்கப்படுகிறாய், இவ்விதகாவல்கொண்ட வுன்னைமஹேந்திரன் பிரத்தியக்ஷமா யோடிவந்தாலு மிரக்ஷிக்க அசக்தன்தான். மஹாஸமுத்திரமத்தியில், இராக்ஷஸபாலிதமானவிலங்கையில், இராவணாந்தப்புரநடுவில் பயமின்றிப்பிரவேசித்து எங்கள் காவலினின்றுன்னைக் கொண்டுபோக வல்லவீரனும் இம்மூவுலகிலுளனோ! மஹேந்திரனுமந்நினைத்தமாத்திரத்தில் நடுங்கானோ! அப்படியிருக்க அந்த ராமனென்கிறமனிதனா உன்னைரக்ஷிக்கப் போகிறான்! அடிஸீதே! இதெல்லாம் வீண்மனோராஜ்ஜியம். யான்சொல்லுவதைக்கவனித்து அவ்வண்ணம் நடந்தாயாகி லுனக்குப்பயனுண்டு. இக்கண்ணீர்பெருக்குவது இதுமட்டில்போதும். நிஷ்பிரயோஜனமான இவ்வியஸனத்தை உடனேவிட்டுவிடு. இராவணனிடத்திற் பிரீதிபண்ணி மஹாஸந்தோஷத்தையடை. அந்தஸுந்தரபுருஷனோடு ஏகபத்தினியாயிருந்து யதேச்சையாகக்கிரீடி. ஸகலஸௌபாக்கியங்களையுமடைந்து இராஜராஜேசுவரியாகத் திருக்கோலங்கொள்ளு. ஹேஸுந்தரி! இப்படி இடைவிடாமல் துக்கிப்பதிலென்ன பிரயோஜனமிருக்கிறது. உனது அபீஷ்டம் நிறைவேறுவதற்கு யாதொருமுகாந்திரமுமில்லை. நிஷ்பிரயோஜனமாயிருக்கு முனதுசிந்தையைவிட்டொழித்துஸகலபோகங்களையு மளிக்கக்காத்திருக்கிற இலங்காதிபதியைச்சேர்ந்து இன்புறக்கடவாய்.

౩౫. జానాసి హి యథా భీరు స్త్రీణాం యౌవనమధ్రువమ్ । యావన్న తే వ్యతిక్రామేత్తావత్సుఖమవాప్నుహి॥

௩௫. [illegible]

[illegible]

௩௫. ஜாநாஸிஹியதாபீருஸ்த்ரீணும்யௌவநமத்ருவம்।
யாவந்நதேவ்யதிக்ராமேத்தாவத்ஸுகமவாப்நுஹி॥

பதம். உரை.

(ஹே) பீரு — பயந்தஸ்வபாவமுள்ள அடிஸீதே!
ஸ்த்ரீணும்-யௌவநம் — ஸ்திரீகளுடைய-யௌவனமானது
அத்ருவம்-யதா-ஜாநாஸி-நிலையற்றது (என்று)-எப்படி-அறிந்திருக்கிருயோ

பதம். உரை,

(ததா)-தே — (அப்படியே)-உன்னுடைய (யௌவனம்)
யாவத்-நவ்யதிக்ராமேத்-எவ்வளவுகாலத்திற்குள்-அதிக்கிரமியாதோ
தாவத் — அவ்வளவுகாலத்திற்குள்
ஸுகம்-அவாப்நுஹி — ஸுகத்தை-அடை.

౩౬. ఉద్యానాని చ రమ్యాణి పర్వతోపవనాని చ। సహ రాక్షసరాజేన చర త్వం మదిరేక్షణే॥

௩௬. [illegible]

[illegible]

௩௬. உத்யாநாநிசரம்யாணிபர்வதோபவநாநிச।
ஸஹராக்ஷஸராஜேநசரத்வம்மதிரேக்ஷணே॥

பதம். உரை.

மதிரேக்ஷணே-த்வம் — விலாஸத்தோடுகூடினகண்களையுடையாய்-நீ
ரம்யாணி-உத்யாநாநிச — அழகான-உத்தியானவனங்களிலும்

பதம். உரை.

பர்வதோபவநாநிச — கிரீடா பருவதத்திலிருக்கிற உத்தியானவனங்களிலும்
ராக்ஷஸராஜேநஸஹ-சர-இராக்கதநாதனேடுகூட-ஸஞ்சரி.

౩౭. స్త్రీసహస్రాణి తే సప్త వశే స్థాస్యంతి సుందరి । రావణం భజ భర్తారం భర్తారం సర్వరక్షసామ్॥

௩௭. [illegible]

[illegible]

௩௭. ஸ்த்ரீஸஹஸ்ராணிதேஸப்தவஶேஸ்தாஸ்யந்திஸுந்தரி।
ராவணம்பஜபர்த்தாரம்பர்த்தாரம்ஸர்வரக்ஷஸாம்॥

பதம். உரை.

ஸப்த-ஸ்த்ரீஸஹஸ்ராணி-ஏழான-ஸ்திரீகளுடைய ஆயிரங்கள்
தே-வஶே-ஸ்தாஸ்யந்தி - உன்னுடைய-ஸ்வாதீனத்தில்-நிற்கிருர்கள்
ஸர்வரக்ஷஸாம் — ஸமஸ்த இராக்ஷதருக்கு

பதம். உரை.

பர்த்தாரம்-ராவணம் — பிரபுவான-இராவணனை
ஸுந்தரி — ஸீதே!
பர்த்தாரம்-பஜ — நாயகனுக-அடை.

౩౮. ఉత్పాట్య వా తే హృదయం భక్షయిష్యామి మైథిలి । యది మే వ్యాహృతం వాక్యం న యథావత్కరిష్యసి॥

௩௮. [illegible]

[illegible]

௩௮. உத்பாட்யவாதேஹ்ருதயம்பக்ஷயிஷ்யாமிமைதிலி।
யதிமேவ்யாஹ்ருதம்வாக்யம்நயதாவத்கரிஷ்யஸி॥

பதம். உரை.

மைதிலி-மே-வ்யாஹ்ருதம்-ஸீதே-என்னுல்-சொல்லப்பட்ட
வாக்யம்-யதாவத் — வார்த்தையை-சொன்னபிரகாரம்
நகரிஷ்யஸியதி — (நீ) செய்யாமற்போவாயாகில்

பதம். உரை.

தே-ஹ்ருதயம்-உத்பாட்யவா-உன்னுடைய-ஹிருதயத்தை-பிடுங்கியே
பக்ஷயிஷ்யாமி — பக்ஷித்துவிடுவேன்.

(௩௫-மு-௩௮-ல்) தா-ம்—அடிஜானகி! இந்ததுக்கத்தைவிட்டு ஸுகத்தைநாடி இராவணனைச்சேர்ந்து கிரீடியென்று மொழிந்தவென்வாக்கியத்திற்குக் காரணமறிவாயோ. ஸ்திரீகளுக்கு ஸகலஸுகங்களையுமனுபவிக்கத்தகுந்தகாலம் யௌவனம். அந்தயௌவனம் மிகவும் நிலையற்றது, இன்றிருக்கும் நாளைபோய்விடும், போய்விடின்திரும்பிவராது. இதுஉனக்குத் தெரிந்தவிஷயமே. ஆகையால், ஸீதே! உன்னுடைய யௌவன முன்னையதிக்கிரமியாமுன் தகுந்தநாயகனைச்சேர்ந்து மத்தேல்லாஸரஸத்தையடைந்து மகிழென்றுவற்புறுத்தினேன். ஹேநித்தியகல்யாணி! அநுரூபனுனநாயகனை நீ தேடவேண்டுமோ! திரிலோகேசுவரனுனவெங்கள் ராவணேசுவரன் வெகுநாளாயுன்னைப்பிரார்த்திக்கிருன். அவன் மஹாவீரியவான், யௌவனமத்தியஸ்தன், கந்தர்ப்பஸதிருசமான ரூபமுள்ளவன், அப்படிப்பட்டமணவாளனைச்சேர்ந்து அசோகவனிகாதிமஹோத்தியான வனங்களிலும் கிரீடாபர்வதங்களிலுள்ள திவ்வியஉபவனங்களிலும் கந்தர்ப்போத்ஸவத்தைக் காலநிர்ணயமின்றி கொண்டாடி மஹாபோகத்தையனுபவி. யௌவனபரிபக்குவத்தால் மதிப்படைந்து மதுரமாகவிளங்கும் திவ்வியநேத்திரங்களோடும் மின்னலைப்பழிக்கும் தனுவொளியோடும் கிரீடாவனங்களைச்சிறப்பித்துக்கொண்டு தசக்கிரீவனேடு உல்லாஸமாய்ஸஞ்சரி, நீ இராவணஸ்வாதீனையான தக்ஷணம் ஏழாயிரம் திவ்வியஸ்திரீகளுனக்குப் பரிசாரகைகளாவார்கள். இவ்வங்களுஸஹஸ்ரமனேக முன்னைஸேவிக்க, இராக்கதர்தொழு மிராவணனு முன்னைநேசிக்க, ஸகலவிபவங்களையுமடைந்து லோகநாயகியாகவீற்றிரு. அடிஸீதே! என்வார்த்தையைத் திக்காரஞ்செய்தாயாகில் உன்னைப் படாதபாடுபடுத்துவேன். இராவணனு

டையகாமத்திற் கபிமதையாகாவிடில் உனது கல்லழுந்தமான ஹிருதயத்தைப்பிடுங்கித் தின்றுவிடுவேன். வீணையழிந்துபோகாதே, காலோசிதமாகநடந்துகொள், என்றிவ்விதம் விகடையென்பவளுரைத்தாள்.

౩౯. తతశ్చండోదరీనామరాక్షసీక్రోధమూర్ఛితా । భ్రామయంతీమహచ్ఛూలమిదంవచనమబ్రవీత్ ॥

௩௯. 𑌤𑌤𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑍋𑌦𑌰𑍀𑌨𑌾𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌾।
𑌭𑍍𑌰𑌾𑌮𑌯𑌂𑌤𑍀𑌮𑌹𑌚𑍍𑌛𑍂𑌲𑌮𑌿𑌦𑌂𑌵𑌚𑌨𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௩௯. ததஶ்சண்டோதரீநாமராக்ஷஸீக்ரோதமூர்ச்சிதா।
ப்ராமயந்தீமஹச்சூலமிதம்வசநமப்ரவீத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத:-சண்டோதரீநாம | பின்பு-சண்டோதரியென்கிற | ப்ராமயந்தி (ஸதீ) | சுற்றுகிறவளாய்க்கொண்டு |
| ராக்ஷஸீ-க்ரோதமூர்ச்சிதா-இராக்ஷஸி-கோபபரவசையாக | | இதம்-வசனம்-அப்ரவீத் | இந்த-வார்த்தையை-சொன்னாள். |
| மஹத்-ஶூலம்- | பெரிதான-சூலத்தை | | |

౪౦. ఇమాంహరిణలోలాక్షీంత్రాసోత్కంపిపయోధరామ్ । రావణేనహృతాందృష్ట్వాదౌహృదోమేమహానభూత్ ॥

௪௦. 𑌇𑌮𑌾𑌂𑌹𑌰𑌿𑌣𑌲𑍋𑌲𑌾𑌕𑍍𑌷𑍀𑌂𑌤𑍍𑌰𑌾𑌸𑍋𑌤𑍍𑌕𑌂𑌪𑌿𑌪𑌯𑍋𑌧𑌰𑌾𑌮𑍍।
𑌰𑌾𑌵𑌣𑍇𑌨𑌹𑍃𑌤𑌾𑌂𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑍌𑌹𑍃𑌦𑍋𑌮𑍇𑌮𑌹𑌾𑌨𑌭𑍂𑌤𑍍॥

௪௦. இமாம்ஹரிணலோலாக்ஷீம்த்ராஸோத்கம்பிபயோதராம்।
ராவணேநஹ்ருதாம்த்ருஷ்ட்வாதௌஹ்ருதோமேமஹாநபூத்॥

| பதம். | உரை. [டையவளும் | பதம். | உரை. [மான |
|---|---|---|---|
| ஹரிணலோலாக்ஷீம் | மான்போல் சஞ்சலமான கண்களையு | ராவணேந-ஹ்ருதாம் | இராவணனால்-அபகரிக்கப்பட்டவளு |
| த்ராஸோத்கம்பிபயோதராம்-பயத்தால் நடுங்குகிற ஸ்தனமு | | இமாம்-த்ருஷ்ட்வா-மே-இவளை-பார்த்து-எனக்கு | [ற்று. |
| | டையவளும் | மஹாந்-தௌஹ்ருத:-அபூத்-பெரிய-இச்சையானது-உண்டாயி | |

౪౧. యకృత్ప్లీహమథోత్పీడంహృదయంచసబంధనమ్ । ఆంత్రాణ్యపితథాశీర్షంఖాదేయమితిమేమతిః ॥

௪௧. 𑌯𑌕𑍃𑌤𑍍𑌪𑍍𑌲𑍀𑌹𑌮𑌥𑍋𑌤𑍍𑌪𑍀𑌡𑌂𑌹𑍃𑌦𑌯𑌂𑌚𑌸𑌬𑌂𑌧𑌨𑌮𑍍।
𑌆𑌂𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑌿𑌤𑌥𑌾𑌶𑍀𑌰𑍍𑌷𑌂𑌖𑌾𑌦𑍇𑌯𑌮𑌿𑌤𑌿𑌮𑍇𑌮𑌤𑌿𑌃॥

௪௧. யக்ருத்ப்லீஹமதோத்பீடம்ஹ்ருதயம்சஸபந்தநம்।
ஆந்த்ராண்யபிததாஶீர்ஷம்காதேயமிதிமேமதி:॥

| பதம். | உரை. [றுத்த மாம்ஸத்தையும் | பதம். | உரை. |
|---|---|---|---|
| யக்ருத் | வயிற்றின் வலப்பக்கத்திலிருக்கிற க | ஹ்ருதயஞ்ச-ஆந்த்ராண்யபி - | மொக்குபோன்ற ஹிருதயகமல |
| ப்லீஹம் | மார்பின் இடதுபக்கத்தில் பசுமையா | | மென்னு மாம்ஸத்தையும்-குடலையும் |
| | யிருக்கும் மாம்ஸவிசேஷத்தையும் | ததா-ஶீர்ஷம் | அவ்வண்ணமே-சிரஸிலிருக்கிற மாம் |
| அத-உத்பீடம் | பின்பு-ப்லீஹமென்னு மாம்ஸத்திற்கு | | ஸத்தையும் |
| | மேலிருக்குமோர்விதமாம்ஸத்தையும் | காதேயமிதி | பக்ஷிக்கவேண்டுமென்று |
| ஸபந்தநம் | நாடிபந்தத்தோடுகூடின | மே-மதி: | எனக்கு-புத்தியானது(உண்டாகிறது.) |

தா-ம்—இந்தஸ்திரீ மஹாரூபவதியாயிருக்கிறாள். இவளுடைய நேத்திரம் இளமானுடைய நேத்திரம் போல்சஞ்சலித்து அதிமதுரமாக விளங்குகிறது. பயமிகுதியாலிவளுடைய குசமண்டலம் அசைந்தாடுகிறது. திவ்யவபுவழகையுடைய இந்தஸீதையை இராவணனபகரித்துவந்தநாள்முதல் நான்பார்த்து இவளுடையஉதரத்திலும் மார்பிலும் சிரஸிலுமுள்ள மதுரமானமாம்ஸங்களைப் புஜிக்கவேண்டுமென்கிற பெரிய குதூகலமானது எனக்கு உண்டாயிருக்கிறதென்று சண்டோதரியென்கிற இராக்ஷஸியானவள்கையில் சூலாயுதத்தைச் சுழற்றிக்கொண்டு மஹாகோபத்துடன்கர்ஜ்ஜித்தாள்.

౪౨. తతస్తుప్రఘసానామరాక్షసీవాక్యమబ్రవీత్ । కంఠమస్యానృశంసాయాఃపీడయామఃకిమాస్యతే ॥

౪౩. నివేద్యతాంతతోరాజ్ఞేమానుషీసామృతేతిహ । నాత్రకశ్చనసందేహఃఖాదతేతిసవక్ష్యతి ॥

௪௨. 𑌤𑌤𑌸𑍍𑌤𑍁𑌪𑍍𑌰𑌘𑌸𑌾𑌨𑌾𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌕𑌂𑌠𑌮𑌸𑍍𑌯𑌾𑌨𑍃𑌶𑌂𑌸𑌾𑌯𑌾𑌃𑌪𑍀𑌡𑌯𑌾𑌮𑌃𑌕𑌿𑌮𑌾𑌸𑍍𑌯𑌤𑍇॥

௪௩. 𑌨𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑌾𑌂𑌤𑌤𑍋𑌰𑌾𑌜𑍍𑌞𑍇𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌸𑌾𑌮𑍃𑌤𑍇𑌤𑌿𑌹।
𑌨𑌾𑌤𑍍𑌰𑌕𑌶𑍍𑌚𑌨𑌸𑌂𑌦𑍇𑌹𑌃𑌖𑌾𑌦𑌤𑍇𑌤𑌿𑌸𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿॥

௪௨. ததஸ்துப்ரகஸாநாமராக்ஷஸீவாக்யமப்ரவீத்।
கண்டமஸ்யாந்ருஶம்ஸாயா:பீடயாம:கிமாஸ்யதே॥

௪௩. நிவேத்யதாம்ததோராஜ்ஞேமாநுஷீஸாம்ருதேதிஹ।
நாத்ரகஶ்சநஸந்தேஹ:காததேதிஸவக்ஷ்யதி॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத:-ப்ரகஸாநாம-ராக்ஷஸீ- | பிறகு-பிரகஸையென்கிற- இரா | கண்டம்-பீடயாம: | கழுத்தை-பீடிப்போம் |
| ந்ருஶம்ஸாயா:-அஸ்யா:-குரூரையான-இவளுடைய | [க்ஷஸி | கிம்-ஆஸ்யதே | ஏன்-உட்கார்ந்திருக்கிறோம் |

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ததஃ-மாநுஷீ | (அவளைப்பீடித்த) பிறகு-மனுஷியஸ்திரீயான | காதத-இதி | அவளைப்பக்ஷியுங்களென்று |
| ஸா-ம்ருதா-இதி | அந்த ஸீதை-மரித்தாள்-என்று | வக்ஷ்யதி-அத்ர | சொல்லப்போகிருன்-இவ்விஷயத்தில் |
| ராஜ்ஞே-நிவேத்யதாம் | இராஜாவுக்கு-தெரியப்படுத்தத் தக்கி | கஸ்சந-ஸந்தேஹஃ-ந | ஒருவிதமான-ஸந்தேகமும்-இல்லை |
| ஸஃ | அந்த இராவணனும் [னது | (இதி)-(இதம்)-வாக்யம்-(என்று)-(இந்த)-வாக்கியத்தை | |
| | | அப்ரவீத் | சொன்னுள். |

தா-ம்—பிறகு பிரகஸையென்பவள் மற்றராக்ஷஸிகளைப்பார்த்துப் பின்வருமாறுரைத்தனள். அடிஸகிகளே! நாமெல்லோரும் இந்தஅல்பஸ்திரீயைப்பிரார்த்தித்துக்கொண்டு அல்லும்பகலுமேனிப்படி அவதிப்படவேண்டும். பத்துமாதகால மிவளைப்பலவாறுவேண்டினம். தனராஜ்ஜியாதிகளை ஸமிருத்தியாயளிப்பதாகக் கூறினம். மஹாராஜாவைக்கொண்டும் வெகுவிதமாக வுபதேசித்தனம். எதற்குமிவளிணங்காமல் குரூரையாகவேயிருக்கிருள். ஆகையால் நாமொன்றுசேர்ந்து இவள்கண்டத்தையிறுக்கி ஹத்திசெய்துவிட்டு மஹாராஜாவினிடத்தி லிவளிறந்தாளென்று தெரிவிப்போம். அவருமிவளை கிராசைபண்ணி இவளுடலைப் பக்ஷிக்க ஆக்கியாபித்துவிடுவார். இதற்குஸந்தேகமில்லை. இவ்விதம் ஸீதாஹத்தியில் பிரவர்த்திப்பதுயுக்தமென்று பிரகஸை மற்றவர்க்காலோசனைசொன்னுள்.

ம்ருதேதிஹ-ஹ-ஸாம்ருதா (ஸீதைமரித்தாள்) என்றுசொன்ன வால்மீகிபகவானுக்குண்டான ஸந்தாபத்தைக்காண்பிக்கிற அவ்வியயம்.

౪౪. తతస్త్వజాముఖీనామరాక్షసీవాక్యమబ్రవీత్ । విశస్యేమాంతతస్సర్వాస్సమాన్ కురుతపీలుకాన్ ॥

౪౫. విభజామతతస్సర్వావివాదో మే న రోచతే । పేయమానీయతాంక్షిప్రంలేహ్యముచ్చావచంబహు ॥

௪௪. 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌜𑌾𑌮𑍁𑌖𑍀𑌨𑌾𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌵𑌿𑌶𑌸𑍍𑌯𑍇𑌮𑌾𑌂𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌨𑍍𑌕𑍁𑌰𑍁𑌤𑌪𑍀𑌲𑍁𑌕𑌾𑌨𑍍॥

௪௫. 𑌵𑌿𑌭𑌜𑌾𑌮𑌤𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌿𑌵𑌾𑌦𑍋𑌮𑍇𑌨𑌰𑍋𑌚𑌤𑍇।
𑌪𑍇𑌯𑌮𑌾𑌨𑍀𑌯𑌤𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌲𑍇𑌹𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑌂𑌬𑌹𑍁॥

௪௪. ததஸ்த்வஜாமுகீநாமராக்ஷஸீவாக்யமப்ரவீத்।
விஸஸ்யேமாம்ததஸ்ஸர்வாஸ்ஸமாங்குருதபீலுகாந்॥

௪௫. விபஜாமததஸ்ஸர்வாவிவாதோமேநரோசதே।
பேயமாநீயதாம்க்ஷிப்ரம்லேஹ்யமுச்சாவசம்பஹு॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ததஃ-அஜாமுகீநாம-ராக்ஷஸீ-பிறகு-அஜாமுகியென்கிற- இராக்ஷஸி | | பேயம் | (நாம்) குடிக்கத்தகுந்தவஸ்துவானது |
| இமாம்-விஸஸ்ய | இந்தஸீதையை-கொன்று | க்ஷிப்ரம்-ஆநீயதாம் | சீக்கிரமாக - கொண்டுவரப்படட்டும் |
| ஸர்வாஃ-பீலுகாந் | (நீங்கள்) எல்லோரும்-மாம்ஸகண்டங்களை | உச்சாவசம்-பஹு | அனேகவிதமாயும் - விஸ்தாரமாயுமிருக்கிற |
| ஸமாந்-குருத | ஸரிபங்குகளாக-செய்யுங்கள் | லேஹ்யம் | தொகையல் பச்சடி முதலிய பதார்த்தம் |
| ததஃ-ஸர்வாஃ | பிறகு-(நாம்) எல்லோரும் | (ஆநீயதாம்) | கொண்டுவரப்படட்டும். |
| விபஜாம | பாகித்துக்கொள்ளுவோம் | | |
| விவாதஃ-மே-நரோசதே-கலகம்-எனக்கு-பிரியமில்லை | | | |

தா-ம்—பிறகுஅஜாமுகியென்பவள் பின்வருமாறறைந்தனள். ஸகிகளே! நாமெல்லோருமிவளைக்கொன்று இவளுடையமாம்ஸத்தை ஸமமானதுண்டங்களாக்கி நமக்குள்சச்சரவின்றிவிபாகஞ்செய்து திவ்வியபானங்களையும் லேகியங்களையும் ஸமிருத்தியாக வரவழைத்துக்கொண்டு பக்ஷிப்போமென்றனள்.

౪౬. తతశ్శూర్పణఖానామరాక్షసీవాక్యమబ్రవీత్ । అజాముఖ్యాయదుక్తంహితదేవమమరోచతే ॥

౪౭. సురాచానీయతాంక్షిప్రంసర్వశోకవినాశినీ । మానుషంమాంసమాస్వాద్యనృత్యామోఽథనికుంభిలామ్ ॥

௪௬. 𑌤𑌤𑌶𑍍𑌶𑍂𑌰𑍍𑌪𑌣𑌖𑌾𑌨𑌾𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍।
𑌅𑌜𑌾𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂𑌹𑌿𑌤𑌦𑍇𑌵𑌮𑌮𑌰𑍋𑌚𑌤𑍇॥

௪௭. 𑌸𑍁𑌰𑌾𑌚𑌾𑌨𑍀𑌯𑌤𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌸𑌰𑍍𑌵𑌶𑍋𑌕𑌵𑌿𑌨𑌾𑌶𑌿𑌨𑍀।
𑌮𑌾𑌨𑍁𑌷𑌂𑌮𑌾𑌂𑌸𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌨𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑍋𑌽𑌥𑌨𑌿𑌕𑍁𑌮𑍍𑌭𑌿𑌲𑌾𑌮𑍍॥

௪௬. ததஸ்ஸூர்ப்பணகாநாமராக்ஷஸீவாக்யமப்ரவீத்।
அஜாமுக்யாயதுக்தம்ஹிததேவமமரோசதே॥

௪௭. ஸுராசாநீயதாம்க்ஷிப்ரம்ஸர்வஸோகவிநாஸிநீ।
அசிரேணதுலங்கேயம்ஶ்மஶாநஸத்ருஶீபவேத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
| --- | --- | --- | --- |
| இயம்-லங்கா | இந்த-இலங்கையானது | அசிரோணது | சீக்கிரமாகத்தானே |
| சிதாதூமாகுலபதா | பிணத்தின்புகையால் நிறைந்த வழியுடையதும் | ஶ்மஶாநஸத்ருஶீ | சுடுகாட்டுக்குநிகராக |
| க்ருத்ரமண்டலஸங்குலா-கழுக்கூட்டத்தினால்வியாபிக்கப்பட்டதுமாக | | பவேத் | ஆகப்போகிறது. |

(உரு-மு-உகா-ல்) தா-ம்.—எவ்விதமாயாவது ஸ்ரீராமலக்ஷ்மணுள் இவ்விலங்கையைத் தேடியடைந்து சத்துருவைக்கண்டுவிட்டார்களாயின், அவன் அனந்தரம் ஒருமுகூர்த்தமாவது ஜீவிப்பனோ! உடனே அவனை ஹதஞ்செய்துவிடுவார்கள். மற்றுமுள்ள அவனைச்சூழ்ந்த வரக்கரையுமுடித்துவிடுவார்கள். இன்னம் கொஞ்சகாலத்திற்குள் இந்நகரம் பிணக்காடாய், தீப்பிடித்தெரிகிற பிரேததூமம் சூழ்ந்து, கழுகுக்கூட்டங்கள் நிறைந்து, கேவலம் மயானமயமாய்விடப்போகிறது.

౨౭. అచిరేణైవ కాలేన ప్రాప్స్యామ్యేవ మనోరథమ్ । దుష్ప్రస్థానోఽయమాఖ్యాతి సర్వేషాం వో విపర్యయమ్॥

உஎ. [illegible]।
[illegible]॥

உஎ. அசிரேணைவகாலேநப்ராப்ஸ்யாம்யேவமநோரதம்।
துஷ்ப்ரஸ்தாநோயமாக்யாதிஸர்வேஷாம்வோவிபர்யயம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
| --- | --- | --- | --- |
| அசிரேண-காலேநைவ-சீக்கிரமான-காலத்தினுலேயே | | ஸர்வேஷாம்-வ꞉ | ஸமஸ்தர்களான-உங்களுக்கு |
| மநோரதம் | என்கோரிக்கையை | விபர்யயம் | கெடுதியை (வித்தியாஸத்தை) |
| ப்ராப்ஸ்யாம்யேவ | அடையவே போகிறேன் | ஆக்யாதி | சொல்லுகிறது. |
| அயம்-துஷ்ப்ரஸ்தாந꞉ | இந்த-துர்மார்க்கமானது | | |

౨౮. యాదృశాని తు దృశ్యంతే లంకాయామశుభాని వై । అచిరేణ తు కాలేన భవిష్యతి హతప్రభా॥

உஅ. [illegible]।
[illegible]॥

உஅ. யாத்ருஶாநீஹத்ருஶ்யந்தேலங்காயாமஶுபாநிவை।
அசிரோணதுகாலேநபவிஷ்யதிஹதப்ரபா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
| --- | --- | --- | --- |
| இஹ-லங்காயாம் | இந்த-இலங்கையில் | (லங்கா) | (இலங்கையானது) |
| யாத்ருஶாநி | எப்படிப்பட்ட | அசிரோணது-காலேந | சீக்கிரத்திலேயே |
| அஶுபாநி | அமங்களங்கள் | ஹதப்ரபா | நஷ்டமான காந்தியுடையதாக |
| த்ருஶ்யந்தே | காணப்படுகின்றனவோ | பவிஷ்யதி | ஆகப்போகிறது. |
| தாத்ருஶை꞉ | அப்படிப்பட்ட (அமங்களங்களால்) | | |

(உஎ-மு-உஅ-ல்) தா-ம்.—அடிராக்ஷஸிகளே! யான்கோருகிற இவ்விலங்கா நாசமானது சிரகாலாநந்தரம் ஸித்திக்கப்போகிறதென் றெண்ணுதேயுங்கள். அத்யுத்கடமான புண்ணியபாபங்களுக்குத் தக்ஷணத்திலேயே பலனுகையால், பதிவிரதையைப் பீடித்தவனுடைய கண்ணினின் றிவ்வாறு தாரைதாரையாய் நீரொழுகச்செய்கிற விக்கொடியபாதகம், ஸமீபத்திலுங்களனைவர்க்கும் விளையப்போகிற கோரநாசத்தை ஸூசிப்பிக்கிறது. மேலுமிந்நகரிலிப்பொழுதுண்டாயிருக்கிற துச்சகுனங்கள் இதற்குக் காத்திருக்கிற வனர்த்தத்தைக்

சுட்டுகின்றன. அடி ராவணுக்கியாகாரிணிகளே! இன்னஞ் சிறிதுநாளிலுங்கட்பிரபுவின் பெருமையும் பிரதாபமுங்குன்றி இம்மாநகரின் பிரகாசமு மழிந்துவிடப்போகிறது. இவ்வைசுவரியச்செருக்கும், இம்மங்களவாத்தியகோஷமும், இவ்விராஜ திருக்கொலமு மிந்நகர்க் கின்னங் கொஞ்சகாலவாழ்வுதான்.

౨౯. నూనం లంకా హతే పాపే రావణే రాక్షసాధమే । శోషం యాస్యతి దుర్ధర్షా ప్రమదా విధవా యథా॥

௨௯. 𑌨𑍂𑌨𑌂 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌹𑌤𑍇 𑌪𑌾𑌪𑍇 𑌰𑌾𑌵𑌣𑍇 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌮𑍇।
𑌶𑍋𑌷𑌂 𑌯𑌾𑌸𑍍𑌯𑌤𑌿 𑌦𑍁𑌰𑍍𑌧𑌰𑍍𑌷𑌾 𑌪𑍍𑌰𑌮𑌦𑌾 𑌵𑌿𑌧𑌵𑌾 𑌯𑌥𑌾॥

௨௯. நூநம்லங்காஹதேபாபேராவணேராக்ஷஸாதமே।
ஶோஷம்யாஸ்யதிதுர்த்தர்ஷாப்ரமதாவிதவாயதா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பாபே | பாபாத்மாவும் | லங்கா | இலங்கையானது |
| ராக்ஷஸாதமே | இராக்ஷஸநீசனுமான | ப்ரமதாயதா | யௌவனமுடைய ஸ்திரீபோல் |
| ராவணே | இராவணன் | ஶோஷம் | நாசத்தை |
| ஹதே(ஸதி) | நாசமாகுகையில் | யாஸ்யதி | அடையப்போகிறது |
| துர்த்தர்ஷா | திரஸ்கரிக்கப்பட்ட | நூநம் | நிச்சயம். |

தா-ம்.—கொடுமையே வியல்பாகக்கொண்ட பொல்லாவரக்கருள் அதமனுமென்னும்படி மஹாபாதகங்களைச்செய்து தனது துஷ்கிருத்தியபலத்தா லிராகவசஸ்திரத்திற் கிரையாகப்போகிற இவ்விராவணன் யுத்தரங்கத்தில் முடிசாய்ந்து மண்மீதுவிழுந்தவுடன், அதிஸுந்தரமும் அகிலராக்ஷஸஸேவிதமுமான இப்பெருநகர் நாதனற்று, ஆதரிப்பாரற்று, உலகத்தால் சீக்கொட்டப்பட்டு, கோபுரங்களிடிந்து, மண்டபங்கள் தாழ்ந்து, அரண்மனைகளழிந்து, சோலைகளெரிந்து, வாவிகள்வற்றி, இவ்வாறு சோபைகுலைந்தழியப்போகிறது. மதோன்மத்தனான நாயகனோடுல்லாஸமாகக் களிக்கையி லந்தநாயகனைத் திடீரென்றுபறிகொடுத்து விதவையாகி வீணேயொழிகிற யௌவனத்தோடு பிரபையற்றுநிற்கிற யுவதிபோல், பர்த்தாவோடிருக்கிற பேரானந்தபதவி ஸுகானுபவஞ்செய்கிற இவ்விலங்கையும் நாதனையிழந்து நாசமுறப்போகிறது. இது நிச்சயம்.

౩౦. పుణ్యోత్సవసముత్థా చ నష్టభర్త్రీ సరాక్షసీ । భవిష్యతి పురీ లంకా నష్టభర్త్రీ యథాంగనా॥

௩௦. 𑌪𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌸𑌵𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾 𑌚 𑌨𑌷𑍍𑌟𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑍀 𑌸𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀।
𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑍁𑌰𑍀 𑌲𑌙𑍍𑌕𑌾 𑌨𑌷𑍍𑌟𑌭𑌰𑍍𑌤𑍍𑌰𑍀 𑌯𑌥𑌾𑌙𑍍𑌗𑌨𑌾॥

௩௦. புண்யோத்ஸவஸமுத்தாசநஷ்டபர்த்ரீஸராக்ஷஸீ।
பவிஷ்யதிபுரீலங்காநஷ்டபர்த்ரீயதாங்கநா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| புண்யோத்ஸவஸமுத்தா- | புண்யோத்ஸவத்திலிருந்து விலகின[தும் | நஷ்டபர்த்ரீ | மரித்த நாயகனையுடைய |
| நஷ்டபர்த்ரீ | நாசமடைந்தநாதனையுடையதும் | அங்கநாயதா | ஸ்திரீபோல் |
| ஸராக்ஷஸீ | இராக்ஷஸஸ்திரீகளோடு கூடினதுமா[ன | பவிஷ்யதி | ஆகப்போகிறது. |
| லங்கா-புரீ | இலங்கையென்கிற-பட்டணம் | | |

தா-ம்.—நித்திய மங்களோத்ஸவங்களாலும் இராக்ஷதருடைய உபசாரங்களாலும் அதிபோகவத்தாக விளங்குகிற இத்திவ்வியநகர் இராவணனை யிழந்து அராஜகமாகிக் கேடடையப்போகிறது. நாயகனற்று நசித்துப்போகிற திவ்வியாங்கனைபோல், இப்பெரியபுரியும் மிருதங்கவீணாஸகிதமான கேளிகைகளும் நாயகாநாயகிகளுடைய மன்மதலீலைகளும் செய்யப்பெற்ற அந்தப்புர உத்தியானவனங்களில் விதவைக்கூட்டங்களமைப் பெற்று விநாசமடையப்போகிறது.

౩౧. నూనం రాక్షసకన్యానాం రుదంతీనాం గృహే గృహే । శ్రోష్యామి నచిరాదేవ దుఃఖార్తానామిహ ధ్వనిమ్॥

௩௧. 𑌨𑍂𑌨𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌕𑌨𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌗𑍃𑌹𑍇 𑌗𑍃𑌹𑍇।
𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨𑌚𑌿𑌰𑌾𑌦𑍇𑌵 𑌦𑍁𑌃𑌖𑌾𑌰𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌿𑌹 𑌧𑍍𑌵𑌨𑌿𑌮𑍍॥

௩௧. நூநம்ராக்ஷஸகந்யாநாம்ருதந்தீநாம்க்ருஹேக்ருஹே।
ஶ்ரோஷ்யாமிநசிராதேவதுஃக்கார்த்தாநாமிஹத்வநிம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| இஹ | இவ்விலங்கையில் | ராக்ஷஸகந்யாநாம் | இராக்ஷஸப்பெண்களுடைய |
| க்ருஹேக்ருஹே | வீடுகள்தோறும் | த்வநிம் | அழுகுரலை |
| ருதந்தீநாம் | அழுகிறவர்களும் | அசிராதேவ | துவரையிலேயே |
| துக்கார்த்தாநாம் | வியஸனத்தால் பீடிக்கப்பட்டவர்க[ளுமான | ஶ்ரோஷ்யாமி | கேழ்க்கப்போகிறேன். |

தா-ம்.—அடி ராக்ஷஸிகளே! கேளிகாதிமஹோத்ஸவங்களாற் குதூகலித்துக் கூத்தாடுகிற பிரதிகிரகத்திலும் சிறிதுநாளில் பிரமாதமான ரோதனத்துவனியை நான்கேட்கப்போகிறேன். வீடுகள்தோறும் புத்திரரிழந்தோர், பிதாவிழந்தோர், பர்த்தாக்களிழந்தோர், இப்படிபற்பல நஷ்டங்களால் ஸ்திரீகள் கதறிக்கூச்சலிட்டழுவதை நானேகேட்கப்போகிறேன்.

౩౨. సాంధకారాహతద్యోతాహతరాక్షసపుంగవా । భవిష్యతిపురీలంకానిర్దగ్ధారామసాయకైః॥

౩౩. యదినామసశూరోమాంరామోరక్తాంతలోచనః । జానీయాద్వర్తమానాంహిరావణస్యనివేశనే॥

௩௨. ஸாம்தகாராஹதத்யோதாஹதராக்ஷஸபும்கவா।
ஹவிஷ்யதிபுரீலம்காநிர்தக்தாராமஸாயகை:॥

௩௩. யதிநாமஸஶூரோமாம்ராமோரக்தாம்தலோசந:।
ஜாநீயாத்வர்த்தமாநாம்ஹிராவணஸ்யநிவேஶநே॥

௩௨. ஸாந்தகாராஹதத்யோதாஹதராக்ஷஸபுங்கவா।
பவிஷ்யதிபுரீலங்காநிர்த்தக்தாராமஸாயகை:॥

௩௩. யதிநாமஸஶூரோமாம்ராமோரக்தாந்தலோசந:।
ஜாநீயாத்வர்த்தமாநாம்ஹிராவணஸ்யநிவேஶநே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஶூரோநாம | சூரனென்று பிரஸித்தனான | நிர்த்தக்தா | மிக தஹிக்கப்பட்டதும் |
| ரக்தாந்தலோசந: | சிவந்த கடைக்கண்களையுடைய | ஹதத்யோதா | அழிக்கப்பட்ட ஒளியையுடையதும் (அதனால்) |
| ஸ:-ராம: | அந்த-ஸ்ரீராகவன் | | |
| மாம்-ராவணஸ்ய | என்னை-இராவணனுடைய | ஸாந்தகாரா | அந்தகாரத்தோடுகூடினதும் |
| நிவேஶநே-வர்த்தமாநாம்-இருப்பிடத்தில்-இருக்கிறவளாக | | ஹதராக்ஷஸபுங்கவா | நாசமடைந்த இராக்ஷதசிரேஷ்டரை யுடையதுமாக |
| ஜாநீயாத்யதி | அறிவாராகில் | | |
| லங்கா-புரீ | இலங்கையென்கிற பட்டணம் | பவிஷ்யதி | ஆகப்போகிறது. |
| ராமஸாயகை: | ராமபாணங்களால் | | |

தா-ம்.—செவ்வரிகளோடிய கடைக்கண்சோபையுடையவரும், சூரர்க்குள் அக்கிரகண்ணியரென்கிற பெருமைபூண்டவரும், அகிலபுவனத்தையும் உகக்கச்செய்கிற ஸச்சரித்திரகுணசீலருமான வென்னுடைய நாதன் யான் இராவணனந்தப்புரத்தி லிருப்பதை யறிந்தாராகில், உத்தரக்ஷணத்திலேயே அவ்வீரபுருஷனுடைய தீக்ஷ்ணசரங்கள் இந்நகரைத்தகிக்கவந்துவிடும். உண்மையாகவே அவ்விராமபாணங்கள் சத்துருநாட்டத்தைத் தடுத்துநிற்கிற ஸாகரவெல்லையைக்கடந்து, இராவணனுக்கிசையைமீறி, இந்நகர்முழுதும் நுழைந்து த்வம்ஸம் செய்யப்போகின்றன. காலபரிணாமமின்றிப் பிரகாசிக்கிற ஸோமார்க்கமண்டலங்களின் ஜ்யோதியாலும் இரத்தினகாஞ்சனப் பிரபாவிசேஷத்தாலும் இராப்பகலென்கிற வித்தியாஸமின்றி யெப்பொழுதும் அமரர்நகர்போல் பிரகாசவத்தாயிருக்கிற இப்புரி ஸகலவிபவங்களையுமிழந்து அந்தகாரத்தால் மூடப்பட்டு காராக்கிரகம்போலாகப்போகிறது. மகுடமேந்திய தசசிரங்களோடு திரைலோக்கியப்பிரபுத்வம் வகித்து இறுமாந்திருக்கிற இவ்விராக்ஷஸேந்திரனும் இராமபாணத்திற்கு வகைசொல்லமுடியாமல் தனதினிய உயிரைக் கொடுத்து நசிக்கப்போகிறான். இவ்விதம் இந்தராஜநகர் ஸ்வல்பகாலத்தில் பூமடந்தைநாட்டம்நீங்கி இருள் மயமாகப்போகிறது.

౩౪. అనేనతునృశంసేనరావణేనాధమేనమే । సమయోయస్తునిర్దిష్టస్తస్యకాలోయమాగతః॥

௩௪. அநேநதுந்ருஶம்ஸேநராவணேநாதமேநமே।
ஸமயோயஸ்துநிர்திஷ்டஸ்தஸ்யகாலோயமாகத:॥

௩௪. அநேநதுந்ருஶம்ஸேநராவணேநாதமேநமே।
ஸமயோயஸ்துநிர்த்திஷ்டஸ்தஸ்யகாலோயமாகத:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ந்ருஶம்ஸேந | க்ரூரனும் | நிர்த்திஷ்ட: | ஏற்படுத்தப்பட்டதோ |
| அதமேந | நீசனுமான | தஸ்ய | அந்த (ஸமயத்திற்கு) |
| அநேந-ராவணேந | இந்த-இராவணனால் | அயம்-கால: | இந்த-காலமானது |
| மே-ய: | எனக்கு-எந்த | ஆகத: | வந்துவிட்டது. |
| ஸமயஸ்து | பனிரண்டுமாஸகாலமானது | | (இன்னு மிரண்டுமாதந்தா னிருக்கிறதென் றர்த்தம்.) |

౩౫. అకార్యంయేనజానంతినైరృతాఃపాపకారిణః । అధర్మాత్తుమహోత్పాతోభవిష్యతిహిసాంప్రతమ్॥

௩௫. அகார்யம்யேநஜாநம்திநைர்ருதா:பாபகாரிண:।
அதர்மாத்துமஹோத்பாதோபவிஷ்யதிஹிஸாம்ப்ரதம்॥

௩௫. அகார்யம்யேநஜாநந்திநைர்ருதா:பாபகாரிண:।
அதர்மாத்துமஹோத்பாதோபவிஷ்யதிஹிஸாம்ப்ரதம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பாபகாரிண: | பாதகத்தைச்செய்பவர்களான | அதர்மாத் | அந்நியாயத்தால் |
| யே-நைர்ருதா: | எந்த-இராக்ஷதர்கள் | ஸாம்ப்ரதம் | இப்பொழுது |
| அகார்யம் | செய்யத்தகாதகாரியத்தை | மஹோத்பாத: | (எனக்கு) பெரிய ஆபத்தானது |
| நஜாநந்தி | அறியார்களோ [ய) | பவிஷ்யதிஹி | உண்டாகப்போகிறதன்றே. |
| தேஷாம் | அப்படிப்பட்ட (இராக்ஷதர்களுடை | | |

౩౬. నైతేధర్మంవిజానంతిరాక్షసాఃపిశితాశనాః । ధ్రువంమాంప్రాతరాశార్థేరాక్షసఃకల్పయిష్యతి॥

௩௬. நைதேதர்மம்விஜாநந்திராக்ஷஸாஃபிஶிதாஶநாஃ।
த்ருவம்மாம்ப்ராதராஶார்த்தேராக்ஷஸஃகல்பயிஷ்யதி॥

௩௬. நைதேதர்மம்விஜாநந்திராக்ஷஸாஃபிஶிதாஶநாஃ।
த்ருவம்மாம்ப்ராதராஶார்த்தேராக்ஷஸஃகல்பயிஷ்யதி॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| பிஶிதாஶநாஃ | மாம்ஸத்தையே ஆகாரமாயுடைய | ராக்ஷஸஃ | இராவணன் |
| ஏதே-ராக்ஷஸாஃ | இந்த-ராக்ஷதர்கள் | மாம்-ப்ராதராஶார்த்தே-என்னை-பிராதக்காலபோஜனத்தில் | |
| தர்மம் | நியாயத்தை | த்ருவம் | நிச்சயமாக |
| நவிஜாநந்தி | நன்றாயறியார்கள் | கல்பயிஷ்யதி | ஏற்படுத்தப்போகிறான் (செய்யப்போகிறான்.) |

౩౭. సాహంకథంకరిష్యామితంవినాప్రియదర్శనమ్ । రామంరక్తాంతనయనమపశ్యంతీసుదుఃఖితా॥

௩௭. ஸாஹங்கதங்கரிஷ்யாமிதம்விநாப்ரியதர்ஶநம்।
ராமம்ரக்தாந்தநயநமபஶ்யந்தீஸுது:கிதா॥

௩௭. ஸாஹங்கதம்கரிஷ்யாமிதம்விநாப்ரியதர்ஶநம்।
ராமம்ரக்தாந்தநயநமபஶ்யந்தீஸுதுஃக்கிதா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸா-அஹம் | அப்படிப்பட்ட-நான் | ப்ரியதர்ஶநம் | இஷ்டமான பார்வையுடைய |
| ரக்தாந்தநயநம் | சிவந்தகடைக்கண்களுடைய | தம்விநா | அந்த ஸ்ரீராகவனைவிட்டு |
| ராமம்-அபஶ்யந்தீ | ஸ்ரீராகவனை-பாராதவளாக | கிம்வா | எதைத்தான் |
| ஸுதுஃக்கிதா | வெகுதுக்கமுடையவளாய்க்கொண்டு | கதம்-கரிஷ்யாமி | எப்படி-செய்வேன். |

౩౮. యదికశ్చిత్ప్రదాతామేవిషస్యాద్యభవేదిహ । క్షిప్రంవైవస్వతందేవంపశ్యేయంపతినావినా॥

௩௮. யதிகஶ்சித்ப்ரதாதாமேவிஷஸ்யாத்யபவேதிஹ।
க்ஷிப்ரம்வைவஸ்வதந்தேவம்பஶ்யேயம்பதிநாவிநா॥

௩௮. யதிகஶ்சித்ப்ரதாதாமேவிஷஸ்யாத்யபவேதிஹ।
க்ஷிப்ரம்வைவஸ்வதம்தேவம்பஶ்யேயம்பதிநாவிநா॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அத்ய-கஶ்சித் | இப்பொழுது-எவனாவது | வைவஸ்வதம் | ஸூரியபுத்திரனை |
| மே-விஷஸ்ய | எனக்கு-விஷத்தை | தேவம் | தேவனை (யமனை) |
| ப்ரதாதா | கொடுப்பவன் | பதிநாவிநா | பர்த்தாவில்லாமலே |
| இஹ-பவேத்யதி | இவ்விலங்கையில்-இருந்தானாகில் (உண்டானானாகில்) | க்ஷிப்ரம் | சீக்கிரமாக |
| | | பஶ்யேயம் | பார்ப்பேன். |

(௩௪-மு-௩௮-ல்.) தா-ம்—தயாதாக்ஷிண்ணிய குணங்களற்ற குரூரனும் அதர்மத்திலூற்றங்கொண்ட மூர்க்கனுமான இவ்விராவணன் யானவனுக்கபிமதையாவதற் கொருவருஷம் வரையறையிட்டனன். அக்காலமு மனேகமாய் சென்றுவிட்டது. மீதியுள்ளவிரண்டுமாதமும் கழிந்தவுடன்யானவன்சயனத்தை மேவாததுகண்டு என்னைஹிம்ஸிக்க ஆக்கியாபிக்கப்போகிறான். (யதாராஜாததாப்ரஜாஃ) எப்படிராஜாவோ அப்படியே பிரஜைகளும் என்கிறபடி அந்நியாயராஜா அரசுபுரிகையில் அவனைவிட அவன்பிரஜைகள் நீதிவிசாரணை செய்வார்களோ! ஸ்வபாவத்திலேயே தீவினையைத்தொழிலாகக்கொண்டவரக்கர். தர்மாதர்மவிவேகமற்ற நிர்மூடர். அநாரியகிருத்தியங்களைச்செய்வதில் மிகத்துணிவுகொண்டகிராதகர். நீசனும்தாருணனுமான தலைவனுலேவப்படின் அவர்களுடைய குரூரத்திற்கெல்லையுமுண்டோ. இப்படிப்பட்ட கோரபிருத்தியராலெனக்கு மஹோத்பாதமுண்டாகப்போகிறது. அவர்கள்தர்மமறியார், தயையறியார், பெண்ணென்கிறஇரக்கமில்லார், மாம்ஸபக்ஷணத்தாலதி பயங்கரமாகவிளங்குகிற உக்கிரராக்ஷதர். அவர்களெனதுதேகத்தைப் பிராதக்கால உணவிற்காகச்சேதிக்கப்போகிறார்கள். ஐயோ இந்தவிதிக்கு யானென்செய்வேன். ஐயோ நாதனைப்பிரிந்து அநாதையானேன். ஆபத்பாந்தவனைப்பிரிந்து ஆபத்திற்கிரையானேன். என்னுடையபிரியநாதனின்றியானென்செய்யப்போகிறேன். அந்த அரவிந்தலோசனனைக்காணாது தவிக்கிறேன். அந்தஸர்வலோகமனோஹரனைச் சேராதுதவளுகிறேன். அப்புருஷோத்தமனை யடைந்தாலல்லது இவ்வாபத்தினின்று நீங்கவகையில்லை. இந்தநிலைமையிலிருக்கிறவெனக்குயாராவது படுவிஷத்தை யிங்கீவாராகில் ஸ்ரீராகவனைச்சேராமலே சீக்கிரத்தில் தர்மராஜபுரத்தை யடைந்துவிடுவேன். இதுதான் பதியைக்காணாதபக்ஷத்தில், அரக்கன்செய்யப்போகிற கொடுமையினின்று தப்புவதற்குபாயம். என்றிவ்வாறு ஜானகிதுக்கித்தனள்.

౩౯. నాజానాజ్జీవతీంరామస్సమాంలక్ష్మణపూర్వజః । జానంతౌతౌనకుర్యాతాంనోర్వ్యాంహిమమమార్గణమ్॥

౪౦. నూనంమమైవశోకేనసవీరోలక్ష్మణాగ్రజః । దేవలోకమితోయాతస్త్యక్త్వాదేహంమహీతలే॥

౪౧. ధన్యాదేవాస్సగంధర్వాస్సిద్ధాశ్చపరమర్షయః । మమపశ్యంతియేనాథంరామంరాజీవలోచనమ్॥

౪౨. అథవానహితస్యార్థోధర్మకామస్యధీమతః । మయారామస్యరాజర్షేర్భార్యయాపరమాత్మనః॥

౪౩. దృశ్యమానేభవేత్ప్రీతిస్సౌహృదంనాస్త్యపశ్యతః । నాశయంతికృతఘ్నాస్తునరామోనాశయిష్యతి॥

౪౪. కిన్నుమేనగుణాఃకేచిత్కింవాభాగ్యక్షయోమమ । యాహంసీదామిరామేణహీనాముఖ్యేనభామినీ॥

௧௯. [illegible]
[illegible]

௨௦. [illegible]
[illegible]

௨௧. [illegible]
[illegible]

௨௨. [illegible]
[illegible]

௨௩. [illegible]
[illegible]

௨௪. [illegible]
[illegible]

௧௯. நாஜாநாஜ்ஜீவதீம்ராமஸ்ஸமாம்லக்ஷ்மணபூர்வஜஃ।
ஜாநந்தௌதௌநகுர்யாதாம்நோர்வ்யாம்ஹிமமமார்கணம்॥

௨௦. நூநம்மமைவஶோகேநஸவீரோலக்ஷ்மணாக்ரஜஃ।
தேவலோகமிதோயாதஸ்த்யக்த்வாதேஹம்மஹீதலே॥

௨௧. தந்யாதேவாஸ்ஸகந்தர்வாஸ்ஸித்தாஶ்சபரமர்ஷயஃ।
மமபஶ்யந்தியேநாதம்ராமம்ராஜீவலோசநம்॥

௨௨. அதவாநஹிதஸ்யார்த்தோதர்மகாமஸ்யதீமதஃ।
மயாராமஸ்யராஜர்ஷேர்பார்யயாபரமாத்மநஃ॥

௨௩. த்ருஶ்யமாநேபவேத்ப்ரீதிஸ்ஸௌஹ்ருதம்நாஸ்த்யபஶ்யதஃ।
நாஶயந்திக்ருதக்நாஸ்துநராமோநாஶயிஷ்யதி॥

௨௪. கிந்நுமேநகுணாஃகேசித்கிம்வாபாக்யக்ஷயோமம।
யாஹம்ஸீதாமிராமேணஹீநாமுக்யேநபாமிநீ॥

| பதம். | உரை. |
|---|---|
| லக்ஷ்மணபூர்வஜஃ | இலக்ஷ்மணருக்கு மூத்தவரான |
| ஸஃ-ராமஃ-மாம் | அந்த-ஸ்ரீராகவன்-என்னை |
| ஜீவதீம் | பிழைத்திருக்கிறவளாக |
| நாஜாநாத் | அறியார் |
| தௌ-ஜாநந்தௌயதி | அவர்கள்-அறிந்திருந்தார்களாகில் |
| உர்வ்யாம் | பூமியில் |
| மம-மார்க்கணம் | என்னுடைய-(என்னை) தேடுகிறதை |
| நகுர்யாதாமிதிநஹி | செய்யாரென்பதில்லையன்றோ |
| லக்ஷ்மணாக்ரஜஃ | இலக்ஷ்மணருக்குமுன்பிறந்தவரான |
| ஸஃ-வீரஃ | அந்த-வீரனை (ராமன்) |
| மம-ஶோகேநைவ | என்னுடைய-சோகத்தாலேயே |
| மஹீதலே | பூப்பிரதேசத்தில் |
| தேஹம்-த்யக்த்வா | சரீரத்தைவிட்டு |
| இதம் | இந்த (பூமியிலிருந்து) |
| தேவலோகம் | ஸ்வர்க்கலோகத்திற்கு |
| யாதஃ | போய்விட்டார் |
| நூநம் | நிச்சயம் |
| யே-தேவாஃ | எந்த-தேவர்களும் |
| ஸகந்தர்வாஃ | கந்தருவர்களோடுகூடின |
| ஸித்தாஶ்ச | ஸித்தரென்பவர்களும் |
| பரமர்ஷயஃ | சிறந்தமஹரிஷிகளும் |
| ராஜீவலோசநம் | தாமரைபுஷ்பம்போன்ற கண்களையு[டையவனும் |
| மம-நாதம் | எனக்கு-பிரபுவுமான |
| ராமம் | ஸ்ரீராகவனை |
| பஶ்யந்தி | பார்க்கிறார்களோ |
| (தே)-தந்யாஃ | (அவர்கள்) பாக்கியமுடையவர்கள் |
| அதவா | இல்லாவிடில் |
| தீமதஃ | சிறந்தபுத்தியுடையவரும் (அதனால்) |

| பதம். | உரை. |
|---|---|
| தர்மகாமஸ்ய | தர்மத்திலூற்றமுடையவரும் |
| ராஜர்ஷேஃ | ராஜசிரேஷ்டரும் |
| பரமாத்மநஃ | உத்கிருஷ்டஸ்வபாவமுமுடைய |
| தஸ்ய-பார்யா | அவருக்கு-பத்தினியான |
| மயா-அர்த்தஃ | என்னோடு-பிரயோஜனம் |
| நஹி | இல்லை (என்றிருந்துவிட்டாரோ) |
| த்ருஶ்யமாநே | பார்த்துக்கொண்டிருக்கிற வஸ்துவிடத்தில் |
| ஸௌஹ்ருதம் (யதாபவதிததா)-ஸ்நேஹமுண்டாயிருக்கும்ப[டி |  |
| ப்ரீதிஃ | அன்பானது |
| பவேத் | உண்டாகிறது |
| அபஶ்யதஃ | பாராமலிருக்கும்போது |
| நாஸ்தி | கிடையாது |
| க்ருதக்நாஃ | செய்தநன்றியை யுணராதவர் |
| நாஶயந்தி | (அன்பை) அழிக்கிறார்கள் |
| ராமஸ்து | ஸ்ரீராகவனோவென்றால் |
| நநாஶயிஷ்யதி | அழிக்கமாட்டார் |
| யா-அஹம் | எந்த-நான் |
| முக்யேந | பிரதானரான |
| ராமேண | ஸ்ரீராகவனாலே |
| ஹீநா | விடப்பட்ட |
| பாமிநீ | ஸ்திரீயாக |
| ஸீதாமி | துக்கிக்கிறேனோ |
| (தஸ்யாஃ)-மம | (அப்படிப்பட்ட)-எனக்கு |
| பாக்யக்ஷயோவா | பாக்கியக்குறைவானது |
| கிம்வா | (உண்டாயிற்று) என்ன |
| மே-கேசித்-குணாஃ | எனக்கு-சில-குணங்கள் |
| ந (ஸந்திகிந்நு) | இல்லையாயென்ன. |

(௩௧-மு-௬௪-ல்.) தா-ம்—யானேஇராவணனுலபகரிக்கப்பட்டுவந்து பத்துமாதகாலமாயிற்று. என்னுடையபிரியநாதனை ஸ்ரீராகவன் இலக்ஷ்மணனுற் பின்றொடரப்பட்டு இதுவரையிலேன்வந்தென்னையடையவில்லை. இவ்வளவுகாலம் நான் பிழைத்திருக்கிறேனென் றவரறியாமலிருக்கலாம். அறிந்திருந்தாராயின் என்னைத்தேடுவதற்காக மஹாப்பிரயத்தனங்களை இலக்ஷ்மணரோடு செய்திருப்பரன்றோ. ஒருவேளை மஹாதீரனுயினும் பத்தினிவிரகம்ஸகியாது தேகத்தைவிட்டு வானுலகுசேர்ந்து அங்குள்ள தேவகந்தர்வஸித்தப்பிரம்மரிஷிகளனைவரும் தன்னுடைய திவ்வியமங்களவிக்கிரகஸ்வரூபதர்சனத்தால் கிருதார்த்தராகும்படிவீற்றிருக்கின்றனரோ. தர்சனமின்றி யானிங்கவதிப்படுகையில் தேவலோகவாஸிகள் ஸ்ரீராகவனைஸேவித்துக்கொண்டு நித்தியானந்தபரிதராய் ஸுகிக்கின்றனரோ. அல்லது ஸகலசாஸ்திரங்களுமுணர்ந்த புத்திமானும்தர்மமொன்றையே புருஷார்த்தமாகக்கொண்டகுணக்கியனும், ஆத்மக்கியானமுள்ள வைராக்கியனுமாகையால்,தனக்கு ஸ்திரீயாலென்னபயன், அக்கியானமயல்கொண்ட பதிதனன்றே ஸம்ஸாரபங்கத்திற்கிடந்துபுரளுவது, தத்வார்த்தமறிந்ததார்மிகர் ஸ்திரீசாபல்லியவலையிற் சிக்கார், பூர்வகர்மவசத்தால் என்னைச்சேர்ந்தஸீதை இப்பொழுது புண்ணியவசத்தால்விலகினுள், இனியவளைத்தேடுவானேன், மறுபடி கஷ்டத்தில் நுழைவானேனென்று விரக்திகொண்டென்னைத் தியஜித்தனரோ, ஐயோ என்னகஷ்டமோ அறிகிலேன். அல்லது அப்படி தியஜிக்காவிடினும் என்மீதார்வங்குறைந்து மறந்திருக்கலாம். சிலர்க்குபிரத்தியக்ஷத்திலுள்ளவளவில் நேசிக்கிறதும் பரோக்ஷத்தையடைந்தவளவில்மறந்துவிடுதலும் ஸ்வபாவம். அவ்வண்ணம்பிரியபாரியையானவென்னைப்பிரிந்தவுடன் என்விஷயத்தில்விஸ்மிருதியடைந்துவிட்டனரோ. ஆனல் ஸ்ரீராகவன்செய்நன்றிமறக்கிறகிருதக்கினரல்லவே,ஸுவப்னத்தில் செய்யக்கண்ட உபகாரத்தையும் ஜீவனுள்ளவளவில்ஸ்மரித்து பூஷிக்கிறபரமதயாளுவாயிற்றே,சரணகதிப்பண்ணிகைங்கரியார்த்தம் அரண்ணியம்வந்த பக்தையைக் கைகழுவவிடுவரோ, அப்படியொருபொழுதும்செய்யார். ஆனல் உயிரினும் பிரதானமான பர்த்தாவைப்பிரிந் திவ்வளவுகாலம் வருந்துகின்றேனே, மானத்தைக்காப்பா ரொருவருமில்லாது பரிதபிக்கின்றேனே, புலிகையிற்சிக்கிய விளமான்போல் இராக்ஷஸவசத்திலழிகின்றேனே, இந்த துர்த்தசைக்கு ஸ்ரீராகவபராங்முகங் காரணமல்லாவிடில், மத்பாக்கிய சூன்னியமே காரணமோ! தெரிகிலேன்.

౪౫. శ్రేయో మే జీవితాన్మర్తుం విహీనాయా మహాత్మనః। రామాదక్లిష్టచారిత్రాచ్ఛూరాచ్ఛత్రునిబర్హణాత్॥

௪௫. ஶ்ரேயோமேஜீவிதாந்மர்த்தும்விஹீநாயாமஹாத்மநः।
ராமாதக்லிஷ்டசாரித்ராச்சூராச்சத்ருநிபர்ஹணாத்॥

௪௫. ஶ்ரேயோமேஜீவிதாந்மர்த்தும்விஹீநாயாமஹாத்மநः।
ராமாதக்லிஷ்டசாரித்ராச்சூராச்சத்ருநிபர்ஹணாத்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மஹாத்மநः | பெரியஸ்வபாவமுடையவனும் | ராமாத் | ஸ்ரீராமனுடு |
| அக்லிஷ்டசாரித்ராத் | நல்நடத்தையுடையவனும் | விஹீநாயாः | சூன்னியையான |
| ஶூராத் | சௌரியமுடையவனும் | மே-ஜீவிதாத் | என்னுடைய-பிழைப்பைக்காட்டிலு |
| ஶத்ருநிபர்ஹணாத் | சத்துருநாசகனுமான | மர்த்தும்-ஶ்ரேயः | இறப்பது-மேன்மை. [ம் |

தா-ம்—அந்தஸஜ்ஜனஹிருதய குமுதசந்திரனை ஸ்ரீராமசந்திரனின்றி எனதுவாழ் என்னவாழ்வு. பிரம்மக்கியானத்தால் முதிர்ந்தமஹாத்மா, ஸச்சரித்திர குணஸம்பன்னன், சௌரியதைரியகுணுதிகளிற்சிறந்த சூரன், ஸர்வசத்துருஹந்தாவான ஆண்மகன், ஸர்வலோகமனேகரன், இப்படிப்பட்ட புருஷோத்தமனைப் பர்த்தாவாகவடைவது ஸாமான்னியபாக்கியமோ. பாபியானயானவனைப்பிரிந்துவிட்டேனே. அவனைப்பிரிந்த பிறகு ஜீவிப்பதினும் யான்மரிப்பதேமேன்மை.

౪౬. అథవాన్యస్తశస్త్రౌ తౌ వనే మూలఫలాశినౌ। భ్రాతరౌ హి నరశ్రేష్ఠౌ సంవృత్తౌ వనగోచరౌ॥

௪௬. அதவாந்யஸ்தஶஸ்த்ரௌ தௌ வநே மூலபலாஶிநௌ।
ப்ராதரௌ ஹி நரஶ்ரேஷ்டௌ ஸம்வ்ருத்தௌ வநகோசரௌ॥

௪௬. அதவாங்யஸ்தஶஸ்த்ரௌதௌவநேமூலபலாஶிநௌ।
ப்ராதரௌஹிநரஶ்ரேஷ்டௌஸம்வ்ருத்தௌவநகோசரௌ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அதவா | இல்லாவிட்டால் | வநே-மூலபலாஶிநௌ-காட்டில்-கிழங்கு பழமிவைகளை பக்ஷிப்பவர்களும் [மாக | |
| நரஶ்ரேஷ்டௌ | புருஷோத்தமாளும் | ந்யஸ்தஶஸ்த்ரௌ | விடப்பட்ட ஆயுதமுடையவர்களு |
| ப்ராதரௌ | பிராதாக்களுமான | ஸம்வ்ருத்தௌஹி | ஆய்விட்டார்களா (யென்ன.) |
| தௌ | அந்த (இராமலக்ஷ்மணுள்) | | |
| வநகோசரௌ | அரண்ணியஸஞ்சாரிகளும் | | |

தா-ம்—புருஷசிரோஷ்டரான இராமலக்ஷ்மணரிருவரும் பின்றொடர்ந்தஸ்திரீஜாதியைரக்ஷிக்கவேண்டுமென்கிற கிருபையாலல்லாவிடினும் தங்கள் ஸ்வாதீனத்திலிருந்தஸ்திரீயை யபகரித்தசோரனைத் தண்டிக்கவேண்டுமென்கிற க்ஷத்திரியபௌருஷத்தாலாவது இராவணனைத்தேடிவரக் காணேனுகையால் அந்தரவியாக்கிரரிருவரும் வெறுப்புற்றுக் கோதண்டதூணகட்காதி வீரவேஷங்களையெறிந்துவானப்பிரஸ்தா சிரமங்கொண்டு கந்தமூலாசனராய் வனஸஞ்சாரிகளாய் விட்டனரோ, என்பாக்கியவிசேஷ மெப்படியிருக்கிறதோ, காணவில்லையே இராகவனையென்று துக்கித்தனள்.

౪౭. అథవా రాక్షసేంద్రేణ రావణేన దురాత్మనా। ఛద్మనా సాదితౌ శూరౌ భ్రాతరౌ రామలక్ష్మణౌ॥

௪௭. அதவா ராக்ஷஸேந்த்ரேண ராவணேந துராத்மநா।
சத்மநா ஸாதிதௌ ஶூரௌ ப்ராதரௌ ராமலக்ஷ்மணௌ॥

சஎ. அதவாராக்ஷஸேந்த்ரேணராவணேநதுராத்மநா।
சத்மநாஸாதிதௌஸூரௌப்ராதரௌராமலக்ஷ்மணௌ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அதவா | இல்லாவிட்டால் [தரர்களுமான | ராக்ஷஸேந்த்ரேண | இராக்ஷதப்பிரபுவுமான |
| ஸூரௌ-ப்ராதரௌ- | பராக்கிரமமுடையவர்களும்-ஸஹோ | ராவணேந | இராவணனால் |
| ராமலக்ஷ்மணௌ | இராமலக்ஷ்மணர் | சத்மநா | கபடத்தால் |
| துராத்மநா | துஷ்டபுத்தியுடையவனும் | ஸாதிதௌ | ஸம்ஹரிக்கப்பட்டார்களோ. |

தா-ம்—அவ்வாரியபுத்திரர் மஹாவீரராகையால் ஆசிருதையான வென்னைக்கைசோர்ந்தவுடன் மனஞ்சோர்வடையாதுதிரும்பியடைய புருஷப்பிரயத்தனமவசியஞ்செய்வார்களே. திரிலோகத்திலுமவர்களையெதிர்த்துவெல்லவல்லவீரனில்லையாகையால்தங்களைவஞ்சித்தசோரனைச்சிக்ஷிக்கமுயலுவார்களே. ஆனாலவர்கள் ஜீவனோடிருந்தாலன்றோ இக்காரியம் செய்வார்கள். ஒருவேளை தீமானான ஸ்ரீராகவனுடைய புத்தியையும் மயங்கச்செய்து என்னை யபகரித்துவந்த இக்கபடராக்ஷஸன் வஞ்சனையா லவர்களையுங்கொன்றானோ. த்வந்த்வயுத்தத்தில் தனது நாசம் நிச்சயமாதலால் தனதுசத்துருக்களான அப்பிரபலவீரரை மாயையால்முடித்துவிட்டானோ. இல்லாவிடி லிதற்குள்மூன்றுலோகமுந்தேடி சத்துருவையறிந்து தஹித்திருப்பார்களே. என்பாக்கியவிசேஷ மெப்படியிருக்கிறதோஅறிகிலேன்.

౪౮. సాహమేవంగతే కాలే మర్తుమిచ్ఛామి సర్వథా। న చ మే విహితో మృత్యురస్మిన్ దుఃఖేపి వర్తతి॥

சஅ. [illegible]

சஅ. ஸாஹமேவம்கதேகாலேமர்த்துமிச்சாமிஸர்வதா।
நசமேவிஹிதோம்ருத்யுரஸ்மிந்துக்கேபிவர்த்ததி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸா-அஹம் | அப்படிப்பட்ட-நான் | இச்சாமி | கோருகிறேன் |
| ஏவம்-காலே | இந்தவிதம்-காலமானது | அஸ்மிந்-துக்கேபி | இந்த-துக்கத்திலும் |
| கதே (ஸதி) | முடிந்தவளவில் | ம்ருத்யுஃ-மே | மரணமானது-எனக்கு |
| ஸர்வதா | ஸர்வபிரகாரத்தாலும் | விஹிதஃ-நசவர்த்ததி | யோக்கியமாக-உண்டாகவில்லை. |
| மர்த்தும் | சாவதற்கு | | (வர்த்ததி-என்கிறது ஆர்ஷம்) |

தா-ம்—ஸ்ரீரகுவீரனு மிலக்ஷ்மணனு மிராவணமாயாவலையிற்சிக்கி மரித்திருந்தாராயின் யான்ஜீவிப்பதிலென்னபயன். பர்த்தாவையிழப்பதினும்மேலானதுக்கம் ஸ்திரீகளுக்குண்டோ. இந்ததுக்கமானது காலாக்கினிபோலென்னைத்தகித்தும் எனதுதேகமொழியவில்லை. யான்ஸர்வப்பிரகாரத்தாலும் மரணத்தைக் கோருகிறேன். ஐயோ இந்தகடுந்துக்கத்திலுழன்று அவதிப்படுகிறேனல்லது சாகவில்லையே. மரணமென்பதெனக்கேற்படவில்லையோ.

౪౯. ధన్యాః ఖలు మహాత్మానో మునయస్త్యక్తకిల్బిషాః। జితాత్మానో మహాభాగా యేషాం న స్తః ప్రియాప్రియే॥

சகூ. [illegible]

சகூ. தந்யாஃகலுமஹாத்மாநோமுநயஸ்த்யக்தகில்பிஷாஃ।
ஜிதாத்மாநோமஹாபாகாயேஷாம்நஸ்தஃப்ரியாப்ரியே॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| யேஷாம்-ப்ரியாப்ரியே | எவர்களுக்கு-இஷ்டானிஷ்டத்தில் | ஜிதாத்மாநஃ | ஜயிக்கப்பட்ட அந்தக்கரண முடைய |
| நஸ்தஃ | (ஆசை) இல்லையோ [ம் | | வரும் |
| தே-மஹாத்மாநஃ | அப்படிப்பட்ட-வெகுதைரியவந்தரு | மஹாபாகாஃ | மிகபாக்கியமுமுடைய |
| த்யக்தகில்பிஷாஃ | விடப்பட்ட பாபமுடையவரும் | முநயஃ-தந்யாஃகலு | மகரிஷிகள்-புண்ணியவந்தரன்றோ. |

தா-ம்—ஸுகதுக்கமென்கிற பரிணாமத்திற்குட்பட்டு சிறிதுகாலமின்பமும் சிறிதுகாலந்துன்பமுமனுபவித்து கஷ்டப்படுகிற மத்விதாளுடையஜன்ம மென்னஜன்மம்! எவர்களுக் கிஷ்டாநிஷ்ட காலமென்கிற பரிணாமமில்லையோ, எவர்கள் ஸர்வபாபங்களுக்குமதீதராய் சுத்தஸத்வாதிகுணாதிசயத்தோடு தேஜோவந்தராய் விளங்குகின்றனரோ; எவர்கள் பஞ்சேந்திரியங்களைஜயித்துப் பிராகிருதவஸ்துக்களிலாசையற்றுத் தங்களது பிரம்மக்கியானபலத்தால் அப்பிராகிருத தேஜோமயமான பரமாத்மாவைத் தியானஞ்செய்து பேரானந்தமடைந்து ஸுகிக்கின்றனரோ, அப்பேர்ப்பட்ட மாஹாத்மாக்களான மஹரிஷிகளே தன்னியர், அவர்களேகிருதார்த்தர், அவர்களேபாக்கியசாலிகள். மற்றஸம்ஸாரிகளுடையஸுகத்தை ஸுகமென்னவு மொண்ணுமோ.

౫౦. ప్రియాన్న సంభవేద్దుఃఖమప్రియాదధికం భయమ్। తాభ్యాం హి యే వియుజ్యంతే నమస్తేషాం మహాత్మనామ్॥

ரு0. [illegible]

ருo. ப்ரியாந்நஸம்பவேத்துக்கம்அப்ரியாததிகம்பயம்।
தாப்யாம்ஹியேவியுஜ்யந்தேநமஸ்தேஷாம்மஹாத்மநாம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ப்ரியாத் | இஷ்டத்தால் | ஸம்பவேத் | உண்டாகும் (ஸுகமுண்டாகாதென்ற |
| துக்கம்-நஸம்பவேத் | வியஸநம் - உண்டாகாது (ஸுகமே உண்டாகுமென்றர்த்தம்) | தாப்யாம் | அந்த இஷ்டாநிஷ்டங்களால் [ர்த்தம்) |
| | | யே-வியுஜ்யந்தே | எவர் விடுபட்டிருக்கிறார்களோ |
| அப்ரியாத் | அநிஷ்டத்தால் | தேஷாம் | அப்படிப்பட்ட |
| அதிகம்-பயம் | வெகுவான-பயமானது | மஹாத்மநாம்-நம: | மஹாத்மாக்களுக்கு-தண்டனிடுகிறேன். |

தா-ம்—ஸுகம்ஸம்பவிக்கையில் ஸந்தோஷமுறுகிறதும் அஸுகம்ஸம்பவிக்கையில் துக்கமுறுகிறதும் உலகவியல்பு. ஸுகதுக்ககாலங்களில் இவ்விதம் மனோவிகாரமடையாது எப்பொழுதும் ஒத்திருக்குமுள்ளத்தராய், பரமாத்மத்தியானத்தால் திவ்வியானந்தங்கொண்டுவாழ்கிற யோகீசுவரரானமஹான்களே தன்னியர். அப்படிப்பட்ட மஹாபுருஷரை யான்நமஸ்கரிக்கிறேன்.

౫౦. సాహంత్యక్తా ప్రియార్హేణ రామేణ విదితాత్మనా। ప్రాణాంస్త్యక్ష్యామి పాపస్య రావణస్య గతా వశమ్॥

ருக. ஸாஹந்த்யக்தா ப்ரியார்ஹேண ராமேண விதிதாத்மநா।
ப்ராணாம்ஸ்த்யக்ஷ்யாமி பாபஸ்ய ராவணஸ்ய கதா வஶம்॥

ருக. ஸாஹம்த்யக்தாப்ரியார்ஹேணராமேணவிதிதாத்மநா।
ப்ராணும்ஸ்த்யக்ஷ்யாமிபாபஸ்யராவணஸ்யகதாவஶம்॥

இதி ஶ்ரீஸுந்தரகாண்டே - ஷட்விம்ஶஸ்ஸர்க:.

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸா-அஹம் | அப்படிப்பட்ட (எனது) அன்பிற்குப் பாத்திரபூதரும்-துக்காவிருதையா | த்யக்தா | விடப்பட்டவளாக |
| | | பாபஸ்ய-ராவணஸ்ய | பாபியான-இராவணனுடைய |
| ப்ரியார்ஹேண | அன்போடுபூஜிப்பவரும் [ன நான் | வஶம் | ஸுவாதீனத்தை |
| விதிதாத்மநா | ஆத்மஜ்ஞானமுணர்ந்தவருமான | கதா | அடைந்தவளாக |
| ராமேண | ஸ்ரீராகவனால் | ப்ராணுந்-த்யக்ஷ்யாமி | உயிரை-விடுகிறேன். |

தா-ம்—ஸுகதுக்ககாலங்களில் ஏகமனதுடனிருக்கிற துறவிகளின்குணமகிமையைக் கொண்டாடுகிறயான் இஷ்டானிஷ்டங்களுக்கிலக்காய் மஹாக்கியாதாவும் எனதுபிரியத்திற்கருகருமான ஸ்ரீராகவனுடைய விரகத்தால்தபிக்கப்பட்டு, கடும்பாபியான இராவணனுடையஹிம்ஸையாற்கொளுத்தப்படுகிறேன். இத்துயரின்கொடுமைதாங்கமுடியாது பிராணனையொழிக்கிறேன் என்று துக்கித்தாள்.

ஸ்ரீஸந்மநோரஞ்ஜநீ நாமத்திராவிட வியாக்க்யாந ஸஹிதமான ஸுந்தரகாண்டத்தில்

இருபத்தாறுவதுஸர்க்கம் - முற்றிற்று.

## இருபத்தேழாவதுஸர்க்கம்.

౧. ఇత్యుక్తాస్సీతయా ఘోరా రాక్షస్యః క్రోధమూర్ఛితాః। కాశ్చిజ్జగ్ముస్తదాఖ్యాతుం రావణస్య తరస్వినః॥

க. இத்யுக்தாஸ்ஸீதயா கோரா ராக்ஷஸ்ய: க்ரோதமூர்ச்சிதா:।
காஶ்சிஜ்ஜக்முஸ்ததாக்யாதும் ராவணஸ்ய தரஸ்விந:॥

க. இத்யுக்தாஸ்ஸீதயாகோராராக்ஷஸ்ய:க்ரோதமூர்ச்சிதா:।
காஶ்சிஜ்ஜக்முஸ்ததாக்யாதும்ராவணஸ்யதரஸ்விந:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ஸீதயா | ஸீதையினால் | ததா | அப்பொழுது |
| இதி-உக்தா: | இந்தவிதம்-சொல்லப்பட்டவர்களும் | தரஸ்விந: | சூரனாகிய |
| கோரா: | குரூரைகளுமான | ராவணஸ்ய | இராவணனுக்கு |
| காஶ்சித்-ராக்ஷஸ்ய: | சில-இராக்ஷஸிகள் | ஆக்யாதும் | (இந்தஸமாசாரம்) சொல்வதற்கு |
| க்ரோதமூர்ச்சிதா: | கோபபரவசைகளாய் | ஜக்மு: | சென்றார்கள். |

தா-ம்.—இவ்விதமக்கமலலோசனனான ஸ்ரீராகவனைநினைத்துப்புலம்பி, அச்சரண்ணியன்பக்கல் சேருவதற்கு ஹேதுவைக்காணமையாலினி ஜீவதாரணஞ்செய்கிறதில்லை, இராக்ஷஸ நீசனான இராவணனை இடதுகாலாலும் ஸ்பரிசிக்கிறதில்லை, என்றிவ்வாறுசொல்லிக்கொண்டு, தேகத்தையொழிக்க வழிதேடிநிற்கிற பிராட்டியின் திடவாக்கியங்களைக்கேட்டு சிலராக்ஷஸிகள் குரோதமூர்ச்சிதைகளாய் இந்தஸங்கதிகளைத்தங்கள் மஹாராஜாவுக் குரைக்கவேண்டுமென்று இராவணனிடத்திற்கோடினார்கள்.

౨. తతస్సీతాముపాగమ్యరాక్షస్యోఘోరదర్శనాః । పునఃపరుషమేకార్థమనర్థార్థమథాబ్రువన్॥

౩. అద్యేదానీంతవానార్యేసీతేపాపవినిశ్చయే । రాక్షస్యోభక్షయిష్యంతిమాంసమేతద్యథాసుఖమ్॥

௨. 𑌤𑌤𑌸𑍍𑌸𑍀𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑍍𑌯𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌘𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌃।
𑌪𑍁𑌨𑌃𑌪𑌰𑍁𑌷𑌮𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌮𑌨𑌰𑍍𑌥𑌾𑌰𑍍𑌥𑌮𑌥𑌾𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍॥

௩. 𑌅𑌦𑍍𑌯𑍇𑌦𑌾𑌨𑍀𑌂𑌤𑌵𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑍇𑌸𑍀𑌤𑍇𑌪𑌾𑌪𑌵𑌿𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑍋𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑌮𑍇𑌤𑌦𑍍𑌯𑌥𑌾𑌸𑍁𑌖𑌮𑍍॥

௨. ததஸ்ஸீதாமுபாகம்யராக்ஷஸ்யோகோரதர்ஶநா:।
புந:பருஷமேகார்த்தமநர்த்தார்த்தமதாப்ருவந்॥

௩. அத்யேதாநீம்தவாநார்யேஸீதேபாபவிநிஶ்சயே।
ராக்ஷஸ்யோபக்ஷயிஷ்யந்திமாம்ஸமேதத்யதாஸுகம்॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத:-கோரதர்ஶநா: | பிறகு-பயங்கரமானபார்வையுடைய | ராக்ஷஸ்ய: | இராக்ஷஸஸ்திரீகள் |
| ராக்ஷஸ்ய: | (சில) இராக்ஷஸஸ்திரீகள் | யதாஸுகம் | ஸுகத்தையதிக்கிரமியாமல் |
| ஸீதாம்-உபாகம்ய | ஸீதையைப்பற்றி-ஸமீபத்தில்வந்து | இதாநீம்-பக்ஷயிஷ்யந்தி-இப்பொழுது - தின்னப்போகிறார்கள் | |
| அத-ஸீதே-பாபவிநிஶ்சயே-பின்பு- ஓஸீதே - பாபத்திலுறுதியு[டையவளே] | | ஏகார்த்தம் | ஒரேஅர்த்தமுடையதும் [(என்கிற) |
| (ஹே) அநார்யே | வாராய்துஷ்டே | அநர்த்தார்த்தம் | ஆபத்தைப் பிரயோஜனமா யுடையது[மான] |
| அத்ய-தவ | இன்றையதினம்-உன்னுடைய | பருஷம் | கடினவசனத்தை |
| ஏதத்-மாம்ஸம் | இந்த-மாம்ஸத்தை | புந:-அப்ருவந் | மறுபடியும்சொன்னார்கள். |

தா-ம்.—பிறகுகோரரூபமுள்ள இன்னஞ்சில ராக்ஷஸிகள் அன்னையையணுகி, அடி அஸத்தே! மஹாராஜாதிராஜனை இலங்கேசுவரனைச்சேர்ந்து ஸுகிக்கவிருப்பமுறாது அந்த அல்பனையேநினைத்துக் கண்ணீர் விடுகிறமந்தபுத்தே! ஸர்வபாபங்களிலும்நிக்ருஷ்டபாபமான ஆத்மஹத்தியைச்செய்யவிச்சிக்கிறபாபிஷ்டே! இதுவரையில் நீ ஸுபுத்தியடைவாயென்றுன்னை மன்னித்திருந்தோம், இனியுன்னை ஜீவனோடுவைக்கோம், உனது மாம்ஸத்தை நாங்களிப்பொழுது பக்ஷிக்கப்போகிறோம், என்று கர்ணகடோரமான மொழிகளறைந்தனர். இதுவரையில், ஸீதே! நீ இராவணனையடையாயாகி லுன்னைஹிம்ஸிப்போம், பக்ஷிப்போமென்று பயமுறுத்தினவவர், எவ்விதத்திலும் ஸீதையின்மனதைவெல்ல முடியாதென்றுதெரிந்து, பிராட்டிக்கனர்த்தமான பக்ஷிப்போமென்கிற ஒரேகடுஞ்சொல்லை மொழிந்து வாய்மூடினர். அல்லது, இலங்கைக்கும்இராவணனுக்கும் தங்களுக்கும்நேரிடப்போகிற அனர்த்தஸூசகமாக, அந்தஜகன்மாதாவைப்பார்த்து மஹாபராதத்திற்கிடமான அத்விதீயார்த்தமுள்ள வக்கடுமொழியுரைத்து வாய்மூடினர்.

౪. సీతాంతాభిరనార్యాభిర్దృష్ట్వాసంతర్జితాంతదా । రాక్షసీత్రిజటావృద్ధాశయానావాక్యమబ్రవీత్॥

౫. ఆత్మానంఖాదతానార్యానసీతాంభక్షయిష్యథ । జనకస్యసుతామిష్టాంస్నుషాందశరథస్యచ॥

౬. స్వప్నోహ్యద్యమయాదృష్టోదారుణోరోమహర్షణః । రాక్షసానామభావాయభర్తురస్యాభవాయచ॥

௪. 𑌸𑍀𑌤𑌾𑌂𑌤𑌾𑌭𑌿𑌰𑌨𑌾𑌰𑍍𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌸𑌂𑌤𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌂𑌤𑌦𑌾।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌶𑌯𑌾𑌨𑌾𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥

௫. 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌖𑌾𑌦𑌤𑌾𑌨𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑌸𑍀𑌤𑌾𑌂𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌥।
𑌜𑌨𑌕𑌸𑍍𑌯𑌸𑍁𑌤𑌾𑌮𑌿𑌷𑍍𑌟𑌾𑌂𑌸𑍍𑌨𑍁𑌷𑌾𑌂𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌯𑌚॥

௬. 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌹𑍍𑌯𑌦𑍍𑌯𑌮𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌦𑌾𑌰𑍁𑌣𑍋𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌣𑌃।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌾𑌨𑌾𑌮𑌭𑌾𑌵𑌾𑌯𑌭𑌰𑍍𑌤𑍁𑌰𑌸𑍍𑌯𑌾𑌭𑌵𑌾𑌯𑌚॥

௪. ஸீதாம்தாபிரநார்யாபிர்த்ருஷ்ட்வாஸம்தர்ஜிதாம்ததா।
ராக்ஷஸீத்ரிஜடாவ்ருத்தாஶயாநாவாக்யமப்ரவீத்॥

௫. ஆத்மாநம்காததாநார்யாநஸீதாம்பக்ஷயிஷ்யத।
ஜநகஸ்யஸுதாமிஷ்டாம்ஸ்நுஷாம்தஶரதஸ்யச॥

௬. ஸ்வப்நோஹ்யத்யமயாத்ருஷ்டோதாருணோரோமஹர்ஷண:।
ராக்ஷஸாநாமபாவாயபர்த்துரஸ்யாபவாயச॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அநார்யாபி: | அயோக்யர்களான | ஶயாநா | படுத்திருப்பவளும் |
| தாபி: | அந்தஇராக்ஷஸிகளால் | த்ரிஜடாநாம | திரிஜடையென்பவளுமான |
| ஸந்தர்ஜிதாம் | நன்றாய் மிரட்டப்பட்ட | ராக்ஷஸீ | இராக்ஷஸியானவள் |
| ஸீதாம் | ஸீதையை | ததா | அப்பொழுது |
| த்ருஷ்ட்வா | பார்த்து | வாக்யம் | (பின்வருமாறு) வார்த்தையை |
| வ்ருத்தா | கிழவியும் | அப்ரவீத் | சொன்னாள் |

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| இராக்ஷஸாநாம் | இராக்ஷதர்களுடைய | (ஹே) அநார்யாஃ | துஷ்டைகளான (இராக்ஷஸிகளே) |
| அபாவாய | இல்லாமையும்பொருட்டும் | ஆத்மாநம் | என்னை |
| அஸ்யாஃ-பர்த்துஃ | இவளுடைய-பதியினுடைய | காதத | பக்ஷியுங்கள் |
| பவாயச | க்ஷேமத்தையும்பொருட்டும் | ஜநகஸ்ய-ஸுதாம் | ஜனகருக்கு-புத்திரியும் |
| தாருணஃ | பயங்கரமானதும் | தசரதஸ்ய-இஷ்டாம்-ஸ்நுஷாம்ச | தசரதருக்கு - இஷ்டமானவளும்-நாட்டுப்பெண்ணுமான |
| ரோமஹர்ஷணஃ | மயிர்க்கூச்செறிகிறதுமான | ஸீதாம் | ஸீதையை |
| ஸ்வப்நஃ-அத்ய | கனவானது-இப்பொழுது | நபக்ஷயிஷ்யத | பக்ஷியாதையுங்கள். |
| மயா-த்ருஷ்டஃ | என்னால்-பார்க்கப்பட்டது | | |

தா-ம்.—இவ்விதமவ்வரக்கிகளாலதட்டப்பட்டபிராட்டியைப்பார்த்து விருத்தையும்சயனித்திருப்பவளுமான திரிஜடையென்பவள் பின்வரும்வாக்கியத்தை நவின்றனள். துஷ்டபுத்திகொண்ட அடிகுடிகேடிகளே! பரமஸாதுவான வித்திருமாதைப்பார்த்து மஹாபசாரவசனங்கள்மொழிந்த காதுகிகளே! திவ்வியரூபவதியும் குணவதியும் மனோஹரையுமான இவ்விராஜசெல்வத்தையா பக்ஷிக்கப்போகிறீர்கள். உங்களுக்குப லிகொடுப்பதற்காகவோ ஜனகமஹாராஜன் இப்பார்மடந்தைஸுதையை உயிரினுமேன்மையாகவளர்த்தெடுத்தார். உங்களது திவாயிலிடுவதற்காகவோ தசரதமஹாராஜா தனதருமைநாட்டுப்பெண்ணை வனத்திற்கனுப்பினர். தர்மமுணராதநீசைகளே! இப்பரதேவதையின் மஹத்துவமறியாத மூடைகளே! தேவியைப்பார்த்திவ்வாறுபிதற்றவேண்டாம். அவ்வாரியபுத்திரிக்கு யாதொருதீங்கையும் விளைக்கவேண்டாம். உங்களுக்குப் பசியிருக்கிருந்தால், நாமாம்ஸத்திலாசையதிகரித்திருந்தால், இதோபழுத்தபழம்போல் முதிர்ந்தசரீரத்தோடு நானிருக்கிறேன், என்னைப்பக்ஷியுங்கள், பசிதீருங்கள். அடிபாபிகளே! என்னபுத்திகொண்டீர்கள்! இதென்னவிநாசஹேது! நீங்கள் விபரீதபுத்திகொண்டதற்கிணங்க நானுமதிபயங்கரமான வோர்ஸ்வப்னங்கண்டேன். உண்டாகப்போகிறது இராக்ஷதருக்கனர்த்தம்! மருந்துக்குமொருராக்ஷதனில்லையென்னும்படி இப்பிருதிவியிலுள்ளஸகலராக்ஷதரும்அடியோடழிந்துபோவதற்குவந்துவிட்டதுகாலம்! பூமடந்தைபோலதிஸுந்தரமாயும், பார்மடந்தைபோல் சாந்தஸ்வரூபியாயும், உங்களதுஹிம்ஸையெல்லாம் பொறுத்து உங்களைக்கோபியாது தனதுபாக்கிய சூன்னியத்தையே நிந்தித்து பர்த்திருத்தியானத்துடனெழுந்தருளியிருக்கிற இம்மிதிலர்கோன்செல்வத்திற்கும் இவ்ளுடையபர்த்தாவான ஸ்ரீரகுநாதனுக்கும் உண்டாகப்போகிறதுமங்களம்! இவ்வேழைதான் ஸுகபடப்போகிறாள். ஐசுவரியத்தா லிறுமாந்து அதர்மத்தைச்செய்கிற உங்கள் பிரபுதான் கேடடையப்போகிறான். அடிராக்ஷஸிகளே! கண்டேனொருபயங்கரமானஸ்வப்பினம். அதை நினைத்தமாத்திரத்தில் மயிர்க்கூச்சுண்டாகிறதே! அது அதிதாருணம், அதிக்கிலேசகரம், என்னசொல்லுவேன்! பின்மாலையிற் கண்ட ஸ்வப்பினத்திற்குச் சீக்கிரபல னென்பார்களே. ஆகிலும் நானென்னசெய்வேன். இராக்ஷஸநாசஸூசகமான துஸ்வப்பினத்தை உண்மையாகவே இப்பொழுதுதான் கண்டேன்.

௨. ఏవముక్తాస్త్రిజటయా రాక్షస్యః క్రోధమూర్ఛితాః । సర్వా ఏవాబ్రువన్ భీతాస్త్రిజటాం తామిదం వచః॥
కథయస్వ త్వయా దృష్టః స్వప్నోయం కీదృశో నిశి।

௨. 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌯𑌾 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍂𑌰𑍍𑌛𑌿𑌤𑌾𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌾 𑌏𑌵𑌾𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍 𑌭𑍀𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌟𑌾𑌂 𑌤𑌾𑌮𑌿𑌦𑌂 𑌵𑌚𑌃॥
𑌕𑌥𑌯𑌸𑍍𑌵 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍋𑌽𑌯𑌂 𑌕𑍀𑌦𑍃𑌶𑍋 𑌨𑌿𑌶𑌿।

௨. ஏவமுக்தாஸ்த்ரிஜடயாராக்ஷஸ்யஃக்ரோதமூர்ச்சிதாஃ।
ஸர்வாயேவாப்ருவந்பீதாஸ்த்ரிஜடாம்தாமிதம்வசஃ॥
கதயஸ்வத்வயாத்ருஷ்டஃஸ்வப்நோயம்கீத்ருஶோநிஶி।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| க்ரோதமூர்ச்சிதாஃ | கோபத்தால்மெய்மறந்தவர்களான | த்வயா-நிஶி | உன்னால்-இரவில் |
| ராக்ஷஸ்யஃ | இராக்ஷஸிகள் | கீத்ருஶஃ-அயம்-ஸ்வப்நஃ | எப்படிப்பட்ட-இந்த-கனவு |
| த்ரிஜடயா | திரிஜடையினால் | த்ருஷ்டஃ | பார்க்கப்பட்டது |
| ஏவம்-உக்தாஃ | இந்தவிதம் - சொல்லப்பட்டவர்களாகையால் | கதயஸ்வ | சொல்லு (என்கிற) |
| | | இதம்-வசஃ | இந்த-வார்த்தையை |
| ஸர்வாயேவ | எல்லோருமே | தாம்-த்ரிஜடாம் | அந்த-திரிஜடையை (குறித்து) |
| பீதாஃ (ஸத்யஃ) | பயப்பட்டவர்களாய்க்கொண்டு | அப்ருவந் | சொன்னார்கள். |

தா-ம்.—ஸீதை இராவணனுக் கபிமதையாகுநிமித்தம் இரவுமுழுதும்நித்திரைசெய்யாது, ஈட்டிபாலாசூலகட்காயுதங்களைச்சுழற்றி, அடிக்கிறோம், குத்துகிறோம், கொல்லுகிறோம், தின்கிறோம், என்று கொக்கரித்துக் குரோதமூர்ச்சிதாரய்ப் பிராட்டியைஹிம்ஸித்த அவ்விராக்ஷஸாதமிகள், இராவணனுக் கனிஷ்டத்தையும் ஸீதைக்கிஷ்டத்தையுங்குறிக்கிற வோர்பயங்கரமான கனவைக்கண்டேனென்றுசொன்ன திரிஜடைவாக்கியத்தைக்கேட்டு, கோபமுங்கொக்கரிப்பும் பரபரப்புமடங்கி, பிரமையுற்றுத்திகிலடைந்து, அவ்விருத்தராக்ஷஸியைப்பார்த்து, திரிஜடே! இவ்விரவில் நீகண்டஸ்வப்னம்யாது? இராவணனுக்கு விபத்தையும் ஸீதைக்குஸம்பத்தையுமெப்படியூகித்தாய்? அதிபயங்கரமும் அதிதாருணமுமானஸ்வப்னமென்கிறாயே, அதைக்கேட்கயாம் ஆவல்கொண்டிருக்கின்றனம், எங்களுக்கதைதெரிவிக்கக்கடவாய், என்றுதிரிஜடையைப் பிரார்த்தித்தனர்.

௮. తాసాంశ్రుత్వాతువచనంరాక్షసీనాంముఖాచ్చ్యుతమ్ ॥ ఉవాచవచనంకాలేత్రిజటాస్వప్నసంశ్రితమ్।

அ. தாஸாம்ஶ்ருத்வாதுவசநம்ராக்ஷஸீநாம்முகாச்ச்யுதம்॥
உவாசவசநம்காலேத்ரிஜடாஸ்வப்நஸம்ஶ்ரிதம்।

அ. தாஸாம்ஸ்ருத்வாதுவசநம்ராக்ஷஸீநாம்முகாச்ச்யுதம்॥
உவாசவசநம்காலேத்ரிஜடாஸ்வப்நஸம்ஸ்ரிதம்।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தாஸாம்-ராக்ஷஸீநாம் | அந்த இராக்ஷஸிகளுடைய | காலே | விடியற்காலத்தில் |
| முகாத்-ச்யுதம் | முகத்திலிருந்து-வெளிவந்த | ஸ்வப்நஸம்ஸ்ரிதம் | கனவிலுண்டான |
| வசநம்-ஸ்ருத்வா | வார்த்தையை-கேட்டு | வசநம் | வார்த்தையை (ஸங்கதியை) |
| த்ரிஜடாது | திரிஜடையானவள் | உவாச | (பின்வருமாறு) சொன்னாள். |

தா-ம்.—இவ்விதமவ்விராக்ஷஸிகளால் வினவுற்றதிரிஜடை, விடியற்காலத்திற்முன்கண்ட ஸ்வப்னவிசேஷத்தை ஸ்மரித் தப்பொழுதுகண்டவண்ணமுரைக்க வாரம்பித்தனள்.

௯. గజదంతమయీందివ్యాంశిబికామంతరిక్షగామ్॥ యుక్తాంహంససహస్రేణస్వయమాస్థాయరాఘవః।

௧௦. శుక్లమాల్యాంబరధరోలక్ష్మణేనసమాగతః॥

௯. கஜதந்தமயீம்திவ்யாம்ஶிபிகாமந்தரிக்ஷகாம்॥
யுக்தாம்ஹம்ஸஸஹஸ்ரேணஸ்வயமாஸ்தாயராகவ:।

௧௦. ஶுக்லமால்யாம்பரதரோலக்ஷ்மணேநஸமாகத:॥

௯. கஜதந்தமயீம்திவ்யாம்ஶிபிகாமந்தரிக்ஷகாம்॥
யுக்தாம்ஹம்ஸஸஹஸ்ரேணஸ்வயமாஸ்தாயராகவ:।

௧௦. ஶுக்லமால்யாம்பரதரோலக்ஷ்மணேநஸமாகத:॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ராகவ: | ஸ்ரீராகவன் | ஹம்ஸஸஹஸ்ரேண | ஹம்ஸத்திளுயிரத்தோடு |
| ஶுக்லமால்யாம்பரதர:-வெளுப்புவஸ்திரம் வெண்மாலை இவைகளைதரித்தவராக | | யுக்தாம் | கூடினதுமான |
| கஜதந்தமயீம் | யானைத்தந்தத்தாலியற்றப்பட்டதும் | ஶிபிகாம் | பல்லக்கை |
| திவ்யாம் | தெய்வஸம்பந்தமானதும் | ஸ்வயம்-ஆஸ்தாய | தானே-அடைந்து |
| அந்தரிக்ஷகாம் | ஆகாயத்திற்செல்லுவதும் | லக்ஷ்மணேநஸஹ | இளையவரோடுகூட |
| | | ராகவ:-ஆகத: | ஸ்ரீராகவன் - (இவ்விலங்கைக்கு) வந்தார். |

தா-ம்.—அடிராக்ஷஸிகளே! யான்கண்டஸ்வப்னத்தில் ஸ்ரீராகவக்ஷேமத்தைக்குறிக்கிற பாகத்தையுரைக்கின்றனன்கேளுங்கள். இம்மின்னிடையாளுக்குமாலையிட்ட மஹாப்பிரபுவான ஸ்ரீராகவன் அதிதாவள்ளியமானபட்டாடையுடுத்து மிகவெண்மையானமாலைசூடி, கஜதந்தமயமாயும்தெய்வகிர்மிதமாயும் சுவேதநிறமுள்ள ஹம்ஸஸஹஸ்ரத்தால் தாங்கப்பட்டதாயுமிருக்கிற ஓர் சிறந்தபல்லக்கில், தானே இலக்ஷ்மணனோடு சென்றேறி சுவேதமண்டலம்போல் ஆகாசமார்க்கத்தில் இலங்காபிமுகமாக வெழுந்தருளக்கண்டேன்.

௧௧. స్వప్నేచాద్యమయాదృష్టాసీతాశుక్లాంబరావృతా। సాగరేణపరిక్షిప్తంశ్వేతంపర్వతమాస్థితా॥
రామేణసంగతాసీతాభాస్కరేణప్రభాయథా।

௧௧. ஸ்வப்நேசாத்யமயாத்ருஷ்டாஸீதாஶுக்லாம்பராவ்ருதா।
ஸாகரேணபரிக்ஷிப்தம்ஶ்வேதம்பர்வதமாஸ்திதா॥
ராமேணஸங்கதாஸீதாபாஸ்கரேணப்ரபாயதா।

௧௧. ஸ்வப்நேசாத்யமயாத்ருஷ்டாஸீதாஶுக்லாம்பராவ்ருதா।
ஸாகரேணபரிக்ஷிப்தம்ஶ்வேதம்பர்வதமாஸ்திதா॥
ராமேணஸங்கதாஸீதாபாஸ்கரேணப்ரபாயதா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அத்ய-மயா | இப்பொழுது-என்னால் | ஆஸ்திதா | அடைந்தவளும் |
| ஸ்வப்நே-ஸீதா | கனவில்-ஸீதையானவள் | பாஸ்கரேண-ப்ரபாயதா-ஸூரியனோடு-காந்திபோல் | |
| ஶுக்லாம்பராவ்ருதா-வெண்ணுடையால் சுற்றப்பட்டவளும் | | ராமேண-ஸங்கதா | ஸ்ரீராகவனோடு-சேர்ந்தவளுமான |
| ஸாகரேண | ஸமுத்திரத்தில் [யான-பருவதத்தை | ஸீதாச | ஸீதையும் |
| பரிக்ஷிப்தம்-ஶ்வேதம்-பர்வதம்-இரக்ஷிக்கப்பட்ட-வெண்மை | | த்ருஷ்டா | பார்க்கப்பட்டாள். |

தா-ம்.—அழுக்காடையுடுத்துக் கண்ணீருங்கண்ணுமாயென்கண்ணெதிரிலிதோ கஷ்டப்படுகிற இந்த ஸீதை க்ஷணகாலத்திற்குமுன் என் துஸ்வப்னத்தில், சுவேதவஸ்திரந்தரித்து, மஹோததிமத்தியிலுள்ளவோர் சுவேதகிரியையடைந்து, அங்குமணத்திருக்கோலத்துடன் வீற்றிருந்து பிரபையானது பாஸ்கரனோடுசேருவதுபோல், பார்த்திருதேஜஸ்ஸுக்கும் யசஸ்ஸுக்கும் காரணபூதையானவிவள் அர்க்ககுலதிலகனை ஸ்ரீராகவனோடுசேருகிற மங்களமஹோத்ஸவத்தையான்கண்டேன்.

౧౨. రాఘవశ్చ మయా దృష్టశ్చతుర్దంతం మహాగజమ్॥ ఆరూఢశ్శైలసంకాశం చచార సహలక్ష్మణః॥

கஉ. [illegible]

கஉ. ராகவஶ்சமயாத்ருஷ்டஶ்சதுர்தந்தம்மஹாகஜம்।।
ஆரூடஶ்ஶைலஸங்காஶம்சசாரஸஹலக்ஷ்மண:।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| மயா-சதுர்தந்தம் | என்னால்-நான்குதந்தங்களை யுடையது | ராகவஶ்ச-த்ருஷ்ட: | இராகவனும்-பார்க்கப்பட்டார் |
| ஶைலஸங்காஶம் | பருவதத்திற்கொப்பானதுமான [ம் | லக்ஷ்மண: | இளையவரும் |
| மஹாகஜம் | பெரியயானையை | ஸஹ-சசார- | (கூடஸீதையையுத்தேசித்து) ஸஞ்சரி[illegible] |
| (ஶிபிகாத:) ஆரூட: | (பல்லக்கிலிருந்து) ஏறினவராக | | தார். |

தா-ம்.—பிறகந்தநரோத்தம னவ்வெண்பல்லக்கைவிட்டுப்பெரியகிரிபோலத்யுன்னதமும் கம்பீராக்[illegible]ருதியுமுடைய, சதுர்த்தந்தஸகிதமான ஓர் சுவேதகஜசிரேஷ்டத்தின்மேலேறி இலக்ஷ்மணனோடு ஸீதாஸமீ[illegible]தம் ஸஞ்சரிக்கயான்கண்டேன்.

౧౩. తతస్తౌ నరశార్దూలౌ దీప్యమానౌ స్వతేజసా॥ శుక్లమాల్యాంబరధరౌ జానకీం పర్యుపస్థితౌ॥

கங. [illegible]

கங. ததஸ்தௌநரஶார்தூலௌதீப்யமானௌஸ்வதேஜஸா।।
ஶுக்லமால்யாம்பரதரௌஜாநகீம்பர்யுபஸ்திதௌ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத:-ஸ்வதேஜஸா | பிறகு-தம்காந்தியால் | தௌ-நரஶார்தூலௌ | அந்த-நரசிரேஷ்டர்கள் |
| தீப்யமானௌ | பிரகாசித்துக்கொண்டிருக்கிறவரும் | ஜாநகீம் | ஸீதையை |
| ஶுக்லமால்யாம்பரதரௌ - | வெண்பட்டுவெண்மாலைஇவைக ளைதரித்திருப்பவர்களுமான | பர்யுபஸ்திதௌ | ஸமீபித்திருந்தார்கள். |

தா-ம்.—பிறகுதங்களுக்கு ஸ்வகீயமான அப்பிராகிருததேஜஸ்ஸால் அர்க்கமண்டலங்கள்போல் ஜ்வ[illegible]லிக்கிற இராமலக்ஷ்மணரென்னு நரபுங்கவர் வெண்பட்டாடைகளணிந்து வெண்மலர்மாலைகள்தரித்து ஸு[illegible]தரத் திருக்கோலத்துடன் ஜானகியைஸமீபிக்க யான்கண்டேன்.

౧౪. తతస్తస్య నగస్యాగ్రే హ్యాకాశస్థస్య దంతినః॥ భర్త్రా పరిగృహీతస్య జానకీ స్కంధమాశ్రితా।

கச. [illegible]

கச. ததஸ்தஸ்யநகஸ்யாக்ரேஹ்யாகாஶஸ்த்தஸ்யதந்திந:।।
பர்த்ராபரிக்ருஹீதஸ்யஜாநகீஸ்கந்தமாஶ்ரிதா।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத:-தஸ்ய-நகஸ்ய-அக்ரே- | பின்பு-அந்தசுவேத-பருவதத்தி னுடைய-நுனியில். | ஆகாஶஸ்த்தஸ்ய-தந்திந:- | ஆகாசத்திலிருக்கிற- யானையினுடை[illegible] |
| பர்த்ரா-பரிக்ருஹீதஸ்ய(தன்) | நாயகனால்-கிரகிக்கப்பட்டதும் | ஸ்கந்தம் * | புஜத்தை [ய |
| | | ஜாநகீ-ஆஶ்ரிதா | ஸீதை-அடைந்தாள் |

தா-ம்.—ஆழ்கடல்மத்தியில், ஓர்தவளகிரிநுனியில்வஸித்தஸீதை, விசும்பளவிலுயர்ந்து தனதுபர்த்[illegible]ருபரிக்கிரஹீதமானவெண்கஜத்தின்மீதேறி பர்த்திருஸஹிதையாய்வீற்றிருக்க யான்கண்டேன்.

౧౫. భర్తురంకాత్సముత్పత్య తతః కమలలోచనా।చంద్రసూర్యౌ మయా దృష్టా పాణినా పరిమార్జతీ।

கரு. [illegible]

கரு. பர்துரங்காத்ஸமுத்பத்யதத:கமலலோசநா।।
சந்த்ரஸூர்யௌமயாத்ருஷ்டாபாணிநாபரிமார்ஜதீ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தத:-பர்த்து:-அங்காத்-ஸமுத்பத்ய- | பின்பு-நாயகனுடைய-மடி யில்நின்று-கிளம்பி | சந்த்ர-ஸூர்யௌ | சந்திரன்-ஸூரியன் (இவர்களை) |
| கமலலோசநா | தாமரைபுஷ்பம் போன்ற கண்களையு டைய (ஸீதை) | பாணிநா-பரிமார்ஜதீ | கையினால்-தொடுகிறவளாக |
| | | த்ருஷ்டா | (என்னால்) பார்க்கப்பட்டனள். |

---

* [illegible] । [illegible] ॥ பசு, எருது, யானை, உப்பரிகை, பருவதத்தின்சிகரம்[illegible] விருக்ஷமிவைகளையேறுகிறதும், கோமயாதிகளைப்பூசிக்கொள்ளுவதும், அழுகிறதும், சாகிறதும், சேரத்தகாதஸ்திரீகளைச் சேருத[illegible]லுதுமான இந்தஸுவப்னங்களைக்காணின், சுபமென்று ஸுவப்னத்தியா யதிலிருக்கிறபடியால் ஸ்ரீராகவன் யானையேறினத[illegible]க்கண்டஸ்வப்னத்தால் அவருக்கு அதிகமங்களமுண்டாகுமென்று சொல்லப்படுகிறது.

தா-ம்—வானளவிலுயர்ந்த வெண்கஜத்தின்மீது ஸ்ரீராகவனுடைய மடியிலுட்கார்ந்திருந்த இக்கமலக் கண்ணினள் எழுந்திருந்து ஸூரியசந்திரரிருவரையும் தனது திருக்கையினால் தாவிப்பிடிக்கயான்கண்டேன்.

౧౬. తతస్తాభ్యాంకుమారాభ్యామాస్థితస్స గజోత్తమః॥ సీతయాచవిశాలాక్ష్యాలంకాయాముపరిస్థితః।

கசு. [illegible]
[illegible]

கசு. ததஸ்தாப்யாம்குமாராப்யாம் ஆஸ்திதஸ்ஸகஜோத்தமஃ।।
ஸீதயாசவிஶாலாக்ஷ்யாலங்காயாஉபரிஸ்த்திதஃ।

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| ததஃ-தாப்யாம்-குமாராப்யாம்-பின்பு-அந்த - இராஜகுமாரர்களால் | | ஸீதைேயாடு | |
| ஆஸ்திதஃ-ஸஃ-கஜோத்தமஃ-ஏறப்பட்ட - அந்த - கஜஸிரேஷ்டமானது | | லங்காயாஃ-உபரி | இலங்கையினுடைய-மேல்பாகத்தில் |
| விஶாலாக்ஷ்யா-ஸீதயாச - அகன்று - நீண்டகண்களையுடைய | | ஸ்திதஃ | இருந்தது. |

தா-ம்—வடிவங்கொண்ட வனங்கனொனும்படி திவ்வியரூபவான்களும் யுவாக்களுமான அவ்விராமலக்ஷ்மணரும் இப்பங்கயக்கண்ணினளுமேறப்பெற்ற அந்த கஜஸிரேஷ்டமானது இராவணபரிபாலிதமான இந்நகர்க்குமேல் ஆகாசத்தில்வந்துநிற்க யான்கண்டேன்.

౧౭. పాండురర్షభయుక్తేనరథేనాష్టయుజాస్వయమ్॥ ఇహోపయాతఃకాకుత్స్థస్సీతయాసహభార్యయా

౧౮. లక్ష్మణేనసహభ్రాత్రాసీతయాసహవీర్యవాన్ * ఆరుహ్యపుష్పకందివ్యంవిమానంసూర్యసన్నిభమ్।

౧౯. ఉత్తరాందిశమాలోక్యజగామపురుషోత్తమః। ఏవంస్వప్నేమయాదృష్టోరామోవిష్ణుపరాక్రమః।

౨౦. లక్ష్మణేనసహభ్రాత్రాసీతయాసహభార్యయా॥

கஎ. [illegible]
[illegible]

கஅ. [illegible]
[illegible]

ககூ. [illegible]

உ0. [illegible]
[illegible]

கஎ. பாண்டுரர்ஷபயுக்தேநரதேநாஷ்டயுஜாஸ்வயம்।।
இஹோபயாதஃகாகுஸ்த்தஸ்ஸீதயாஸஹபார்யயா।

கஅ. லக்ஷ்மணேநஸஹப்ராத்ராஸீதயாஸஹவீர்யவாந்।।
ஆருஹ்யபுஷ்பகம்திவ்யம்விமாநம்ஸூர்யஸந்நிபம்।

ககூ. உத்தராம்திஶமாலோக்யஜகாமபுருஷோத்தமஃ।।

உ0. யேவம்ஸ்வப்நேமயாத்ருஷ்டோராமோவிஷ்ணுபராக்ரமஃ।
லக்ஷ்மணேநஸஹப்ராத்ராஸீதயாஸஹபார்யயா।।

* [illegible]

| பதம். | உரை. |
|---|---|
| வீர்யவாந்—புருஷோத்தமஃ- | பர்ாக்கிரமசாலியும்-புருஷசிரேஷ்டனுமான |
| காகுஸ்த்தஃ | ஸ்ரீராகவன் |
| பார்யயா-ஸீதயாஸஹ - | பத்தினியான-ஸீதையோடுகூட |
| அஷ்டயுஜா-பாண்டரர்ஷபயுக்தேந- | எட்டுவிருஷபத்தோடு கூடினதும்-வெண்மையுற்ற எருதுகளோடு கூடினதுமான |
| ரதேந-ஸ்வயம்-இஹ | தேரினால்-தான்-இவ்விடத்தில் |
| உபயாதஃ | எழுந்தருளினார் |
| ப்ராத்ரா-லக்ஷ்மணேநஸஹ- | தம்பியான-இலக்ஷ்மணரோடு கூடவும் |
| ஸீதயாஸஹ | ஸீதையோடுகூடவும் |
| ஸௌர்யஸந்நிபம்-திவ்யம்- | ஸூரியனுக்கு நிகரானதும் - (அதனால்) சிரேஷ்டமானதுமான |
| புஷ்பகம்-விமாநம்-ஆருஹ்ய - | புஷ்பகமென்கிற-விமானத்தை-ஏறி |
| உத்தராம்-திஶம் | வடக்கான-திக்கை |
| ஆலோக்ய-ஜகாம | பார்த்து-போனார் |
| விஷ்ணுபராக்ரமஃ | விஷ்ணுவின்பராக்கிரமத்தையொத்த பராக்கிரமமுடைய |
| ராமஃ-ப்ராத்ரா | ஸ்ரீராகவன்-ஸஹோதரனான |
| லக்ஷ்மணேநஸஹ | இளையவரோடுகூடவும் |
| பார்யயா-ஸீதயாஸஹ- | மனைவியான-ஸீதையோடுகூடவும் |
| ஸ்வப்நே-ஏவம் | கனவில்-இந்தப்பிரகாரம் |
| மயா-த்ருஷ்டஃ | என்னால்-பார்க்கப்பட்டார். |

(கஎ-மு-உ0-ல்.) தா-ம்—அடிராக்ஷஸிகளே! யான்கனவிற்பிரத்தியக்ஷமாகக்கண்ட இன்னமோராச்சரியஞ்சொல்லுகிறேன்கேளுங்கள். ஸர்வசத்துருக்களையும் க்ஷணகாலத்தில் நிபாதஞ்செய்யவல்ல மஹாவீரனும் புருஷசிரேஷ்டனுமான அக்காகுத்தன் தேவியோடுகூட, எட்டுவெள்ளைக் காளைகள்பூட்டிய திவ்விய ரதத்தில்தானே வெகுகோலாகலத்துட னிந்நகரில்வந்திறங்கினார். பிறகு அந்நரவியாக்கிரரும் இந்தஸீதையும் இலக்ஷ்மணரோடு பானுமண்டலம்போல் ஜ்வலிக்கிற நமதுராஜசெல்வமான புஷ்பகத்தின்மீதேறி உத்தரமுகமாயெழுந்தருள யான்கண்டேன். சங்கசக்கிரதாரியான ஸாக்ஷாத்மஹாவிஷ்ணுவின்பராக்கிரமத்திற்கு நிகரான பராக்கிரமமுடைய ஸ்ரீராகவனும் அவருடையபிராதாவான இலக்ஷ்மணனும் திவ்யதேஜஸ்ஸோடு விளங்குகிற இத்திருமாதும் இவ்விதவிபவத்தையடைந்தவராக என்னால் கனவில்காணப்பட்டனர்.

౨౧. నహిరామోమహాతేజాశ్శక్యోజేతుంసురాసురైః । రాక్షసైర్వాపిచాన్యైర్వాస్వర్గఃపాపజనైరివ॥

உக. 𑌨𑌹𑌿𑌰𑌾𑌮𑍋𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾𑌶𑍍𑌶𑌕𑍍𑌯𑍋𑌜𑍇𑌤𑍁𑌂𑌸𑍁𑌰𑌾𑌸𑍁𑌰𑍈𑌃।
𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍈𑌰𑍍𑌵𑌾𑌪𑌿𑌚𑌾𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌃𑌪𑌾𑌪𑌜𑌨𑍈𑌰𑌿𑌵॥

உக. நஹிராமோமஹாதேஜாஶ்ஶக்யோஜேதும்ஸுராஸுரை꞉।
ராக்ஷஸேர்வாபிசாந்யைர்வாஸ்வர்க꞉ப்பாபஜநைரிவ॥

| பதம். | உரை. |
|---|---|
| மஹாதேஜாஃ-ராமஃ | அதிதேஜோவானான-ஸ்ரீராகவன் |
| ஸுராஸுரைஃ | தேவர்களாலும்-அஸுரர்களாலும் |
| ராக்ஷஸைர்வாபி-அந்யைர்வா - | இராக்கதராலும்-இதரர்களாலும் |
| பாபஜநைஃஸ்வர்கஇவ - | பாபஜனங்களால்-ஸுவர்க்கமானது போல் |
| ஜேதும்-நஶக்யம் | ஜயிக்க-சக்தியன்று. |

...𑌯𑌾𑌵𑌦𑍍𑌦𑍍𑌯𑍇𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌂 । 𑌕𑍃𑌤𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌂 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌾𑌂 𑌦𑌦𑌰𑍍𑌶 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌶𑍍𑌚 𑌜𑌯𑌂𑌶𑍍𑌚 𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 ॥ 𑌤𑌤𑌃 𑌸𑍁𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌣𑌾𑌶𑍍𑌚 𑌹𑍃𑌷𑍍𑌟𑌾 𑌨𑍃𑌤𑍍𑌯𑌂𑌤𑌿 𑌗𑌾𑌯𑌂𑌤𑌿 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌤𑍃𑌪𑍍𑌤𑌾 । 𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌨𑍇𑌕𑌾𑌨𑍍𑌯𑌭𑌿𑌨𑌦𑌂𑌤𑌿 𑌶𑌂𑌖𑌾 𑌵𑌂𑌶𑌾𑌶𑍍𑌚 𑌵𑍀𑌣𑌾𑌶𑍍𑌚 𑌨𑌵𑌾𑌶𑍍𑌚𑌘𑍋𑌷𑌾𑌃 ॥ 𑌤𑌦𑍈𑌵 𑌨𑍃𑌤𑍍𑌤𑌂 𑌯𑌦𑌭𑍂𑌤𑍍𑌪𑍁𑌰𑌾 𑌸𑍁𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌵𑌿𑌭𑌾𑌤𑍇 । *

* தா-ம்—தேவதார்கமான புஷ்பகவிமானத்தில் ஸீதா லக்ஷ்மணஸஹிதராயெழுந்தருளியிருந்த ஸ்ரீராகவன், அனேக அண்டங்களோடு கூடினதும், அனந்தகோடிசராசரங்களும் ஜீவராசிகளும் வஸிக்கப்பெற்றதுமான இம்மூன்று லோகத்தைக் கவளீகரிக்கிறதாகிற பீமகிருத்தியத்தைச்செய்ய யான்கண்டேன். பிறகுஓர்க்ஷீராப்திமத்தியில் சுவேதகிரியொன்று மேற்கிளம்பி நின்றது. அதன்சிகரத்தில் சதுர்த்தந்தஸகிதமான ஒப்பற்ற சுவேதகஜமொன்றிருந்தது. அந்தகஜசிரேஷ்டத்தின்மீது இலக்ஷ்மீஸாந்நித்தியயுக்தனும், ஸர்வலோகமனோகரனும் கமலபத்திரநேத்திரனுமான ஸ்ரீராகவன் ஸீதாலக்ஷ்மண ஸஹிதராய்வீற்றிருந்தார். அப்பொழுதிந்த ஸுந்தரியெழுந்திருந்து இராகவன் மடியிலுட்கார்ந்து தனதிரண்டுகைகளால் ஷோடசகலைகளோடு அதிமனோகரமாகப் பிரகாசிக்கிற பூர்ணேந்துவைக்கட்டியணைக்கயான்கண்டேன். பிறகு அப்புருஷோத்தமனை வேறுதிருக்கோலத்திற்கண்டேன். அவர் ஓர்மணி மயபீடத்தில்கிழக்குமுகமாயெழுந்தருளியிருந்தார். அப்பொழுது பிரம்ஹரிஷிகளனைவரும் பிருதிவியிலுள்ள ஸகலபுண்ணியதீர்த்தங்களையுங்கொண்டு அபிஷேகஞ்செய்தார்கள். அபிஷேகங்கொண்ட ஸ்ரீராகவன் ஸகலதேவர்களாலும் நமஸ்கரிக்கப்படுகையில் ஜனகபுத்திரியான இவள்வெண்பட்டாடையுடுத்து வெண்சாந்தம்பூசி மிகுந்தவிபவத்துடனவர்பார்சுவத்தில்விளங்கினாள். பின்புதேவர்களும் கந்தர்வரும் ஸித்தரும் பிரம்ஹரிஷிகளும் பிரம்ஹாவைமுன்னிட்டுக்கொண்டு அபிவாதித்து அந்நரேந்திரனை ஸ்துதிசெய்யயான்கண்டேன். இவ்விதம்பட்டாபிஷேக அவஸரத்திற்காணப்பட்ட ஸ்ரீராகவனை உத்தரக்ஷணத்தில் இன்னுமோரத்புதநிலைமையிற்கண்டேன். அந்த பட்டாபிஷேகாஸனத்திற்றானே அந்தஜானகீரமணன் விஷ்ணுரூபங்கொண்டார். பரப்பிரம்ஹஸ்வரூபியாயும், ஸத்ஸத்தியமூர்த்தியாயும், பரக்கியானதேஜஸ்ஸாயும், உத்தமதவத்திலாழ்ந்த முனீந்திரராயுங் காணப்பட்டார். ஸகலத்திற்கும் மூலபீஜமாய், அம்மூலபீஜத்திற்கு க்ஷேத்திரந்தானுமாய், ஸகலகாரணங்களுக்கும்மூலகாரணமாயும்விளங்கினார். சங்கசக்கிரதாரியாயும், வக்ஷப்பிரதேசத்தில்வாழ்கின்ற இலக்ஷ்மீதேவியோடுகூடினவராயும், செங்கமலபத்திரம்போன்றதிருக்கண்களையுடையவராயும், திருமார்பில்ஸ்ரீவத்ஸமணிந்தவராயும், நித்தியஸ்ரீயோடுகூடினவராயும், சாசுவதவாழ்க்கை யுடையவருமாகப்பிரகாசித்தார். இவ்விதமபிஷேகங்கொண்டு ஸர்வலோகேசுவரனாய்வீற்றிருந்த இரகுநந்தனனை மஹேந்திரனும், பிதுருக்களும், முனீந்திரரும், கந்தர்வவித்தியாதராளும் பன்னகேந்திரருமொன்றுசேர்ந்து ஸந்தோஷஹிருதயத்துடன் அஞ்சலிசெய்துகொண்டு ஸ்துதித்தார்கள். அப்பொழுது அப்ஸரஸ்ஸுக்கள் அந்த ஆதிபுருஷன் வீற்றிருக்கும் ஸபையை வந்தடைந்து ஸந்தோஷத்துடன் நர்த்தனஞ்செய்து கானஞ்செய்தனர். சங்கபேரிகைகள் முழங்கின; மங்களவாத்தியங்கள் கோஷித்தன; வம்சவீணாவாத்தியங்களிசைபாடின, இப்படிப்பட்ட அத்புத திருக்கோலத்தில் இராகவனை யான் கண்டேன்.

இந்த சுலோகங்கள் ஸ்ரீவால்மீகிபகவானாற் செய்யப்பட்டனவல்லவென்று கோவிந்தராஜீயவியாக்கியானத்தில்வியாக்கியானம் செய்யப்படாமல் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆகையால் இதற்கு பிரதிபதமின்றிதாத்பரியமாத்திரம் வரையப்பட்டது.

தா-ம்—அடிஅனுரிமைகளே! இராகவனைக்கேவலமோரல்பமனுஷியனென்று நிந்திக்கின்றீர்களே. அம்மஹாபாஹுவை தேவர்களாவது அஸுரர்களாவது இராக்ஷஸர்களாவது இன்னமற்றெவர்களாவது வல்லசக்தரோ! பாபிகளுக்கு ஸ்வர்க்கப்பிராப்தியெப்படிதுர்லபமோ அவ்வண்ணமே ஜகதேகவீரனுன ஸ்ரீராகவனைவெல்வது யாவர்க்குமஸாத்தியம்.

(அவதாரிகை) திரிஜடை தான்கண்டஸ்வப்னத்தில் ஸ்ரீராகவக்ஷேமகரமானபாகத்தை யிவ்விதமுரைத்து இராவணனிஷ்டகரமானபாகத்தை யுரைக்கவாரம்பிக்கிருள்.

౨౨. రావణశ్చ మయా దృష్టః క్షితౌ తైలసముక్షితః । రక్తవాసాః పిబన్మత్తః కరవీరకృతస్రజః॥

௨௨. 𑌰𑌾𑌵𑌣𑌶𑍍𑌚𑌮𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌃𑌕𑍍𑌷𑌿𑌤𑍌𑌤𑍈𑌲𑌸𑌮𑍁𑌕𑍍𑌷𑌿𑌤𑌃।
𑌰𑌕𑍍𑌤𑌵𑌾𑌸𑌾𑌃𑌪𑌿𑌬𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌃𑌕𑌰𑌵𑍀𑌰𑌕𑍃𑌤𑌸𑍍𑌰𑌜𑌃॥

௨௨. ராவணஸ்சமயாத்ருஷ்டஃக்ஷிதௌதைலஸமுக்ஷிதஃ।
ரக்தவாஸாஃபிபன்மத்தஃகரவீரக்ருதஸ்ரஜஃ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| தைலஸமுக்ஷிதஃ-ரக்தவாஸாஃ | எண்ணெயினுல்நனைக்கப்பட்டவனும்-சிகப்புவஸ்திரமுடையவனும் | கரவீரக்ருதஸ்ரஜஃ | அலரிப்பூவினுல்செய்யப்பட்ட மாலையுடையவனுமான |
| பிபந்-மத்தஃ | மத்தியபானஞ் செய்யப்பட்டவனும்-(அதனுல்) வெகுகொழுத்தவனும் | ராவணஸ்ச-க்ஷிதௌ மயா-த்ருஷ்டஃ | இராவணனும்-பூமியில் என்னுல்-பார்க்கப்பட்டான். |

தா-ம்—அடிஸகிகளே! இதுவரையில் ஸ்ரீஸீதாராமலக்ஷ்மணர்களுக்கு க்ஷேமஸூசகமான ஸ்வப்னபாகத்தை யுரைத்தேனல்லவா? இனி இராவணவிநாசஸூசகமான ஸ்வப்னோத்பாதத்தைச்சொல்லுகிறேன்கேளுங்கள். நமதுஇராஜாவான தசக்கிரீவன் தலையிலெண்ணெயிட்டு சிகப்புவஸ்திரந்தரித்து அலரிமாலைசூடி, மத்தியபானத்தால் மயக்கங்கொண்டு பித்தன்போல் பூமியில்திரிகிற அவனது கோரவேஷத்தை யான்கண்டேன்.

౨౩. విమానాత్పుష్పకాదద్య రావణః పతితో భువి । కృష్యమాణః స్త్రియా దృష్టో ముండః కృష్ణాంబరః పునః॥

௨௩. 𑌵𑌿𑌮𑌾𑌨𑌾𑌤𑍍𑌪𑍁𑌷𑍍𑌪𑌕𑌾𑌦𑌦𑍍𑌯𑌰𑌾𑌵𑌣𑌃𑌪𑌤𑌿𑌤𑍋𑌭𑍁𑌵𑌿।
𑌕𑍃𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌃𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑍋𑌮𑍁𑌣𑍍𑌡𑌃𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌰𑌃𑌪𑍁𑌨𑌃॥

௨௩. விமாநாத்புஷ்பகாதத்யராவணஃபதிதோபுவி।
க்ருஷ்யமாணஃஸ்த்ரியாத்ருஷ்டோமுண்டஃக்ருஷ்ணம்பரஃபுநஃ॥

| பதம். | உரை. | பதம். | உரை. |
|---|---|---|---|
| அத்ய-புஷ்பகாத்-விமாநாத் | இப்பொழுது-புஷ்பகமென்கிற-விமானத்திலிருந்து | முண்டஃ-க்ருஷ்ணம்பரஃ | மொட்டைத்தலையுடையவனும் - கறுப்பு வஸ்திரமுடையவனுமான |
| புவி-பதிதஃ | பூமியில்-விழுந்தவனும் | ராவணஃ-புநஃ | இராவணன்-மறுபடி |
